D
V211,31' P08
P08 · 405 · 2.
228404.

**4-4-2008**

**உள்ளடக்கம்**


| | |
|---|---|
| | *பக்கங்கள்* |
| 1. **வினாக்கள்—விடைகள்—** | 249-289 |
| *உடுக்குறியிட்ட வினாக்கள்* | |
| 2. **ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கர்நாடக அரசின் எதிர்ப்பைத் தடுத்திட தமிழ்த் திரையுலகத்தினர் உண்ணாவிரதம் இருப்பதற்கு அவையின் சார்பில் வாழ்த்துத் தெரிவித்தல்—** | 289-290 |
| *திரு. விஜயகாந்த்* | 289,290 |
| **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்* | 290, 291 |
| 3. **மானியக் கோரிக்கைகள், 2008-2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி* | |
| *கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை* | 291-423 |
| **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்* | 291, 322, 325, 329, 336, 338, 339, 346, 370, 381, 383, 388-423 |
| *திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி* | 303, 304, 323-332 |
| *திரு. பி.என். பெரியண்ணன்* | 332-336, 339, 340 |
| *திரு. மா. ராஜசேகரன்* | 298, 299, 312, 346-349 |
| | 297, 350-355 |
| **திரு. மு.க. பெரியசாமி* | 355-360 |
| *திரு. வே. மாரிமுத்து* | 360-366, 422 |
| *திரு. கு. குணசேகரன்* | 366-371 |
| *திரு. வீரா. இளவரசன்* | 371-380 |
| **திரு. மா. தண்டபாணி* | 380-388 |
| **திரு. ரு. பாண்டுரங்கன்* | 424 |
| **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 22

## 2008 ஏப்ரல் 4, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை."*

*பல தொழில்களைச் செய்து சுழன்றுகொண்டிருக்கும் இந்த உலகம், ஏர்த் தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே, எவ்வளவுதான் துன்பம் இருப்பினும், உழவுத் தொழிலே சிறந்தது.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண்கள் 51 மற்றும் 52, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

*வினா எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**53—**

### மேற்கூடு கட்டும் தொழிற்சாலை

***32519—திரு. சு. குணசேகரன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கையில் போக்குவரத்துத் துறையின்மூலம் பேருந்து மேற்கூடு கட்டும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், காரைக்குடி மண்டலத்திற்கென காரைக்குடியில் பேருந்து மேற்கூடு கட்டும் பிரிவு இயங்கி வருவதால், சிவகங்கையில் மேற்கூடு கட்டும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆயிரக்கணக்கான பஸ்கள் தேவைப்படுகிற இந்த நேரத்தில், சிவகங்கை மாவட்டம் போன்ற பின்தங்கிய மாவட்டங்களில், பஸ் மேற்கூரை அமைக்கிற விரிவான பணிமனைகளை உருவாக்குவதன்மூலமாக, அந்தப் பகுதியில் வேலைவாய்ப்புகள், தொழில் வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மேலும், இன்றைக்கு தொழிற்சாலைகளுக்கு நிலங்கள் எடுப்பதுபோன்ற பல்வேறு இனங்களில் பிரச்சினை இருக்கிற நேரத்தில், சிவகங்கையில் விவசாயம் இல்லாமல் வறண்ட நிலங்கள், புன்செய் நிலங்கள் என ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கிற அந்த நிலையில், அந்தப் பகுதிகளில் அந்தத் தொழில் வளர்ச்சியைக் கொண்டு வருவதற்கு இப்படிப்பட்ட திட்டங்களை அரசு முன்வைக்க வேண்டும். அந்த அடிப்படையில், நமது தமிழக முதல்வர் அவர்களும், சிவகங்கைப் பகுதி வளர்வதற்கு இந்தத் திட்டத்தின்மூலமாக போக்குவரத்துத் துறை அமைச்சர்மூலமாக இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கான நடவடிக்கை எடுப்பாரா என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு சென்னையிலே கூண்டு கட்டும் பிரிவும், விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு திருச்சியிலும், நாகர்கோவிலிலும், விழுப்புரம் போக்குவரத்துக் கழகத்திற்கு விழுப்புரம், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் போன்ற பகுதிகளிலும், சேலம் போக்குவரத்துக் கழகத்திற்கு சேலம் மற்றும்

228404.
சென்னை-600 008





தருமபுரியிலும், கோயம்புத்தூர் போக்குவரத்துக் கழகத்திற்கு பொள்ளாச்சி மற்றும் ஈரோடு பகுதியிலும், கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்திற்கு பொறையார், திருச்சி, காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை போன்ற இடங்களிலும், மதுரை போக்குவரத்துக் கழகத்திற்கு மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல் என்று 17 இடங்களுக்கும் மேலாக கூண்டு கட்டுகின்ற பிரிவு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்திலே இதிலே கூண்டு கட்டும் பிரிவிற்கென்று தனித் தொழிலாளர்கள் அரசு சார்பாகவே தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் எல்லாம் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். படிப்படியாக, பேருந்துகள் வாங்குவது குறைகின்றபோது, அந்தத் தொழிலாளர்கள் அவர்களுடைய பதவி முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்று வீட்டிற்குச் சென்ற பிறகு, புதிய தொழிலாளர்கள் யாரையும் பணி நியமிக்கவில்லை. இப்போது, அந்தக் கூண்டு கட்டும் பிரிவிலே ஒப்பந்தத் தொழிலாளர்களை வைத்துக்கொண்டுதான் ஒவ்வோர் ஆண்டும் டெண்டர்விட்டு அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, ஓராண்டிற்கு மூன்றாயிரம் பேருந்துகள் என்று சொன்னால், இரண்டாயிரம் பேருந்துகளே இதிலே கூண்டு கட்டக்கூடிய வசதி வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தால், புதிய இடத்திலே கூண்டு கட்டும் பிரிவு உருவாக்கக்கூடிய சாத்தியக்கூறு இப்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் சொன்ன கூண்டுகள் கட்டுகிற பணிமனைகள் இருப்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். மிக்க நன்றி. அதே சமயத்தில், சிவகங்கைப் பகுதியிலும் கூடுதலாக வேண்டுமென்றுதான் நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். எனவே, அரசு மீண்டும் பரிசீலனை செய்து வாய்ப்புகளை உருவாக்கி, தொழில் வளர்ச்சிக்காக அந்தப் பகுதியில் இடவசதியும், வாய்ப்புகளும் இருக்கின்றன. எனவே, அதில் புதிய யோசனையாக ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டும். அதோடு, சிவகங்கை தலைநகராக இருக்கிற நேரத்தில், அந்தத் தலைநகரில் இருந்து மற்ற மாவட்டத் தலைநகரங்களுக்கு, முக்கியமான நகரங்களுக்கு, இன்னும் கூடுதலான பேருந்து வசதிகள் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறேன். அவரும் அதைப் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார். எனவே, அங்கிருந்து

D
V2", 3'08
108.45.2

பேருந்துகள் கூடுதலாக இயக்குவதற்கான நடவடிக்கை எடுத்துத் தர முன்வருவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற நிலையிலேதான் சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொன்னேன். ஆனால், பிற்காலத்தில் தேவை என்று வருகிறபோது, அந்தக் கூண்டு கட்டுகின்ற பிரிவிற்கு சிவகங்கைப் பகுதிக்கு வேண்டுமானால் முன்னுரிமை தரலாம்; மேலும், மாண்புமிகு உறுப்பினர், அவர்கள் சிவகங்கையிலிருந்து எந்தெந்தப் பகுதிக்குப் பேருந்துகள் செல்லவேண்டும் என்று விரும்பி, அவர்கள் எழுதித் தருவார்களேயானால், உடனடியாகப் பரிசீலித்து அந்தப் பகுதிகளுக்கெல்லாம் பேருந்துகள் விடமுடியும். மேலும், ஏற்கெனவே இதுவரை வாங்கியிருக்கின்ற பேருந்துகள் எல்லாம் முழுமையாக விடப்பட்டிருக்கின்றன. இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள், புதிய பேருந்துகள் வாங்குவதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். ஓரிரு மாதங்களில் வந்துவிடும். அந்தப் புதுப் பேருந்துகள் வரும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தப் பணியை நிறைவேற்றலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தலைசிறந்த பேருந்துகளை உருவாக்குகின்றது தமிழக அரசு என்ற பெயர் இருக்கிறது. மேலும், அதை விரிவுபடுத்துகின்ற வகையில், சிதம்பரம், கடலூர், பண்ருட்டி போன்ற பகுதிகளில் இந்தக் கூண்டு கட்டுவதற்கான வாய்ப்பு இருக்கிறதா? மேலும், உலக வங்கி - World Bank—னுடைய வழிகாட்டி நெறிமுறையில், கூண்டு கட்டுகின்றபோது இந்த வண்ணம் பூசவேண்டும், இப்படி முகப்பு இருக்கவேண்டும் என்கிற ஒரு கருத்தைத் திணித்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா? இல்லை, வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்தினுடைய சிறந்த பேருந்துகளை உருவாக்குகின்ற நம்முடைய தமிழக அரசுக்கு, மற்ற மாநிலங்கள் பேருந்துக் கூண்டுகளைக் கட்டித் தருவதற்கு உங்களிடத்தில் order





கொடுத்தார்களா என்றால், அதைக் கட்டி வெளி மாநிலங்களுக்கு அந்தப் பேருந்துகளை அனுப்புவதற்குத் தமிழக அரசிடம் திட்டம் ஏதும் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் போக்குவரத்துக் கழகத்திற்கு விழுப்புரம், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று இடங்களிலே மிக மிகச் சிறப்பாக இன்றைக்கு கூண்டு கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, ஓர் ஆண்டுக்கு ஒரு போக்குவரத்துக் கழகம் என்று வந்தால், 400 புதிய பேருந்துகள் இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதித்ததன் பெயரில்தான் வாங்கப்படுகிறது. எனவே, அந்த 400 பேருந்துகளுக்கு அந்த மூன்று இடங்களிலும் கூண்டு கட்டிவிடமுடியும். புதிய இடங்கள் தேவை என்றால்தான், அதைப்பற்றிப் பரிசீலிக்கமுடியும். மேலும், பழைய கூண்டு கட்டுகின்ற அந்த மாதிரி வடிவத்தை, இப்போது மாற்றி இருக்கிறோம். புதியதாக, தனியார் எல்லாம் மிகச் சிறப்பாக, மாநிலங்களிலே சென்று, அங்கே நல்ல பேருந்துகளை உருவாக்கியிருக்கிறார்கள். அவர்களோடு போட்டிபோடுகிற அளவிற்கு நாமும் வெளியிலே சென்று, அந்த மாதிரிப் படங்களை வாங்கி வந்து, இங்கேயே அதேபோல் கட்டுகின்ற அந்தப் பணியை இப்போது தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) அப்படி இல்லை, அதாவது பெரியார் பேருந்து—அதாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, paint இப்படித்தான் அடிக்கவேண்டும் என்று அல்ல; உங்களுக்கே தெரியும்; ஏற்கெனவே பேசுகின்றபோது, கலர் கலராக paint அடிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்; நான் யாரையும் நிர்ப்பந்திப்பதில்லை. ஆனால், பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு என்று அந்த சிகப்பு நிற paint வைத்திருப்பது ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியிலே மிகவும் பழக்கப்பட்டுவிட்ட காரணத்தால், அது அரசுப் பேருந்து என்று தெரிவதற்காகவே அந்த கலர் அடிக்கப்படுகிறது. இப்போது தனியாரும் அதேபோல் அடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஏனென்றால், அரசுப் பேருந்துகள் சிறப்பாக ஓடிக்கொண்டிருக்கின்ற காரணத்தால், தனியாரும் அதேபோல் அடித்து, மக்களிடம் ஒரு மாயையை ஏற்படுத்தவேண்டுமென்று செய்துகொண்டிருக்கிறார்கள்; வேறு ஒன்றும் இல்லை.

[2008 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் கூறுகின்றபோது, இந்தப் பேருந்துக்கு மேற்கூடு என்று சில இடங்களில் பயன்படுத்தினார்கள். சில இடங்களிலே கூண்டு, கூண்டு என்று பயன்படுத்தினார்கள். சரியான சொல், இந்தப் பேருந்தினுடைய கூடா அல்லது கூண்டா என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடாக இருந்தாலும், கூண்டாக இருந்தாலும், இரண்டிலே எதுவாக இருந்தாலும், நல்ல முறையிலே மக்களை ஏற்றிச் செல்கின்ற அந்தப் பேருந்து-அதை நாங்கள் அனுமதித்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சில கோரிக்கைகள் வைத்திருக்கிறேன். அதற்கு முன்னதாக, நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பூரண நலம் பெற்று நம்முடைய அவைக்கு வந்திருப்பதற்கு இந்த அவையின் சார்பிலேயும், எனது சார்பிலேயும் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மன்னார்குடியிலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்துகள் நிறைய இயக்கப்படுகின்றன. பயணிகளுடைய அடர்வும் அதிகமாக இருக்கிறது. அங்கே குளிர்சாதன வசதி உள்ள பேருந்து இயக்கப்படவில்லை. அதை இப்போது இயக்குவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி உறுப்பினர் அவர்கள் தேவை என்று சொன்னால் பயணிகள் அதிலே பயணிப்பார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பகுதிக்கு பேருந்து விடுவதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியிலே அந்த சர்குலர் பேருந்து - மூன்று பேருந்துகள் திடீரென்று நிறுத்தப்பட்டு இன்று பத்து நாட்களாகின்றன. பொது மக்கள் அனைவரும் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் அவர்கள், கடந்தகால ஆட்சியில் மூன்று பகுதிகளிலும் பேருந்துகளை நிறுத்திவிட்டார்கள் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க, முதற்கட்டமாக இரண்டு பகுதிகளுக்கு இரண்டு நடைகள் இயக்கப்பட்டன. பிறகு, சட்டமன்ற உறுப்பினர் அது போதாது என்று சொன்னவுடன், 4 நடைகள் இயக்கப்படுகின்றன. இப்போது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், முழு நேரமும் இயக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி ஆய்வு செய்து, அங்கே பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்குமானால், முழு நேரம் இயக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, தேவை என்கின்றபோது அதை இயக்குவதிலே எங்களுக்கொன்றும் பிரச்சினை இல்லை. ஆனால், அங்கே அரசியல் செய்வதாக எனக்கு செய்தி வந்தது. அதனால்தான் இரண்டு நாட்களாக நிறுத்தி வைத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ந. சேகரன்.

**திரு. கு.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம், திருநெடுங்குளம் ஊராட்சியில் தமிழகத்தினுடைய முதல்வராக டாக்டர் கலைஞர் அவர்கள் 4-வது முறையாகப் பதவியேற்றபோது, 1999-லே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையிலே, 1999-லிருந்து அங்கே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிக்கொண்டு வருகிறது. அங்கே இருக்கின்ற அந்த ஊராட்சி மன்ற அலுவலகத்தில்தான், சொந்தக் கட்டடம் இல்லாமல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலேயே அந்த ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிக்கொண்டிருக்கிறது. தினந்தோறும் 300-க்கும் அதிகமான நோயாளிகள் அங்கே சிகிச்சை பெற்று வருகிறார்கள். அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அந்த கிராம மக்கள் 25 சென்டுக்கும் அதிகமான நிலத்தையும் வாங்கி எழுதி வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவசியம் கருதி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இயங்கி வருகின்ற அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிதாக ஒரு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து வருகின்ற மானியக் கோரிக்கையில் விடையை எதிர்பார்க்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு, 30 ஆயிரம் மக்கள் தொகையும், 7 கிலோ மீட்டர் இடைவெளியும் இருக்க வேண்டுமென்ற நடைமுறை இருப்பதாக அறிகின்றேன். ஆகவே, அந்த 7 கிலோ மீட்டர் என்பதை--திருப்பூர் மாதிரி இருக்கக்கூடிய ஊராட்சிப் பகுதிகளில் மிக நெரிசலாக, மக்கள் தொகை அதிகம் இருக்கிறது. குறைந்தபட்ச கிலோ மீட்டர் இடைவெளி என்கிற



விதிகளைத் தளர்த்தி, 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்பதை உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நாங்கள் மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளோம். அது விரைவில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ.வள்ளாளபட்டி பேரூராட்சி, வளையப்பட்டி, கிடாரிப்பட்டி பஞ்சாயத்து போன்ற மேலூர் தொகுதியில் உள்ள பகுதியிலே 10 கிலோ மீட்டருக்கு மேலாக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வர வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகையால், அந்த ஏ. வள்ளாளபட்டி பேரூராட்சியிலே ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்து, 30 படுக்கைகள் கொண்ட வசதியுடன் செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கடந்த 5 ஆண்டு காலம் ஆட்சியில் இருந்தார்கள். அவர்கள் இதை நிறைவேற்றவில்லை. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், மத்திய அரசிடம் அனுமதியைக் கேட்டுள்ளார்கள். மத்திய அரசு அனுமதி கிடைத்தவுடன், பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

[2008 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. அ. மேகநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**54—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

***5850—திரு. த. அ. மேகநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, வெண்டரவள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், வெண்டரவள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. அ. மேகநாதன்.

**திரு. த. அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காவேரிப்பட்டினம் தொகுதி, முழுக்க முழுக்க கிராமங்கள் நிறைந்த தொகுதியாகும். வெண்டரவள்ளி கிராமத்திலிருந்து ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், 15 கிலோ மீட்டர் தூரம் உள்ள ஆனந்தூர் அல்லது 15 கிலோ மீட்டர் தூரம் உள்ள கம்பைநல்லூர் அல்லது 15 கிலோ மீட்டர் தூரம் உள்ள போச்சம்பள்ளிக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. கோட்டப்பட்டி, அரசம்பட்டி ஆகிய இரண்டு பஞ்சாயத்துகளில் உள்ள 21 கிராம மக்கள் பயனடையும் வகையில், ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைத்தால், அது மிகச் சிறப்பானதாக அமையும். எனவே, வெண்டரவள்ளி கிராமத்தில்



2008 ஏப்ரல் 4]

ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது துணை சுகாதார நிலையம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்டரவள்ளி கிராமம், அரசம்பட்டி துணை சுகாதார நிலையத்திற்கும், பாரூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் உட்பட்ட பகுதியாகும். வெண்டரவள்ளி கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பாரூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கிலோ மீட்டர் தொலைவில் போச்சம்பள்ளி அரசு மருத்துவமனையும் இயங்கி வருகின்றன. இக்கிராமத்தின் மக்கள் தொகை 6,456 ஆகும். எனவே, வெண்டரவள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. அ. மேகநாதன்.

**திரு. த. அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம மக்கள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லி வருகின்றோம். எனவே, தமிழகத்தில் 5 ஆயிரம் மக்கள்தொகை உள்ள கிராமங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அங்கெல்லாம் துணை சுகாதார நிலையம் அமைத்தால், சுகாதாரத்திலே கிராமங்கள் முன்னேறுவதற்கு வசதியாக இருக்கும். அதனைச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க, மைய அரசினுடைய அனுமதி தேவைப்படுகிறது. உறுப்பினருடைய கோரிக்கையை மைய அரசிடம் நாங்கள் தெரிவித்துள்ளோம். விரைவில் அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். கிடைத்தவுடன், பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 ஏப்ரல் 4

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதிக்கு உட்பட்ட அ.புதூர் கிராமத்தைச் சுற்றி, தப்பக்குட்டை, ஏகாபுரம், கச்சுப்பள்ளி, கண்ணன்தேரி ஆகிய கிராமங்கள் இருக்கின்றன. அதனைச் சுற்றி சுமார் 40 ஆயிரம் மக்கள் குடியிருக்கின்றார்கள். அங்கு சரியான மருத்துவ வசதி இல்லை. கடந்த ஆண்டு அ.புதூரிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்; அப்போது இருந்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அடுத்த ஆண்டு கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார். ஆகவே, இந்த ஆண்டு அ.புதூரிலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கின்றதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் இதே பதில்தான். மைய அரசிடம் நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். அவர்கள் கண்டிப்பாகக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார்கள். வந்தவுடன், பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**55—**

### பட்டா

***5898—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, வட்டம் 10, எழில் நகர், எம்.ஜி.ஆர். நகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?



2008 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித புனிதன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1980 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகரத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, அதில் 50 குடிசைகளுக்கு மேல் இருக்கின்ற பகுதிகளை குடிசை மாற்று வாரியத்துடன் இணைத்து, அந்தக் குடிசைகளை மேம்படுத்துவதற்காக தீட்டப்பட்ட திட்டத்தின்வாயிலாக உருவாக்கப்பட்ட நகர்கள்தான், இந்த எம்.ஜி.ஆர். நகர், எழில் நகர் போன்ற திட்டப் பகுதிகள். இன்றைக்கு அந்தத் திட்டப் பகுதிகளுக்குக் கிரயப் பத்திரம் கொடுக்கப்பட்ட பின்புதான் அவர்கள் பட்டாவுக்கு மனு செய்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இந்தக் கிரயப் பத்திரமானது, கிட்டத்தட்ட சென்னையில் மாத்திரம் 714 திட்டப் பகுதிகள் இந்த குடிசை மாற்று வாரியத் திட்டத்தின்கீழ் வருகின்றது. இதில், சுமார் 187 திட்டப் பகுதிகளுக்குத்தான் இடம் மாற்று ஆணை பெறப்பட்டிருக்கின்றது. அதில், குறிப்பாக, 17 திட்டப் பகுதிகளுக்கு சுமார் 77 ஏக்கர் நிலம் இரயில்வே துறைக்குச் சொந்தமான பகுதியில் குடிசை மாற்று வாரியம் எடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்த நில மாற்றம் பெறப்பட்டால்தான் இந்தப் பகுதி மக்களுக்குக் கிரயப் பத்திரம் பெற்று, அதன் பிறகு பட்டா பெறுகின்ற ஒரு சூழ்நிலை இருப்பதால் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் இந்தத் திட்டப் பகுதிகளுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, கேள்வியை மாத்திரம் கேளுங்கள். எழில் நகரைப்பற்றிக் கேட்கிறீர்கள். பட்டா கொடுப்பதைப்பற்றித்தான் கேட்கிறீர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** ரொம்ப முக்கியமான பிரச்சினை. வேண்டாம் என்றால் உட்கார்ந்துவிடுகிறேன். நல்ல கேள்வி இது. நல்ல கேள்விதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வி கேட்பதற்கு ஊரையே சுற்றி வந்தால் எப்படி?

[2008 ஏப்ரல் 4

**திரு. பி.கே. சேகர்பாபு:** இந்தத் திட்டப் பகுதிகளுக்கு வேண்டிய இடத்தை இரயில்வே துறையினரிடமிருந்து பெறுவதற்குண்டான முயற்சியை சம்பந்தப்பட்ட துறையின் வாயிலாக அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலேதான் இந்தக் குடிசை மாற்று வாரியப் பணிகள் எல்லாம் துவங்கப்பட்டதாகச் சொன்னார்கள். 1970 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே குடிசை மாற்று வாரியத்தை அமைத்த ஒரே தலைவர், தலைவர் கலைஞர் என்பதை அவர்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். குடிசை மாற்று வாரியப் பகுதிகளிலே, மனை மேம்படுத்தப்பட்டு, குறைந்தபட்சத் தொகை செலுத்திய பின்னால், அவர்களுக்கு பட்டா வழங்குகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த முறை உறுப்பினராக இருக்கின்றபொழுது அவர்கள், அவர் தொகுதிக்கு உட்பட்ட பகுதி, எழில் நகர், எம்.ஜி.ஆர். நகர் பகுதி. பட்டா வழங்குவதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்தார்களா என்பதை நான் கேட்க விரும்புகின்றேன். ஆனால், அதே சமயத்திலே தலைவர் கலைஞர் அரசு இன்றைக்கு அனைவருக்கும் பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது.

குறிப்பாக, ஆர்.கே. நகர் பகுதி, 10-வது வட்டத்திலே, எழில் நகர், எம்.ஜி.ஆர். நகர் பகுதிகளிலே ஏறத்தாழ அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு, இந்தப் பகுதி, குடிசை மாற்று வாரியத்திலும் இடம் பெற்றிருக்கிறது. அதே சமயத்திலே Corporation, Public, மாநகராட்சியினுடைய பொதுப் பயன்பாட்டிற்காக அந்தப் பகுதியிலே இருக்கின்ற இடங்கள் உட்பட்டிருக்கின்றன.

நம்முடைய தலைவர் கலைஞர் அரசு தமிழகம் முழுக்க, நகராட்சிப் பகுதி அல்லது மாநகராட்சிப் பகுதிக்கு உட்பட்டிருக்கின்ற இடங்களுக்குத் தீர்மானங்களைப் பெற்று, அங்கே வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கி



2008 ஏப்ரல் 4]

வருகின்றது. இந்தப் பகுதியும் அதற்கு உட்பட்டு இருக்கின்றது. எனவே, Corporation, Public என்று இருக்கின்ற பகுதியிலே, மாநகராட்சியினுடைய அனுமதியைப் பெற்று, பட்டா வழங்குவதற்கு அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில், சென்னை மாநகராட்சியின்மூலம், சுமார் 214 திட்டப் பகுதிகளுக்கு மாவட்ட ஆட்சியாளருக்கு அனுமதி கொடுத்து, அந்த 214 திட்டப் பகுதிகளில், 196 திட்டப் பகுதிகளுக்கு நில மாற்றம் உரிமை பெற்றுத் தந்த ஆட்சி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில், குடிசை மாற்று வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் குடியிருப்பவர்களுடைய நிலைமை மோசமாக உள்ளது. அன்றைக்கு ரூபாய் (மணியடிக்கப்பெற்றது) இல்லை, இது ரொம்ப முக்கியமான பிரச்சினை. நாட்டுப் பிரச்சினை. (குறுக்கீடு) ஒன்றுமே சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்வியா இது?

**திரு. பி.கே. சேகர்பாபு:** குற்றச்சாட்டு எதுவும் சொல்லவில்லை. துணைக் கேள்விதான் கேட்கிறே. ர.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணைக் கேள்வியா?

**திரு. பி.கே. சேகர்பாபு:** துணைக் கேள்விதான். அமைச்சர் சொன்னதற்குப் பதில் சொல்கிறேன். கேள்வியே கேட்கக்கூடாது என்றால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்குள்ளேயே வரமாட்டேன் என்கிறீர்களே?

**திரு. பி.கே. சேகர்பாபு:** கேள்விக்குள்ளேதான் வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு எங்கேயோ எல்லாம் போய்க்கொண்டிருக்கிறீர்கள்.

[2008 ஏப்ரல் 4

**திரு. பி.கே. சேகர்பாபு:** சொல்கிறேன், சொன்னால்தானே தெரியும். இந்தக் குடிசை மாற்று வாரியத்தினுடைய ஒதுக்கீடானது, ரூபாய் 3,600-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது, அந்த இடத்திற்கு வட்டி 8 சதவிகிதம் என்று 10 ஆண்டுகளுக்கும், அடுத்த 10 ஆண்டுகளுக்கு மேல் அந்தத் தொகையைக் கட்டாதவர்களுக்கு 12 சதவிகித வட்டியும் என்று நிர்ணயித்து, 3,600 ரூபாய்க்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அந்த இடத்தினுடைய இன்றைய விலை, 60,000 ரூபாய் கட்டினால்தான் அவர்களுக்குக் கிரயப் பத்திரம் கிடைக்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்பிலே இருக்கின்ற அந்த மக்களுக்கு, அசல் தொகையை மாத்திரம் கட்ட வைத்து, ரூபாய் 3,600-ஐப் பெற்றுக்கொண்டு, வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து, அவர்களுக்கு கிரயப் பத்திரமும், பட்டாவும் வழங்குவதற்குண்டான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்தை தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே நான் 1980 ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தை ஏற்படுத்தினார் என்று கூறினேன். குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு மேம்பாட்டிற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.தான் இந்தத் திட்டத்தினை ஏற்படுத்தினார். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, உட்காருங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கையிலே பேசுகிற மாதிரி பேசக்கூடாது. மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது குடிசை மாற்று வாரியம் சம்பந்தப்பட்ட நிகழ்வு. குறிப்பாக, தமிழகத்திலே ஆசிடமிருந்து குடிசை மாற்று வாரியத்தால் பெறப்பட்ட நிலங்கள், உலக வங்கியின்மூலமாக மேம்படுத்தப்பட்டு, அந்த மனைகள் மிகக் குறைந்த தொகையிலே, development charges-ஐ வாங்கிக்கொண்டு, அவர்களுக்குப் பட்டா கொடுக்கின்ற முறை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. உறுப்பினர் சொன்னார், 'சென்னையிலே மட்டும் 196 இடங்களை உடனே எங்கள் அம்மா ஆட்சியிலே மாற்றிக்கொடுத்தோம்' என்று. ஏன் இதை மாற்றிக் கொடுக்காமல்விட்டீர்கள்? இவர்கள் ஆட்சியிலே மாற்றிக் கொடுத்திருக்கலாம் இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) மிச்சம்



2008 ஏப்ரல் 4]

இருந்த இடங்களை ஏன் மாற்றிக் கொடுக்காமல் விட்டீர்கள்? இன்னும் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, எங்களுடைய கொள்கை (குறுக்கீடு) இருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இது குடிசை மாற்று வாரியம் சம்பந்தப்பட்ட கேள்வி. (குறுக்கீடு) இல்லை, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் தலைவர் கலைஞரைப் பொறுத்த வரையில், தமிழகத்திலே இதுவரை மொத்தமாக, மாநிலத்திலே மட்டும் 4,16,423 பட்டாக்கள் இலவசமாகக் கொடுத்திருக்கிறோம். இன்னொரு விஷயத்தையும் சொல்கிறேன். சென்னை மாநகரத்திலே மட்டும், எக்மோர், நுங்கம்பாக்கம் பகுதிகளிலே மட்டும் 245 நபர்களுக்கும் மயிலாப்பூர், திருவல்லிக்கேணி பகுதிகளிலே மட்டும் 129 நபர்களுக்கும், பெரம்பூர், புரசைவாக்கம் பகுதிகளிலே 459 நபர்களுக்கும், மாம்பலம், கிண்டி பகுதிகளிலே 628 நபர்களுக்கும், தண்டையார்பேட்டையிலே 833 நபர்களுக்கும், இவர்களிலே 2,294 பட்டாக்கள், சென்னை மாநகரத்திலே மட்டும் 129 கோடி ரூபாய் மதிப்புள்ள பட்டாக்களை தலைவர் கலைஞர் அரசு வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுதும் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, கட்சி மாறுபாடு இல்லாமல் நான் சொல்கிறேன். எழில் நகர், எம்.ஜி.ஆர். நகர், Corporation-க்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு, கண்டிப்பாக தலைவர் கலைஞர் அரசு இலவசமாகப் பட்டா வழங்கும். அதே சமயத்திலே குடிசை மாற்று வாரியப் பகுதியிலே இருக்கின்ற நிலங்களுக்கு நீங்கள் சொன்னீர்கள். அரசு வட்டியைக் குறைக்க வேண்டும்; அந்த அபராத வட்டியைக் குறைக்க வேண்டும். அந்தத் தொகையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னீர்கள். அது சம்பந்தமாக குடிசை மாற்று வாரிய அமைச்சரும் நானும் கலந்து பேசுவோம். அது சம்பந்தமாக அரசு முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

முற்பகல் 9-55

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல், மதுரை போன்ற இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக வீடுகள் பெற்று, அதற்குரிய தொகை முழுவதும் செலுத்திய பிற்பாடும்கூட, பட்டா என்பது இன்னமும் வழங்கப்படவில்லை. தொடர்ந்து கடந்த ஆறு ஆண்டு காலமாக இதே அவையில் நான் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். வீட்டு

வசதி வாரியத்திலிருந்தும் பத்திரம் கிடைக்கவில்லை, குடிசை மாற்று வாரியத்திலிருந்தும் கிடைக்கவில்லை. ஆகவே, மிக விரைவில் அரசு, இந்தத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் தீர்வு காண முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தின்மூலமாகப் பெறப்பட்ட வீடுகளுக்குப் பணம் செலுத்தி, அவர்களுக்குரிய பத்திரம் கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொன்னால், அவர்கள் முழுமையாகப் பணம் செலுத்தி கிடைக்காமல் இருந்தால், அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். அதே சமயத்திலே, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த அளவில், இரண்டு கோரிக்கைகள் இருக்கின்றன. ஒன்று வீட்டு வசதி வாரியத்திலே கடன் பெற்றவர்கள் கோரிக்கை வேறு. அதே மாதிரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கடன் பெற்றவர்களுடையது வேறு. அன்றைக்குக்கூட நம்முடைய கோ.க. மணி அவர்கள் பேசுகின்றபோது, தமிழகத்திலே நம்முடைய வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் பெற்றவர்கள் ஏழையெளியவர்களாக இருக்கக்கூடிய-economically weaker section-அதுவும் நலிவுற்ற பிரிவினர், சமுதாயத்திலே ரொம்ப அடித்தட்டிலே இருக்கக்கூடிய மக்கள், அதைத்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், ஏறத்தாழ 4¼ இலட்சம் பேருக்கு ரூ.560 கோடி அளவிற்கு இன்றைக்குக் கடனை, வரலாற்றிலே இல்லாத அளவிற்கு, தள்ளுபடி செய்த ஆட்சி தலைவர் கலைஞர் ஆட்சி. இது கிராமக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலே வாங்கிய கடன் 4½ இலட்சம் பேருக்குத் தள்ளுபடி செய்திருக்கிறோம். இதுபோக, ரூ. 25 ஆயிரம் வரைக்கும் இந்தக் கடன். ரூ.25 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம், 7 இலட்சம் வரைக்கும் கடன் வாங்கியவர்கள், தொகை 2 இலட்சம். அவர்களுக்கு அபராத வட்டி, வட்டியிலே ஒரு குறிப்பிட்ட அளவு தள்ளுபடியும் கொடுத்திருக்கிறோம். இப்போது இவர்கள் கேட்பது, வீட்டு வசதிச் சங்கத்தில் வாங்கிய கடனை, அவர்களுக்குப் பத்திரத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அது சம்பந்தமாக என்ன செய்ய வேண்டுமென்றால், அதிலே அரசுக்கு நிறைய பொறுப்பு வருகின்றது. அதே மாதிரி





அவர்கள் சொல்வது, அபராத வட்டி, வட்டி எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அது சம்பந்தமாக ஆய்வு செய்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரத்திற்குட்பட்ட 28, 29, 30 போன்ற 3 வார்டுகளில் சிறுபான்மையின மக்கள் அதிகமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற பகுதி. அந்தப் பகுதிகளில் ஏறத்தாழ 30 ஆண்டு காலம், 40 ஆண்டு காலம் வாழ்ந்து வருகின்ற அந்த மக்களுக்கு அரசு இதுவரையில் பட்டா கொடுப்பதற்கான அந்தத் திட்டத்தை அந்தப் பகுதியில் நடைமுறைப்படுத்தவில்லை. எப்போது நடைமுறைப்படுத்துவார்கள் என்பதையும், அதே நேரத்தில் நீர்நிலைப் புறம்போக்குகளில், உயிருக்கு ஆபத்தில்லாத பகுதிகளில், திட்டமிட்டு, அந்தப் பகுதிகளில் ஆய்வு நடத்தி, அரசு பட்டா வழங்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்றவுடன், இந்த சிறப்புத் திட்டத்தை அறிவித்து, பத்தாண்டுகளுக்கு மேல் குடியிருக்கிறவர்களுக்கு, வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும். அது வேறு இனங்களில், நத்தம் இல்லாமல் வேறு வகைப்பாடு இருந்தாலும், வகைப்பாடு மாற்றம் செய்வதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சித் தலைவர் எல்லாம், அவர்கள் போய், அந்த இடத்தைப் பார்வையிட்டு, அது எந்த வகைப் புறம்போக்கு என்பதை ஆய்வு செய்து, அந்த நில மாற்றம், வகை மாற்றம் செய்து, அதற்குப் பின்னால் பட்டா வழங்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு, அந்தப் பகுதியிலே அவர் சொன்ன 3 வார்டு பகுதி, எந்த வகையான நிலம் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டினால், அது எந்தப் புறம்போக்கு, ஒருவேளை நீர்நிலைப் புறம்போக்கு அல்லது குளமோ, ஏரியோ இருந்தால், நிச்சயம் அரசுக்கு--உங்களுக்குத் தெரியும்--மதுரை உயர்

நீதிமன்றமும், சென்னை உயர் நீதிமன்றமும் சில வழிகாட்டுதல் சொல்லியிருக்கின்றன. இரண்டும், இரண்டு கண்களாக இருக்கின்றன. ஒரு பக்கம் பட்டாவும் கொடுக்க வேண்டும், ஒரு பக்கம் ஏரியோ அல்லது நீர்வரத்து வாய்க்காலோ ஆக்கிரமிப்பு ஆகிவிடக் கூடாது. ஆக, இந்த அரசு இரண்டையும் கவனத்தில் வைத்து செய்துகொண்டிருக்கிறது. பட்டா கொடுக்கக்கூடிய பிரச்சினை, இரண்டு பிரச்சினைகள். நீங்கள் ஏரி, குளத்திலே எல்லாம் பட்டா கொடுக்க வேண்டும் என்றுகூட, நம்முடைய கோ.க. மணி அவர்கள் அதையும் கொஞ்சம் ஆய்வு செய்ய வேண்டும் என்றுகூட கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால், அப்படிச் செய்ய முடியாது. காரணம் என்னவென்றால், விவசாய நிலங்கள், எதிர்காலத்திலே விளை நிலங்கள் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படும். வரத்து வாய்க்காலோ அல்லது குளத்திலேயோ பட்டா கொடுத்துவிட்டோம் என்றால், முழுமையாக எல்லாம் வீடாகிவிடும். எனவே, எதிர்காலத்திலே, அரசினுடைய, நம்முடைய விவசாய உற்பத்தியினுடைய நலன் கருதி, விவசாயிகளுடைய நலன் கருதி, வரத்து வாய்க்காலோ அல்லது குளத்திலோ இருந்தால் உயர் நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலை அரசு பின்பற்ற வேண்டியிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

*முற்பகல் 10-00*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இங்கே சென்னை மாநகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் பிரச்சினை குறித்து நான்கூட அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அந்தவகையில் பட்டா வழங்குகிற நேரத்தில், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பல்லாயிரக்கணக்கான வீடுகள் பட்டா வழங்கப்படாமல் இருக்கின்றன.

அதைப்போல, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற மாநகராட்சிகளிலும், புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிற திருப்பூர், ஈரோடு மாநகராட்சிகளிலேயும், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலும் நீண்ட காலமாக பட்டா





வழங்காமல் உள்ளது. அதிலும் குறிப்பாக, 25, 30 ஆண்டு காலம் எல்லாம் குடியிருந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் குடியிருந்துவரும் அவர்களுக்கு, தற்போது சிறப்புத் திட்டத்தின் அடிப்படையிலே, நில வகை மாற்றம் செய்து, பட்டா வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதைப்போல, எங்களுடைய மேட்டூர் தொகுதிக்குட்பட்ட மேட்டூர் நகரத்திலேகூட, நகராட்சி எல்லையில் 2,000-க்கும் மேற்பட்ட வீடுகள் பட்டா வழங்கப்படாமல் இருக்கின்றன. இப்படி நகராட்சிப் பகுதிகளுக்கும், மாநகராட்சிப் பகுதிகளுக்கும் ஒட்டுமொத்தமாக இந்தச் சிறப்புத் திட்டத்தின் அடிப்படையிலே, வகை மாற்றம் செய்து, பட்டா வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, சென்னை மாநகரத்திலே எம்.ஜி.ஆர். நகராக இருந்தாலும், எழில் நகராக இருந்தாலும், பல பகுதிகளிலே, மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களிலே மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. சென்னை மாநகராட்சியிலே Corporation, Public என்று இடம் பெற்றிருக்கிறது. அதைத்தான் நாங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே பேசி, அதை மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவர்களும் தீர்மானம் போட்டுக் கொடுத்துவிட்டால், நாம் பட்டா கொடுத்துவிடலாம்; பட்டா கொடுக்கப் போகிறோம். எம்.ஜி.ஆர். நகரிலும் கொடுக்கப்போகிறோம்; எழில் நகரிலும் கண்டிப்பாகக் கொடுக்கப்போகிறோம். அதற்குத்தான் நாங்கள் கொடுக்கிறோம் என்று சொல்கிறேன்.

அதேபோல மாநிலம் முழுவதும்--திருப்பூர் மாநகராட்சி புதிதாக உதயமாகியிருக்கிறது என்று இப்போது நீங்கள் சொன்னீர்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்களோடு ஒரு நாள் முழுக்க, காலையிலிருந்து மாலை வரை திருப்பூர் நகராட்சி முழுவதும் போய், ஏறத்தாழ 3,500 வீடுகளைப் பார்வையிட்டோம். நான் தொடர்ந்து நகராட்சி, மாநகராட்சிப்

பகுதிகளை நம்முடைய இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடனே, எங்கெங்கு விடுபட்டிருக்கிறதோ, அங்கேயெல்லாம் நேரிலே சென்று, பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறேன். கண்டிப்பாகப் பட்டா வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 56, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**56—**

### மாவட்டப் பதிவாளர் அலுவலகம்

***26317—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூரில் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டப் பதிப்பகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான்காவது முறையாகப் பொறுப்பேற்றபிறகு, திருவள்ளூர் மாவட்டத்தினைப் புதிதாக அமைத்து, அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவினையும் செய்து, பிறகு திறப்பு விழாவையும் அவரே செய்தார்கள். அத்தகைய சிறப்புமிக்க திருவள்ளூர் நகரத்திலே மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை விரைந்து எப்போது இந்த அரசு திறக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்படும் என்பதையும், அதே நேரத்தில், அந்தப் பகுதியில் இந்தத் துறைக்குச் சொந்தமான இடங்கள் இல்லாத காரணத்தால், வருவாய்த் துறையின்மூலமாக இடங்கள் தேர்வு செய்யப்பட்டபிறகு உடனடியாக அந்த அலுவலகம் ஆரம்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறையைப் பொறுத்தவரையிலே, 300 கோடி ரூபாய் அளவிற்கு இருந்த வருமானம் இன்றைக்கு 4,230 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. வருவாய் உயர்ந்துவிட்டபோதிலும், 1980-லே நியமிக்கப்பட்ட பணியாளர்களுடைய எண்ணிக்கைதான் தற்போது இருக்கிறது. ஆகவே, அந்தத் துறையிலே பணியாளர்களுடைய எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர் இடம் காலியாக இருப்பது உண்மைதான். இருந்தாலும்கூட, இந்தத் துறையின் சார்பாக அந்தப் பணியிடங்களையெல்லாம் நிரப்பக்கூடிய முயற்சிகளில் இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) சென்ற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஹசன் அலி, கொஞ்சம் இருங்கள். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், என்ன? சொல்லுங்கள்.

[2008 ஏப்ரல் 4

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே சார் பதிவாளர் அலுவலகங்களைப் பொறுத்தவரையிலே, 40 அலுவலகங்கள் மூடப்பட்டன. நம்முடைய ஆட்சி வந்தபிறகு, 10 அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 30 அலுவலகங்களையும் திறப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான இடங்களில் திறக்கக்கூடிய முயற்சிகளில் இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது. கடந்த ஆட்சியைப் பொறுத்தமட்டில், 40 சார் பதிவாளர் அலுவலகங்கள் மூடப்பட்டது உண்மை. மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, 10 அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் தேவையான இடங்களில், ஆண்டுதோறும் 10 அலுவலகங்கள் வீதம் திறக்கலாம் என்ற ஆலோசனையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். எனவே, வருகிற மானியக் கோரிக்கையின்போது, இந்த ஆண்டு எவ்வளவு அலுவலகங்கள் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அனுமதியைப் பெற்று அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை அமைச்சர் அவர்கள் வந்திருந்தபொழுது, தமிழகத்திலேயே மிகச் சிறந்த அழகிய இராமநாதபுரம் மணற்பரப்பைக்கொண்ட அதியமான் கடற்கரையையும், குளம் போன்று தேங்கியிருக்கும் அழகிய கடலையும் அவர்கள் கண்டார்கள். அது மேடு பள்ளமாக, இப்பொழுது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிவுத் துறைக்கும், அதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

**திரு. கு. ஹசன் அலி:** இது சுற்றுலாத் துறை பற்றியது.



2008 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுற்றுலாத் துறை அல்ல. கேள்வி பதிவுத் துறையைப் பற்றியது. அதற்குத் தனிக் கேள்வி போடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது, ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியத்திற்கென தனியாக ஒரு பதிவு அலுவலகம் தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கான எண்ணிக்கை இருக்கிறது. எனவே, தற்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டிலே 10 அலுவலகங்கள் தொடங்கவிருப்பதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஓர் அலுவலகம் காடையாம்பட்டிக்கென்று தனியாகத் தொடங்கப்படுமா என்று தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சார் பதிவாளர் அலுவலகம் தொடங்கப்பட வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 1,000 ஆவணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். அந்த அடிப்படையில், முன்னுரிமையின் அடிப்படையில் அது அந்த அளவுக்குத் தேவை என்று துறை கருதினால், நிச்சயமாக வருகிற மானியக் கோரிக்கையின்போது அது அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**57—**

## நிலப் பட்டா

**•2983—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, பூசாரிபாளையத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு நிலப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2008 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேரூர் தொகுதி, பூசாரிபாளையத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் இனத்தைச் சார்ந்தவர்களிடமிருந்து நிலப் பட்டா வழங்கக்கோரி விண்ணப்பம் ஏதும் வரப்பெறாததால், இந்தச் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில், பூசாரிபாளையத்தில் வசிக்கும் ஏழையெளிய மக்களுக்கும், அதேபோன்று குறிச்சி மற்றும் சுந்தராபுரம், குனியமுத்தூர், இடையர்பாளையம், சுகுணாபுரம், சுண்ணாம்புக் கால்வாய், மதுக்கரை, தெலுங்குபாளையம், கரும்புகடை செல்வபுரம், எட்டிமடை, ஒத்தகால்மண்டபம், விச்சேரி ஆகிய பகுதிகளில் வீடின்றி வசிக்கும் ஏழையெளிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவு மக்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்கவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் குனியமுத்தூர் கிராமம் க.ச. எண் 18/4, குறிச்சி கிராமம் க.ச. எண் 721, இந்த இடத்தில் 350 18/5, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 2005-2006-ல் அம்மாவுடைய ஆட்சிக் காலத்தில் பட்டா வழங்கப்பட்டது. இதுவரையில் அந்த இடம் அளக்கப்படவில்லை. அதேபோன்று, குனியமுத்தூர், சுகுணாபுரம், கோவைப்புதூர், எம்.ஜி.ஆர். நகர் 5-வது வார்டு அம்மன் காலனியில் பட்டா தயார் செய்தும் இதுவரை ஏழை மக்களுக்கு வழங்கப்படவில்லை. மேலும், எட்டிமடை பேரூராட்சியில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா ஆட்சியில், இடம் தேர்வு செய்யப்பட்டு B.C., M.B.C. மக்களுக்கு இடம் வழங்கும் பணிக்கு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இதுபோன்ற குறைகளை மாவட்ட ஆட்சியரிடமும், துறை அதிகாரிகளிடமும் தெரிவித்தும், நடவடிக்கை இல்லை. இந்த ஆண்டிலாவது இலவச மனைப் பட்டா வழங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர், அவர் நேரடியாக அந்த இடங்களைத் தேர்வு செய்து அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து செய்வார் என்று சொன்னால் தலைவர் கலைஞர் அரசாங்கத்திலே பணம் நிரம்ப இருக்கிறது. நாங்களும் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறோம். அதிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய அம்மா ஆட்சிக் காலத்திலே நிறைய பட்டா வழங்கியதாகச் சொன்னார்கள். 2002-2003-லிருந்து 2005-2006 வரை பட்டா வழங்குவதற்காக அந்த ஆட்சியிலேயே பணம் ஒதுக்கவில்லை. அந்த ஆட்சிக் காலத்திலே, 2003-லேயிருந்து 2006 வரை பட்டா ஏதும் அந்த அரசின் ஆட்சிக் காலத்திலே வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே அதற்கு முன்னால் இருந்த தி.மு.க. அரசு இடம் எடுத்து, தகுதியில்லாத . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி, நீங்கள் கேள்விக்கு உள்ளே வாருங்கள்.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை. அமைச்சர் சொன்னதற்குப் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்விக்கு உள்ளே வாருங்கள்.

**திரு. சு.ப. வேலுமணி:** கேட்ட கேள்விக்குத்தான் நான் பதில் சொல்லிப் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு உள்ளேயே வரமாட்டேன் என்கிறீர்களே !

[2008 ஏப்ரல் 4

**திரு. சு.ப. வேலுமணி:** அந்த அரசு எடுத்த இடங்கள் ஒதுக்குப்புறமாக, தகுதியில்லாமல் இருந்த இடங்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே செய்யப்பட்டது. அதேபோல, முதல்கட்டமாக அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே 50 கோடி ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டது. அதை இதுவரையில் இந்த அரசு என்ன செய்தது என்றே தெரியவில்லை. அதேபோல், கோவை மாவட்டத்திலே, பேரூர் தொகுதி, பூசாரிபாளையம், செல்வசிந்தாமணிகுளம் ஓரம் மற்றும் முத்தங்குளம் ஓரத்திலும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் குளத்திற்கு இடைஞ்சலின்றி சுமார் 50 ஆண்டு காலமாக ஏழையெளிய மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கும் இந்த அரசு பட்டா வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட இடம் மட்டுமல்ல, எந்த இடத்திலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு நிலம் வேண்டுமென்று கேட்கிறார்களோ - இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே இடம் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. நிலம் விலை கூடுதலாக இருக்கிற காரணத்தினால் அங்கே நிலங்கள் பெறுவதற்கு சிரமம் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் நேரடியாக அந்த இடங்களைத் தேர்வு செய்து, அங்கேயிருக்கிற அந்தப் பயனாளிகளையும், அங்கே இருக்கிற நிலம் கொடுப்போரையும் அழைத்துப் பேசி, சுமுகமாக முடிவு செய்து கொடுப்பார்கள் என்று சொன்னால், அரசாங்கம் அந்த இடங்களைப் பட்டா போட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. 2001-2002 முதல் ஐந்தாண்டு காலம் வரை பிற்படுத்தப்பட்டோருக்குப் பட்டா கொடுக்கின்ற திட்டம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 4]

**58—**

## தொடக்கப் பள்ளி

***4401—திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, திமிரிக்கோட்டையில் தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2005-2006 ஆம் கல்வியாண்டு முதல் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட கல்விக் காப்புறுதி மையங்கள் மட்டுமே 1 முதல் 5 வகுப்புகள்கொண்ட முறையான தொடக்கப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படுவதால், தாரமங்கலம் தொகுதி, திமிரிக்கோட்டையில் தொடக்கப் பள்ளியை நேரடியாகத் தொடங்க வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில் மேச்சேரி ஒன்றியத்தில் திமிரிக்கோட்டை கிராமத்தில் சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருவதால், அதில் 100-க்கு மேற்பட்ட குழந்தைகள் பக்கத்தில் இருக்கக்கூடிய கிராமத்தில் இருக்கக்கூடிய பள்ளியில் சென்று படிப்பதனால் இங்கு ஒரு புதிய தொடக்கப் பள்ளியை அமைச்சர் துவக்கிக் கொடுப்பாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திமிரிக்கோட்டையிலே அவர் குறிப்பிட்டதைப்போல, ஏறத்தாழ 300 குடும்பங்கள் கொண்ட மக்கள் தொகை இருக்கிறது. அவர் குறிப்பிட்டதைப்போல, 100 குழந்தைகள் வேறு அங்கே இருக்கிறார்கள். ஆனால், அனைவருக்கும் கல்வி இயக்கத்

[2008 ஏப்ரல் 4

திட்டத்தினுடைய குறிக்கோளின் அடிப்படையில், 300 குடியிருப்புகள் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் இருக்கிற பள்ளிகள் மாத்திரம்தான் கல்விக் காப்புறுதி மையங்களாகத் தொடங்கப்பட்டு, அது அதற்குப் பிறகு தொடர்ச்சியாக தொடக்கப் பள்ளிகளாக நிலை உயர்த்தக்கூடிய நிலை இருக்கக்கூடிய காரணத்தால், அங்கே வாய்ப்பு இல்லை. இப்போது, திமிரிக்கோட்டையிலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்திலே, எர்ரகுண்டப்பட்டியிலே ஒரு பள்ளி இருக்கிறது. முக்கால் கிலோ மீட்டர் தூரத்திலே, அமரம் என்ற ஒரு பள்ளி இருக்கிறது. இந்த இரண்டு பள்ளிகளிலும், முறையே, எர்ரகுண்டப்பட்டியிலே 166 பேர், அதுபோல அமரத்திலே 300 பேர் படிக்கிறார்கள். அரை கிலோ மீட்டர், முக்கால் கிலோ மீட்டர் தூரத்திலே இந்த இரண்டுப் பள்ளிகள் அமைந்திருக்கக்கூடிய காரணத்தினாலேயே, அங்கே பள்ளித் துவங்க வேண்டிய செயற்குறிப்பு இல்லை என்று அரசின் சார்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, நேற்று நான் அந்தப் பள்ளியிலும், அதற்குரிய அதிகாரியிடத்திலேயும் நேரடியாக பேசி, அங்கே இருக்கக்கூடிய இதர சூழ்நிலைகளைக் கருத்திலேகொள்ள வேண்டுமென்று பார்க்கிறபோது, திமிரிக்கோட்டைக்குப் பக்கத்திலே திமிரிக்கோட்டை வலசு என்று இன்னொரு குடியிருப்பு இருக்கிறது. அங்கே ஏறத்தாழ 200 பேர் இருப்பதாக நான் அறிந்திருக்கிறேன். அங்கே 100 பேர் படிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, திமிரிக்கோட்டையையும், திமிரிக்கோட்டை வலசு என்ற குடியிருப்பையும் இணைத்து, அங்கே சிறப்பாக இந்த ஆண்டு ஒரு புதிய கல்விக் காப்புறுதி மையத்தைத் தொடங்கி, பிற்காலத்திலே அதைத் தொடக்கப் பள்ளியாக நிலை உயர்த்துவதற்கு மத்திய அரசினுடைய அனுமதியை இந்த அரசு கோரி, நிச்சயமாகப் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் இந்த நல்ல அறிவிப்புக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வரகூர் தொகுதிக்குட்பட்ட நன்னை நடுநிலைப் பள்ளியை



2008 ஏப்ரல் 4]

உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று அரசுக்கு வேண்டிய அனைத்து கோப்புகளும் அனுப்பப்பட்டுள்ளன. அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் மற்றும் முகலூர், கீழப் பெரம்பலூர் ஆகிய இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும் எங்கள் மாவட்டத்திலேயே சிறந்த உயர்நிலைப் பள்ளியாக, மேலும் அதிக விழுக்காடு தேர்ச்சி பெறுகின்ற பள்ளியாக இருந்து, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று அரசினுடைய பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த நன்னை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், முகலூர் மற்றும் கீழப்பெரம்பலூர் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படுமா எனத் தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். நன்னை நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுவதற்கும், அதுபோல, முகலூர், கீழப்பெரம்பலூர் பள்ளிகள் உயர்நிலையிலிருந்து மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுவதற்கும் முறையான முன்மொழிவுகள் அந்த மாவட்டத்திலிருந்து இங்கே அரசுக்கு வந்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக, இந்த ஆண்டு தரம் உயர்த்தக்கூடிய பள்ளிகளிலே அரசு அதை அவசியம் கவனத்திலேகொண்டு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

முற்பகல் 10-15

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆரம்பப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்கள் பணியமர்த்தப்படும்போது, மாவட்டப் பதிவு மூப்பு அடிப்படையில் பணியமர்த்தப்படுகின்றார்கள். ஆனால், மாறுதல் என்று வரும்போது, மாநிலம் முழுவதும் மாறுதல் வழங்கப்படுகிறது. ஆகவே, மாநிலம் முழுவதும் பணியமர்த்தும்போதும் மாநில அளவிலான பதிவு மூப்பு அடிப்படையில் பணியமர்த்துவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா

என்று கேட்பதோடு, குறிப்பாக, தென் மாவட்ட மக்கள், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்ட மக்கள், 1987 ஆம் ஆண்டில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தும், இதுவரை பணி கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, அரசு கருணையோடு கவனத்தில் வைத்து, மாறுதல் செய்வதுபோன்று, மாநில அளவிலான பதிவு மூப்பு அடிப்படையில் பணியமர்த்த ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்ட மக்களின்மீது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டிருக்கக்கூடிய தணியாத ஆர்வத்திற்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், அதேசமயம், எனக்கு இருக்கக்கூடிய சிக்கல், கல்வி அமைச்சர் என்ற முறையிலே, நானும் தென் மாவட்டத்திலேயிருந்து வந்திருக்கக்கூடிய. அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், கல்வி அமைச்சர் என்ற முறையிலே பார்ப்போமென்று சொன்னால், தென் மாவட்டங்களிலே, உறுப்பினர் சொல்வதைப்போல, 1987 ஆம் ஆண்டிலேயிருந்து நிறையப் பேர் பதிந்து வைத்திருக்கிறார்கள். மாவட்டப் பதிவு மூப்பு அடிப்படையை விட்டுவிட்டு, நீங்கள் மாநில பதிவு மூப்பு அடிப்படையிலே பார்த்தீர்களென்று சொன்னால், குறிப்பாக, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களிலே பதிந்து வைத்திருக்கக்கூடியவர்கள்தான், தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய அனைத்துப் பள்ளிகளிலுமே அவர்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நிலை. ஆங்காங்கே, குறிப்பாக, வட மாவட்டங்களிலே ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு, அங்கே பதிந்து வைத்திருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதிலே பெரியதொரு தாமதம் உருவாகும் என்ற அந்த நிலையைக் கருத்தில் கொண்டுதான், அரசு, மாவட்ட வாரியாக இருக்கக்கூடிய பதிவு மூப்பு அடிப்படையை நாம் கடைப்பிடித்து வருகிறோம். இதை எதிர்த்து நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறார்கள். முதல்தரத் தீர்ப்பு அரசுக்குச் சாதகமாக வந்தது. அதற்கடுத்த மேல்முறையீட்டிற்கு அவர்கள் சென்றபோது, இதில் status quo—தேர்வு நடத்துங்கள்; தேர்வு நடத்துவதை அப்படியே வைத்திருங்கள்; ஆனால், status quo-வாக இருக்கட்டும்; தேர்வு



முடிவுகளை வெளியிட வேண்டாம்; தேர்வுப் பட்டியலை வெளியிட வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே அந்த வழக்கு இருக்கிறது. முறையான தீர்ப்பு வந்தபிறகு, நாம் ஒரு முடிவெடுக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசு தொடக்கப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி கிட்டத்தட்ட நிறைவுறும் நிலையில் உள்ளது. பெரும்பாலும், நாங்கள் தொகுதியில் சுற்றுப்பயணம் செல்கின்ற நேரத்தில், தொடக்கப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துவருகிறார்கள். எனவே, இந்த ஆண்டு ஏதேனும் ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ், சுற்றுச் சுவர் அமைக்கும் பணியினை நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை, நீண்டநாட்களாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் வந்துகொண்டிருக்கிறது. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு, நான் இந்த அவையிலே முன்பே குறிப்பிட்டதுபோல, நபார்டு திட்டத்தின்கீழே, பகுதி-8 திட்டத்திலே, ஏறத்தாழ 19 கிலோ மீட்டர் தொலைவிற்கு, இதுவரை 1 முதல் 7 நபார்டு phase-லே கொடுத்திருக்கக்கூடிய அனைத்துப் பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு நிதியொதுக்கம் செய்யப்பட்டு, அதற்கான அனுமதியை வழங்கியிருக்கிறார்கள்.

தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே, அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழே, இந்தப் பணிகளை மேற்கொண்டிருந்தாலும்கூட, கடந்த இரண்டு ஆண்டுகளாக, அந்தப் பணியை, காம்பவுண்டு சுவர் கட்டுவதற்கு நிதியொதுக்கம் மத்திய அரசாங்கத்திலிருந்து அனுமதிப்பதில்லை. இருந்தாலும்கூட,

[2008 ஏப்ரல் 4

இந்தக் கோரிக்கை தொடர்ச்சியாக வருகிறது. இன்னும் சொல்லவேண்டுமென்றால், நடுநிலைப் பள்ளிகளுக்கெல்லாம், தொடக்கப் பள்ளிகளுக்கெல்லாம், தொடர்ச்சியாக இப்போது கணினி வழங்கக்கூடிய ஒரு மகத்தான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். எனவே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும், ஒட்டுமொத்தக் கோரிக்கையையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, இதற்காக ஆவன செய்ய அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**59—**

## புறவழிச் சாலை

***723—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் நகருக்குப் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராசிபுரம் நகரத்திலுள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்வகையில், ராசிபுரம் நகரத்திற்குப் புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அதாவது, ராசிபுரத்தையும், ஆத்தூரையும் இணைக்கக்கூடிய மாநில நெடுஞ்சாலையிலிருந்து, அதேபோல, சேந்தமங்கலத்திலிருந்து ராசிபுரத்திற்கு வரக்கூடிய மாநில நெடுஞ்சாலையையும் கடந்து. அதேபோல, தேசிய நெடுஞ்சாலை எண் 7-ஐயும் கடந்து. ராசிபுரத்திலிருந்து திருச்செங்கோடு செல்லக்கூடிய மாநில நெடுஞ்சாலையை இணைக்கும்வகையில், காக்காவேரியில் தொடங்கி, வேலம்பாளையம், அரசம்பாளையம், அப்பநாயக்கன்பட்டி, சந்திரசேகரபுரம், ஆக்காட்டூர், அணைப்பாளையம், கவுண்டம்பாளையம், மூணுசாமி, குருசாமிபாளையம், பெரியமணலி,



2008 ஏப்ரல் 4]

நாட்டார்மங்கலம் வழியாக பொன்குறிச்சி வரை, அந்த புறவழிச் சாலையை நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக அமைக்க நேர்பாடு இறுதி செய்யப்பட்டுள்ளது. நேர்பாடு இறுதி செய்யப்பட்டு, நாமக்கல் மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. நிலம் கையகப்படுத்துகிற பணி நடைபெற்று வருகிறது. எனவே, நிலம் கையகப்படுத்தும் பணி நிறைவு பெற்றபிறகு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, புறவழிச் சாலை அமைக்கும் பணி விரைவில் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

முற்பகல் 10-20

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் பொதுமக்கள், வாகன உரிமையாளர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையான ராசிபுரம் புறவழிச் சாலைத் திட்டத்தைத் தரவிருப்பதாகக் கூறிய அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ராசிபுரம் பகுதியானது, இருபுறமும் ஏரிகள் நிறைந்த பகுதி. நகராட்சியில் உள்ள சாலைகள் எல்லாம் மிகவும் குறுகிய பாதையாக இருக்கின்ற காரணத்தால், அங்கே தற்காலத்தில் போக்குவரத்து வாகனங்கள் பெருகி வருகின்ற இந்தச் சூழ்நிலையில், புறவழிச் சாலை அமைப்பதற்கு அனுமதி தந்த அரசுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

அந்த புறவழிச் சாலையிலேயிருந்து நிறைய வாகனங்கள் கேரளா, கோவை, ஈரோடு, திருச்செங்கோடு, நாமக்கல், கோபி போன்ற பகுதிகளிலிருந்து சென்னை செல்லும் வாகனங்களெல்லாம், தற்பொழுது ராசிபுரம் வழியாக ஆத்தூர் செல்வதற்காக, இந்தப் பகுதியிலே நிறைய வாகனங்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த புறவழிச் சாலையிலிருந்து மேலும் ஆத்தூர் வரை, ஏனென்று கேட்டால், இப்பொழுது சேலம், உளுந்தூர்பேட்டை சாலை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு, அது நான்கு வழிப் பாதையாக அமைக்கக்கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, இந்தப் புறவழிச் சாலையிலேயிருந்து ஆத்தூர் வரை நான்கு வழிச் சாலையாக அமைக்கக்கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, இந்தத்

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரத்தில் புறவழிச் சாலை அமைக்கின்ற பணி தற்பொழுது மிகவும் மெதுவாக நடைபெற்று வருகின்றது. சிதம்பரம் நகரத்தில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைக் கருத்தில்கொண்டு, அந்தப் பணி விரைந்து முடிக்கப்பட வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற புறவழிச் சாலை, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்டு, புறவழிச் சாலை அமைக்கும் பணி, நில எடுப்புப் பணி, அதேபோல, மின் கம்பங்கள் அகற்றுகின்ற பணி, குடிநீர் குழாய்கள் அகற்றுகின்ற பணிகள் எல்லாம் நடைபெற்று, இப்பொழுது சாலைப் பணி நடைபெற்று வருகிறது. அதேபோல அதிலே இரயில்வே மேம்பாலம்கூட கட்டுவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது. எனவே, அந்தப் பணிகளெல்லாம் நிச்சயமாக விரைவில் முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகரில் மணல் சரக்குந்துகள் ஐந்தாயிரத்திற்கும் மேல் செல்வதால் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து, மாணவர்கள் முதல் பெரியவர்கள்வரை உயிர்ப் பலி விபத்துகள் அதிகமாகி வருகின்றன. அதனால், காஞ்சிபுரத்தில் புறவழிச் சாலையை உடனடியாக ஏற்படுத்தி நிறைவேற்றப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகரத்தின் அருகில் இருக்கக்கூடிய செய்யாறு தொழிற்பேட்டைக்குச் செல்லக்கூடிய வகையில் புறவழிச் சாலை அமைப்பதற்காக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும்,



நகரத்தில் இருக்கக்கூடிய நெரிசலைக் குறைப்பதற்கும் எதிர்காலத்திலே அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**60—**

## பால் குளிரூட்டும் மையம்

***42339—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி, பையர்நாய்க்கன்பட்டி மற்றும் கோ. கூட்ரோடு ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க, ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பையர்நாயக்கன்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்கெனவே குளிரூட்டும் மையம் அமைக்கப்பட்டு துவக்க நிலையில் உள்ளது. கோ. கூட்ரோட்டுக்கு அருகில் புதுப்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் பால் குளிரூட்டும் மையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதால், கோ. கூட்ரோட்டில் தனியாக பால் குளிரூட்டும் மையம் அமைக்கத் தற்போது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதியில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள வேப்பம்பட்டி,

திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? எப்பொழுது பணிகள் தொடங்கப்படும் என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் நகரத்திலுள்ள நெரிசலைக் குறைக்கும்வகையில் புறவழிச் சாலை வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்து, அதனை ஏற்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பரிந்துரையைப் பெற்று, அதற்குப் பிறகு அந்த பணி இப்பொழுது தொடங்கப்படும் சூழ்நிலையில் உள்ளது.

அதற்கு அடுத்த கட்டமாக, இப்பொழுது ஆத்தூர்வரை அந்த மாநில நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். அதை எதிர்காலத்திலே, அந்தப் போக்குவரத்தினுடைய கணக்கு, செறிவு எடுக்கப்பட்டு, அதற்குப் பிறகு துறை நடவடிக்கை எடுக்கும். எனவே, இப்பொழுது இந்தப் புறவழிச் சாலைக்குரிய மதிப்பீடு சுமாராக இப்பொழுது நிலம் கையகப்படுத்துகிற பணி, அதேபோல திட்ட விரிவான அறிக்கை முழுமையாகத் தயார் செய்யப்பட்ட பிறகுதான், அதனுடைய இறுதி மதிப்பீடு தெரியும். எனவே, மதிப்பீடு எப்படியிருந்தாலும், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அந்தப் பகுதியினுடைய மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. எனவே, நேரடியாக நானும்கூட அந்தப் பகுதிக்குச் சென்று, அந்த புறவழிச் சாலை அமையும் பகுதியைப் பார்வையிட்டிருக்கின்றேன். எனவே, நிச்சயமாக திட்டப் பணிகள் விரைவில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.



**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி நகரத்தில் ஏற்பட்டிருக்கின்ற வாகன நெருக்கடியைக் குறைக்கும்பொருட்டு மதுரை தேசிய நெடுஞ்சாலையையும், தென்காசி சங்கரன்கோயில் நெடுஞ்சாலையையும், கடையம், அம்பை, திருவனந்தபுரம் நெடுஞ்சாலையையும் இணைக்கின்ற ஒரு சுற்றுச் சாலை அமைப்பதற்குண்டான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து சென்னைக்கு தேசிய நெடுஞ்சாலையும், அதேபோன்று விருத்தாச்சலத்திலிருந்து கருவேப்பிலங்குறிச்சி வழியாக கடலூர் தேசிய நெடுஞ்சாலையும், இதற்கு இடைப்பட்ட மாவட்டத்தையும், பெரம்பலூர் மாவட்டத்தையும் இணைக்கின்ற தொழுதூர், திட்டக்குடி, பெண்ணாடம் சாலை தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணியின்கீழ் கொண்டு வரப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த வாரம்தான் அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அதைக் கடிதமாகக் கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். இன்னும் அவரிடமிருந்து எழுத்துபூர்வமாக எந்தத் தாக்கீதும் வரவில்லை. எனவே, கடிதம் வருமானால் நிச்சயமாக அதை எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

அதற்காக முதலமைச்சர் அல்லது அவை முன்னவர் அவர்கள், அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் அவசியம் குறித்தும், அது மக்களின் அடிப்படையான உரிமை என்ற அந்த நிலையிலேயும், அதை வலியுறுத்துகிற முறையில், நிறைவேற்ற வேண்டும் என்ற ஆர்வத்தோடு, அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் முறையில்லாமல் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் என்பதை உணர்த்துவதற்காக, தமிழகத்தைச் சேர்ந்த கலைத் துறையிலே உள்ள நடிகர்கள், நடிகையர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள் அனைவரும் இன்றையதினம் உண்ணாவிரதத்திலே ஈடுபட்டிருக்கிற அந்த நிலையை, சாத்வீகப் போராட்டத்திலே ஈடுபட்டிருப்பதை இந்த அவை அறிந்து, அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டுள்ளவர்கள் எந்த நோக்கத்திற்காக இந்த சாத்வீகப் போராட்டத்திலே ஈடுபட்டார்களோ, அந்த நோக்கம் வெற்றிபெற வேண்டுமென்று, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை இந்த அவை சார்பாக, தமிழக முதலமைச்சர் அவர்கள் சார்பாக, போராட்டம் வெற்றிபெற நான் வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) போராட்டம் வெற்றிபெற இந்த அவையினுடைய ஒட்டுமொத்தமான நல்லெண்ணத்தை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) எல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகிறபோதே, இந்த அவையினுடைய ஒட்டுமொத்தமான பாராட்டை, வாழ்த்தைத் தெரிவிக்கிறேன் என்றுதான் தெரிவித்திருக்கிறேன். ஒட்டுமொத்தம் என்றால், இந்த அவையிலுள்ள அனைத்துக் கட்சியினரும் இந்த ஒரு பிரச்சினையில் எந்த வேறுபாடும் இல்லாமல், அனைவரும் ஒன்றாக வாழ்த்துகிறோம் என்றுதான் பொருள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விஜயகாந்த், என்ன? நீங்கள் வேண்டுகோள் வைத்ததை நிறைவேற்றியாகிவிட்டது அல்லவா?

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காகத் தமிழ்த் திரை உலகத்தினர் அனைவரும் உண்ணாவிரதம் இருப்பதற்காக இந்தச் சட்டமன்றம் நன்றி தெரிவித்ததற்காக, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே இந்த விஜயகாந்த் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

## 3. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

• **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.121,32,27,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2008 ஏப்ரல் 4

அதேபோல் பையர்நாய்க்கன்பட்டி பகுதியிலே அந்தப் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருவது உண்மையிலேயே மகிழ்ச்சிகரமான விஷயம். நான் கேட்டுள்ள கோபிநாதம்பட்டி கூட்ரோடு, வாச்சாத்தி, பேதாதம்பட்டி, பறையப்பட்டி, ஜம்மனஅள்ளி, சின்னாங்குப்பம், நம்பிப்பட்டி ஆகிய 6 பஞ்சாயத்துகளில், ஏறக்குறைய 30, 40 கிராமங்களிலிருந்து கோபிநாதப்பட்டி கூட்ரோடை மையப்படுத்தி, அங்குதான் பால் ஊற்றப்படுகிறது. அதை ஒரு மையப் பகுதியாக இன்றைக்கும் விவசாயிகள் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய புதுப்பட்டி பக்கத்துத் தொகுதியான மொரப்பூர் தொகுதிக்கு உள்ளடங்கிய ஒரு பகுதியாகும். ஏறக்குறைய 6 முதல் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலாக இருக்கக்கூடிய பகுதி. எட்டு கிலோ மீட்டர் தூரம் வரை இருந்தால் வழங்கலாம் என்று மத்திய அரசாங்க வழிகாட்டுதலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலே, இதை ஒரு சிறப்பு நிகழ்வாக எடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோபிநாதம்பட்டி கூட்ரோடிலே இந்தப் பால் குளிரூட்டும் மையத்தை அமைக்க வேண்டுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி ஒன்றியத்தில் நல்லப்பட்டி, பாப்பிராயப்பட்டி, எருமநாயக்கன்பட்டி, ராமிநல்லி, மல்லாபுரம் ஆகிய இடங்களில் நிலம் வாங்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டு வருகின்ற 30-4-2008-க்குள் முடிக்கப்பட இருக்கின்றன. அதேபோல, வேப்பம்பட்டி கிரப்பட்டி, புதுப்பட்டி, பெரியானந்தம், அரியூர் ஆகிய பகுதிகளில் நிலம் வாங்கி பணிகள் தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மாவட்டத்தைப் பொறுத்தளவில், அதிக அளவுக்கு பால் குளிரூட்டும் மையங்கள் அமைக்கப்பட்டிருப்பதாலும், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோபிநாதம்பட்டி கூட்ரோட்டுக்கு அருகில் புதுப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பால் குளிரூட்டும் மையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பையர்நாயக்கன்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்கெனவே அமைக்கப்பட்டு துவக்க நிலையில் உள்ளது. இச்சங்கம் கோட்டப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க தொகுப்புப்



2008 ஏப்ரல் 4]

பால் குளிரூட்டு மையத்துடன் இணைக்கப்பட்டு பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி பையர்நாயக்கன்பட்டி, கோ.கூட்ரோட்டில் தனியாக பால் குளிரூட்டும் மையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும்கூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, வருகிற காலத்தில் பால் உற்பத்தி அந்தப் பகுதியில் அதிகமாகப் பெறப்படுமானால், தனியாக அங்கு ஒரு நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 7, 8 பஞ்சாயத்துகளுடைய பிரச்சினையை, பல ஆண்டு காலமாக தீர்க்கப்படாமல் இருந்த அந்தப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்ததன் அடிப்படையிலே தீர்ப்பதற்கு வழி வகுக்கும் என நம்புகிறேன். அந்த அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கர்நாடக அரசின் எதிர்ப்பைத் தடுத்திட தமிழ்த் திரையுலகத்தினர் உண்ணாவிரதம் இருப்பதற்கு அவையின் சார்பில் வாழ்த்துத் தெரிவித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. விஜயகாந்த்.

**திரு. விஜயகாந்த்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக நடிகர்கள், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்கள், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், Film chamber, FEFSI தொழிலாளர்கள் எல்லாம் சேர்ந்து இன்றைக்குத் தமிழக அரசிற்காக உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 5, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 217, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 960, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2951, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4751, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7265, திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 210, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 938, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1204, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1462, திரு. கே.எஸ். விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1720, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1772, திரு. கோ. அரி.



**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்." (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் இருக்கையில் அமருங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2187, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3879, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5208, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7299, திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 354, திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 414, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 535, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 707, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1062, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2036, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3438, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4600, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6398, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6940, திரு. கே.வி. ராமநாதன்.

**திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3043, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6011, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1525, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7553, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 63, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதியில், வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,357,07,12,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.121,32,27,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 758, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் அரசு கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,357,07,12,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.121,32,27,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 626, திரு. கு. சீனிவாசன்.

**திரு. கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமீபத்தில் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு அளிக்க உள்ள நஷ்டஈடு எக்டேருக்கு *ரூ.4,000/-* என்பதை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



*ரூ.1,357,07,12,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.121,32,27,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 800, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இயற்கை உரம், பூச்சிக்கொல்லி தயாரிப்புபற்றி விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,357,07,12,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.121,32,27,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 866, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் தொகுதியில், நெல் விதை தேவையான அளவு குறித்த காலத்தில் விவசாயக் கிடங்குமூலம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,357,07,12,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.121,32,27,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 962, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளத்தூர் தொகுதியிலுள்ள குடுமியான்மலை அண்ணா விவசாயப் பண்ணை மீண்டும் நன்றாகச் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1226*, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் வேளாண்மைத் துறை அலுவலகத்தில் நெல், உளுந்து மற்றும் பயறு ஆகியவற்றின் விதைகள் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை; அனைத்து விவசாயிகள் கேட்கும் விதைகளை உரிய காலத்தில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1324*, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் விளையும் காய்கறிகள் அனைத்தும் மேட்டுப்பாளையம் நகருக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து பல்வேறு மாநிலங்களுக்குப் பிரித்து அனுப்பப்படுகிறது; எனவே, காய்கள் கெடாமல் பாதுகாக்க, மேட்டுப்பாளையம் நகரில் அரசு காய்கறிகள் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1376*, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டத்தில் விவசாயிகள் அதிகம் பயன்படுத்தும் சொட்டு



நீர்ப்பாசனத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1432*, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், கிணத்துக்கடவு தொகுதியில், ஏழையெளிய விவசாயிகளின் விளைபொருட்கள் அறுவடை செய்யப்பட்டவற்றை சேகரிக்க உலர் களங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1465*, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1493*, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1565*, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண்மைத் துறையில் மத்திய அரசின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் என்னென்ன என்பது குறித்தும், அதற்காக ஒதுக்கப்படும் தொகை எவ்வளவு என்பது குறித்தும், அதேபோல் தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் என்னென்ன என்பது குறித்தும், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பது குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1784, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மிகக் குறைந்த விலையில் உரங்கள் வழங்க அரசு முன்வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1793, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதி, பெருந்துறை நகரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டு இருக்கும் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1811, திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளாத்திகுளத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1849, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சொட்டு நீர்ப்பாசன உபகரணங்கள் வாங்க பிற மாநிலங்களில் 90% மானியம் வழங்குவதுபோல் தமிழகத்திலும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1857, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மண் வள ஆராய்ச்சித் துறை பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1893, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதி, வேளாண்மைத் தொழிலில் பசுமைப் புரட்சி காணும் விவசாயிகளுக்கு நவீன குட்டை ரக தென்னங்கன்றுகளை இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1937, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2114, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்குத் தேவையான மூலப் பொருட்கள், விதை, உரம், இயந்திரங்கள் போன்றவற்றை மலிவு விலையில் அரசே வழங்கிட சேலம் மாநகரில் ஓர் அரசு விவசாய விற்பனை நிறுவனம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2292, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் தொகுதி, மேல் ஆலத்தூர் விவசாயப் பண்ணையில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து தொகுதி மக்களுக்கு விளம்பரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2482, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதியில் திராட்சை அதிகம் விளைவதால், அவற்றைப் பாதுகாக்க ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2528, திருமதி இளமதி சுப்பிரமணியன்.

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டையில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2638, திரு. க.சி.க. ராஜேந்திரன்.

**திரு. க.சி.க. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மேற்கு தொகுதி, செல்லூர் பகுதியில் பல இலட்சம் ரூபாயில் கட்டப்பட்ட மார்க்கெட் பயன்படாமல் இருந்து வருகின்றது; அதை மாற்றி உழவர் சந்தையாகச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2666, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண் விளைபொருள் விற்பனை மார்க்கெட் கமிட்டி செஸ் கூட்டத்தில் உள்ள குறைகளைக் களைய 1996-2001-ல் ஏற்படுத்திய குழுபோன்று தற்போதும் உயர்மட்டக் குழு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2579, திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2725, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லுக்கு குவின்டாலுக்கு ரூ.1,000/- என்று நிர்ணயிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2974, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மங்களூர் தொகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3154, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் மூடிக் கிடக்கும் படாளம் சர்க்கரை ஆலையைக் கூட்டுறவுத் துறையிலே திறந்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3165, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தொகுதியில் பண்ணை விவசாயம் விரிவாக்கம் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3179, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதி, வெற்றிலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3464, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதியில் உள்ள வெற்றிலை மற்றும் வாழை பயிரிடும் உழவர்களை சொட்டு நீர்ப்பாசனத்திற்கு மாற்றிட அவர்களை மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள ஜல்கான் ஜெயின் மாதிரிப் பண்ணைக்கு ஒவ்வொரு வருடமும் அழைத்துச் சென்று காண்பிக்க அரசு ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3537, திரு. ராம. சுப்புராம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3573, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு முழுவதும் உரத் தட்டுப்பாடு காரணமாக விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் விவசாயிகளுக்குப் போதுமான உரங்கள் கிடைக்காத சூழ்நிலையில், D.A.P. யூரியா, சூப்பர் பொட்டாஷ் போன்ற உரங்கள் மிகவும் அதிகமான விலைக்கு விற்பதால், அதனைத் தடுத்து தாராளமாகக் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3860, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் தரமான நெல் விதைகளை உருவாக்கி, விவசாயிகளுக்குத் தங்குதடை இல்லாமல் நெல் விதைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3963, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3997, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள மார்க்கெட்டிங் கமிட்டிகளில் நிலவும் நிர்வாகச் சீர்கேட்டைக் களைய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்சில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4443, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாய சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4487, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறையில் உரத் தட்டுப்பாட்டை நீக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4508, திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் தொகுதியில் சர்க்கரை ஆலை உடனே அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4766, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் பகுதியில் மாம்பழங்கள் அதிகமாக விளைவதால் பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4953, திரு. சொ. கருப்பசாமி.



**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் விவசாய உற்பத்திப் பொருள் உலர்த்திட களங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4974, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் விளைகிற தக்காளி, வெங்காயம், வேர்க்கடலை, பூக்கள் போன்ற விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச நியாயமான விலை நிர்ணயிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5917, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இயற்கைச் சீற்றத்தால் பாதிப்பு ஏற்படும்போது, முழு அளவிலான இழப்பீடு கிடைக்கும்வகையில் பயிர்க் காப்பீடு வசதி ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6052, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம் பகுதியில் பருத்தி மற்றும் மக்காச் சோளம் அதிகம் பயிரிடப்படுவதால் வேளாண்மை விரிவாக்க மையத்தின்மூலம் விவசாயிகளுக்குப் பருத்தி விதை மற்றும் மக்காச் சோள விதை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6065, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நில உரிமையாளர்களுக்கு, யாராக இருந்தாலும் நில உழுவடை செய்து வருபவர்களுக்கு உழவடைச் சான்றும், வேளாண்மை செய்யும் சான்றும் கிராம நிர்வாக அதிகாரிகளால் பதிவு செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6535, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சியில் உள்ள அக்ரோ சென்டர் அலுவலகத்தை மையப் பகுதியான பல்லடத்திற்கு மாற்றித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6633, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறட்சி மாவட்டமான திருவண்ணாமலை மாவட்டத்தில் சொட்டு நீர்ப்பாசன முறையை ஊக்குவிக்க அதிக அளவில் மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6684, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பயிர் இன்சூரன்ஸ் திட்டத்திற்கான பிரிமியத் தொகை உரிய காலத்தில் செலுத்தப்படாததால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6733, திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6773, திரு. ரெ. நெடுஞ்செழியன்.

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை தாலுகா வெள்ளாள விடுதியில் உள்ள வேளாண்மைப் பண்ணையைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியில் உள்ள வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையின்மூலம் வழங்கும் விதைகள், விவசாயக் கருவிகள், பழக் கன்றுகள் ஏழையெளிய விவசாயிகளுக்கு முறைப்படி சேராமல் இடைத்தரகர்களுக்குப் போய்ச் சேர்வதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7473, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண் உற்பத்திப் பொருட்கள் நல்ல விலையில் விற்கப்படுவதற்கு அரசின் ஆக்கமும், ஊக்கமும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7477, திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தான்குளம் தொகுதியில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மீண்டும் விவசாயம் செய்யக் கடனுதவி, மானிய விலையில் விதை மற்றும் உரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7513, திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டத்தில் விவசாயம் சார்ந்த வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7715, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண்மைத் துறைமூலம் உண்மையான விவசாயிகளைக் கண்டறிந்து, அனைவருக்கும் உழவர் அட்டை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7861, திரு. க. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8020, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் அதிக அளவில் பட்டு உற்பத்தி செய்யப்படுவதால், காஞ்சிபுரத்தில் உள்ளதுபோன்று பட்டு நூல் கூட்டுறவு விற்பனை நிலையம் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6790, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் உள்ள வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7008, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லுக்கு குவின்டாலுக்கு ரூ.1,000/- என்று நிர்ணயிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7147, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டத்தில் உழவர் அட்டை வேண்டி விண்ணப்பித்தும், இதுவரை தகுதியானவர்கள் பலர் உழவர் அட்டை கிடைக்காமல், அரசின் நலத் திட்டங்கள் பெற முடியாத நிலையில் இருப்பதால் அரசு உடனடியாக தகுதியான அனைவருக்கும் உழவர் அட்டை



வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7283, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எலுமிச்சை அதிகமாக விளையும் வாசுதேவநல்லூர் தொகுதியில் குளிர்பதன (Cold Storage) நிலையமும், எலுமிச்சையை மூலப்பொருளாக வைத்து Marmalade Jelly தயாரிக்கும் தொழிற்சாலையும் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7288, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதி முற்றிலும் மானாவாரி பகுதியாக இருப்பதால் விவசாயிகள் பயன்பெறும்வகையில் இலவச கிணறு மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7355, திருமதி எஸ். தேன்மொழி.

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8141, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதி, பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8157, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு உதவும் வகையில் அறுவடை இயந்திரங்களை அரசே குறைந்த வாடகைக்கு விடவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8348, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8468, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்குத் தரமான பருத்தி விதைகள், தென்னங்கன்று, நிலக்கடலை மற்றும் பயறு வகை விதைகள் வழங்க



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8600, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியிலுள்ள அனைத்துப் பகுதி விவசாயிகளுக்கும் தரமான விதைகள் தாராளமாக வழங்கவும், விவசாயப் பயிர்களைப் பாதுகாத்திடத் தேவையான உரங்கள், இடுபொருட்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் மருந்தடிக்கும் இயந்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8801, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் உள்ள உர விற்பனை மற்றும் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் மருந்து விற்பனைக் கடைகளில் விலைப் பட்டியல் மற்றும் இருப்புப் பட்டியல் போர்டு வைக்காததால் பொது மக்கள் ஏமாற்றம் அடைகிறார்கள்; இதனைப் போக்க, விலைப் பட்டியல், இருப்புப் பட்டியல் வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2008 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8961, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை, வாழை, விவசாயும் கணிசமாக நடைபெறுகிறது. தென்னை நார், வாழை நார் ஆகியவற்றைப் பயன்படுத்தி சிறு தொழில்கள் தொடங்க மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்களுக்கு வேளாண் துறைமூலமாகப் பயிற்சியளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,32,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கமளிக்கிறேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

---

@ 425 முதல் 577 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம் தொடங்குகின்றது. 10 உறுப்பினர்கள் பேசவிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் அவர்களுடைய உரையை நிறைவு செய்ய வேண்டுமென்று நான் அன்போடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி. உங்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** பொதிகை மலை தென்றலுக்கு முன் பிறந்த, தமிழால் தொட்டதைத் துலங்க வைக்கும், எங்களின் தூய தலைவிக்கு வணக்கம். உலுக்க முடியாத விண்மீனாய், எரிக்க முடியாத துருவ நட்சத்திரமாய், அணைக்க முடியாத தென்திசை தீபமாய், திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறைத் தலைவியாய், தடைக் கற்கள் பொடியாக, தடுத்தவர்கள் வீழ்ச்சியுற, நாளைய தமிழகத்தின் சிம்மாசனத்தில் அமர, சிங்க நடை போட்டு வரும் எங்களின் சிங்க நிகர்த் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை நன்றியோடு வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைக்கு உட்பட்ட வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் விவாதத்தில், இன்றும் ஏரோட்டும் விவசாயியாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் இந்த எளியவனுக்கு, இந்த வேளாண் பட்டதாரிக்கு, தமிழ்நாட்டில் இருக்கின்ற விவசாயிகளின் ஒட்டுமொத்த மனக் குமுறல்களை எடுத்துரைக்க ஒரு நல்வாய்ப்பினை நல்கிய எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி மலர்களை நன்றியோடு காணிக்கையாக்குகின்றேன்.

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்றான் வாய்மைப் புலவன் திருவள்ளுவன், தனது 104-வது அதிகாரத்தில். உழவர்குல பெருமக்கள்தான் உலகத்திற்கு அச்சாணியாகத் திகழ்பவர்கள். அச்சாணி இல்லையென்றால், எந்தத் தேரும் அசையாது. ஓர் அடிகூட நகராது என்ற அடிப்படை சித்தாந்தத்தை வள்ளுவன் வழிவந்தவர்கள் மறந்தது ஏனோ? அன்னை தமிழ்நாட்டின் உழவர்களுக்காக உருப்படியான திட்டம் தீட்டவேண்டும் என்று உங்கள் சிந்தனையில் உதிக்காதது ஏன்?

இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள், இந்த நிதிநிலை அறிக்கையை agricultural oriented budget என்று சொன்னார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கை, உழைப்பால் உடல் ஒடுங்கிய நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்தும் விவசாயிகளுக்கு, நீர்த்துவிடும் நிதிநிலை அறிக்கை, ஓடாத கடிகாரம், பாடாத குயில், ஆடாத மயில், சுவைக்காத தேன், வாசமில்லா வண்ண மலர், வர்ணமில்லா வானவில், மாசுபடிந்த நீர், உடைந்துபோன முகம் காட்டும் கண்ணாடி, உயிரற்ற ஓவியம், கானல் நீர். இந்த நிதிநிலை அறிக்கை ஒரு காகிதக் கப்பல். தட்டுத் தடுமாறி கரையேறும் என்று ஆளும் தரப்பு சாதித்தாலும், இந்தக் காகிதக் கப்பல் கரையேறப் போவது, கரையான்களின் தீவில்தான் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த ஆட்சியில் உழவுத் தொழில் தலைசிறந்த தொழிலாக இருக்கிறதா? உழவர்கள் உரிமையுடன் வாழ்கின்றார்களா? உழவர்களின் வாழ்க்கை இன்றைக்கு கேலிக் கூத்தாகவும், கேள்விக்குறியாகவும் மாறியுள்ளது. “திடங்கொண்ட இராம பாணம் செருக்கள முற்றபோது, கடன்பட்டார் நெஞ்சம்போலும் கலங்கினான் இலங்கை வேந்தன்” என்று தேரழுந்தூர் கம்பன் கூறுவதுபோல, இன்றைய விவசாயப் பெருங்குடி மக்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றார்கள். உழுது, கடன் வாங்கி, விதை விதைத்து, களையெடுத்து, உரமிட்டு, பூச்சி மருந்து தெளித்து, பயிரைப் பாதுகாத்து, அறுவடை செய்துகொண்டு போனால், நெல்லுக்கு விலை இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாட்சிமை தாங்கிய திராவிட இயக்கத்தின் பிதாமகன், கருத்துக் கருவூலம் பேரறிஞர் அண்ணா அவர்களின் ‘செவ்வாழையும் செங்கோடனும்’ என்ற சிறு கதைதான், வாரத்திற்குப் பயிர் வைக்கும் விவசாயிகளின் இன்றைய நிலை. உழுபவன் கணக்குப் பார்த்தால், உழக்குக்கூட மிஞ்சாது என்பார்கள். இன்றைய உழவனின் நிலை, கோவணம் மட்டும்தான் மிஞ்சியிருக்கிறது இந்த ஆட்சியிலே.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் வார்த்தைகளின் வர்ண ஜாலங்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியில் பல்வேறு திட்டங்கள், திட்டமிடப்பட்டுள்ளது, புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இல்லை, அவருக்கு ஆதரவாகத்தான் பேசுகின்றேன். உழவனுக்குக் கோவணம்தான் மிஞ்சியிருக்கிறது என்று சொல்கிறார்கள். விவசாயத் தொழிலிலே வயலிலே இருக்கின்றபோது கோவணம் கட்டிக்கொண்டுதான் உழுவார்கள். இங்கே நீங்கள் சட்டப் பேரவை உறுப்பினர், வேட்டி கட்டிக்கொண்டு இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இந்த நிதிநிலை அறிக்கையில் வார்த்தைகளின் வர்ண ஜாலங்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியில் பல்வேறு திட்டங்கள், திட்டமிடப்பட்டுள்ளது, புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது; எண்ணெய்ப் பனை உற்பத்திக்கு ஏற்பாடு ஆகிவிட்டது, டெல்லிக்கு எழுதப்பட்டுள்ளது; பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, அரசின் பரிசீலனையில் உள்ளது; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எப்போதும் சொல்வதுபோல், ஆய்விலே உள்ளது; இதுபோன்ற வார்த்தைகள் எல்லாம் படிப்பதற்கு சுவைமிக்கதாகும். ஆனால், வாழ்வதற்கு அவர்களைத்தான் கேட்கவேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பக்கம் 8, பத்தி 15-ல் ‘எண்ணெய்ப் பனையைப் (Oil Palm) பயிரிட்டு, எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது; விழுப்புரம், திருநெல்வேலி, தேனி, தூத்துக்குடி மற்றும் வேலூர் மாவட்டங்களில் எண்ணெய் பிழியும் ஆலைகளை அமைக்கும் நிறுவனங்களோடு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன; இதனால், மாநிலத்தின் எண்ணெய்த் தேவை நிறைவு செய்யப்படுவதோடு, விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதைப் படித்ததும், தாய்மார்கள் எண்ணெய் வாங்கத் தயாராகிவிடலாமா? தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றால், விளக்கம் வேண்டும். எண்ணெய்ப் பனை எத்தனை எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது; எவ்வளவு எண்ணெய் உற்பத்தியாகும்? மாநிலத்தின் தேவையில் எவ்வளவு விழுக்காடு? ஒப்பந்தம் போட்டது எப்போது? ஆலைகள் கட்டப்படுகின்றனவா?

விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்க என்ன வழிவகை செய்யப்பட்டுள்ளது? மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இவற்றிற்கு எல்லாம் விளக்கமாகத் தன்னுடைய பதிலுரையில் பதில் அளிப்பாரா?

'ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'

என்ற வள்ளுவனின் வரிகளையும், உழுவதைக் காட்டிலும் உரமிடுதலே நல்லது என்ற, குறளோவியம் தந்தவரின் வரிகளையும் துணைக்கு அழைத்து கொள்கை விளக்கக் குறிப்பில் முன்னுரையை எழுதியுள்ளார்கள். **

திரு. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் ஐ.நா. சபை உள்ளிட்ட பல நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு வேளாண் விஞ்ஞானியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர். இந்தியக் குடியரசுத் தலைவரால் பத்மஸ்ரீ விருதுபெற்றவர். வேளாண் விஞ்ஞான ஆராய்ச்சியிலே மூதறிஞர் பட்டம் பெற்றவர். குறிப்பாக, அவர் தமிழர். **

வேளாண்மைத் துறை, தோட்டகலைத் துறை, வேளாண் விற்பனைத் துறை, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* **

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமைதியாக இருங்கள். *(குறுக்கீடுகள்)* மற்ற உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி வரிசையிலும் சரி, ஆளுங்கட்சி வரிசையிலும் சரி, ஓர் உறுப்பினர் பேசுகிறபோது அல்லது பதில் சொல்கிற அமைச்சர் பதில் சொல்லும்போது, அவர் உட்கார்ந்து கேட்கவேண்டும் அல்லது அவர் அதற்குப் பதில் சொன்னால் நான் உட்கார்ந்துகொள்ள

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



வேண்டும். இதுதான் நடைமுறை. பதில் சொல்வதைக்கூட என்ன சொல்கிறோம் என்பதே தெரியாத அளவுக்கு ஒவ்வொருவரும் பேசுவது முறை ஆகாது. அந்த மரபை நீங்கள் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ** *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் கேளுங்கள்.

**திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் கேளுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** ** அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, கேளுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேளுங்கள். "No personal allegation of a defamatory or incriminatory nature shall be made by a member against any member or any official unless the member has given previous intimation, in writing to the Speaker." அதனால் ** வார்த்தைகள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. *(குறுக்கீடு)*

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** ஆதாரம் கொடுக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினைக்காகச் சொல்லவில்லை. நாளை எல்லோருக்கும் இதைப்போன்ற ஒரு சூழ்நிலை ஏற்படலாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சட்டமன்ற நடவடிக்கைகள் விதிகளின்மூலமாகவே நடத்தப்படுகின்றன. எனவே, ஒரு தனிப்பட்ட உறுப்பினரைப் பற்றியோ அல்லது ஒரு தனிப்பட்ட அதிகாரியைப் பற்றியோ ஏதாவது புகார் சொன்னால், அதற்கு முன் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். எனவே, even the charge has to be removed from the record.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 93-ன்கீழ் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் மேலே நீங்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டு அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனைத் துறை மற்றும் விதைச் சான்றளிப்புத் துறை ஆகிய துறைகள் அனைத்தும் ஒருங்கிணைப்பு என்ற பெயரில் அரசாணை எண் 537, 543 என்ற பேராயுதங்கள் வாயிலாக மறு சீரமைப்புச் செய்யப்படுகின்றன என்ற போர்வையில் திரை மறைவில் நடந்தது என்ன? அரங்கேற்றப்பட்ட நாடகத்தின் பின்னணி என்ன? கடந்த 3-4-2007 அன்று வேளாண்மைத் துறையினுடைய மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் துறையிலுள்ள பல்வேறு காலிப் பணியிடங்களை நிரப்பிய பின் துறை மறு சீரமைப்புச் செய்யப்படும் என்று இந்த மாமன்றத்தில் உறுதியளித்திருந்தார். இதற்கு நேர்மாறாக காலிப் பணியிடங்களை நிரப்பாமலேயே நிதியாண்டின் நடுவில் அவசர, அவசரமாக, அரை குறையாக இந்த மறு சீரமைப்பைச் செயல்படுத்தியது எதற்காக? ஏன இந்த அவசர நடவடிக்கை? அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்ற செய்தி அறிந்த வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறு சீரமைப்புப் பற்றி நீங்கள் பேசலாம். நான் குறுக்கிட மாட்டேன். அதிலே மர்மம் என்ன என்கிறீர்கள். ஒரு மர்மமும் கிடையாது. ஆளுங்கட்சித் தரப்பிலே நாங்கள் திறந்த புத்தகமாக இருக்கிறோம். அதில் ஒன்றும் நீங்கள் சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை.

மறு சீரமைப்பு என்பது, ஏற்கெனவே வேளாண்மைத் துறையில் 8,000-க்கும் மேற்பட்டு இருக்கின்ற பணியாளர்கள் மூன்று அடுக்கு



முறையில் பல்வேறு இடங்களிலே பணியாற்றுகிறார்கள். அந்த அதிகாரிகளை இரண்டு அடுக்கு முறையிலே வட்டார அளவில், மாவட்ட அளவில் என இரண்டு அடுக்கு முறையாகக் கொண்டு வந்து, வட்டார அளவிலேயே எல்லாத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் இருந்தால்தான், ஒரு விவசாயி, அந்த வட்டாரத்திற்குள்ளே இருக்கக்கூடிய விவசாயி அந்த வட்டாரத்திற்குச் சென்றால், வேளாண்மைத் துறை அதிகாரியைப் பார்த்து விவரம் தெரிந்துகொள்ளலாம் அல்லது தோட்டக்கலைத் துறை அதிகாரியைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். விதைச் சான்றிதழ் துறை அதிகாரிகளைப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொள்ள முடியும். ஆகவே, ஒரே இடத்திலே எல்லாத் தொழில்நுட்பங்களையும், விவரங்களையும் கேட்டு அறிந்துகொண்டால், விவசாயிக்கு சிரமம் இல்லாமல் இருக்கும் என்பதற்காக இந்த மறு சீரமைப்பு செய்யப்பட்டது. அப்படி மறு சீரமைப்பு செய்யப்படுகிறபோது, எவ்வளவு பேருக்குப் பதவி உயர்வு கிடைத்தது என்பதை என்னுடைய பதிலுரையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** 2006-2007 ஆம் பருவம் முதல் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு சப்ளை செய்யப்படும் கரும்பு விவசாயிகளுக்கு 10 கிலோ மீட்டருக்குள் உள்ள வாடகையை அரசே ஏற்றுக்கொள்ளும் என 26-10-2006 அன்று அரசு உத்தரவு போட்டுள்ளது. இந்த உத்தரவு, தனியார் சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு சப்ளை செய்யும் விவசாயிகளை வஞ்சிப்பதாக உள்ளது: அரசு, விவசாயிகளைப் பிரித்துப் பார்க்கக்கூடாது. இதனால், சுமார் 5 இலட்சம் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

2006-2007 ஆம் ஆண்டு 109 கோடி ரூபாயும், 2007-2008 ஆம் ஆண்டு 127 கோடி ரூபாயும், விவசாயிகளுக்கு இழப்பீடு ஏற்பட்டுள்ளது. இந்த இழப்பீடுகளை இந்த அரசு உடனடியாக ஈடுசெய்ய வேண்டும்.

வேளாண்மை என்பது தேசத்தின் ஜீவாதாரமான துறை. ஒரு விவசாயியின் மூலதனமே, நிலம், நீர் மற்றும் தரமான விதைகள்தான்.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஏகபோக ஏகாதிபத்திய கம்பெனிகளின் சுய இலாபத்திற்காக தொழில் வளர்ச்சி என்ற போர்வையில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அரசுகளால் முன்மொழியப்படுகின்றன. அச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக எக்காரணத்தை முன்னிட்டும் விவசாய நிலங்களைப் பயன்படுத்தக் கூடாது.

5-2-2007-ல் காவிரி இறுதித் தீர்ப்பு பெறப்பட்டும், தீர்ப்பை இன்று வரை நடைமுறைப்படுத்த இயலவில்லை. முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையிலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்த இந்த அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை.

கேரள அரசின் புதிய அணை கட்டும் முயற்சியை எல்லா முனைகளிலும் தடுத்து நிறுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாலாற்றுப் பிரச்சினையிலும் தமிழக மக்களுடைய ஜீவாதார நலன்களைப் பாதுகாக்க இந்த அரசு முனைப்புடன் செயல்பட வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேசிய அளவில் நதிகளை இணைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய மாபெரும் திட்டத்தை செயல்படுத்த, நடுவண் அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார் என்றும், இது காலதாமதமானால், முதல் கட்டமாக தென்னக நதிகளை இணைக்க வேண்டியது மிக மிக அவசியம் என்றும், இருப்பினும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து நடுவண் அரசை வலியுறுத்தி வருவதாகவும் சொல்லப்பட்டு வருகிறது.

ஏன் இந்தத் திட்டத்தை உங்களால் நிறைவேற்ற முடியவில்லை? மத்தியிலும் உங்கள் வழிகாட்டல்படிதானே அதிகாரத் தேர் சென்று கொண்டிருக்கிறது. ஏர் ஓட்டும் உழவர் பெருமக்கள் ஏங்கித் தவிக்கையிலே, தேரோட்டம் தேவைதானா என்று அன்று கவி பாடியவர்கள், ஓடாத தேரை ஓட்டினார்கள் என்று கூறியவர்கள், இன்றைக்கு இந்த ஆட்சியினுடைய தேரோட்டமே நின்றுபோய் இருக்கிறது என்பதை இம்மாமன்றத்தில் ஆணித்தரமாகப் பதிவு செய்கிறேன்.

விவசாய உற்பத்தித் திறனை அதிகரிக்கத் தேவையான முக்கிய இடுபொருள்களான தரமான விதைகளை விவசாயிகளுக்கு வழங்குவதில் இந்த அரசினுடைய விதைச் சான்றளிப்புத் துறை தோல்வி அடைந்துவிட்டது.



தமிழ்நாட்டில் சிறு-குறு விவசாயிகளினுடைய எண்ணிக்கை அதிகம். அவர்களுக்கு எளிதாகத் தேவைப்படுகின்ற நேரத்தில், தொடக்க வேளாண்மைக் கூட்டுவு வங்கிகள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் தாராளமாகக் கடன்கள் கிடைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2006-2007-ல் ரூ.1,250 கோடியும், 2007-2008-ல் ரூ.1,177 கோடியும் புதிய பயிர்க் கடன்களாக வழங்கப்பட்டுள்ளதாகவும், வரும் 2008-2009 ஆம் நிதி ஆண்டில் ரூ.1,500 கோடி அளவில் புதிய பயிர்க் கடன் வழங்க ஆவன செய்யப்படும் என்றும் தெரியப்படுத்தியுள்ளது. இதுபற்றி விவசாயிகளை விசாரித்தபோது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் நகை அடமானக் கடன்கள் மட்டுமே வழங்கப்படுவதாகவும், கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் கரும்பு பதிவு செய்யும் விவசாயிகளுக்கு மட்டும் சர்க்கரை ஆலைகளின் உத்தரவாதத்தின் பேரில் கடன் வழங்கப்படுவதாகவும், பிற பயிர்களான நெல், மணிலா, வாழை போன்ற பயிர்களுக்குப் போதிய அளவில் கடன்கள் வழங்கப்படுவதில்லை என்றும் வருத்தத்தோடு புலம்புகின்றனர். விவசாயிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் செலுத்தியுள்ள வைப்புத் தொகையினை அரசு உடனடியாகத் திருப்பித் தர வேண்டும்.

வடகிழக்குப் பருவ மழையினால், ஏற்பட்ட பயிர் பாதிப்புகளுக்கு ரூ.56.5 கோடி மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மற்ற விவசாயிகளுக்கு எப்போது நிவாரணம் வழங்கப்படும்? மத்திய அரசிடம் நீங்கள் கோரிய ரூ.1,510 கோடி எப்போது கிடைக்கும்?

சொற்களிலேயே சொர்க்கத்தைக் காட்டுகின்ற நீங்கள், மக்களின் கவனக் குறைவால் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கின்ற நீங்கள், 2 ஏக்கர் தரிசு நிலம், நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்குகிறோம் என்று கூறி விஞ்ஞான ரீதியாக ஏமாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள்.

வாஸ்கோடகாமாவின் நம்பிக்கை புதிய நிலத்தைக் கண்டுபிடித்தது. கொலம்பஸின் நம்பிக்கை அவன் தாய்த் திருநாட்டிற்குப் புதிய நிலத்தைத் தந்தது. ஆயுதங்கள் இல்லாத வின்ஸ்டன் சர்ச்சிலின் நம்பிக்கை இங்கிலாந்துக்கு வெற்றியைத் தேடி தந்தது. பிரகலாதனின்

நம்பிக்கை கடவுளைக் காட்டியது. கண்ணனின் நம்பிக்கை பாரதப் போரில் வெற்றி பெற்றது. 28 ஆண்டு காலம் தனிமைச் சிறையிலே காராகிரகத்திலே வைத்துப் பூட்டப்பட்ட நெல்சன் மண்டேலாவின் நம்பிக்கை தென் ஆப்பிரிக்கா மக்களுக்கு விடுதலையைத் தேடி தந்தது.

சேகுவேரா ஃபிடல் கேஸ்ட்ரோவின் நம்பிக்கை ஆதிக்கக் கொடியை அத்துமீறிப் பறக்க விட வேண்டும் என்று துடிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குத் தோல்வியைத் தந்து, ஆண்டாண்டு காலமாக அடிமையாகக் கிடந்த கியூபாவிற்கு வெற்றியைத் தேடித் தந்தது. அதேபோல, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் நம்பிக்கை மீண்டும் அண்ணாவின் ஆட்சி தந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இன்றைக்குத் தமிழக மக்களின் நம்பிக்கையின் காரணமாக, மீண்டும் அம்மாவின் புனித ஆட்சியை, பொற்கால ஆட்சியைத் தமிழகத்திலே மலர வைப்போம் என்று சூளுரைத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பின்தங்கிய தொகுதியான பெண்ணாகரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெரியண்ணன், உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 10 நிமிடங்கள்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** வேளாண் குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு, இந்த மாமன்றத்தில் விவசாயத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பு வழங்கிய உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், தமிழகத்தின் ஓய்வில்லா உதயசூரியன், தமிழ், இனம், மொழி, நாடு ஆகியவைகளில் பல்வேறு திட்டங்களை வழங்கி வரும் ஜீவநதி, அறிவுலக மாமேதை பேரறிஞர் அண்ணா, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் கொள்கைகளை, கோட்பாடுகளை, கனவுகளை நிறைவேற்றி வரும் மனிதக் கணினி, கருணையையும், நிதியையும் ஒருங்கே பெற்ற தாயுள்ளம்கொண்ட தமிழினத்தின் தலைவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், இந்தியத் துணைக் கண்டமே வியந்து நோக்கும், மக்களுக்கு வரியில்லா, வலியில்லா நிதிநிலை அறிக்கையை வழங்கிய இனமானப் பேராசிரியர்



அவர்களுக்கும், கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு என்ற காந்தியடிகளின் கனவை நனவாக்கும் விதமாக, உள்ளாட்சியில் பல்வேறு திட்டங்களை செம்மையாகச் செயல்படுத்தி நாடும், ஏடும் போற்ற சுற்றிச் சுழன்று பணியாற்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், எங்கள் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு ஆற்காட்டார் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில் காக்கைக்குக் கணக்குத் தெரியாது. குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது. காக்கை இனத்திற்குக் கணக்கு தெரியாது என்ற காரணத்தினால், இந்தக் குயில் தன்னுடைய முட்டையைக் காக்கையின் கூட்டிலே வைத்து, தன்னுடைய இனத்தைப் பெருக்கிக்கொள்கிறது. அதைப்போன்று இந்த நாட்டிலே, தமிழகத்திலே யார் யார் பெயரையோ சொல்லித்தான், அவர்களுக்கு வாரிசு, தான் கருப்பு, தான் சிவப்பு என்றெல்லாம் இந்தத் தமிழக மக்களை ஏமாற்றி வலம் வந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி ஏமாற்றுவது, சிலரைச் சில நேரத்தில் ஏமாற்றிவிடலாம். பலரைப் பல நேரத்தில் ஏமாற்ற முடியாது என்ற நிலையிலே, பொதுவாக பட்ஜெட் என்றால் புதிய வரிகள் இருக்கும் என மக்கள் அஞ்சுவார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்களே பட்ஜெட் என்ற நிதிநிலை அறிக்கையின் துவக்கத்திலேயே வானும், மண்ணும் தலைவர் அவர்களுடைய பட்ஜெட்டினுடைய தொடக்கத்தை, இது தமிழகத்தினுடைய பொற்காலம் என்று, வருக, வருக என்று பூ மழை தூவி வரவேற்றது. இந்த நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்த நாள் முதல் இந்தத் தமிழகத்தில் விண்ணும், மண்ணும் ஒன்று கூடி, தமிழகமே காடாகும் அளவுக்கு மழை பொழிந்து, தலைவர் அவர்களே, வருக, வருக, உங்கள் பொற்கால ஆட்சி, தமிழகத்தின் நிரந்தரப் பொற்கால ஆட்சி என்று வரவேற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத்திற்கு வங்கியிலே லோன் கொடுப்பார்கள். தங்கத்தைப் போன்று முலாம் பூசிய முலாமிட்ட நகைகளும், அதாவது, விவசாய வங்கியிலே தரக் கட்டுப்பாட்டிலே இருக்கின்ற அதிகாரிகள் திறமையற்றவர்களாக இருக்கின்ற காரணத்தினால் ** என்பதை இந்த மாமன்றத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று பட்ஜெட் என்றால், மக்கள்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தலைவருடைய பட்ஜெட்டை அதிகமாக எதிர்பார்ப்பார்கள். (குறுக்கீடு) அது மட்டுமல்ல, எதிர்பார்க்காதவர்களுக்கும் சேர்த்து இந்த நிதிநிலை அறிக்கையிலே, அனைத்துத் துறைகளும், அனைத்துப் பகுதிகளும் பயனடையும் வகையில் பல்வேறு செயல்களை, குறிப்பாக. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள் திரு. பெரியண்ணன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியண்ணன் அவர்கள் சொன்ன அந்த வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. பி.என். பெரியண்ணன்:** ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட மக்களின் நலன் காக்க வாழையடி வாழையாக, எங்களின் வழித் தோன்றல்களைக் காக்க, ரூ.1,330 கோடியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வழங்கி, எங்களின் நோய் தீர்க்க அடிக்கல் நாட்டி, எத்தகைய இடையூறுகள் வரினும், நிறைவேற்றியே தீருவேன் என்று அவையில் அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறி, எங்களில் ஒருவராக இருந்து அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, எங்களின் நலன் கருதி ஜப்பான் நாட்டிற்குச் சென்று flourosis நோயால் பாதிக்கப்பட்ட எங்கள் மாவட்ட மக்களின் அவல நிலையை விளக்கி, இத்திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தி, பேச்சுவார்த்தை நடத்தி, அதன்மூலம் நிதிநிலையைப் பெருக்கிய, இளைய சமுதாயத்தின் விடிவெள்ளி, நல்லாட்சியின் உள்ளாட்சி நாயகர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட மக்களின் சார்பாகவும், மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கை ஆக்குகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியாயிற்று.



**திரு. பி.என். பெரியண்ணன்:** குறிப்பாக விவசாயமும், அதனைச் சார்ந்துள்ள தொழில்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள், அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்படுகின்ற ஒதுக்கீடுபோல, இம்மக்களில் அதிகமானவர்கள் நம்பியுள்ள விவசாயத் தொழிலை நலிவிலிருந்து மீட்க, அதிக நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார், மாண்புமிகு முதல்வர் அவர்கள். உழுவோர் உலகின் அச்சாணி என்று வள்ளுவர் பாடினார். அன்றைய நிலையிலே அச்சாணிக்கு வேலை இருந்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால், இன்றைய நிலை விஞ்ஞானத் துறையிலே வளர்ந்து bearing என்றும், nut என்றும் வளர்ந்திருக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலே (மேசையைத் தட்டும் ஒலி)

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்'

என்று அன்றைய நிலையை வள்ளுவர் பாடினார். இன்றைய நிலை, உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர், மற்றவர்களுக்கு எல்லாம் இவர் தொழுதுண்டு பின் செல்வர் என்ற நிலை மாறிய காரணத்தினால், தலைவர் அவர்கள், இந்த விவசாயத்தைக் காப்பாற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும்போதெல்லாம், பல்வேறு திட்டங்களையும், சலுகைகளையும் வழங்கி வருகிறார்கள்.

விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக விவசாயத்திற்கு இலவச மின்சாரம், விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க உழவர் சந்தை, உழவர் சந்தைகளுக்குக் காய்கறிகளை எடுத்துச் செல்ல அரசுப் பேருந்துகளில் இலவச அனுமதி, விவசாயக் கருவிகள் எளிதாகக் கிடைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயலாக்கியவர் தலைவர் அவர்கள்.

1996-லிருந்து 2001 வரை கரும்பு மற்றும் நெல் வித்துக்களின் உற்பத்தியில் தமிழகம் முதல் நிலை பெற்றது. பின்பு, அதற்குப் பின்னால் வந்த ** ஆட்சியிலே வறட்சியில் வாடியிருந்த விவசாயிகளைக் காக்க முடியாமல் விவசாயிகள் அவர்கள் பெரிய. . . (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** துணைத் தலைவர் அவர்களே. . .

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**திரு. பி.என். பெரியண்ணன்:** விவசாயிகள் பெற்ற விவசாயக் கடன்களை வசூலிப்பதிலே கெடுபிடி செய்து, வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சியதைப்போன்று. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ruling கொடுக்கிறேன், இருங்கள். (குறுக்கீடுகள்) நான் ruling கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பி.என். பெரியண்ணன் அவர்கள் ** என்ற வார்த்தையையெல்லாம் இந்த அவையிலே பேச வேண்டிய அவசியம் இல்லை. வேண்டுமானால், கடந்த ஆட்சியிலே என்று சொல்லலாம். ** என்று சொல்ல வேண்டியதில்லை. அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோருமே எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், அதை நீக்கிவிடலாம். எதிர்க்கட்சி கொறடா, உட்காருங்கள், நீக்கிவிடுகிறேன். ** என்கிற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** ஒரு விளக்கத்தை ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து சொல்லிவிடுகிறோம். எல்லோரும் நின்றுகொண்டிருந்தால் என்ன அர்த்தம்? எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் நிற்கிறார், கொறடா, நீங்களும் நிற்கிறீர்கள், எல்லோரும் நிற்கிறீர்கள். எல்லோரும் நின்றால் எப்படி? (குறுக்கீடுகள்) அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. பெரியண்ணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க ** என்ற வார்த்தையை நீக்குகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதங்கள் சுமுகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆளுங்கட்சித் தரப்பாக இருந்தாலும், எதிர்க்கட்சித் தரப்பாக இருந்தாலும், விவாதம் சுமுகமாக நடைபெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அனைவரையும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சிக்காரர்களுக்கு ஒரேயொரு வேண்டுகோள். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். எதுவாக இருந்தாலும் நீங்கள் ஒருவர் எழுந்து சொல்லுங்கள், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். 60 பேர்களும் ஒரே நேரத்திலே எழுந்தால், பார்க்கின்றவர்களுக்கு அவையைப்பற்றித் தவறான ஒரு எண்ணம் வரும். இந்த அவையைப் பொறுத்தவரையில், நான் உறுதியாகச் சொல்கிறேன், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் எந்தத் தவறான வார்த்தையைப் பயன்படுத்தினாலும், உடனடியாக அது சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் முதலில் தவறாகப் பேசி, அதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதற்குப் பிறகு, தொடர்ந்து அதே பணியைச் செய்கிறார் என்று சொன்னால், அந்த உறுப்பினர் இந்தச் சபையில் பேசலாமா, பேசக்கூடாதா என்பதை முடிவு செய்ய வேண்டியது துணைத் தலைவர் அவர்களுடைய பொறுப்பு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்று கேட்டார்களே? எதிர்க்கட்சித் துணைத் தலைவரோ, கொறடாவோ பேச வேண்டும். 60 பேரும் எழுந்து நிற்கிறீர்களே! அதற்குப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் இரண்டு பக்கமும் சமமாகப் பேச வேண்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** துணைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி. திரு. ஓ. பன்னீர்செல்வம், பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச ஆரம்பித்ததிலிருந்தே சற்று நிதானம் தவறித்தான் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறார். நிதானமெல்லாம் தவறவில்லை. உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறார்கள். உழவர் என்பதாலே உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உணர்ச்சிவசப்பட்டுப் பேசவில்லை. அவர் பேசியது தவறு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்து சொல்லிக்கொண்டிருக்கின்ற வேளையிலே, அவர் பேசிக்கொண்டிருக்கின்றார். அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே, அவர் எழுந்து, மைக் போடுபவரைப் பார்த்து, மைக் போடு, மைக் போடு என்று சத்தம் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது என்ன நடைமுறை?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். பெரியண்ணன், restricted ஆகப் பேசுங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னதைப்போல அப்படிச் சொல்லியிருந்தால், அதுவும்



தவறுதான். அதைப்போல, எதிர்க்கட்சி வரிசையிலும், எதற்கெடுத்தாலும் மைக்கைப் போடு என்று சொல்வது, இல்லையென்றால் இரண்டு நிமிடம் சேர்த்துக் கொடு என்று எல்லோரும் சேர்ந்து கையைத் தூக்குவது, இதையெல்லாம் நானும் பார்த்திருக்கிறேன். ஆறாவது முறையாக இந்தப் அவையில் பேரவையில் இருக்கின்றேன். எல்லோருமே அவையினுடைய விதிக்குக் கட்டுப்பட்டு, அவையினுடைய மரபைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள், 'கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று சொன்னார். அதை அறிந்த தலைவர்தான், இந்தத் தமிழகத்திலே விவசாயிகளினுடைய கொடுமைகளைக் கண்டு, கடன் தொல்லைகளை நிவர்த்தி செய்கின்ற வகையிலே, 7 ஆயிரம் கோடி ரூபாயை தாயுள்ளத்தோடு தள்ளுபடி செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) 7 ஆயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்த அடிப்படையை வைத்துத்தான், இன்று தமிழகத்தின் தென்கோடியிலே மட்டுமல்ல; இந்திய நாட்டினுடைய அனைத்து விவசாயிகளும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக, மத்திய அரசாங்கத்திலே 60 ஆயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி என்றால், அது தலைவர் வித்திட்டிருக்கின்ற வித்து என்பதை நான் இந்த மாமன்றத்திலே பதிய ஆசைப்படுகிறேன். இப்படி, அடிபட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் நலனில் அக்கறையுள்ள தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** உலகில் கடையேழு வள்ளல்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால், அவர்களை நாம் பார்த்ததில்லை. இந்தக் கலியுகத்தில் கடையேழு வள்ளல்களுக்கும் முதல்வராக இருப்பதில் தானைத் தலைவர் தவிர வேறு யாரும் இந்த உலகத்திலே இருக்கமுடியாது என்பதை நான் இந்த மாமன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டங்களை இந்தியத் துணைக் கண்டமே

வரவேற்றிருக்கிறது. அதேபோல், மேலும் வேளாண்மைத் தொழில் சிறக்க 4 சதவீத வட்டி, மீண்டும் விவசாயக் கடன்களுக்கு 1,500 கோடி ரூபாய், உத்தரவாதம் இல்லாத தொழிலான விவசாயத் தொழிலை நம்பியுள்ள விவசாயிகளைக் காப்பாற்ற, தலைவர் அவர்கள் காப்பீட்டுக்குப் பிரீமியத் தொகை 50 சதவீதம் அரசு அளிப்பதன்மூலம், உத்தரவாதம் இல்லாத இந்த விவசாயிகளுக்கு இந்த உலகத்திலே உத்தரவாதம் அளித்த ஒரே தலைவர் கலைஞர் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே வழங்கப்படும் மானியத்துடன் விவசாயத்திற்கு 25 சதவீதம், நீர் மேலாண்மை இயக்குவதற்கு 50 சதவீதம், எளிதில் கடன் பெற 10,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு, 152 கோடி ரூபாய் ஒதுக்கீடு, இலவச மின்சாரம், காய்கறிகள் உழவர் சந்தைகளுக்கு... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். திரு. பெரியண்ணன், நன்றி சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. ராஜசேகரன். உங்களுக்கு பத்து நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியத்திலே பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அருமைப் பெரியவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயக் கடன் தள்ளுபடி செய்து நடப்பாண்டிலும், 2008-2009 ஆம் ஆண்டிலே, 1,500 கோடி ரூபாய் புதிய கடன்கள் விவசாயிகளுக்கு வழங்கியதற்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், வேளாண் கடன்களுக்கு கொடுக்கக்கூடிய வட்டி சதவீதம் 9-லிருந்து 7 ஆகவும், 7-லிருந்து 5 ஆகவும், 5-லிருந்து 4 ஆகவும் குறைத்ததைப் பாராட்டுகிறோம். வேளாண்மை உற்பத்தித் திறனிலே 2005-2006-க்கு 61 இலட்சம் டன்னுக்கும், 2006-2007-ல் 82 இலட்சம் டன்னுக்கும், 2007-2008-ல் 100 இலட்சம் டன்னாக உயர்ந்து இருக்கிறதைப் பாராட்டுகிறோம். 1950-லே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கட்டிய 14 அணைகளின் காரணமாக, இன்றையதினம் 100 இலட்சம் டன் உற்பத்தித் திறனைப் பெற்றிருக்கிறது. தமிழகத்திலே நெல்லுக்கும் மத்திய, மாநில அரசுகளின் ஊக்கத் தொகையாக ரூபாய் 825 கோடி கிடைக்கின்றன. ஆனால், அதை 1,000 ரூபாயாக உயர்த்தித்



தரவேண்டும். அருமைப் பெரியவர் மரியாதைக்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு வாழைச் சாகுபடியைப்பற்றி நன்றாகத் தெரியும். வாழைக்கு உரிய தொகை கிடைக்கவில்லை. கரும்புக்கு உரிய விலையை அரசு தருகிறது. ஆனால், திருச்சியில் 150 காய்கள்கொண்ட தாருக்கு 30 ரூபாய் விலை போகிறது. ஆனால், சென்னையிலே அதே ரூ.150-க்கு ஒரு தார் விலை போகிறது. ஆகவே, தயவுசெய்து வாழை விவசாயிகள் பயன் அடையும்வகையில் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அது மட்டுமல்லாமல், சத்துணவில் வாழைப் பழத்தைச் சேர்க்கவேண்டும் என்று நான் சென்ற இரண்டு முறையாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2 முட்டை, 3 முட்டை என்று அறிவித்த தாங்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போன வருடம் கேட்ட அந்த வாழைப் பழமா? சரி, சரி. *(சிரிப்பு)*

**திரு. மா. ராஜசேகரன்:** வேளாண் துறை அமைச்சர் அவர்கள் வாழைப் பழத்தை சத்துணவுத் திட்டத்திலே சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பயிர் காப்பீட்டுக்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 25 இலட்சம் விவசாயிகளின் விவசாயக் கடன், தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. விவசாயக் கூலித் தொழிலாளர்கள் வாரியத்திலே, கல்வி உதவி, திருமண உதவித் திட்டம், ஓய்வூதியம், ஈமச் சடங்கு மற்றும் இழப்பீட்டுக்கு 158 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறோம். குறைந்த நீர் உற்பத்திச் செலவு குறைத்து அதிக மகசூல் பெறக்கூடிய S.R.I. செம்மை நெல் சாகுபடித் திட்டத்தை வரவேற்கிறோம். இது அற்புதமான திட்டம். இந்தத் திட்டம் கடைநிலை விவசாயியைச் சென்றடையுமானால், தமிழகத்தில் இருக்கின்ற விவசாயிகள் நல்ல பயன் அடைவார்கள். அதற்காக 18.7 இலட்சம் ஏக்கரில் இதை நடைமுறைப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்த நிதி ஆண்டிலே விவசாயத்திற்கு என்று 4,792 ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறதை வரவேற்றிருக்கிறோம். அதே நேரத்திலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி கொடுத்து ஏழைகளின் வயிற்றிலே பாலை வார்த்தார்கள். இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி. மாதம் 30 கிலோ கிடைத்து வருகிறது.

*முற்பகல் 11-15*

அதற்கடுத்தாற்போல, இலவச கலர் டெலிவிஷன் பெட்டி. இந்த இரண்டையும் வாங்கிக்கொண்டு அந்தக் கிராமத்தில் இருக்கின்ற

வந்து திருச்சியில் வைத்தால், அந்த மாடு பால் கறக்காது. அதெல்லாம் செத்துப் போய்விடுகிறது. அதற்கு அந்த வெப்ப நிலை தாங்கவில்லை. அதற்காக அது நல்லபடியாக எந்தக் கலப்பினப் பசுவாக இருந்தாலும், அதை எப்படிப் பராமரிப்பது என்கின்ற யுக்தியை அவர்களுக்குச் சொல்லித் தரவேண்டும்.

அதேபோல நீர்ப்பாசனம். ஏனென்றால், வேளாண் துறையிலே நீர்ப்பாசனம், கூட்டுறவுத் துறை இரண்டும் இயங்குகிறது. முல்லைப் பெரியாறு திட்டம். காவிரி நீர் பெறும் திட்டம், பாலாறு திட்டம், இது சம்பந்தமாகத் தமிழக அரசு எடுத்திருக்கிற அனைத்து நிலைகளையும் நாங்கள் பாராட்டுகின்றோம். அதிலே எந்தவிதமான மாற்றுக் கருத்தும் எங்களுக்குக் கிடையாது.

அதேபோல, நதி நீர் இணைப்புத் திட்டம். இந்தியாவிலே, தமிழகத்திலேதான் முதன் முதலாக நதி நீர் இணைப்புத் திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் காவிரியில், என்னுடைய சட்டமன்றத் தொகுதியில், கட்டளையிலிருந்து 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்பட்டு, 255 கிலோ மீட்டர் இந்த இராமநாதபுரத்திற்கு, அக்கினியாறு, கோரையாறு, பாம்பாறு, வைகையாறு, குண்டாறு போன்ற பகுதிகளுக்கு அனுப்புகிறீர்கள்; 3 இலட்சம் கன அடி தண்ணீர் மழைக் காலங்களில் வேஸ்ட் ஆகிறது. இப்போது நல்ல பாசனத்திற்குப் பயன்படும். அதே நிலையும் காவிரிக் கரையினுடைய வட பகுதியில், தாத்தையங்கார்பேட்டை, பெரம்பலூர், அரியலூர் போன்ற மாவட்டங்களுக்கும் தண்ணீர் கிடைப்பதற்கு அந்த நீரைத் திருப்பி விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் இந்தப் பகுதியில் இருக்கின்ற கிட்டத்தட்ட 30 ஏரிகள் நிரம்பும். என்னுடைய பகுதி தாத்தையங்கார் பேட்டை என்பது drought area. ஆகவே, இந்த நிலையிலேயும் அந்த scheme-லே, காவிரியின் வட பகுதியிலேயும் இந்த வாய்க்காலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தாமிரபரணி ஆறு. தாமிரபரணி ஆற்றுக்கு 369 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். உபரி நீர் தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற வறண்ட பகுதிகளுக்குத் திருப்பி விடுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நான் ஒன்றை இந்தச் சபையிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1957-லே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தமிழகத்திலே 14 பெரிய அணைகளைக் கட்டினார். அந்த அணைகளைக் கட்டிய பிறகு பல திராவிடக் கட்சிகள் ஆட்சியிலே இருந்தாலும், இப்போது இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள்



தலைமையிலே இருக்கின்ற இந்த அரசு நதி நீர் இணைப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து விவசாயிகளும் தண்ணீர் பெறுவதற்கு வழிவகுத்திருப்பதை காங்கிரஸ் சார்பாக பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் கொல்லிமலையிலிருந்து உபரி நீர் வருகிறது. அதை என்னுடைய பகுதிக்குப் பயன்படுத்தக் கேட்டுக்கொள்கின்றேன். வடகரை வாய்க்காலை--தலைப்பிலே இருந்து தொண்டமாந்துறை வாய்க்கால் வரைகூட மதகுகள் இல்லை--அதை உடனே சரிசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதற்கடுத்தாற்போல், நீர்ப்பாசனத் திட்டம். நீர்ப்பாசனத் திட்டம் திருச்சியில் இருந்து--ஏனென்றால் காவிரியை நம்பித்தான் நாங்கள் இருக்கிறோம். BHEL, துப்பாக்கித் தொழிற்சாலை, திருச்சி மாநகரம், மணப்பாறை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், அரியலூர், பெரம்பலூர் ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர்த் திட்டத்தை காவிரியிலிருந்து எடுத்துக்கொண்டு போகிறீர்கள்.

அப்படி எடுத்துக்கொண்டு போகும்போது, எங்களுடைய விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஒரு மாவட்டப் பிரச்சினைக்காக குடிநீர் எடுத்துச் செல்லும்போது, அங்கே பாதிக்கப்படக்கூடிய மாவட்ட விவசாயிகளையும் தயவுசெய்து கருத்தில்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

ஒரேயொரு உதாரணத்தை மட்டும் இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1996-2001-லே தி.மு.க. அரசு இருந்தது. அன்றையதினம் பெரம்பலூருக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், லால்குடி சட்டமன்றத் தொகுதியிலேயிருந்து எடுத்துக்கொண்டு போவதாகப் போட்டார்கள். அந்தத் திட்டத்தை லால்குடியிலே எசனக்கோரை கிராமத்தில் போட்டார்கள். குழாய் எல்லாம் பதித்தாகிவிட்டது. ஆனால், 4 கிராம மக்கள் எதிர்த்திருக்கிறார்கள். அப்படி எதிர்க்கும்போது, உடனே அமைச்சர் நேரு அவர்கள் போய், 'ஐயா, இது குடிநீர்த் திட்டம்; யாரும் தயவுசெய்து எதிர்க்க வேண்டாம் என்று ரொம்ப வேண்டி, விரும்பி ஒவ்வொரு வீடு வீடாகப் போய்க் கேட்டுக்கொண்டார். ஆனால், அப்போது என்ன செய்தார்கள் என்றால் தலையாட்டினார்கள்;

விவசாயிகள் நிம்மதியாக சாப்பிடுகிறார்கள். டி.வி.யை வாங்கியவுடனே காலையில் 7-00 மணிக்கு ஆரம்பித்தால் கல்யாணப் பரிசு, பாரதி, மகராசி, தவம், அக்கா தங்கை, ரேகா, ஐ.பி.எஸ்., நம்ம குடும்பம், வைர நெஞ்சம், தேன்மொழியாள், செல்வி, அரசி, கோலங்கள், ஆனந்தம், மகள் இப்படியே படிப்படியாக, எல்லா தொடரையும் பார்த்து கொண்டு, விவசாயம் பண்ணுவதையே விட்டுவிடுகிறார்கள். அதை அரசு மிகக் கவனமாகக் கருத்தில்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், இன்னொன்று எடுத்துக் கொண்டீர்களென்றால், திருச்சியிலேயிருந்து கரூர் வரைக்கும் பார்த்தீர்களென்றால், எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்—கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே.சி. பழனிசாமி 50 பஸ்களைக் காலையில் 5-00 மணிக்கே அனுப்பிவிடுகிறார்கள். குக்கிராமம் எல்லாம் போகிறது. போக்குவரத்துத் துறை வண்டிகள் ஓடுகின்றனவோ, இல்லையோ, அவருடைய வண்டிகள் வந்துவிடுகின்றன. +2 படித்தவர்கள் அத்தனை பேரையும் ஏற்றிக் கொண்டு அவ்வளவு சீக்கிரம் ஸ்பின்னிங் மில்லுக்குப் போய்விடுகிறார்கள். விவசாயத்திற்கு ஒரு ஆள்கூட கிடைப்பதில்லை. இந்தச் சூழ்நிலையில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது--அப்பொழுது 100 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது, காரணம் என்ன? திருச்சியில் லால்குடி பகுதியில் 5,000 ஏக்கருக்கு அறுவடை இருந்தது. அறுப்பதற்கு ஆள் கிடைக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒவ்வொரு யூனியனிலேயும் கரும்பு வெட்டுவதென்றால், அந்த யூனியனுக்கு cutting machine, கரும்பு வெட்டக்கூடிய மிஷின், நெல் பயிர் எங்கிருக்கிறதோ அங்கு அறுவடை மெஷின், உழவுக்கு நடக்கூடிய மிஷின். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Cutting machine கேட்கிறீர்களா அல்லது cutting கேட்கிறீர்களா?

**திரு. மா. ராஜசேகரன்:** இல்லை, நான் cutting machine தான் கேட்கிறேன். Cutting கேட்கவில்லை. அதை நாங்கள் கேட்பதே இல்லை. காங்கிரஸ்காரர்கள் கேட்டே பழக்கம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, பொறியியல் துறையிலே 25 சதவீதம் மானியம் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள், சைனாவிலிருந்து இறக்குமதி பண்ணுவதற்கு. அதற்கு 50 சதவீதம் மானியம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உரத்தைச் சொல்கிறேன். உரம் டி.ஏ.பி. கிடைக்கவில்லை. ஆனால், இப்போது டான்ஃபெட்மூலமாக உரம்



கிடைக்கிறது. அதேபோல் பொட்டாஷ் கிடைக்கிறது. ஆனால், விஜய் காம்ப்ளக்ஸ் கிடைக்கவில்லை, 17:17 கிடைக்கவில்லை, 20:20 கிடைக்கவில்லை, சூப்பர் பாஸ்பேட் கிடைக்கவில்லை, அமோனியம் சல்பேட் கிடைக்கவில்லை, அமோனியம் ஃபுளோரைடு கிடைக்கவில்லை. இதெல்லாம் open market-லே கேட்டீர்களென்றால், ஆயிரம் ரூபாய் என்கிறான். ஏனென்றால், விவசாயிகள் இயற்கை உரத்தைப் பயன்படுத்தாமல், பல ஆண்டுகளாக இதுமாதிரி உரத்தைப் பயன்படுத்தினால், அதிலேதான் அவர்கள் எண்ணம் போகிறது. ஆகவே, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னையிலே இருக்கிற சிலந்திப் பூச்சி இன்றைக்கு வரைக்கும் குறையவில்லை, அதனுடைய தாக்கம் குறையவில்லை. அண்ணா தி.மு.க. ஆட்சியில் அதற்கு மருந்து இலவசமாகக் கொடுத்தார்கள். ஆனால் இந்த அரசிலும் அதேபோன்று தென்னை சிலந்திப் பூச்சிகளை ஒழிப்பதற்கு இலவசமாக மருந்து வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சொட்டு நீர்ப்பாசனத்திற்கு 50 சதவீதம் மானியம் கொடுத்திருக்கிறார்கள். 169 கோடி ரூபாய் இந்த நிதி ஆண்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து, சூரியகாந்திக்கும் கொடுக்கவேண்டும், எலுமிச்சம் பழத்திற்கும் கொடுக்கவேண்டும். அதுமட்டுமல்லாமல், 2 எக்டேருக்குத்தான் கொடுக்கிறார்கள். 2 எக்டேர் என்பது சாதாரண விஷயம். அவர்களுக்கு E.B. current கிடைப்பது எல்லாம் ரொம்ப சிரமம். அதனை 4 எக்டேராக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் well மூலமாக அவர்கள் மின்சார மோட்டார்களை வைத்து சொட்டு நீர்ப்பாசனம் செய்ய முடியும்.

அதற்கடுத்தாற்போல, சுய உதவிக் குழுக்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள். இது அற்புதமான திட்டம். பெண்களுக்காகக் கொடுக்கப்பட்ட திட்டம், விவசாயிகளுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 10,000 குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக, 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதையும் அன்புடன் வரவேற்கிறோம்.

அதேமாதிரி, ஏழை மகளிருக்கு 10,000 கலப்பினப் பசுக்கள் கொடுக்கிறீர்கள். அந்தக் கலப்பினப் பசுக்கள் எந்த country-யிலிருந்து வருகிறது, அதை எப்படிப் பராமரிப்பது என்பதைச் சொல்ல வேண்டும். ஏனென்றால், ஓசூரில் இருக்கிற மாடுகளைக் கொண்டு

ஆனால், அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் அவரைத் தோற்கடித்தார்கள். 2,000 ஓட்டிலே தோற்றுப் போனார். அதற்கு என்ன காரணம் என்றால், இந்தக் குடிநீர்ப் பிரச்சினையில் அரசியல் புகுகிறது. அப்படிக் குடிநீர் கொடுத்ததாலே, அந்தத் தேர்தலிலே அமைச்சர் அருமை அண்ணன் நேரு அவர்களை 2,000 வாக்குகள் வித்தியாசத்திலே தோற்கடித்தார்கள். இதையெல்லாம் அவசியம் நீங்கள் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல, மணல் பிரச்சினை. மெட்ராஸிலே மணல் பிரச்சினை இருந்தது. இப்போது 6 மாதங்களாக இல்லை. என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. ஏற்கெனவே லாரி குறுக்கே நிற்கும்; எல்லாமே settle ஆகிவிட்டது. ஆனால் திருச்சியிலே மட்டும் மணல் கொள்ளை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக அரசு அதிகாரிகளிடத்திலும் சரி, அமைச்சர் பெருமக்களிடத்திலும் சரி, அது இல்லாமல் தகவல் அறியும் சட்டம்மூலமாகவும் கேட்டுப் பார்க்கிறோம், எந்தவிதமான பதிலும் இல்லை. ஏனென்றால், இது என்னுடைய சொந்தத் தொகுதி. என் தொகுதியிலே நடக்கிற தவறைத் தட்டிக் கேட்கக்கூடிய உரிமை சட்ட மன்ற உறுப்பினருக்கு உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைபற்றிப் பேசாமல், மணலைப்பற்றிப் பேசுகிறார். பொதுப் பணித் துறை அமைச்சர் வந்த பிறகு இந்தக் கேள்வியை எழுப்பலாம்.

**திரு. மா. ராஜசேகரன்:** வேளாண்மைத் துறையைப்பற்றிப் பேசும்போது, வேளாண் துறை சம்பந்தப்பட்டது பாசனம். வேளாண் துறை உற்பத்தி செய்த பொருளை விற்பனை செய்யக்கூடியது கூட்டுறவுத் துறை. இந்த இரண்டு துறைகளும் சம்பந்தப்பட்ட துறைகள். மணல் எடுக்கக்கூடிய பகுதி என்னுடைய பாசனப் பகுதி. அந்தப் பகுதியிலே இருக்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை. ஏனென்று சொன்னால், இந்த 5 ஆண்டுகள் முடிந்தவுடன் நான் மக்களிடம் வாக்குகள் கேட்க வேண்டும். வாக்குகள் கேட்கப் போக வேண்டும். அங்கே நடக்கக்கூடிய குறைகளைச் சொல்ல வேண்டும். எனவே, அதற்காகச் சொல்கிறேன்.



தயவுசெய்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதில் ஒரு சரியான தீர்வை திருச்சியிலே காணவில்லையென்றால், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் நாங்கள் ஒன்று சேர்ந்து போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. மா. ராஜசேகரன்:** அடுத்தது, மாநில அரசின் இந்த நிதிநிலை அறிக்கை 100 சதவிகித வெற்றியைப் பெற்றுள்ளது என்று யார் சொல்கிறார்கள்? பாமர மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லோரும் சொல்கிறார்கள். பத்திரிகையாளர்கள், பண்பாளர்கள், சான்றோர்கள் எல்லோரும் சொல்கிறார்கள். இந்த 100 சதவிகித வெற்றிக்குப் பின்னால் மத்திய அரசினுடைய மறைமுக உதவி எப்படியிருக்கிறது என்பதை உங்களுக்கு நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சேது சமுத்திரத் திட்டம் ரூபாய் 2,500 கோடி ரூபாய்; தமிழ் மொழியைச் செம்மொழியாக்கியது 100 கோடி ரூபாய்; கடல் நீரைக் குடிநீராக ஆக்குவதற்கு சென்னைக்கு 1,000 கோடி ரூபாய்; ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 1,130 கோடி ரூபாய்; சென்னைக்கு அருகே கார் மாசு கட்டுப்பாடு வாரியத் தொழிற்சாலை; சென்னை, திருச்சி, கோவை, மதுரை விமான நிலைய விரிவாக்கம்; குளச்சல் மீன்பிடித் துறைமுகம், சின்னமுட்டம் துறைமுகம், தேங்காய்ப்பட்டணம் துறைமுகம், தூத்துக்குடி துறைமுக விரிவாக்கம், கடலூர் மீன்பிடித் துறைமுகம், எண்ணூர் துறைமுக விரிவாக்கம், சென்னைத் துறைமுக விரிவாக்கம்; 4 வழிச் சாலை, 6 வழிச் சாலையாக மாற்ற பல ஆயிரம் கோடி ரூபாய்; சுனாமி மறு சீரமைப்புமூலமாக ராஜீவ் குடியிருப்புத் திட்டத்தின்மூலமாக 32,000 வீடுகள் கட்டியது; கிராமப்புற வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இருக்கக்கூடிய மாவட்டங்களுக்கு 2,000 கோடி ரூபாய், நேரடியாக கிராமங்களுக்குப் பயன்படுத்துவதற்காக; பிரதமருடைய நிதித் திட்டத்தின்கீழ் 100 சதவிகித கிராமச் சாலைகள். அதுமட்டுமல்லாமல் 60,000 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயக் கடன் தள்ளுபடி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. மா. ராஜசேகரன்:** மத்தியப் பல்கலைக்கழகம் உருவாக்கத் திட்டம்; 20 அம்சத் திட்டத்திலே நாட்டிலே மூன்றாவது இடத்திலே இருக்கிற தமிழக அரசு சென்னையிலே மெட்ரோ இரயில் திட்டப் பணிகள் துவக்குவதற்குக் கொடுக்கப்பட்ட திட்டம். கிட்டத்தட்ட 65 திட்டங்களுக்கு 39 கோடியே 875 இலட்சம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. மா. ராஜசேகரன்:** அதைப்போல, அன்னை சோனியா காந்தி அவர்கள் அருமைத் தலைவர் முதல்வர் அவர்களைத் தன்னுடைய தகப்பனார் ஸ்தானத்திலிருந்து பார்க்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அருமைத் தலைவர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை அன்னை சோனியா காந்தி அவர்கள், தன்னுடைய தகப்பனார் ஸ்தானத்தில் பார்க்கிறார். அப்படி என்றால் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் முதல்வருக்குப் பேரக் குழந்தைகள். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற நிலைக்கேற்ப அன்னை சோனியா காந்தி அவர்கள் கூட்டணிக் கட்சிகளுக்கு மந்திரிகளையும், பல ஆயிரம் கோடிகளையும் வாரித் தந்திருக்கிறார். 10 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்ட இந்த அரசுக்கு 7 அமைச்சர் பெருமக்களைத் தந்திருக்கிறார். ஆனால் தமிழகத்தில் இருக்கின்ற காங்கிரஸ் ஆகிய நாங்கள் கலைஞர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், ஏதோ கேட்டீர்களே? (குறுக்கீடு) திரு. ஞானசேகரன் ஏதோ கேட்கிறார்.

**திரு. மா. ராஜசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, time ஆகிவிட்டது. (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன், நீங்கள் கேளுங்கள்.

**திரு. மா. ராஜசேகரன்:** தமிழகத்தில் இருக்கின்ற காங்கிரஸ் உறுப்பினர்களாகிய நாங்கள் சவலைப் பிள்ளைகளாக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் point of order கேட்டார். (குறுக்கீடுகள்) அவர் கேட்டார். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர்கள் இன்று வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையிலோ, என்னவோ தெரியவில்லை, திடீரென்று பார்த்தால் எல்லோருமே பச்சைத் துண்டு போட்டு வந்திருக்கிறார்கள். முன்னால் எல்லாம் வேளாண்மைத் துறை என்று சொன்னால், இங்கே ரோஜாப் பூ போன்றவற்றை எல்லாம் வேளாண் துறை அமைச்சர் வைப்பார்கள். இந்த முறை ஏனோ ரோஜாப் பூ இங்கே மலரவில்லை. பாட்டாளி மக்கள் கட்சி, இதற்கு மட்டும் பச்சைத் துண்டு போடுகிறவர்கள், நாளைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை வருகிறபோது எலும்புக் கூடு, அதுமாதிரி ஏதாவது எடுத்து வந்துவிட்டால் என்ன செய்வது? இல்லை, காவல் துறை மானியக் கோரிக்கையின்போது காக்கிச் சட்டை போடுவார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு)

**திரு. மா. ராஜசேகரன்:** துணைத் தலைவர் அவர்களே, ஓரேயொரு நிமிடம். (குறுக்கீடு)

முற்பகல் 11-25

**திரு. தி. வேல்முருகன்:** ஒரு நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி என்பது பாட்டாளிகளுக்கான கட்சி, விவசாயிகளுக்கான கட்சி என்பது அண்ணன் ஞானசேகரன் அவர்களுக்குத் தெரியும். இந்தியா பசுமைப் புரட்சியை நோக்கி நடைபோட வேண்டுமென்பது இந்தியாவினுடைய, அவர் சார்ந்திருக்கிற கட்சியினுடைய கொள்கை, தமிழக அரசினுடைய கொள்கை. இந்தியா விவசாய நாடு. விவசாயியை முன்னிறுத்துகின்ற விவசாயிகளுடைய மானியக் கோரிக்கை இன்று நடைபெறுகின்ற காரணத்தினாலே, விவசாயிகளுடைய உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும், அரசு விவசாயிகளுக்கு நல்ல அறிவிப்புகளை வெளியிட வேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி. (குறுக்கீடு) வேண்டாம், விடுங்கள். உங்கள் கட்சிக்காரர்களுடைய விருப்பம். (குறுக்கீடு) அப்புறம் பள்ளி மானியத்திற்கு என்னவென்று கேட்பார். இதெல்லாம் ஒரு விஷயமா? (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து விவசாயச் சங்கங்களும் பச்சைத் துண்டைத்தான் அணிந்திருக்கிறார்கள். மாண்புமிகு ஞானசேகரன் ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டினுடைய விவசாயிகளை அசிங்கப்படுத்துகிறாரா, அவமானப்படுத்துகிறாரா? விவசாயிகளின் சின்னமாக இருப்பதால் நாங்கள் வேளாண்மைத் துறையில் பச்சைத் துண்டை அணிந்து வருகிறோம் என்பதை மாண்புமிகு ஞானசேகரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு.க. பெரியசாமி. (குறுக்கீடு) வேண்டாம். (குறுக்கீடு) டைம் இல்லை. திரு. மு.க. பெரியசாமி.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். கூப்பிடுகிறேன்.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே .. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிறகு கூப்பிடுகிறேன்.

***திரு. மு.க. பெரியசாமி:** இந்த மாமன்றத்தில் விவசாய மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், இந்த 26 ஆண்டு காலமாக விவசாயிகளின் பிரச்சினையை தன்னுடைய உயிர் மூச்சுப் பிரச்சினையாக எடுத்துப் போராடிக்கொண்டிருக்கிற மாண்புமிகு மருத்துவர் அய்யா அவர்களுக்கும், பசுமை நாயகன் சின்ன அய்யா அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியைச் சொல்லி, இன்று இந்தப் பச்சைத் துண்டு சம்பந்தமாக மாபெரும் ஒரு சர்ச்சை எழுந்துள்ளது.

இன்று இந்த நாட்டினுடைய முக்கிய முதல் துறை, விவசாயத் துறை. ஆகவே, இந்த முதல் துறையினுடைய முக்கியக் கூறான விவசாயத் துறைக்கு மதிப்பளிக்கும் வகையிலே, மதிக்கின்ற வகையிலே, தமிழக விவசாயிகளின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலே, இந்த மாமன்றத்தினுடைய கவனத்தை விவசாயிகள் பக்கம் ஈர்க்க



வேண்டும் என்ற அந்த எண்ணத்தினுடைய அடிப்படையிலே, பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் பச்சைத் துண்டை அணிந்து கொண்டு இங்கே பச்சைக் கொடி காட்டிக்கொண்டிருக்கிறோம்.

ஆகவே, இந்த 7,000 கோடி ரூபாய், தமிழக விவசாயிகளுக்கு வயிற்றிலே பாலை வார்த்து, அதனுடைய அடிப்படையிலே 60,000 கோடி ரூபாயை இந்திய விவசாயிகளுக்கு நம்முடைய மத்திய அரசு வழங்கியிருக்கிறது. ஆக, இப்படி பல்வேறு திட்டங்கள். கடந்த ஆண்டிலே விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட அத்துணைத் திட்டங்களிலும் ஒன்றுகூட குறையாமல் அதற்குக் கூடுதலாக இன்று பல்வேறு திட்டங்களை இணைத்து இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையை இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறார்கள்.

ஆகவே அப்படிப்பட்ட இந்தத் திட்டங்களிலே நதி நீர் இணைப்புத் திட்டம், விவசாயிகளுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படுத்துகிற திட்டம். அதைப்போல, பயிர்க் காப்பீட்டுத் திட்டம், சுய உதவிக் குழுக்கள், செம்மை நெல் சாகுபடி, இப்படிப் பல்வேறு அம்சங்கள் இந்த விவசாய மானியக் கோரிக்கையிலே உள்ளடங்கியிருக்கிறது. இது விவசாயிகளுக்கு நம்பிக்கையூட்டுகின்ற திட்டம். ஆக, அப்படிப்பட்ட திட்டத்திலே இன்று விவசாயிகளின் கடந்த 20 ஆண்டு கால இந்திய விவசாயத்தினுடைய, அதைப்போல தமிழகத்தினுடைய விவசாயத்தினுடைய நிலையை நாம் இந்த நேரத்திலே புரிந்துகொள்ள வேண்டும். இந்த மாமன்றத்திலே அந்த விவரங்களை வைப்பதற்கு நான் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 1993 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இந்த விவசாயம் கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. விவசாயத்தினுடைய வளர்ச்சி என்பது மிக மிகக் கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. 1993-லே 25 சதவிகித பங்கை நாட்டு உற்பத்திக்கு அளித்திருக்கிறது, விவசாயம். ஆனால் இன்றைய நிலையிலே அது 13.3 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. அதைப்போல நாட்டு உற்பத்தியிலே இன்று எத்தனை சதவிகிதம் குறைந்திருக்கிறது? 76.8 இலட்சம் டன்னிலிருந்து இன்று 61.4 இலட்சம் டன்னாக உற்பத்தி குறைந்திருக்கிறது.

முற்பகல் 11-30

இதைப்போல விவசாயத் துறையிலே, விவசாய விளை நிலங்களுடைய பரப்பு, இன்றைக்கு விவசாயம் செய்யக்கூடிய

நிலங்களுடைய பரப்பு. மிகமிக வீழ்ச்சி அடைந்திருக்கிறது. ஆனால், அந்த நிலத்திலே விவசாயம் செய்கின்ற விவசாயத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 1993-லிருந்து இன்று வரை 56 சதவிகிதமாகவே இருக்கிறது. ஆகவே, இந்த நிலை நமக்கெல்லாம் கவலையளிக்கக்கூடியப் போக்காக இருக்கிறது. இப்படி விவசாயம் கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இன்றைக்கு உயிரூட்டக்கூடிய வகையிலேதான், இந்த விவசாய நிதிநிலை அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ரூ.1,700 கோடி அளவிற்குத் தொகை இந்த விவசாய நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, இன்றைக்கு சதவிகிதம்தான் மொத்த நிதி ஒதுக்கீட்டிலே இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், வெறும் 2.9

நமக்குக் கிடைக்கிற புள்ளிவிவரத்தைப் பார்த்தால், நாட்டிலே இந்த விவசாயத் துறைதான் 56 சதவிகித மக்களுடைய மிகப் பெரிய வாழ்வாதாரத் தொழிலாக இருக்கிறது. அதைப்போல, ஊரகப் பகுதியில் 82 சதவிகித மக்களுடைய வாழ்வாதாரமும் இந்த விவசாயம்தான். எவ்வளவு மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்பட்டாலும், அன்றைக்கு 4 கோடியிலிருந்து, இப்போதுள்ள 6½ கோடி தமிழ் மக்களுக்கும், இன்னும் எத்தனை கோடி மக்களைக் கொடுத்துக்கொண்டிருந்தாலும், அவர்களுக்கெல்லாம் ஒரு வேலையளிக்கக்கூடிய மிகப் பெரிய துறை இந்த வேளாண்மைத் துறை. ஆனால், இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி சரிதானா, நியாயம்தானா என்று அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். வேளாண்மைத் துறையை நம்பியிருக்கிற 56 சதவிகித மக்களுக்கு, மிக மிகக் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிற, இந்த 2.9 சதவிகித நிதி ஒதுக்கீடு என்பது நியாயமா? இதுதான் இன்றைக்கு விவசாயிகளுடைய குமுறல். அதைத்தான் நீங்கள் இங்கே சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

விவசாயத்திற்கு ஆதாரமாக இருப்பது நீர். இந்த விவசாயம் 15 ஆண்டு காலமாக, 20 ஆண்டு காலமாகப் பாதிக்கப்பட்டதற்கு என்ன காரணம் என்று பார்க்கிறபோது, நம்முடைய மேட்டூர் உரிமையை விட்டுக் கொடுத்துவிட்டோம்; பாலாறு உரிமையை விட்டுக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்; அதைப்போல, முல்லைப் பெரியாறு, இப்படி இந்த விவசாயத் துறைக்கு ஆதாரமாக இருக்கக்கூடிய நீர் வளத் துறையை நாம் படிப்படியாக இழந்து கொண்டிருக்கிறோம். ஆக, இப்படிப்பட்ட விவசாயத்திற்கு முக்கிய ஆதாரமாக இருக்கிற நீரை எங்கேயிருந்து பெறப் போகிறோம் என்ற அந்தக் கேள்வியை



இங்கே நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வைத்துக் கொண்டிருக்கிறோம்.

எனது அருமை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த உரிமைகளை அந்த ஆட்சியில்தான் இழந்தோம் அல்லது உங்களால்தான் இழந்தோம் என்று போட்டி போட்டுக் கொண்டிருப்பதைவிட, எதிர்காலத்தில் இந்த விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கு என்ன வழிவகையிருக்கிறது என்று நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஆக, அப்படிப் பார்க்கிறபோதுதான், நம்முடைய மாண்புமிகு மருத்துவர் அய்யா அவர்கள், 'பல்வேறு திட்டங்களைத் தீட்டி, இந்தத் துறைக்குத் தனியாக ஒரு நிதிநிலை அறிக்கை வேண்டும்; விவசாய நிதிநிலை அறிக்கை வேண்டும்' என்று திட்டமிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

இதற்கு என்ன காரணம்? இன்றைக்கு 51 மானியக் கோரிக்கைகளில் நிதி ஒதுக்குகின்றபோது மக்கள் தொகையில் பாதிப் பேராக இருந்துகொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, 56 சதவிகித மக்களுக்கு வெறும் ஒரேயொரு துறை உள்ளது. இது எந்தவிதத்திலே நியாயம்? இதைக் கருத்தில்கொண்டு, நம்முடைய சட்டமன்றத்திலே, அடுத்த நிதியாண்டிலே விவசாயத் துறைக்கென்று தனியாக ஒரு நிதிநிலை அறிக்கையை நமது அரசு தயாரித்து, இப்படி வாடிக் கொண்டிருக்கிற, வாட்டத்திலே உழன்று கொண்டிருக்கிற, கடனிலே ஆழ்ந்து மூழ்கிக் கொண்டிருக்கிற இந்த விவசாயிகளைக் காப்பதற்கு வைக்கவேண்டும். இந்த நிதிநிலை அறிக்கை வைப்பதன் காரணமாக, இந்தத் தொலைநோக்குத் திட்டங்கள், குறுகிய கால ஆண்டுத் திட்டங்கள், இப்படிப் பல திட்டங்களை உருவாக்கி, அந்தத் திட்டங்களை, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இங்கே கொடுக்கமுடியும். அதனாலேதான், தனி நிதிநிலை அறிக்கை என்பது, இன்றைக்குப் பெரும்பான்மையாக உள்ள அந்த மக்களுக்கு வேண்டியிருக்கிறது.

அப்படிப்பட்ட அந்த நிலையிலே, இன்றைக்கு மிகப் பெரிய பிரச்சினை, விவசாய விளை நிலங்கள் இன்றைக்குப் பல்வேறு பொருளாதாரக் காரணங்களுக்காக மாற்றியமைக்கப்படுகின்றன. இதை ஆராயவேண்டும். விவசாய நிலங்களை எந்தக் காரணத்திற்காகவும், வேறு எந்தப் பணிகளுக்காகவும் மாற்றக்கூடாது. அப்படி மாற்றுகிற நிலை ஏற்பட்டால், அந்த விளை நிலங்களை வைத்திருக்கிற விவசாயப் பெருமக்களுடைய ஒப்புதலைப் பெறவேண்டும். அவர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய

ஒப்புதலோடு அந்த நிலத்தை எடுக்க வேண்டும். ஆக, இப்படி விவசாயப் பரப்பு ஆண்டுக்காண்டு குறைந்துகொண்டிருக்கிறது. ஆக, குறைந்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில், நம்முடைய மத்திய அரசும், விவசாய வல்லுநர்களும் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்? இன்னும் இரண்டு ஆண்டுகளிலே, உணவுத் தட்டுப்பாடு இந்தியாவிலும் சரி, அதைப்போலத் தமிழகத்திலும் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. உலகம் முழுவதும் அந்த நிலை இருக்கிறது. ஆகவே, உலகத்திலிருந்து இனி உணவு தானியங்களை இந்தியாவுக்கும் இறக்குமதி செய்யமுடியாது; அதைப்போல, தமிழகத்திற்கும் இறக்குமதி செய்யமுடியாது. ஆக, இந்த நாட்டைப் பாதுகாப்பதற்குத்தான் நம்முடைய அய்யன் வள்ளுவர் அவர்கள் என்ன சொன்னார்கள்?

*முற்பகல் 11-35*

'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு'

என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஏழைகளினுடைய அந்த உணர்வைப் புரிந்ததனால்தான் இன்றைக்கு இரண்டு ரூபாய்க்கு அரிசியைக் கொடுத்து அவர்களைக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. மு.க. பெரியசாமி:** அப்படிப்பட்ட அந்த நிலையைப் போக்கி- உணவுப் பஞ்சம் வரக்கூடாது. உணவுப் பஞ்சம் வந்துவிட்டால், பசி வந்தால் பத்தும் பறந்துவிடும். இந்த ஆட்சி போய்விடும். இதைத்தான் நமது முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆக, இப்படிப்பட்ட அந்த நிலைகளையெல்லாம் மாற்றி இன்றைய நிலையிலே நம்முடைய விவசாயிகளுக்கு என்னென்ன திட்டங்கள் தேவைப்படுகின்றன என்பதை நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. மு.க. பெரியசாமி:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. ஒரே second-ல் உரையை முடித்துவிடுங்கள்.



**திரு. மு.க. பெரியசாமி:** இந்த நாடு வளர்ந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால் விவசாயமும் சேர்ந்து வளர வேண்டும். அப்படி விவசாயமும் சேர்ந்து வளர்வதற்கு நாம் என்ன முயற்சி எடுத்திருக்கிறோம்? ஆண்டுக்கு 4 சதவிகித வளர்ச்சி இந்த நாட்டினுடைய பங்கிலே வேளாண்மைப் பங்கு இருக்க வேண்டும். அப்படி இருக்க வேண்டுமானால் வேளாண்மைக்கான திட்டம் மற்றும் திட்டமிடுதல் ஒதுக்கீட்டை உயர்த்தவேண்டும். வேளாண்மையில் ஈடுபட்டுள்ளோரின் உற்பத்தித் திறனை மேம்படுத்த வேண்டும். மாவட்டங்களுக்கிடையேயான ஏற்றத்தாழ்வை விவசாயத்திலே களைய வேண்டும். உணவில் தமிழகம் தன்னிறைவு அடையவேண்டும். இரண்டாவது பசுமைப் புரட்சியை, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு இந்தப் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தையாவது ஒரு பசுமைப் புரட்சித் திட்டமாக அறிவிக்க வேண்டும். இப்படி . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து அவர்கள். (குறுக்கீடு)

**திரு. மு.க. பெரியசாமி:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு) இல்லை. அவ்வளவுதான். (குறுக்கீடு) இல்லை. திரு. மாரிமுத்து, நீங்கள் பேசுங்கள். அப்படியே நாகப்பட்டினம், பூம்புகார் பக்கம்தான் இருக்கிறது.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில கருத்துகளைப் பதிய வைக்க விரும்புகிறேன்.

இந்தியாவின் கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார நெருக்கடியின் காரணமாக விவசாய உற்பத்தி, உற்பத்தித் திறன், விவசாயிகள் வருமானம், வேலைவாய்ப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பது அனைத்துப் பகுதிகளிலும் நெருக்கடி ஏற்பட்டு கிராமப்புற மக்களின் அடிப்படை வாழ்வாதாரமே கேள்விக்குறியாக மாறியுள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து வேளாமைத் துறையை மீட்டெடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருகிறது. குறிப்பாக, விவசாயிகள் கடன் தள்ளுபடி ரூ.7,000 கோடி, கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஈடு கட்டுவதற்காக ரூ.3,304 கோடி, இந்த ஆண்டு பயிர்க் கடன் ரூ.1,500 கோடி என்கிற வகையில்

பல்வேறு நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்துவருவது, பாராட்டத்தக்கது. வேளாண் துறையை நெருக்கடியிலிருந்துப் பாதுகாக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துவரும் இந்த நிலையில்தான், மத்திய அரசினுடைய சில நடவடிக்கைகள் வேளாண் துறையை மேலும் நெருக்கடிக்குக் கொண்டுசெல்லும் வாய்ப்பை இன்றைக்கு உருவாக்கியுள்ளது.

குறிப்பாக, 1993 ஆம் ஆண்டு தொடங்கி 2006 ஆம் ஆண்டுக்கு இடையில் கிராமப்புறங்களில் செயல்பட்டுவந்த ஆயிரத்திற்கும் அதிகமான வங்கிகள் இன்றைக்கு மூடப்பட்டுவிட்டன. இந்நிலையில், 2008 ஆம் ஆண்டு மத்திய அரசினுடைய பொருளாதார ஆய்வு அறிக்கை கீழ்க்கண்ட முன்மொழிவை அளித்துள்ளது. 'தனியார் மற்றும் அன்னிய வங்கிகளை 100 சதவிகித அன்னிய நேரடி முதலீட்டுடன் கிராமப்புறங்களில் தொடங்கிட அனுமதிக்க வேண்டும்' என்கிற முன்மொழிவை இன்றைக்கு சொல்லியிருக்கிறது. இந்த நிலை என்பது விவசாயிகளை மேலும் கடன்குழியில் தள்ளுவதற்குத்தான் இட்டுச்செல்லும். எனவே, மத்திய அரசே கிராமப்புற வங்கிகளை அதிகமான அளவில் திறக்க வேண்டும். இதன்மூலம் சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு கடன் கிடைக்க உரிய ஏற்பாடு செய்வதோடு தமிழக அரசு வழங்கியிருக்கக்கூடிய 4 சதவிகித வட்டியைப்போல, மத்திய அரசும் விவசாயிகளுக்கு வழங்குகிற கடன் தொகைக்கு 4 சதவிகித வட்டி வசூலிக்க வேண்டுமென்கிற நிலையை உருவாக்க வேண்டுமென்று மாநில அரசு வலியுறுத்த வேண்டும்.

*முற்பகல் 11-40*

சமீபத்திலே பருவ மழை தவறி பெய்ததன் காரணமாக, மாநிலம் முழுவதும் இன்றைக்கு இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட மத்திய அரசினுடைய வழிகாட்டுதலை மீறி மாநில அரசே தன்னுடைய நிதியிலிருந்து கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து, பாதிக்கப்பட்ட பயிர்கள் அனைத்திற்கும் நஷ்ட ஈடு வழங்குவோம் என்று அறிவித்தார்கள். விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால் இன்றைக்கு நாகை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஒரு எக்டேர் என்கிற அளவில்தான் கணக்கெடுக்கப்படுகிறது. எனவே, நெல் பயிர்களுக்கு வழங்கப்படுவதைப்போல, பாதிக்கப்பட்ட அனைத்துப் பயிர்களுக்கும், பாதிக்கப்பட்ட அனைத்து நிலங்களுக்கும் வழங்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.



அதேபோல, என்னுடைய தொகுதியில் இன்றைக்கு வேளாண் துறை, வருவாய்த் துறை கணக்கெடுத்திருக்கிறது. புள்ளியியல் துறையும் கணக்கெடுத்திருக்கிறது. புள்ளியியல் துறையினுடைய தவறான கணக்கின் அடிப்படையில், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கீளையூர், வேளாங்கன்னி பிர்காக்களுக்கு இன்றைக்குப் பயிர்க் காப்பீட்டுத் தொகை கிடைக்காத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதற்கு மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

இன்றைக்கு மாநில அரசு அறிவித்திருக்கக்கூடிய, தமிழ்நாடு அரசினுடைய வேளாண் துறையின் மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாறி வரும் சூழ்நிலைக்கேற்ப அனைத்துத் துறைகளிலும் மாற்றங்களும் சீர்த்திருத்தங்களும் அத்தியாவசியமானது என்பதில் இரண்டு கருத்துகள் இருக்க வாய்ப்பில்லை. அதிலும், குறிப்பாக, உலகமயம், தாராளமயம், வர்த்தகமய சூழ்நிலையில் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ள வேளாண் துறையில் சீர்த்திருத்தம் அவசியமான ஒன்றாகும். ஆனால், தமிழக அரசு உத்தேசித்துள்ள மறு சீரமைப்பு எதிர்பார்த்த பலனைத் தருமா என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கேள்வி. இன்றைய விவசாயத் துறை சந்திக்கும் அடிப்படையான பிரச்சினைகளையும், அதனைக் களைவதற்கான வழிமுறைகளைக் கண்டறிய, விரிவான, ஆழமான ஆய்வுகள் மேற்கொண்டு, மறு சீரமைப்புக்குத் திட்டமிட்டால் மட்டுமே, எதிர்பார்த்த பலனைப் பெற முடியும் என மார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது. இதனை விடுத்து, அவசரக் கோலத்தில் மேற்கொள்ளப்படும் நிர்வாக சீர்திருத்தங்கள் மருந்தே விஷமாக மாறிய கதையாக அமைந்துவிடக் கூடும். எனவே, விவசாய நிலங்கள், விவசாயம் அல்லாத காரியங்களுக்கு மாற்றப்படுவது இன்றைக்கு அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக, சாகுபடிப் பரப்பளவு வேகமாகக் குறைந்து வருகிறது. உணவுப் பொருள் உட்பட, அனைத்து விவசாய விளை பொருட்களின் உற்பத்தியில் தற்பொழுது வீழ்ச்சி ஏற்படுகிறது. உற்பத்தித் திறன், நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. ஒரு எக்டேர் சராசரி உற்பத்தியானாலும், மொத்த விவசாயத்தில் அரசு தீர்மானித்த குறியீட்டினை எட்ட முடியாமல் தேக்க நிலையில் உள்ளது. உதாரணமாக, ஒரு எக்டேர் நெல் உற்பத்தி 7 டன் என இலக்கு தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், சராசரியாக 2.3 டன்னுக்கு மேல் உற்பத்தி இல்லை. இதேபோன்று கரும்பு, பருத்தி, சோளம், சிறு தானியங்கள் உள்ளிட்ட அனைத்து விளைபொருட்களினுடைய

உற்பத்தித் திறனிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை. உலகமய, தாராளமய சூழ்நிலையில், சர்வதேச வர்த்தகத்தில் போட்டியிட உற்பத்தித் திறன் முக்கிய உட்கூறாகும். ஆனால், இத்தகைய முக்கியமான உட்கூறு தற்பொழுது முனை மழுங்கிக் கிடக்கிறது.

வேளாண் உற்பத்தியை உயர்த்திட, புதிய வகையிலான வீரிய விதைகள் நவீனத் தொழில்நுட்பம் அடிப்படையானதாகும். புதிய விதைகளையும், நவீனத் தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டிய தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் கடந்த 10 ஆண்டுகளாகப் புதிய விதைகள் ஏதும் அறிமுகப்படுத்தப்படவில்லை எனக் கூறப்படுகிறது. இங்கு உருவாக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டமைப்புகள் படிப்படியாக சிதைக்கப்படுகின்றன. இதே காலத்தில், தனியார் நிறுவனங்கள், ஏகப்பட்ட புதிய விதைகளையும் அதிவேகத் தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளன. தனியார் நிறுவனங்கள் புதிய புதிய விதை வகைகளை உற்பத்திச் செய்யும்போது, இதற்கென்றே உருவாக்கப்பட்டுள்ள கோவைப் பல்கலைக்கழகம் முடங்கிக் கிடப்பது ஏன்? இப்பல்கலைக்கழக வளர்ச்சிக்கு கடந்த மத்திய பட்ஜெட்டில் ரூபாய் 50 கோடி ஒதுக்கப்பட்டது. இத்தொகைகூட வேளாண் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்படவில்லை எனவும், கட்டடங்கள் கட்டுவதற்கே செலவிடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. எனவே, விவசாயத்தில் தனியார் கம்பெனிகளின் ஆதிக்கம் வளர்ந்து வருவது விவசாயிகளுக்கு எண்ணற்ற பிரச்சினைகளை உருவாக்கி இருக்கிறது.

மேலும், தோட்டக்கலைத் துறைக்கான உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். பழங்கள், மலர்கள், காய்கறிகள், மருத்துவத் தாவரங்களுக்கு அதிகத் தேவை உள்ளது. இவற்றை உற்பத்திச் செய்வதால், விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் எனவும் சொல்லப்பட்டுள்ளது. எனவே, தோட்டக்கலைத் துறைக்கான பட்ஜெட் நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது மத்திய அரசு, தமிழ்நாடு தோட்டக்கலை உற்பத்திக்கு ரூ.400 முதல் ரூ.450 கோடி வரை நிதி ஒதுக்கியுள்ளது. இந்த நிலையில், தோட்டக்கலைத் துறைக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளித்திட வேண்டியுள்ளது. அதற்கு ஏதுவான விவசாயத் துறைக் கட்டமைப்பை உருவாக்குவதே மறுசீரமைப்பின் அடிப்படை நோக்கமெனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் மொத்தமுள்ள சாகுபடி நிலப்பரப்பில், சுமார் 12 சதமான நிலம் மட்டுமே, தோட்டக்கலை சாகுபடியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. பெரும்பகுதியான நிலம் விவசாயப் பயிர்கள் சாகுபடி



செய்யப்படுவதால், வேளாண் துறையில் பெரும்பகுதி, வேளாண் அலுவலகங்கள் மற்றும் அதிகாரிகள் விவசாயப் பயிர் சாகுபடிகளைக் கவனிப்பவர்களாகவே உள்ளார்கள். தற்போது விவசாயப் பயிர்களைக் கவனிக்கும் அதிகாரிகள், அலுவலர்கள் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டு, இவர்கள் தோட்டக்கலைத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

முற்பகல் 11-45

உதாரணமாக, தற்போதுள்ள விவசாயப் பயிர்களுக்கான 159 விவசாயத் துணை இயக்குநர்கள் பதவி எண்ணிக்கை என்பது 99 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள, 12 தோட்டக்கலை துணை இயக்குநர்கள் பதவி எண்ணிக்கை 33 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு வேளாண் துறையில் உள்ள ஒவ்வொரு வகையான அதிகாரிகள் எண்ணிக்கையில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. எனவேதான், புதிய தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு அன்றாடம் அறிமுகப்படுத்துவது, அவற்றைக் கிராமப்புறங்களில் நிறைவேற்றச் செய்வது, புதிய விதைகளைக் கண்டறிந்து, விவசாயத்தில் ஈடுபடுத்துவது, நவீனப் பாசனம், வேளாண் ஆராய்ச்சி, மண் ஆராய்ச்சி, தண்ணீர் ஆராய்ச்சி, பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாடு, உயிரி உரப் பயன்பாடு, இயற்கை வேளாண்மை உள்ளிட்ட அனைத்து விவசாயப் பிரச்சினைகளையும் உள்ளடக்கியதாக மறு சீரமைப்பு மேற்கொள்வதே இன்றைய காலத்தினுடைய தேவையென மார்க்சிஸ்டு கட்சி கருதுகிறது.

தற்போது, ஏரிப் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றல் சட்டத்திற்கான விதிகளை தமிழக அரசு அறிவித்துள்ளது. இது 2007 அக்டோபர் 1 முதல் அமலுக்கு வருகிறதெனச் சொல்லப்பட்டிருக்கிறது. வருவாய்த் துறைப் பதிவேடுகளில் உள்ளபடி ஏரியின் பரப்பளவு கணக்கிடப்படும். ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதி மற்றும் கடற்கரைப் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகள், பாசனக் கால்வாய்கள் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும். ஆக்கிரமித்துள்ளவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு, 21 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்படுமென சட்டம் சொல்கிறது. ஆனால், ஏதோ ஒரு காலத்தில் ஏரியாக இருந்து, இன்று பாசனப் பரப்பும் இல்லாமல், ஏரியும் இல்லாமல் உள்ள ஏரிப் புறம்போக்கு வகைமாற்றம் செய்யப்படாமல் உள்ளது. ஏரிக்குத் தொடர்பில்லாமல் அதிக தூரத்தில் உள்ள இடம் ஏரிப் புறம்போக்காக தற்போது அரசுப் பதிவேட்டில் உள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** எனவே தமிழ்நாடு அரசு, உபயோகத்தில் இல்லாத நீர்வழிப் புறம்போக்குகளை மறுபரிசீலனை செய்யவேண்டும். அதன் உண்மைத் தன்மையின் அடிப்படையில் வகை மாற்றம் செய்யப்பட வேண்டும்.

மதுரையில் ஏரி, உயர் நீதிமன்றக் கிளையாகிவிட்டது. விழுப்புரத்தில் ஏரி, பேருந்து நிலையமாகிவிட்டது; நீதிமன்ற வளாகம், ஆட்சியர் அலுவலகமாகிவிட்டது. இதைச் சுற்றியுள்ள பகுதிகள் ஏரிப் புறம்போக்கு, அதன் வரவுக் கால்வாய் மற்றும் பாசனக் கால்வாய், நீர்வழிப் புறம்போக்கு என வருவாய்த் துறைப் பதிவேட்டில் உள்ளது. ஆனால், அதன் உண்மைத் தன்மை என்ன? இத்தகைய இடங்கள் வகைமாற்றம் செய்யப்பட வேண்டும். நீர் ஆதாரங்கள், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால், அதைச் சாக்காக வைத்துக்கொண்டு ஏழையெளியோரின் வாழ்வாதாரங்களைப் பறிப்பதற்கு இந்தச் சட்டம் பயன்படக்கூடாதெனக் கேட்டுக்கொள்வதோடு, இன்றைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை வேண்டுமென்கிற கோரிக்கை வலுத்து வருகிற காலம். எனவே, மாநில அரசு, கோதுமைக்கு மத்திய அரசு வழங்கிய தொகையைப்போல, நெல்லுக்கும் ஆதார விலையை ஆயிரம் ரூபாயென உயர்த்த வேண்டுமென வலியுறுத்துவதோடு, என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட ஒரேயொரு கோரிக்கை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்குக் கல்வித் தொகை வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், ஒரு ஆண்டு வழங்கப்பட்டுவிட்டது. 2007-2008 ஆம் ஆண்டிற்குரிய தொகை இன்னும் வழங்கப்படவில்லை. அதை உடனடியாக மாநில அரசு விடுவிக்க வேண்டுமெனக் கேட்டு, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மானியக் கோரிக்கையில் நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்



முன்மொழிந்துள்ள அறிக்கையை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

தமிழகத்தில் வேளாண் தொழிலை வளர்க்கவும், விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி, கூட்டுறவு அமைப்புகளின்மூலம் மீண்டும் கடன் மற்றும் நான்கு சதவிகிதமாக வட்டிக் குறைப்பு, விவசாயிகளின் குழு அமைத்தல் போன்றவையும், தொடர்ந்து இலவச மின்சாரம், பயிர் இன்சூரன்ஸ் திட்டத்திற்கு மானியம், நெல்லுக்குக் கூடுதல் ஊக்கத் தொகை போன்றவையும், அதைப்போல், கடந்த வாரம் யாரும் எதிர்பாராமல் பெய்த பெருமழையால் விவசாயம் பாதிக்கப்பட்டவுடன், சட்டமன்ற நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து, அமைச்சர்களை எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பி, நேரில் பார்வையிட வைத்து, முழுமையாக இல்லையென்றாலும், முடிந்த வரை கூடுதலாக நஷ்ட ஈடு அறிவிப்புச் செய்தது சிறப்பிற்குரியது. ஆனால், அதே நேரத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் நிலவரி தற்பொழுது கட்டாயமாக வசூலிக்கப்படுகிறது. அதை நிறுத்துவதற்கு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட வேண்டும்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கொள்கைக் குறிப்பில் சுய விமர்சனத்தோடு அறிக்கையைத் தொடங்கியுள்ளார்கள். வேளாண்மைக்கு அடிப்படையான செழிப்பான நிலம், தரமான நீர், அதிக சூரிய வெளிச்சம் ஆகியவை தமிழகத்தில் இருந்தும், உற்பத்தித் திறன் அதிகரிக்கவில்லை என்றும், மேலும், அறிக்கையின் முதல் பக்கத்தில் பிற தொழில்களில் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ள நிலையில், வேளாண் தொழில் சார்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டிய அவசியம் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம், வேளாண் தொழில் என்பது உணவு உற்பத்தி மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், அனைத்துப் பகுதி மக்களுக்குமான உயிர் வாழும் பிரச்சினை என்பதிலிருந்து விவசாயப் பிரச்சினையை அணுக வேண்டும். வேளாண் உற்பத்தி 4 சதவீதம் என்பதை மத்திய, மாநில அரசுகளின் அறிக்கையில் மட்டுமல்லாது, அது மனித இனத்தின் முதல் தேவை என்பதால், அதற்கான வழித்தடங்களை சிறப்பாக, உறுதியாக உருவாக்க வேண்டும். எனவே, எதிர்காலத்தில் வேளாண் மானியக் கோரிக்கை விவாதத்தை இரண்டு நாட்களுக்கு விரிவாக விவாதிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

முற்பகல் 11-50

1950-1951-ல் தேசிய மொத்த உற்பத்தியில் 56 சதவீதமாக இருந்த விவசாயம் 2006-2007 ஆம் ஆண்டுகளில் 18.6 சதவீதமாகக் குறைந்துள்ளது. 1980-1997 வரை சராசரியாக 3.2 சதவீதமாக இருந்த வேளாண் உற்பத்தி வளர்ச்சி, 1997-லிருந்து 1.5 சதவீதமாகக் குறைந்துள்ளது. இதற்கான அடிப்படைக் காரணங்களைக் களைவதற்கு முற்பட வேண்டும். 1990 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசால் உருவாக்கப்பட்ட உலகமயமாக்கல் கொள்கை, இந்திய விவசாயத்தை எல்லா நிலைகளிலும் சீரழித்துவிடும் என்ற இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் எச்சரிக்கை இன்று உண்மையாக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து மீள்வதற்கு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். விவசாயத்திற்கான தெளிவான கொள்கை இல்லாத நிலையில், உலகமயமாக்கல் GATT ஒப்பந்தம் சீரழிவை உண்டாக்கியுள்ளது.

11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், விவசாய வளர்ச்சி 4 சதவீதம் உயர வேண்டுமென்று மத்திய அரசு சொல்கிற நிலையில், விவசாயத்திற்கான அடிப்படையான விதை இன்று அன்னிய பகாசுர கம்பெனிகளின் ஆதிக்கத்தில் விடப்படுகிறது. விதைக்காக பெரும் தொகை விவசாயிகளால் செலவிடப்பட வேண்டியுள்ளது. நம் மண்ணிற்கேற்ப இல்லாத, பல வளரும் நாடுகளில் தடை செய்யப்பட்ட மரபணு மாற்று விதைகள் இங்கே திணிப்பதற்கான நடவடிக்கை தொடருகிறது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் உயர் நீதிமன்றத்தில் மான்சான்டோ கம்பெனியின் மரபணு மாற்று விதைகள் பற்றிய தீமைகளைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று வழக்குத் தொடர்ந்ததில் மான்சான்டோ கம்பெனி அறிவுசார் சொத்துரிமை--Patent Right சட்ட விதிகளின்கீழ் தாங்கள் பதிய வைக்க வேண்டியதில்லையென்று கருத்தைக் கூறி, வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

ஆந்திர பருத்தி விவசாயிகள் தற்கொலை, பல முறை உற்பத்திக் குறைவு போன்றவை, தரமற்ற, பொருத்தமற்ற விவசாய விதைகளினால் ஏற்பட்ட விளைவுகள் என்பதை விவசாய விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

விவசாயக் கடன் தள்ளுபடி என்பது பல புதிய நிலைகளை எட்டியுள்ளது. மத்திய அரசு அறிவித்துள்ள 60,000 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி, சிறு, குறு விவசாயிகள் என்பதோடு இல்லாமல்



தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்ததைப்போல, அனைத்து விவசாயிகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும். மத்திய அரசின் கடன் தள்ளுபடிக்கான தூண்டுகோலாக இருந்த விதர்பா விவசாயிகளுக்கு இந்தத் திட்டத்தின் பலன் இல்லையென்று சொல்கிறார்கள்.

அதைப்போல, தமிழகத்தில் கடந்த காலங்களில் கடனைத் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்குக் கடனைத் திருப்பித் தரவேண்டும். இந்திய விவசாயிகள், தமிழகத்திலும் இந்திய அளவிலும் சுமார் 84 சதவீதம் விவசாயிகள் தனியாரிடம் கடன்பட்டு நஷ்டம் அடைந்துள்ளார்கள். அவர்களின் கடன்களை எப்படித் தீர்ப்பது என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். எனவே, விவசாயிகளுக்கு விவசாயத்தில் நம்பிக்கையூட்டும்விதமாக அனைத்து விவசாயிகளுக்கும் சாகுபடிக் காலத்தில் குறைந்த வட்டியில் கடன் கிடைப்பதற்கு உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும்.

அதேபோல மழை, வெள்ளம், வறட்சி பாதித்த காலங்களில் உடன் உரிய நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தற்பொழுதுள்ள நடைமுறைகள் விவசாயிகளுக்குப் போதுமானதாக இல்லை. நஷ்டஈடு என்பது உற்பத்திச் செலவு மற்றும் வருமான இழப்பு இணைந்ததாக இருக்க வேண்டும். பயிர் Insurance திட்டத்தில் தமிழக அரசு 50 சதவீதம் பிரிமியம் கட்டுவது வரவேற்கத்தக்கது. ஆனால், பயிர் Insurance திட்டத்தை ஒவ்வொரு விவசாயிக்கும் கணக்கிடும் முறையைக் கொண்டு வர வேண்டும். கடந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட சிவகங்கை போன்ற மாவட்டங்களில் பயிர் Insurance கட்டப்பட்டும், இன்று வரை அந்தப் பயிர் Insurance தொகை கிடைக்கவில்லை. அதற்குத் தமிழக அரசு விரைந்து பயிர் Insurance கிடைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்க வேண்டும். விவசாய விளைபொருளுக்கு இலாப விலையும், விவசாய விளை பொருள்களை மதிப்புக் கூட்டப்படும் பொருளாக மாற்றும் தொழில்களை அதிக அளவில் உருவாக்குவதும், விவசாய விளை பொருள்களுக்கு மானியங்களைக் கொடுத்து அரசே கொள்முதல் செய்து விநியோகிப்பதன்மூலம்தான் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும். இதற்கான திட்டங்களைச் செயல்படுத்த தமிழக முதலமைச்சர் மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

முற்பகல் 11-55

வளர்ந்த நாடுகளில் விவசாய விளைபொருட்களுக்குக் கூடுதலான வாணிபங்களை அளிக்கின்ற நேரத்தில், இந்தியா போன்ற நாடுகளில்

உலகமயமாக்கல் கொள்கையின்மூலமாக வாணிபங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தமிழகத்தில் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு விவசாயம் சார்ந்த துணைத் தொழில்களை உருவாக்க வேண்டும்.

சமீப காலங்களில், கோழி வளர்ப்பு என்பது தமிழகத்தில் பெரும் தொழிலாக வளர்ந்துள்ளது. இதில் விவசாயிகளிடம் பெரும் கறிக் கோழி நிறுவனங்கள் பண்ணை முறையில் குஞ்சுகளைக் கொடுத்து கோழியை வளர்த்துத் திரும்ப வாங்குகிறார்கள். கறிக் கோழி நிறுவனங்கள், குஞ்சு தீவனம் மட்டும் பண்ணைகளுக்குக் கொடுக்கிறார்கள். மற்றபடி கறிக் கோழி வளர்ப்பவர்கள், மின்சாரக் கட்டணம், வேலையாட்கள் கூலி, மூலதன வட்டி, கோழி வளர்ப்பில் ஏற்படும் இதர செலவினங்களான கறி மற்றும் தேங்காய் போன்றவற்றை செலவிட்டு வளர்க்கிறார்கள். கறிக் கோழி நிறுவனங்கள் வளர்க்கப்பட்ட கோழியைக் கிலோ ஒன்றிற்கு 2 ரூபாய்க்குத் திரும்ப எடுப்பதால், பண்ணையிலே வளர்ப்பவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். மேலும், பல நிறுவனங்கள் நியாயமற்ற நிபந்தனைகளை விதிப்பதால் விவசாயிகளுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படுகிறது. இதில் தமிழக அரசு தலையிட்டு, தீர்வு காண வேண்டும்.

அதைப்போல, தமிழகத்தில் ஏழையெளிய விவசாயிகளுக்குத் தரிசு நிலங்களை வழங்கும் நடவடிக்கை சிறப்பாக நடைபெறுகிறது. ஆனால், மாநிலம் முழுவதும் 40 ஆண்டு காலம், 50 ஆண்டு காலம், விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு அந்த நிலங்கள் பட்டா வழங்கப்படாத ஒரு சூழல் தொடர்ந்து இருக்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன்முதலில் வெற்றிபெற்ற குளித்தலை தொகுதியில், குளித்தலை வட்டம், நங்கவரம் பிர்காவில், நெய்தலூர் காலனியில் மாஜி இராணுவத்தினருக்காக 1949 ஆம் ஆண்டு நிலம் வாங்கப்பட்டு, 82 குடும்பங்கள் 40 ஆண்டு காலமாக அதிலே விவசாயம் செய்கிறார்கள். அவர்களுக்கு இன்று வரை பட்டா கிடைக்காத சூழ்நிலை நீடிக்கிறது.

அதைப்போல, நீலகிரி மாவட்டம், பந்தலூர், கூடலூர் பகுதி விவசாயிகள் கடந்த 40 ஆண்டு காலமாக அரசு ஆதீனம் புறம்போக்கு நிலங்களில் மிளகு, காபி போன்றவற்றை பயிர் சாகுபடி செய்கிறார்கள். இன்றைக்கும் 1982 ஆம் ஆண்டு தடை உத்தரவால் பட்டா கிடைக்கவில்லை. அவர்களுக்குப் பட்டா கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தாலுகா திம்மசத்திரம் கிராமத்தில், சுமார் 30 ஆண்டு காலமாக, 24 விவசாயிகள் 29 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்திருக்கிறார்கள். அதைக் கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் பெங்களூர் பேஸ் என்ற இண்டர்நேஷனல் கம்பெனிக்கு குத்தகைக்கு கொடுத்திருக்கிறார்கள். அப்பொழுதிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தி அந்த விவசாயிகளுக்கு நில ஒப்படைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அதைப் போல பழப் பண்ணையில் பணியாற்றும் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தியதற்கு நன்றி. 6 மாத காலம் ஊதியம் வழங்காத ஒரு சூழ்நிலை நீடிக்கிறது. உடனடியாக அந்த ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உழவர் சந்தைப் பணியாளர்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும். 1985 ஆம் ஆண்டு முதல் பல்வேறு திட்டப் பணிகளில் பணியாற்றிய தொழில்நுட்ப உதவியாளர்கள் 97 பேர், தொழில்நுட்பம் இல்லாதவர் 11 பேருக்குத் தமிழகத் தீர்ப்பாணையம் பணி நிரந்தரம் செய்ய ஆணை வழங்கியும், இன்று வரை அவர்களுக்குப் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. அவர்களுக்குப் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

வேளாண் பயிற்சிக்காகப் பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அது முழுமையாக விவசாயிகளுக்குச் சென்றடைகிறவகையில் அந்தப் பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு விவசாயிகள் உழுது வருகிற நன்செய் நிலங்களைக் கையகப்படுத்துகிற முயற்சிகள் களையப்பட வேண்டும்.

அதுபோல, நான் தொடர்ந்து வலியுறுத்துகிற கோரிக்கை தமிழகத்திலே வேளாண் பல்கலைக்கழகம் ஒன்றுதான் இருக்கிறது. வேளாண் பல்கலைக்கழகத்தை அதிகப்படுத்தி விவசாயிகளுக்கு உதவிடும்வகையில் உருவாக்க வேண்டும். அப்படித் தொடங்குகிற வேளாண் பல்கலைக்கழகத்தை சிவகங்கை போன்ற பகுதிகளிலே

தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரவு-செலவுத் திட்டத்தில் வேளாண்மை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரவு-செலவுத் திட்டத்திலும், மானியக் கோரிக்கையிலும் பேசுகின்றபோது, எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் எல்லாம் அதிலே இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டிப் பேசுகின்றபோது, அந்தப் பேச்சிலே குறுக்கிட்டு அரசுக்கு ஆதரவாகப் பேசுகின்ற சில உறுப்பினர்கள்கூட, தங்களுடைய பேச்சிலே அரசு நிர்வாகத்திலும், வரவு-செலவுத் திட்டத்திலும் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி இங்கே பேசியிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

நண்பகல் *12-00*

பிச்சைக்காரனுக்குப் பிச்சை இல்லை என்று சொன்ன மருமகளை, அப்படிச் சொல்வதற்கு உனக்கு என்ன அதிகாரம் என்று சொன்ன கொடுமைக்கார மாமியார், பிச்சைக்காரனைத் திரும்பவும் அழைத்து, நான் சொல்கிறேன், உனக்குப் பிச்சை இல்லை, போ என்று சொன்னதைப்போல, உங்களுக்கு ஏது அதிகாரம், உங்களுக்கு ஏது உரிமை, அந்த உரிமை முழுவதும் எங்களுக்குத்தான் என்பதுபோல சில உறுப்பினர்கள் இங்கே வரவு-செலவுத் திட்டத்திலே குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஜனநாயகம் இந்த அளவிற்கு வந்திருப்பதற்காக நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தமட்டிலும், வேளாண் துறை என்பது விவசாய உற்பத்திப் பொருட்களை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல. விவசாய உற்பத்திப் பொருட்களை வழங்குகின்ற விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும், அந்த விவசாயிகளுடைய வருவாய் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வேளாண் துறைக்கு அதிக முக்கியத்துவத்தை ஒவ்வோர் அரசும் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. விவசாயிகள்



உள்ளத்தில் புயல் இருந்தால் வயலில் வளம் இருக்காது என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், வயலில் இருக்கிற பசுமை விவசாயிகளின் உள்ளத்திலும் இருந்தால்தான், நாடு நன்றாக இருக்க முடியும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வேளாண்மைக்கு அதிக நிதி ஒதுக்கியிருப்பதாகவும், மொத்த விவசாய ஜனத்தொகையோடு ஒப்பிடும்போது தொகை குறைவாக இருக்கிறது என்பதைப் பற்றியும் இரு வேறு கருத்துகள் இங்கே விவாதிக்கப்பட்டிருக்கின்றன. ஒருவேளை விவசாயத்திற்குத் தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டாலும்கூட, அதை ஒரு பெரிய காரியமாகக் கருதி விட முடியாது. ஆண்டுதோறும் எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், முந்தைய ஆண்டைவிட அடுத்த ஆண்டு அந்தத் துறைக்கு அதிகமான தொகையை ஒதுக்கிக்கொண்டு வருவதை வரவு-செலவுத் திட்டத்திலே நாம் பார்க்க முடியும். எனவே, அந்த அடிப்படையில் இந்த ஆண்டும் கடந்த ஆண்டைவிட அதிகமாக நிதி ஒதுக்கியிருப்பது என்பதை ஒரு பெரிய காரியமாகக் கருத முடியாது.

கூட்டுறவு வங்கியைப் பொறுத்தமட்டிலும், வேளாண் துறையிலே விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு உகந்த விலை வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், மற்ற துறைகளை எடுத்துக்கொண்டால், உற்பத்தியாளர்கள், அந்தப் பொருட்களுடைய உற்பத்தியாளர்கள்தான் விலையை நிர்ணயம் செய்திருக்கிறார்கள், செய்து வருகிறார்கள். விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு மட்டும்தான் விவசாயிகளுக்கு அந்த உரிமை இல்லை. ஒன்று, விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான விலையை விவசாயி நிர்ணயம் செய்ய வேண்டும் அல்லது விவசாயிகள் நலனில் அக்கறை காட்டுகின்ற அரசு அந்த விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். இரண்டும் இல்லாமல், இடைத்தரகர்கள், வியாபாரிகள் விவசாயிகளுடைய உற்பத்திப் பொருட்களுக்கு விலையை நிர்ணயம் செய்தால், நியாயமான விலை நிச்சயமாகக் கிடைக்காது என்பதைக் கவனத்தில்கொண்டு, விவசாயிகள் அடங்கிய அந்தந்தப் பகுதிகளில்-- பகுதிக்கேற்றவாறு உற்பத்திச் செலவுகள் அதிகமாகி வருவது எல்லோருக்கும் தெரியும். எனவே, அந்தந்தப் பகுதிகளில்-- விவசாயிகளை அங்கத்தினர்களாக, உறுப்பினர்களாகக்கொண்டு,

பிரதிநிதிகளாகக்கொண்டு விலை நிர்ணயக் குழுவை அரசே முன்வந்து நியமித்து, நல்லதொரு விலை, நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, பெரும் தொழில்களுக்கெல்லாம் transformer-களை அமைத்து உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. 15, 20 ஆண்டு காலமாக விவசாயிகள் மின் இணைப்பிற்காகக் காத்திருக்கிறார்கள். எனவே, அதனைக் கவனத்தில்கொண்டு, விவசாயிகள் நலனில் அக்கறை காட்ட வேண்டுமென்று சொன்னால், உடனடியாக அவர்களுக்கு, அதிகபட்சம் விண்ணப்பித்த 6 மாத காலத்திற்குள் மின் இணைப்பு வழங்கிட வேண்டுமென்று இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், generator-கள், oil engine-கள் மூலமாக விவசாயிகள் விவசாயத்தைச் செய்து நிச்சயமாக இலாபத்தை ஈட்ட முடியாது என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். ஓநாயை வேட்டைக்காரனிடமிருந்து பாதுகாப்பது அல்ல நீதி, ஓநாய் ஆட்டுக் குட்டிகளைக் கொன்றுவிடாமல் பாதுகாப்பதுதான் நீதி என்று சொல்வார்கள். எனவே, அந்த அடிப்படையில் மற்ற தொழில்கள் வளர்ந்து வருகிற சூழலில், விவசாயத்தை மட்டும் நசுக்கி விடாமல், விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கையில் இன்னும் நலிவடைந்து போய்விடாமல் பாதுகாப்பது என்பது ஓர் அரசினுடைய கடமை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்கப்படும்போது அதற்கு 4 சதவிகித வட்டி வசூலிக்கப்படும் என்ற ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கின்றார்கள். கடந்த 2006-2007 ஆம் ஆண்டு இதே கருத்தை, கேரளாவிலே 4 சதவிகிதம் வட்டியில் பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகின்றது, தமிழகத்திலேயும் அதை வழங்கவேண்டுமென்ற கருத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்தச் சபையிலே நாங்கள் பதிவு செய்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுவதை என்னுடைய கடமையாக நான் கருதுகின்றேன்.

அதேபோல, கூட்டுறவு வங்கிகளில் இருக்கின்ற விவசாயிகளில் அநேகமாக 20 சதவிகித விவசாயிகள்தான் பயிர்க் கடன் பெறுவதாக ஒரு கருத்து சொல்லப்பட்டு வருகின்றது. ஆனால், மொத்த



விவசாயிகளும், ஏறத்தாழ எல்லா விவசாயிகளும் கூட்டுறவு வங்கிகள்மூலமாகக் கடன் பெறுவதற்கும், இன்னும் சொல்லப் போனால், அவ்வாறு பெறுகின்ற அந்தப் பயிர்க் கடன் முறையை எளிதாக்கவும், எளிதாகக் கடன் பெறக்கூடிய வகையில் கூட்டுறவுச் சட்டங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, வேளாண் சார்ந்த தொழில்கள் கிராமங்களிலிருந்து வருகின்றது. அவை நலிவடைந்த நிலையில் இருந்து வருகின்றன. குறிப்பாக, எங்கள் மதுரை மாவட்டத்தில் தென்னை உற்பத்தி பாதிக்கப்பட்டு, அதிகமாக நோய் தாக்கப்பட்டு, விலை குறைந்து போய் மிக மோசமான நிலைக்கு போய்க்கொண்டிருக்கிறது. தென்னை மட்டையிலிருந்து நார் தயாரிப்பது, கயிறு உற்பத்தி போன்ற தொழில்களெல்லாம் அங்கே நலிவடைந்திருக்கின்றன. அந்தத் தொழிலுக்கும் உதவி செய்யவேண்டும். குறிப்பாக, வங்கிகளில் வாங்கிய கடன்களைக் கட்ட முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கடனைத் தள்ளுபடி செய்யவோ அல்லது குறைந்தபட்சம் வட்டியையாவது தள்ளுபடி செய்யவோ அரசு முன்வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பால் பண்ணைகள், ஆடு வளர்ப்புப் பண்ணைகளெல்லாம் அங்கே தொடங்கப்பட்டு வருகின்றன. தனியார் அவ்வாறு தொடங்குகின்ற வேளாண் சார்ந்த பால் பண்ணைகளுக்கு, ஆடு வளர்ப்புப் பண்ணைகளுக்கெல்லாம் மின்சாரக் கட்டணம், தொழில்களுக்கு, வர்த்தகத்திற்கு இருப்பதைப்போல அதிகமான அளவில் வசூலிக்கப்பட்டு வருகின்றது. அவற்றையெல்லாம் வீடுகளுக்குக் கட்டணம் வசூலிப்பதைப்போலக் குறைந்த அளவு கட்டணமாக வசூலித்து, அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒரு விளக்கம் சொல்லப்பட்டிருக்கின்றது. நான் நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, அதாவது 2007-2008 ஆம் ஆண்டு பயிர் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் நெல் 21.50 இலட்சம் எக்டேர் என்றும், அதேபோல சிறு தானியம் 12 இலட்சம் எக்டேர் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

2008-2009 ஆம் ஆண்டில் அதே இலக்கான, பயிர் சாகுபடி செய்யப்படும் நிலம், அதே 21.50 இலட்சம் எக்டேர் நெல்லுக்கு என்றும், சிறு தானியத்திற்கு 12 இலட்சம் எக்டேர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், கடந்த இரண்டு ஆண்டுகளில் இலவச நிலம் வழங்கும் திட்டத்திற்காக, தரிசு நிலத்தைப் பண்படுத்தி இலவசமாக வழங்குகின்ற நீங்கள், இந்த இரண்டாண்டுகளில் ஒரே அளவு நிலங்களில் பயிர் செய்ததாகக் குறிப்பிட்டிருக்கிறீர்களே, தரிசு நிலங்கள் பண்படுத்தப்பட்டு, இலவசமாக வழங்கப்படுகின்ற அந்த நிலங்களில் நெல் சாகுபடி இல்லையா அல்லது சிறு தானியம் சாகுபடி இல்லையா, எண்ணெய் வித்துக்கள் சாகுபடி இல்லையா என்பதை நான் மாண்புமிகு அமைச்சர்மூலமாக அவர்களுடைய பதிலில் அறிய விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, கரும்பு உற்பத்தி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தரிசு நிலம் வழங்குவதை, தனியாக வருவாய்த் துறையில் அதைப் பார்க்கின்றார்கள். வருவாய்த் துறை அமைச்சர் அதற்குப் பதிலளிப்பார். அதில் இது சேராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இளவரசன், one minute-ல் உரையை முடியுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** Time ஆகவில்லை,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Time ஆகவில்லையா?

**திரு. வீர. இளவரசன்:** 10 நிமிடங்களாவது கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடங்களில் இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது. பேசுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் துறையில் மூன்று அடுக்கு முறையை மாற்றிவிட்டு, இரண்டு அடுக்கு முறையை மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும் விவசாயிகளின் நலன் கருதி ஏற்படுத்தப் போவதாகக் கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். ஆனால் அந்த அறிவிப்பு இன்னும் செயல்படுத்தப்படவில்லை என்பதை நான்



இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். அதேபோல, விவசாயத் துறையைப் பொறுத்தவரையில், விவசாய முன்னேற்றத்திற்காகப் பல செயற்திட்டங்கள், பயிற்சிப் பாசறைகள், பயிற்சி முகாம்களெல்லாம் ஆங்காங்கே அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனாலுங்கூட, விவசாயிகள் எந்தவித முன்னேற்றத்தையும் அடைந்ததாகத் தெரியவில்லை. மாவட்ட அளவில் 1,575 பயிற்சி முகாம்கள் என்று சில பயிற்சி முகாம்களைப் பற்றி இங்கே பட்டியல் போட்டிருக்கின்றார்கள். ஆனால், எந்த அளவுக்கு விவசாயிகள் முன்னேறியிருக்கின்றார்கள் என்ற விவரம் நமக்கு நன்றாகத் தெரியவில்லை. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னார்கள், Jeep, car-ல் அதிகாரிகள் வருகின்றார்கள், அலுவலர்கள் வருகின்றார்கள், மக்களைச் சந்திக்கின்றார்கள். ஆனால், விவசாயிகளுக்கு எந்த நலனும் கிடைக்கவில்லை. அதிகாரிகளுக்கும், மக்களுக்கும், விவசாய மக்களுக்கும் இடையிலே உள்ள சுவர், திரை விலக்கப்படவேண்டுமென்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் மக்களுக்கும், விவசாயிகளுக்கும், அதிகாரிகளுக்கும் இடையிலே உள்ள சுவர் விலக்கப்பட்டால்தான், அந்த வேறுபாடு நீங்கினால்தான், நாட்டில் விவசாயிகள் முன்னேற முடியும், உற்பத்தியைப் பெருக்கமுடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-10

எல்லாவற்றிற்கும் மேலாக, விவசாயிகளுடைய துயரை நிரந்தரமாகத் துடைக்க வேண்டுமென்று சொன்னால், விவசாய உற்பத்திப் பொருள்கள் அதிகமாக இருக்கவேண்டுமென்று சொன்னால், இந்த நாட்டில், தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியை அதிகமாகப் பெருக்கி, வேறு எந்த மாநிலத்தவரும் நம்மை எதிர்நோக்கி இருக்கக்கூடிய ஒரு நிலைமையை நாம் உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஒரே வழி, நதிகள் இணைக்கப்படவேண்டும். தேசிய நதிகள் இணைக்கப்பட்டால்தான் அத்தகைய ஒரு வாய்ப்பு இந்த நாட்டில் உருவாகும் என்பதைச் சொல்லி, உலக வரலாற்றில், உலகத்தின். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

***திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் குடும்பத்திலே பிறந்த எனக்கு விவசாய மானியக்

கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்திருக்கின்ற, தியாகத்தின் திருவுருவமாம் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றியைச் சொல்லி, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

விவசாயம் என்பது இன்றைக்கு மனிதனுடைய உயிர் மூச்சு போன்றிருக்கிறது. ஒரு மனிதன் கால் இல்லாமல் வாழலாம். கை இல்லாமல் வாழலாம். கண்கூட இல்லாமல் வாழலாம். ஆனால், மூச்சு இல்லாமல் வாழமுடியாது என்பது நிதர்சனமான உண்மை. அதைப்போன்றுதான், இந்த அரசில் எந்தத் துறை இல்லை என்றாலும்கூட, விவசாயத் துறை இல்லை என்றால் அரசு இயங்க முடியாது என்பது நிதர்சனமான உண்மை. அதைப்போன்று மூச்சாக விளங்குகின்ற இந்த விவசாயத் துறையில் பேசுவதில் நான் உள்ளபடியே பெருமையடைகிறேன். விவசாயத் துறை என்று சொல்கின்றபோது அதற்குக் காரணகர்த்தாவாக இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களை நாம் எண்ணிப் பார்த்தாகவேண்டும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருக்கிறார்கள். என்ன சொன்னார்கள் என்று சொன்னால்,

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்'

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதே வள்ளுவப் பெருந்தகை இன்றைக்கு இருந்திருந்தால், 'உழுதுண்டு வீழ்வாரே வீழ்வார் மற்றவரைத் தொழுதுண்டு பின் செல்பவர்' என்று சொல்கின்ற அளவிற்கு விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றைக்கு, வேதனையோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை. விவசாயிகள் மட்டுமல்ல, உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது என்று சொல்வார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு விவசாயிகள் ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், என்ன காரணம் என்று சொல்கின்றபோது, இந்தத் துறை இயற்கையோடு பின்னிப் பிணைந்து இருக்கின்ற ஒரு துறை. அந்த இயற்கையினுடைய சீற்றங்களால், இயற்கையினுடைய மாற்றங்களால் இந்தத் துறை பல நேரங்களில் வீழ்ச்சியும் அடைந்திருக்கிறது, பல நேரங்களில் சிறப்பும் பெற்றிருக்கிறது.



ஆகவே, அந்தச் சிறப்படைந்திருக்கின்ற அல்லது வீழ்ச்சியடைகின்ற நிலைக்கு மாறாக இயற்கை நமக்கு ஒத்துழைப்பு கொடுக்குமேயானால், இந்தத் துறை சிறப்பு அடையும் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால், எல்லா அரசுகளும் இந்தத் துறையைப் பொறுத்த அளவில் பல்வேறு சலுகைகளை, வசதிகளை, வாய்ப்புகளைச் செய்து கொடுத்திருக்கின்றன என்பதிலே மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. இருந்தாலும், எந்தக் காரியத்தை எந்த நேரத்திலே யார் செய்து கொடுக்கிறார்கள் என்பதைத்தான் இன்றைக்கு நாம் எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

இங்கேகூட பட்டுக்கோட்டையார் அவர்கள் பாடினார்கள்,

"காடு விளைஞ்சென்ன மச்சான்
நமக்குக் கையும் காலும்தானே மிச்சம்"

என்று சொன்னார்கள். அதோடு மட்டும் அல்ல,

'காடு விளையட்டும் பொண்ணே
நமக்குக் காலமிருக்குது பின்னே'

என்று சொன்னார்கள். ஆனால், அதே பட்டுக்கோட்டையார் இன்றைக்கு இருந்திருந்தால் என்ன சொல்லியிருப்பார் என்றால், காடு விளைஞ்சென்ன மச்சான், கையும் காலும்தானே மிச்சம் என்று சொன்னவருக்கு காலம் வரும் பொண்ணே--எந்தக் காலம்— கலைஞரும், அன்னை சோனியா காந்தியினுடைய ஆட்சியும் வரும் கண்ணே, விவசாயிகளுடைய கவலை தீரும் பெண்ணே! (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்கின்ற அளவிற்கு இன்றைக்கு அந்தக் கவிஞர் பாடுகின்ற நிலையை நாம் எண்ணிப் பார்த்தாகவேண்டும்.

இப்போது விவசாயத் துறையை எடுத்துக்கொள்வோமேயானால் நான் விவசாயத் துறையினுடைய கருத்துகளை பார்க்கவேண்டுமென்பதற்காக, கருத்துகளைச் சேகரிக்க வேண்டுமென்பதற்காக, 2004-2005 ஆம் ஆண்டில் அல்லது 2005-2006 ஆம் ஆண்டில் இந்த விவசாயத் துறைக்குக் கடந்த கால ஆட்சியில் என்னவெல்லாம் செய்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்த்தேன். அதுவும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், 2005-2006 ஆம் ஆண்டுகளில் அந்த விவசாயத் துறையினுடைய அமைச்சர் அன்றைக்கு 2005 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் இதே அவையில் விவசாயத் துறை மானியக் கோரிக்கையில் அவர் பேசிய கருத்தையெல்லாம் உண்மையிலேயே படித்துப் பார்த்து, அங்கே இருக்கிற அவருடைய இயக்கத்தைச் சார்ந்திருக்கிற நண்பர் ஒருவரேகூட அவருக்கு ஒரு பட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். என்ன

என்று சொன்னால், பைந்தமிழ் வேந்தர் பாண்டுரங்கன் என்கிற பட்டத்தைக் கொடுக்க வேண்டுமென்று அன்றைக்கு சபாநாயகரிடத்திலே சொல்லி, அந்தச் சபாநாயகர் என்ன சொன்னாரோ தெரியவில்லை; ஒருவேளை நீங்கள் கொடுத்தாலே போதும் என்று கருதியிருக்கலாம். அப்படிப் பட்டம் கொடுப்பதற்குத் தகுதியில்லை என்று கருதினாரா? இல்லை ? பட்டம் கொடுப்பதற்குத் தகுதியில்லை என்று கருதி பாவேந்தன் என்கிற பட்டத்தை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்!

*பிற்பகல் 12-15*

நான் அந்தக் கருத்தையெல்லாம் படித்துப் பார்த்தேன். விவசாயத் துறையிலே என்ன செய்திருக்கிறார்கள் என்ற கருத்தைப் படித்துப் பார்க்கிறபொழுது, கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் அவர் ஆற்றிய உரையில் ஒரு 15 நிமிடங்கள்கூட விவசாயிகளைப் பற்றி, விவசாயிகளுடைய நலனைப் பற்றி, விவசாயிகளுடைய அக்கறையைப்பற்றிப் பேசியதாக எனக்குத் தெரியவில்லை. என்ன சொல்லியிருக்கிறார் என்றால், எவ்வளவு முடியுமோ, எவ்வளவு அவருக்கு ஆசை இருக்கிறதோ, அந்த அளவுக்கு அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்தவர்களை எல்லாம் வசை பாடிய செய்திகள் இங்கே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதைத்தான் சொன்னார்கள். எங்களுடைய மரியாதைக்குரிய தலைவர், மூத்தத் தலைவர் எஸ்.ஆர்.பி.-ஐப் பார்த்துச் சொன்னார்கள் இவர் டப்பா என்று சொன்னார்கள். அந்த டப்பா அடங்கிப் போச்சு அப்பா என்கின்ற வசனத்திலே அன்றைக்குப் பேசியிருக்கிறார்கள். அதேபோலத்தான், நம்முடைய இன்றைய முதலமைச்சரைக்கூட மிகக் கேவலமான முறையிலே பேசியிருக்கிற வரலாற்றை நான் சொல்லவில்லை. இங்கே புத்தகத்திலே பதிவாக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கருத்தை அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் எண்ணிப் பார்க்கிறேன். நான் இதுதான் முதன்முதலாக சட்டமன்றத்திலே வந்திருக்கிற காட்சி. கடந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை நான் நேரடியாகப் பார்க்கிற வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. அந்தப் புத்தகங்களில் படிக்கிற வாய்ப்பையும், இன்றைக்கு இந்தச் சட்டமன்றம் நடைபெறுகிற வாய்ப்பையும் நான் பார்க்கிறபொழுது, உள்ளபடியே ஜனநாயகக் காவலர்களாக மத்தியிலே அன்னை சோனியா காந்தியும், மாநிலத்திலே தலைவர் கலைஞர் அவர்களும் விளங்குகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு சான்று இருக்க முடியாது என்பதை என்னாலே சொல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)



ஏனென்று சொன்னால், நான் ஏதோ கருத்துக்காகச் சொல்லவில்லை. நீங்கள் எண்ணிப் பார்த்தாக வேண்டும். எங்களுடைய அன்றைய நிதி அமைச்சர் அவர்களைப் பார்த்து மிக மோசமான முறையிலே அவர்கள் இங்கே உரையாற்றி இருக்கிறார்கள். எண்ணிப் பாருங்கள். நினைத்திருந்தால், நேற்றையதினம் நீங்கள் வாக்கெடுப்பு நடத்தி இருக்கிறீர்கள். இந்த வாக்கெடுப்பு நடந்தபோது, இங்கே உரையாற்றி இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாங்கள் உரையாற்றி இருக்கிறோம். எந்த எதிர்க்கட்சித் தலைவரையோ அல்லது ஆளுங்கட்சித் தலைவரையோ வசை பாடி, தரம் குறைந்த வார்த்தையை நாங்கள் பயன்படுத்தியதில்லை. ஆனால், அன்றைக்கு அவர்கள் அந்த அளவுக்கு பேசியிருக்கிறார்கள் என்று சொன்னால், உண்மையான ஜனநாயகம் அன்றைக்கு இருந்திருக்கிறதா என்பதை என்னைப் போன்றவர்கள் எண்ணிப் பார்க்கிறபொழுது, நிச்சயமாக இல்லை என்பதைத்தான் என்னாலே உணர முடிகிறது. இதுதான் நிதர்சனமான உண்மை. ஆக, இன்றைக்கு ஜனநாயகம் என்பது யாரால் உருவாக்கப்பட்டிருக்கிறதோ, யாரால் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ, அவர்களாலே காப்பாற்றப்படுகிற ஒரு துறையாக இருந்திருக்கிறது. ஆக, விவசாயத் துறை இன்றைக்கு இவ்வளவு சீர்கேடு அடைந்ததற்குக் காரணம்--அந்த விவசாயத்தினுடைய அடிப்படைக் காரணங்களாக இருக்கிற, இந்த விவசாயிகளுக்கு ஆதாரமாக இருக்கக்கூடிய பொருளாதார உதவி செய்தாக வேண்டும்; நீர் வளத்தைப் பெருக்கியாக வேண்டும்; விவசாயிகளுக்கு வேண்டிய தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொடுத்தாக வேண்டும்; விவசாயிகளுக்கு வேண்டிய உரங்களை அரசு கொடுக்க வேண்டும் என்கிற மாபெரும் பொறுப்பு இருக்கிறது.

அன்பிற்குரிய நண்பர்களே! எண்ணிப் பாருங்கள். 1966-லே இந்திய தேசத்தினுடைய பிரதமராக அன்னை இந்திரா காந்தி அவர்கள் இருக்கிறபொழுது, இந்த நாட்டினுடைய நிலைமையை நாங்கள் எண்ணிப் பார்க்கிறபொழுது, இந்த நாட்டினுடைய பிரதம அமைச்சராக இருந்த லால்பகதூர் சாஸ்திரி காலத்திலேகூட, ஒரு நாள், வியாழக்கிழமை இரவு உணவு விடுதிகள் அத்தனையும் மூடப்பட வேண்டும். உணவு உற்பத்தியில் நாம் பின்னடைந்திருக்கிறோம் என்ற நிலை இருந்தது. அன்றைக்கு இந்திரா காந்தி அவர்கள் இந்த தேசத்தினுடைய பிரதமராகப் பொறுப்பேற்றபொழுது, உணவுத் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்பதற்கு யாரும் முன்வரவில்லை. ஆனால், தமிழகத்திலிருந்து ஒரு வேட்டி கட்டிய தமிழன்தான் சி. சுப்பிரமணியம் என்கிற அந்த

மகத்தான தலைவன்தான் இந்தியாவினுடைய உணவுத் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு மிகப் பெரிய (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சியைச் செய்திருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே இந்த மன்றத்திலே பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்படி என்றால் வெண்மைப் புரட்சி, நீலப் புரட்சி, பசுமைப் புரட்சி என்கிற புரட்சிகளை உருவாக்கி, அன்றைக்குப் போட்ட வித்துதான் இன்றைக்குத் தமிழகத்திலே வளர்ந்து 100 கோடி மெட்ரிக் டன் அளவுக்கு தானிய உற்பத்தி செய்திருக்கிறோம் என்று சொன்னால் அன்றைக்கு எங்களுடைய அருமைத் தலைவன் சி. சுப்பிரமணியம் அவர்கள் போட்ட வித்து இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. அதிலே பல்வேறு மாறுபட்ட கருத்துகள் வந்திருக்கலாம். அது வளர வளர, வளர்ச்சி வளர வளர, விஞ்ஞானங்கள் வளர வளர மாறுபட்ட கருத்துகள் வந்திருக்கலாம். ஆனால், நிதர்சனமான உண்மை, அன்னை இந்திரா காந்தி அவர்கள் எடுத்த பெருமுயற்சியால்தான் இன்றைக்கு தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவிலேயே உணவு தானியங்களின் அளவில் உணவு உற்பத்தி தன்னிறைவு பெறுகிற நிலையைப் பார்த்தோம். அதிலே பல்வேறு தொழில்நுட்பங்களை உருவாக்கினார்கள். பசுமைப் புரட்சி என்கின்ற பெயரால் பல்வேறு தொழில்நுட்பங்களை உருவாக்கி, விவசாயத்திலே பல்வேறு புதுமைகளைப் புகுத்தி, இன்றைக்கு விவசாயம் மிகச் சிறந்த முன்னணியில் இருக்கின்ற ஒரு நாடாக இந்திய நாடு மிளிர்ந்து கொண்டு இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்த்தாக வேண்டும். அந்த நேரத்திலேதான் அன்றைக்குத் தமிழகத்தின் முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்களும் அந்தச் சீரிய திட்டத்தைத் தமிழகத்திலே முறைப்படுத்திய காரணத்தினால், தமிழகத்திலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களும் இன்றைக்கு நல்ல நிலையோடு வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை என்னாலே சுட்டிக்காட்ட முடியும்.

*பிற்பகல் 12-20*

மாண்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்னும் நான் சொல்கிறேன். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு எல்லோரும் மார் தட்டிக்கொண்டிருக்கிறோம். விவசாயத் துறையிலே புரட்சியைச் செய்துகொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், உண்மையான புரட்சித் தலைவன் யார் என்று சொன்னால், உண்மையான புரட்சியை உருவாக்கியது யார் என்று சொன்னால்,



உண்மையான புரட்சித் தலைவி யார் என்று சொன்னால், அன்னை இந்திரா காந்தி அவர்கள்தான் உண்மையான புரட்சித் தலைவி என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அப்படிப்பட்ட புரட்சிகளை இந்த மண்ணிலே உருவாக்கி, இன்றைக்கு உணவு உற்பத்தியிலே தன்னிறைவைப் பெற்று இருக்கிற ஒரு நாடாக, தன்னிறைவைப் பெற்று இருக்கிற ஒரு மாநிலமாகத் திகழ்ந்துகொண்டு இருக்கிறது.

இன்றைக்கு விவசாயிகளை எண்ணிப் பார்க்கிறோம். கடந்த முறை நான் சொன்னதைப்போல--இறுதியாக அவர்களது காலத்திலே சொல்லப்பட்டிருக்கிற, அந்த மானியக் கோரிக்கையிலே சொன்னார்கள். ஒரு இரண்டு கோடி ரூபாய் அல்லது மூன்று கோடி ரூபாயை அவர்கள் தள்ளுபடி செய்துவிட்டு, மிகப் பெரிய ஆர்ப்பாட்டமாகப் பேசி இருக்கிறார்கள். எனக்கு அதிலே மாறுபட்ட கருத்து கிடையாது. அவர்களுடைய தலைவர்களைப்பற்றி, அவர் சார்ந்து இருக்கிற இயக்கத்தைப்பற்றி, அந்தத் தலைமையைப் பற்றி யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் வாழ்த்தட்டும், பாராட்டட்டும். அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால் மாறுபட்ட எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர்களோடு பண்பு உள்ளத்தோடு பழகி இருக்க வேண்டும், சொல்லி இருக்க வேண்டும் அல்லது சொல்லாமல் இருந்து இருக்க வேண்டும். அதுதான் அரசியல் நாகரிகம் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட கருத்து அன்றைக்கு இல்லை என்றாலும்கூட, இன்றைக்கு அது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் இன்றைக்குப் பெருந்தன்மையோடு சொல்வேன். மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தளவில் நிதி ஆதாரங்கள் பெருக்கப்பட வேண்டும். விவசாயிகள் 'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பதுபோல, கடன் பட்டு இருக்கிற இந்தச் சமுதாயத்திற்கு நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் ரூ. 7,000 கோடியைத் தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். இன்னும் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 7,000 கோடி ரூபாய் மட்டும் அல்ல, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு இந்த 7,000 கோடி ரூபாய்க்கும் வட்டியையும் இந்த அரசாங்கம் கொடுக்கிறது. ஆகவே விவசாயிகளுக்கு இந்த 7,000 கோடி ரூபாயைவிட இன்னும் அதிகமாக இந்த அரசாங்கம் கொடுத்து இருக்கிற காரணத்தால்தான், தமிழக முதல்வர் அவர்கள் கொடுத்து இருக்கிற காரணத்தால்தான், இன்றைக்கு விவசாயிகள் ஓரளவு தலை நிமிர்ந்து நிற்கின்ற ஒரு சூழ்நிலையை என்னாலே பார்க்க முடிகிறது.

(மேசையைத் தட்டும் ஒலி) இதை இல்லை என்று யாராலும் மறுக்க முடியாது. ஆகவே, மாண்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இந்த விவசாயிகளுக்குப் பொருளாதாரம் மட்டும் அல்ல, இன்றைக்கு 1,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் சொல்லி இருக்கிறது. ஆகவே ஒரு விவசாயி என்கிற முறையில் இந்த அரசாங்கத்தை மனமார நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதோடு மட்டுமல்ல நண்பர்களே, இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், உரத்திற்கு மானியம் கொடுத்திருக்கிறார்கள், இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நீர் ஆதாரங்களை இந்த அரசாங்கம் பெருக்க முயற்சியெடுத்திருக்கிறது. குறிப்பாக இந்த அரசாங்கம் பெரு முயற்சி எடுத்ததனால்தான், இந்தியாவில் இருக்கிற கங்கையும், காவிரியும் இணைக்கப்பட வேண்டும் என்று சொன்னால், பல்வேறு தடைகள் இருப்பதை நம்மாலே பார்க்க முடிகிறது. கர்நாடகாவில் இருந்து நாம் தண்ணீரைப் பெற முடியவில்லை என்கிற நிலை இருக்கிறது. இன்னும் ஒன்றை நான் இந்த மாமன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரிப் பிரச்சினை தீருமா என்றால், தீருவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவு, அங்கே பெரியாறு அணைப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்றால், சாத்தியக்கூறு குறைவு. ஏன் என்று சொன்னால், இந்தியாவில் இருக்கிற மக்கள், குறிப்பாக, மற்ற மாநில மக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று சொன்னால், தமிழகத்திலே அரசியல் கட்சிகளில் ஒற்றைக் கருத்து இல்லை. ஒரே மேடையில் நிற்பதற்குத் தகுதி இல்லை என்கிற காரணத்தால், நான் பகிரங்கமாகச் சொல்கிறேன்; இந்தியத் தமிழ் மண்ணிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் ஒரே மேடையில் ஏறி நின்று குரல் கொடுத்துப் பாருங்கள். இந்தப் பிரச்சினை தீருமா, தீராதா என்பதை எண்ணிப் பாருங்கள். இன்னும் நான் சொல்கிறேன். நேருக்கு நேர் நின்று வணக்கம் சொல்லியாவது பாருங்கள்; உலக மக்களுக்கு, தமிழக மக்களுக்கு நிச்சயமாக ஒரு நம்பிக்கை ஏற்படும். வெளி மாநிலத்தில் இருக்கிற மக்கள் நல்ல வரவேற்பு கொடுப்பார்கள்; பயப்படுவார்கள் நம்மைப் பார்த்து. அந்த நிலை இல்லாத காரணத்தால்தான், இன்றைக்கு நம்முடைய பல்வேறு காரியங்களை நாம் இழந்துகொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையை எண்ணிப் பார்த்தாக வேண்டும். நீர் ஆதாரங்களை இப்போது இந்த அரசாங்கம் அதிகமாகப் பெருக்கிக்கொண்டிருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. பாண்டுரங்கன்.

**திரு. மா. தண்டபாணி:** ஆகவே, மாண்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. மா. தண்டபாணி:** இந்த அரசாங்கம் விவசாயக் கடனை எல்லாம் தள்ளுபடி செய்து இருப்பதை மனதாரப் பாராட்டுகின்ற நேரத்தில், விவசாயத்திற்கு மட்டும் வாங்கிய கடன் இல்லாமல், விவசாயத் தொழிலாளிகளும் வாங்கி இருக்கிற கடனை அருள்கூர்ந்து நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லி, பண்ணை சாராக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவில் மாண்பிற்குரிய நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் . . .

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தண்டபாணி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) No. no. திரு. பாண்டுரங்கன். (குறுக்கீடு) திரு. தண்டபாணி, உட்காருங்கள். ரொம்ப அதிகமான டைம் எடுத்திருக்கிறீர்கள். உட்காருங்கள், போதும்.

**திரு. மா. தண்டபாணி:** என்னுடைய தொகுதியில் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக இந்த மன்றத்தில் முதல் கோரிக்கையாக, குடகனாறு அணை அழகாபுரியில் கட்டப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். 4-5-1957-ல் குடகனாறு அணையைக் கட்ட வேண்டுமென்று முதல் கோரிக்கை வைத்தார்கள். கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அருள்கூர்ந்து நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன் என்பதை விட அவருடைய பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். அங்கு உடைந்திருக்கிற அந்தப் பாலத்தை, அந்த அணையைச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்து, என்னுடைய தொகுதிக்கு ஒரு கல்லூரியும், என்னுடைய தொகுதியிலே நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள், சூரியகாந்தி விதைகளை எல்லாம் வெள்ளக்கோயிலுக்குச் சென்று,

200 கி.மீ. அப்பால் சென்று விற்பனை செய்ய வேண்டிய அவல நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் ஒரு விற்பனை மையம் அமைத்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பாண்டுரங்கன்.

***திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளரும், 6 மொழிகள் பேசக்கூடிய ஆற்றல் மிக்கவருமான எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு எனது பணிவான வணக்கங்களைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 2 ஆண்டு கால ஆட்சியில் ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும், வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலும் தொடர்ச்சியாகப் பல்வேறு அறிவிப்புகளை அறிவிக்கின்றீர்கள். எங்கள் அம்மா அவர்கள் சொன்னதைப்போல, அறிவிப்புக்கு ஓராண்டு, ஆய்வுக்கு ஓராண்டு, இடத்தைத் தேர்வு செய்ய ஓராண்டு. நிதியைப் பெறும் முயற்சிக்கு ஓராண்டு, அந்த நிதியை ஒதுக்கீடு செய்ய ஓராண்டு என்று காலத்தை நீட்டித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால், உங்கள் ஆட்சியின் ஆயுட்காலத்திற்குள் எந்தத் திட்டமும் நிறைவேறப் போவதில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. இந்த அரசு அறிவிப்புகளின் அரசாக இருக்கிறதே தவிர, எதையும் சிந்தித்துச் செயல்படும் அரசாக இல்லை. அரசாணை வெளியிடுவதால் மட்டுமே விவசாயிகளுக்கு . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்த நேரத்தையும் உங்களுக்கு சேர்த்துக் கொடுக்கச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ நாங்கள் ஒவ்வோராண்டாக எடுத்துக்கொண்டு, வாழ்நாள் முழுவதும் எந்தத் திட்டத்தையும் தீட்ட முடியாது என்றார்கள். நாங்களாவது ஒவ்வோராண்டாக எடுத்துக்கொள்கிறோம். ஆனால், நீங்கள் ஆட்சியை விட்டுப் போகின்ற நேரத்தில் ஒரு முடிவும் எடுக்காமல், ஆயிரக்கணக்கான கோப்புகளைத் திருப்பியனுப்பினீர்களே, அது எந்த வகையிலே நியாயம்?



**திரு. கு. பாண்டுரங்கன்:** நேரம் இல்லாத காரணத்தினாலே பிறகு அதற்குப் பதில் சொல்கிறேன். வாழ்வும் தராது, வளமும் தராது, ஏற்றமும் தராது. (குறுக்கீடு) தீட்டப்படும் திட்டம் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் காலக்கெடு முன்கூட்டியே உறுதி செய்து அறிவிக்கப்படவில்லையென்றால், கானல் நீரில் மீன் பிடிக்கும் கதையாகிவிடும். கற்பனையில் தேன் குடிக்கும் கதையாகிவிடும். என்றைக்கும் விவசாயிகள் விரும்புவது திட்டங்களின் அறிவிப்பை மட்டுமல்ல; அந்தத் திட்டங்கள் நிறைவேறி, கனிந்து, கைமேல் பலன் கொடுக்கும் காலத்தையும் எதிர்பார்த்துத்தான் அவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். அப்படி அறுதியிட்டு, உறுதியாக, காலக்கெடு குறிப்பிடாமல், அறிவிப்போடு தேங்கிக் கிடக்கும் சில திட்டங்களை, நேரத்தின் அருமை கருதி, ஒன்றிரண்டை நான் பட்டியலிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகரங்களிலே 3 வணிக மையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்தீர்களே; அந்த மையங்கள் அனைத்தும் ஐயங்கள்தானா? 2006-2007-ல் கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் வெங்காயத்திற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழத்திற்கும், ஒசூரில் தக்காளிக்கும், தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைப் பழத்திற்கும் குளிர்பதன வசதியுடன் கூடிய கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு, 2006-2007 ஆம் ஆண்டில் செயல்படும் என்று அறிவித்தீர்களே, இந்த அறிவிப்புகள் எல்லாம் கட்டுக் கதையா? இல்லை காற்றினிலே கரைந்து போய்விட்ட கற்பூரமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இந்தப் பக்கமும் கொஞ்சம் பார்த்துப் பேசுங்கள். பேரவைத் தலைவரைத்தான் பார்த்துப் பேச வேண்டும். இந்தப் பக்கமும் பார்த்துப் பேசினால் நன்றாக இருக்கும் . . .

**திரு. கு. பாண்டுரங்கன்:** அடுத்து நீங்கள் பேசப் போகிறீர்கள். உங்கள் பதிலுரையில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இல்லை, தவறான தகவலை இந்த அவைக்குத் தரக்கூடாது என்பதற்காகத்தான். டெர்மினல் மார்க்கெட், சென்னை, கோவை, மதுரை ஆகிய 3 மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னோம். அதற்காக

அரசாங்கத்தினுடைய ஆணைகள் எல்லாம் வெளியிடப்பட்டு, தேசிய அளவில் டெண்டர் கோரப்பட்டது. யாரும் முன்வரவில்லை. இப்போது இந்த அரசால் உலக அளவில் ஒப்பந்தம் 22-3-2008 அன்று கோரப்பட்டிருக்கின்றது. இதன்படி ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும் தேதி 13-5-2008. (குறுக்கீடு) அறிவித்ததுதான். இருங்கள், இருங்கள். கொஞ்சம் அவசரப்படாதீர்கள்.

பிற்பகல் 12-30

அடுத்து இன்னும் என்ன சொல்லப் போகிறீர்கள்? வெங்காயத்தைப் பற்றிச் சொன்னீர்கள். வெங்காயத்திற்கும் அதைப்போல இத்திட்டத்திற்குத் 8-10-2007 அன்று தேசிய அளவில் நாளிதழ்களில் திட்டத்திற்குத் தனியாரிடமிருந்து விருப்பக் கோரிக்கை கோரப்பட்டு, 29-10-2007 அன்று அந்த விருப்பக் கோரிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கையும் திறக்கப்பட்டன. அதிலே வேளாண்மை விற்பனை வாரியத்துடன் சம பங்குதாரர்களாக இணைந்து செயல்படுத்துவதற்கான வரைவுக் கூட்டு ஒப்பந்தம் 6-12-2007 அன்று ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, இப்போது நிதித் துறையிலே கோப்பு நிலுவையிலே இருக்கிறது.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, மானியக் கோரிக்கையிலே 2006-2007 ஆம் ஆண்டே துவங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில் தென்னைக்கென ஒரு வணிக வளாகம் துவங்கப்பட்டு செயல்படும் என்று 2006-2007-ல் அறிவித்தாரே, அந்த அறிவிப்பு என்னவாயிற்று?

12½ கோடி ரூபாய் செலவில், 50 உழவர் சந்தைகள் 2007-2008-ல் துவங்கப்பட்டு செயல்படும் என்று அறிவித்தீர்களே, ஒன்றைத் தவிர, சந்தையில் காணாமல் போன குழந்தையைப் போல, உங்கள் உழவர் சந்தை அறிவிப்பும் காணாமல் போய்விட்டதா? (மேசையைத் தட்டும் ஒலி)

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியிலே வேளாண்மை அறிவியல் மையம் அமைக்கப்படும் என்று அபாரமாய் அறிவித்தீர்களே, அந்த அறிவிப்பு பாலைவனத்தில் ஊற்றிய பாலாகிவிட்டதா? (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலில், குழந்தை பிறந்து நன்றாக வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதைச் சொல்லப் போகிறேன். அப்பொழுது நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** ஒரேயொரு குழந்தைதான். 49 குழந்தைகள் காணாமல் போயிற்று. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும், சேலம் மாவட்டம் அஸ்தம்பட்டியிலே திறந்திருக்கிறார்கள். மற்ற 49 உழவர் சந்தைகள் காணாமல் போயிற்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** உழவர் சந்தை. . . (குறுக்கீடு)

**திரு. கு. பாண்டுரங்கன்:** நீங்கள் பதிலுரையிலே சொல்லுங்கள். நான் பேசி முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இருங்கள். நீங்கள் வேளாண்மைத் துறை அமைச்சராகவும் இருந்தீர்கள். நீங்கள் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த காலத்தில் 28 உழவர் சந்தைகளை மூடினீர்களே, அது எதைக் குறிப்பிடுகிறது? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கு. பாண்டுரங்கன்:** அங்கே நுகர்வோர்கள் வரவில்லை. காய்கறி வாங்குவோர் வரவில்லை.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த 28 உழவர் சந்தைகளும் புதுப்பிக்கப்பட்டு, செயல்படுகின்றன. இப்பொழுது நுகர்வோர் வருகிறார்கள். (குறுக்கீடு) உங்கள் ஆட்சிக் காலத்தில் ஏன் வரவில்லை? என்ன பயம்?

**திரு. கு. பாண்டுரங்கன்:** அவை நட்டத்திலே இயங்கின. ஆஸ்திரேலியா, இஸ்ரேல், சீனா, ஐரோப்பா போன்ற வெளிநாடுகளுக்கு விவசாயிகளை அழைத்துச் சென்று, நவீன விவசாயத் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிக்கப் போவதாக

அறிவித்தீர்களே, அதன்படி வெளிநாடுகளுக்குச் சென்று வந்த விவசாயிகள் யார் என்ற பட்டியலை வெளியிட முடியுமா?

சென்னையில் ஏற்றுமதிக்குத் தேவையான விமானப் போக்குவரத்து மற்றும் துறைமுக வசதி இருப்பதால், தென்னிந்திய அளவில் தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சிக்காக மண்டல தோட்டக்கலை வாரியம் ஒன்றை சென்னையில் அமைக்க மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பி அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படும் எனக் காகிதத்தில் அறிவித்தது, காதிலே பூச் சுற்றிய கதைதானா? (மேசையைத் தட்டும் ஒலி)

2006-2007-ல் தமிழ்நாட்டில் மைய அரசின் நிதி உதவியுடன் ஒரு தேசிய உயிரியல் தொழில்நுட்ப நிறுவனம் அமைக்கப்படும் என்று அறிவித்தீர்களே, அதுவும் அலைகடல்மேல் போட்ட கோலம்தானா? (மேசையைத் தட்டும் ஒலி)

மதுராந்தகம் சர்க்கரை ஆலை தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டது. அருணாச்சலா சர்க்கரை ஆலை, மதுரா சர்க்கரை ஆலை மீண்டும் துவங்க அரசு ஆலோசித்து வருகிறது என்று ஆடம்பரமாக அறிவித்தீர்களே, இரண்டு ஆண்டுகள் ஆகியும் ஆலோசனை தொடர்ந்து நடக்கிறதா? இல்லை, நடக்கவே முடியாமல் நொண்டுகின்றதா? (மேசையைத் தட்டும் ஒலி)

2006-2007-ல் ஆத்தூர், சங்கராபுரம், திருக்கோவிலூர், அரியலூர், ஈரோடு, அம்பாசமுத்திரம், கும்மிடிப்பூண்டி, பட்டுக்கோட்டை, மொடக்குறிச்சி ஆகிய பகுதிகளில் புதிய சர்க்கரை ஆலைகள் தொடங்க, தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றனவே, அவற்றைப் பரிசீலித்துப் புதிய சர்க்கரை ஆலைகள் துவங்க அனுமதி அளிக்கப்பட்டதா அல்லது மறுக்கப்பட்டதா அல்லது வழக்கம்போல மறக்கப்பட்டதா? (மேசையைத் தட்டும் ஒலி)

தேயிலை விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் ரூ. 89 கோடி மதிப்பீட்டில் ஒரு பெருந்திட்டத்தினை மைய அரசின் தேயிலை வாரிய நிதியுதவியுடன் இந்த அரசு செயல்படுத்தும் என்று 2007-2008-ல் அறிவித்தீர்களே, செயல்படுத்தப்பட்டதா? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள் கொஞ்சம் நேரம். காட்டாமணக்கு எண்ணெய்...





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நன்றாகத்தான் பேசுகிறார். ஒரு படத்திலே வருவதுபோல, "மாயண்ணன் வந்திருக்காக, மாப்பிள்ளை மொக்கைச்சாமி வந்திருக்காக, மற்றும் நம்ம உறவினர்களெல்லாம் வந்திருக்காக, வாம்மா மின்னல்" என்கிற மாதிரி இருக்கிறது. (சிரிப்பு)

பிற்பகல் 12-35

**திரு. கு. பாண்டுரங்கன்:** இந்த நக்கல் பேச்சுக்கு எங்களாலே நக்கலாகப் பதில் சொல்லமுடியும். நேரம் இல்லை. காட்டாமணக்கு எண்ணெய். கருத்துக்குக் கருத்து மோதுங்கள்; தைரியம் இருந்தால். ஒத்தைக்குப் பத்து ஆட்களை நாங்கள் சமாளிப்போம்; காட்டாமணக்கு எண்ணெய் பிழியும் ஆலை சிவா டிஸ்டில்லரீஸ் நிறுவனம் மற்றும் மோகன் புரூவரீஸ் நிறுவனம் 2006-ல் வணிக ரீதியாக உற்பத்தியைத் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது எனத் தெரிவித்தீர்களே, இந்த ஆலைகள் உற்பத்தியைத் துவங்கியுள்ளனவா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

2006-2007-ல் விவசாய மேம்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்து, அந்தக் குழுவில் விவசாயிகளுடன் விஞ்ஞானிகள் மற்றும் துறை சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் உறுப்பினர்களாக இருந்து செயல்படுவார்கள் என்றும், அந்தக் குழு வேளாண்மைத் துறையில் உள்ள பல்வேறு பிரச்சினைகளை அவ்வப்போது ஆய்வு செய்து, உடனடி நிவாரண நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரை செய்யும் என்றும், உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களுக்கு உரிய நியாய விலையை அந்த மேம்பாட்டுக் குழுவே நிர்ணயம் செய்யும் என்றும் அடுக்கடுக்காக அறிவிப்புச் செய்தீர்கள்; அரசாணையும் வெளியிட்டீர்கள்; துணைக் குழுவும் அமைத்தீர்கள்; ஆனால் இந்தக் குழு இதுநாள் வரை எத்தனை முறை கூடியது? ஒரு முறை கூடியதாக எனக்குத் தெரிகிறது. எத்தனை பரிந்துரைகள் செய்யப்பட்டன? ஏற்கப்பட்டவை எத்தனை? செயல்படுத்தப்பட்டவை எத்தனை என்று அணிவகுத்து நிற்கும் விவசாயிகளின் அடுக்கடுக்கான கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? கிராமத்திலே ஒரு பாட்டு--முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டி வச்சேன், இரண்டு குளம். பாழ்,

ஒன்றிலே தண்ணீரே இல்லை என்றான். அந்த நாட்டுப்புறப் பாடல்தான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

இந்த நிதியாண்டில் 22 முக்கிய உழவர் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றைப் பாதுகாக்க குளிர்பதன வசதி செய்யப்படும் என்று அறிவித்தீர்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களைப் போலவே இந்தத் திட்டமும் குளிர்பதனக் கிடங்கில்தான் குடியிருக்குமா? அறிவிப்பு மட்டுமே எங்கள் சாதனை என்ற பழியிருக்குமா? இல்லை; இந்தத் திட்டம் செயல் வடிவம் பெற ஏதேனும் வழி இருக்குமா?

பயிர்க் காப்பீட்டுத் திட்டம். விவசாயிகளுக்கும் பயிர்க் காப்பீடு செய்துகொள்ள 50 சதவீதம் மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் 2006-2007-ல் 5 இலட்சம் விவசாயிகள் பயன்பெற ரூ. 8 கோடியும், 2007-2008-ல் 10 இலட்சம் விவசாயிகள் பயன்பெற ரூ. 15 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 2006-2007-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூ. 1.16 கோடி மட்டுமே மானியமாக வழங்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட தொகை ரூ.8 கோடி. ஆனால், வழங்கப்பட்டுள்ள தொகை ரூ. 1.16 கோடி மட்டுமே. 2007-2008-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூ. 8.97 கோடி மட்டுமே மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 23 கோடி. இரண்டு ஆண்டுகளில் மானியமாக வழங்கப்பட்டுள்ள தொகை ரூ.10.13 கோடி. கடந்த இரண்டு ஆண்டுகளில் பயிர்க் காப்பீடு செய்துள்ள விவசாயிகள் எத்தனை பேர்? பயனடைந்த விவசாயிகள் எத்தனை பேர்? நிவாரணமாகப் பெற்ற தொகை எவ்வளவு? கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியே பெருமளவு செலவழிக்கப்படாமல் உள்ள நிலையில், இந்த ஆண்டு 25 இலட்சம் விவசாயிகள் பயன்பெற ரூ. 40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டிலாவது ஒதுக்கீடு செய்யப்பட்ட முழுத் தொகையையும் இந்த அரசு செலவு செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

தலைப்புச் செய்திகள். கூட்டுறவுக் கடன் சங்கத்திலே, கடன்பெறுகின்ற அனைவருக்குமே எந்தவிதமான நிபந்தனையுமின்றி 4 சதவிகித வட்டியில் கடன் வழங்கப்படவேண்டும். பருவ மழையிலே சிக்கி, பருவம் தவறிய கோடை மழையிலே சிக்கி, வாழ்க்கைப்



போராட்டத்தில் வாடிக் கிடக்கும் விவசாயிகளின் கோரிக்கைக்கேற்ப, நெல்லுக்கான கொள்முதல் விலையைக் குவிண்டாலுக்கு ஆயிரமாக அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும் என்று சொல்லி, கழுவுகின்ற மீனில் நழுவுகின்ற மீனாகத் தப்பித்துகொள்ளப் பார்க்கும் நீங்கள் ஆட்டிப் படைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி மத்திய அரசை வலியுறுத்தி, உடனடியாக இந்த விலையைப் பெற்றுத் தர முடியாதா? மத்திய அரசாங்கம் அதற்குப் பணியாதா அல்லது உங்களுக்கு அதில் ஆர்வம் கிடையாதா? மத்திய அரசே அதை மறுத்தால்கூட மாநில அரசு அதை வழங்கக்கூடாதா? எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே என்கிற ஏழைகளின் சோகப் பாட்டு உங்கள் காதுகளிலே விழவில்லையா? வெள்ளப் பாதிப்பு குறித்து வெள்ளை அறிக்கை அளிக்க வேண்டும். அதே நேரத்திலே, இந்த வெள்ளப் பாதிப்பு நிவாரண உதவி கிடைக்காமல் தூத்துக்குடி மாவட்டத்திலே தேரடி முத்து என்பவர் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார், விஷமருந்தி. இது தினமணி பத்திரிகையிலே வந்திருக்கின்றது. கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். (மணியடிக்கப்பெற்றது) குறுக்கீடுகள் இருந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்தது. டைம் நிறையக் கொடுத்தாகிவிட்டது.

**திரு. கு. பாண்டுரங்கன்:** குறுக்கீடுகள் இருந்தன. கடைசியாக உரையின் முடிவிற்கு நான் வந்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்து நிமிடங்கள்தான் உங்களுக்கு. பதின்மூன்று நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) No. no.

**திரு. கு. பாண்டுரங்கன்:** வடகிழக்குப் பருவ மழையால் பாதிக்கப்பட்ட நிலங்கள், நீங்கள் குறிப்பிட்டது, 1 இலட்சத்து ஐம்பத்து எட்டு ஆயிரத்து நூற்று அறுபத்து மூன்று எக்டேர். வழங்கப்படவேண்டிய நிதி உதவி என்று நீங்களே சொன்னது ரூ. 59.76 கோடி. ஆனால், விடுவிக்கப்பட்ட தொகை வெறும் ரூ. 57.106 கோடி. வழங்கப்படாமல் உள்ள தொகை ரூ. 3.26 கோடி. 3 மாதத்திற்குமேலாகியும்கூட, அந்த யானைப் பசிக்கு சோளப் பொரி என்பதுபோல இன்னும் அந்த ரூ. 3.26 கோடி வழங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தால்தான், இன்றைக்கு அந்த விவசாயிகளின் குறை தீர்க்காத அரசாக இந்த அரசு இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், உட்காருங்கள். போதும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 12-40*

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்பது பேர் பேசி இருக்கின்றார்கள். அவர்களுடைய பேச்சுகளுக்கு என்னுடைய பதிலில் உரிய விடை கிடைக்கும் என்று நான் நம்புகின்றேன். முன்னதாக இந்த அவையில் என்னுடைய உணர்வை வெளிப்படுத்துகின்ற கடமைப்பாட்டுக்கு உடையவன். இறைவனுக்கே மறுப்பு சொல்லும் இங்கர்சாலாக, ஏதென்ஸ் நகர் சாக்ரட்டீசாய், ஏனென்று கேட்பதிலே வைர நெஞ்சம் படைத்த வால்டையராய், தந்தை பெரியாரின் சீடனாய், பேரறிஞர் அண்ணாவின் தம்பியாய், தமிழ் மொழியைக் காக்க இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, தமிழ் மக்களுக்காகப் பல களங்களைக் கண்டவராய், (மேசையைத் தட்டும் ஒலி) பகுத்தறிவுக் கொள்கையில் வைர நெஞ்சம் படைத்தவராய், தமிழர்களின் நெஞ்சம் நிறைந்த தலைவராய் வாழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, பேரறிஞர் அண்ணாவின் தம்பியும், மாண்புமிகு தமிழக நிதி அமைச்சருமான அண்ணன் இனமானப் பேராசிரியர் அவர்களால் 20-3-2008 ஆம் நாள் இம்மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை நாடும், ஏடும், மக்களும் பாராட்டுகின்ற நிதிநிலை அறிக்கையாக அமைந்துள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த அவையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பேற்றபோது, "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று அவர்கள் சொன்னதைப்போல, 5-வது முறையாகத் தமிழகத்திலே முதலமைச்சராகப் பொறுப்பேற்ற எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த கொள்கை வழி நின்று, "தமிழர்களே! தமிழர்களே! என்னைக் கடலிலே தூக்கி எறிந்தாலும், உங்களுக்குப் பயன்படும் கட்டுமரமாக நான் மிதப்பேன்" என்று (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் வாழும் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களை மீண்டும் நான் வணங்குகின்றேன்.



சோழ சாம்ராஜ்யத்தின் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்த தஞ்சைத் தரணியில், திருக்குவளை என்ற கிராமத்தில், வேளாண் தொழிலில் ஈடுபாடும், இசைத் திறனும் கொண்ட மிகப் பிற்படுத்தப்பட்ட குடும்பத்தில் பிறந்து, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையை ஏற்று, 14 வயதிலேயே தமிழ்க் கொடியைக் கையிலே ஏந்தி, (மேசையைத் தட்டும் ஒலி) "தமிழ் வாழ்க, இந்தி ஆதிக்கம் ஒழிக" என்று முழக்கமிட்டு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் வாரிசாக வாழ்ந்துகொண்டு இருப்பவர் நம்முடைய முதலமைச்சர் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்ட நீதிக் கட்சிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, தமிழர்களை சுயமரியாதைக்காரர்களாக உருவாக்குவதற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் இன்றும் எந்த அடக்குமுறைகளுக்கும், எதிர்ப்புகளுக்கும் அஞ்சாமல், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட, மலைவாழ் மக்கள், சிறுபான்மை சமூகத்தினர் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலனில் அக்கறைகொண்டு, கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு வழங்கி, சமூக நீதி வழங்கிய, தமிழர்களின் சமூக நீதிக் காவலர் மாண்புமிகு முதலமைச்சர் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-45*

தமிழக நிதி அமைச்சர் அண்ணன் இனமானப் பேராசிரியர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவின் பாசத்தையும், அன்பையும், பாராட்டுதலையும் பெற்றவர். இளமைத் துடிப்போடு இன்றும் சுய மரியாதை வீரனாக, நமது திராவிட இயக்கத்தின் மூத்த தலைவனாக, கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தந்தையாக இருப்பவர், தமிழக அரசின் 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மக்கள் பாராட்டும் வகையில் இந்த மாமன்றத்தில் வைத்து, அந்த அறிக்கையில் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த துறைகள், நீர்ப்பாசன, பொதுப் பணித் துறை, கால்நடை, மீன்வளம் போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்கான அறிவிப்புகள் 13 பக்கங்களில் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு வேளண்மைக்கு முக்கியத்துவம் அளித்து 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 4,792 கோடி ஒதுக்கியதற்காக வேளாண்மைத் துறை அமைச்சர் என்ற முறையில் என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள

விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக விவசாயிகள் சார்பாக நம் தமிழக முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுதலை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு 158 பக்கங்களில் அச்சடிக்கப்பட்டு, மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. விவரமாக, வேளாண்மை, அதன் சார்ந்த துறைகள், என்னென்ன பணிகள் மேற்கொண்டிருக்கின்றன என்று விளக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. நீங்கள் எல்லாம் படித்துப் பார்த்திருப்பீர்கள். தமிழகத்தில் 1967 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் கழக ஆட்சி அமைந்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்குப் பின்னர், அவர் உருவாக்கித் தந்த கழக ஆட்சியை 1969 முதல் 1971 வரை, 1971 முதல் 1976 ஆம் ஆண்டு வரை, 1989 முதல் 1991 ஆம் ஆண்டு வரை, 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலும், ஐந்தாவது முறையாக இப்பொழுது 2006-லும், தமிழினத் தலைவர் முதலமைச்சராக இருக்கின்ற காலங்கள்தான் விவசாயிகளுக்குப் பொற்காலம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இவர் ஆட்சிக் காலத்திலேதான் புஞ்சை நிலங்களுக்கு அடிப்படை நில வரியை இரத்துச் செய்தார். 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைத்து உபரியாகக் கிடைத்த 70,730 ஏக்கர் நிலத்தை 51 ஆயிரம் ஏழை விவசாயிகளுக்கு வழங்கினார். (மேசையைத் தட்டும் ஒலி)

1989 ஆம் ஆண்டு தேர்தலில் தேசிய முன்னணி கூட்டணி அமைத்து, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது, மத்தியில் தேசிய முன்னணி ஆட்சி அமைந்தால், விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் ரூபாய் 10,000 வரை கடன் பெற்று திருப்பிச் செலுத்தாமல் இருந்தால், அந்தத் தொகையை இரத்துச் செய்வோம் என்று சொன்னதற்கேற்ப, தேர்தல் முடிவிற்குப் பின்னால், எந்த மாநிலத்திலும் செய்யாத நிலையில், தமிழகத்தில் 1989 ஆம் ஆண்டுக்கு முன்பு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளிலே கடன் பெற்று திருப்பிச் செலுத்தாமல் இருந்த கடன் தொகை ஒவ்வொருவருக்கும் 10 ஆயிரம் ரூபாய் வரை தள்ளுபடி செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் 209 கோடியே 43 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி) 1990 ஆம் ஆண்டு தமிழக விவசாயிகளின் நலனில் அக்கறைகொண்ட



நம்முடைய முதலமைச்சர்தான் விவசாய பம்ப்செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) இன்றும் அது தொடர்கிறது.

பிற்பகல் 12-50

1996 ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராகத் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற காலத்தில், விவசாயிகளுக்கு எண்ணற்ற சலுகைகள் வழங்கப்பட்டதோடு, விவசாயிகளும், நுகர்வோரும், பயன்படக்கூடிய வகையில் 1999-2000 ஆம் ஆண்டு, ஒரே ஆண்டில் 103 உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு விலையைத் தாங்களே நிர்ணயிக்கின்ற வகையிலும், நுகர்வோருக்கும் குறைந்த விலையில் புத்தம் புதிய காய்கறிகளும், பழங்களும் கிடைக்கும் வகையிலும் உழவர் சந்தைகள் தோற்றுவிக்கப்பட்டன. இந்தச் சிறப்பான உழவர் சந்தைகளை கடந்த ஆட்சிக் காலத்திலே மூடுவதற்கு முயற்சி செய்தாலும், விவசாயிகளும், நுகர்வோர்களும் அரசின் உதவி இல்லாமலேயே பல உழவர் சந்தைகள் செயல்படக் காரணமாக இருந்தார்கள். இப்போது இந்த அரசு பொறுப்பேற்றதும் உழவர் சந்தைகள் பொலிவு பெறவும், மூடப்பட்ட 28 உழவர் சந்தைகளை மீண்டும் திறக்கவும் 46 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு, அந்த உழவர் சந்தைகள் செயல்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. ஒரு நாளைக்கு 15 டன் காய்கறி, பழங்கள் வரக்கூடிய உழவர் சந்தைகளைத் தேர்ந்தெடுத்து அதிலே 22 உழவர் சந்தைகளைத் தேர்ந்தெடுத்து, அந்த உழவர் சந்தைகளில் இந்த ஆண்டு குளிர்பதனக் கிடங்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2000 ஆம் ஆண்டில் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் என அறிவித்து, இதில் விவசாயத் தொழிலாளர்கள் ரூ.100 கட்டணமாகச் செலுத்தி, 7,32,130 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்தார்கள். 2001-ல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்து, நான்கு ஆண்டு காலம், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூக நலப் பாதுகாப்புத் திட்டம்பற்றிக் கவனிக்காமல் இருந்துவிட்டு, தமிழக முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம் என 2005 ஆம் ஆண்டு பெயரை மாற்றி, ஆறே மாதத்தில் 3,25,786 பேருக்கு 87 கோடியே 39 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, நான்கு ஆண்டு காலம்

அதைப்பற்றிக் கவலைப்படாமல், 2005-லே மட்டும்—ஏதோ ஒருவகையிலே கடைசி நேரத்திலாவது கவலைப்பட்டார்கள் என்று நாம் சந்தோஷப்படத்தான் வேண்டும். ஆனால், அப்படி வழங்கப்பட்ட அந்தத் தொகை—தேர்தல் நேரம்—எப்படியெல்லாம் வழங்கப்பட்டது என்று எல்லோருக்கும் தெரியும். நான் குற்றமாகச் சொல்லவில்லை. எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய நம்முடைய நண்பர்களும் அதை அறிவார்கள்.

அதைப்போல, மத்திய அரசாங்கத்திடம், அப்போது 2005 ஆம் ஆண்டு பெய்த மழைக்கு நாங்கள் நிறையப் பணம் வாங்கிக் கொடுத்தோம், நீங்கள் கொடுக்கவில்லை என்றார்கள். 2005 ஆம் ஆண்டு பெய்த பெருமழையில் தமிழகத்திலே சேதாரம் ஏற்பட்டது உண்மை. அப்போது மத்திய அரசாங்கத்தில் நீங்கள் 13,684 கோடி ரூபாய் தொகை நீங்கள் கேட்டீர்கள்—மத்திய அரசு அப்போது உங்களுக்கு வழங்கிய தொகை--ரூ.1,523.40 கோடி தொகை வழங்கப்பட்டது. இந்தத் தொகையைப் பாதித்தவர்களுக்கும், பாதிக்காதவர்களுக்கும், வேண்டியவர்களுக்கும் ரூ.2,000, ரூ.3,000, ரூ.5,000, ரூ.10,000 என அப்போது வெள்ளச் சேதப் பாதுகாப்பு என்று வழங்கப்பட்டது. உங்களுடைய பெருந்தன்மை; சேலம் மாவட்டத்திலே மழையினாலே எதுவும் பாதிக்கப்படவில்லை. சொல்லப் போனால், நானும் விவசாயி; அவர்களுக்கெல்லாம் தெரியும். ஆகவே, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் என்று எனக்குக்கூட 15 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு cheque அனுப்பினார்கள். நான் அதைத் திருப்பியனுப்பி விட்டேன். ஆகவே, நீங்கள் வெள்ளத்தினாலே பாதிக்கப்பட்ட தொகை என்று வழங்கியது எப்படியெல்லாம் செலவிடப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், உண்மையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதைத்தான் என்னுடைய குற்றச்சாட்டாக அல்ல; இந்தப் பேரவையினுடைய கவனத்திற்கு நான் இங்கே கொண்டு வர விரும்புகிறேன்.

பிற்பகல் 12-55

2006 ஆம் ஆண்டு ஐந்தாவது முறையாகத் தமிழகத்திலே முதலமைச்சராகத் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்று, மீண்டும் "தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டம்" என்று கொண்டு வந்து, அறிவிக்கப்பட்டு, அதிலே 1,66,44,495 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள். இதிலே சேர்க்கின்றபோதுகூட, அ.தி.மு.க. ஆட்சிக்



காலத்தில் சேர்த்த உறுப்பினர்களையும் சேர்த்திருக்கிறோம். அவர்களை ஒதுக்கிவிடவில்லை, நீக்கிவிடவில்லை. அந்த உறுப்பினர்களையும் எடுத்துக்கொண்டு, புதிதாகவும் உறுப்பினர்களைச் சேர்த்து, இந்தளவிற்கு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, 1,36,210 பயனாளிகளுக்கு ரூ.124,14,00,000/- உதவித் தொகையாக வழங்கிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி; கலைஞர் அவர்கள் வழங்கினார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2008-2009 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கவில்லை என்றெல்லாம் பேசப்பட்டது. நிதிநிலை அறிக்கையில் ரூ.152 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது, கருணையுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்குக் காட்டுகின்ற கருணையாகும்.

"காணி நிலம் வேண்டும் பராசக்தி
காணி நிலம் வேண்டும்"

என பாரதி பாடினான். அந்தப் பாடலுக்கேற்பதான், தரிசு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு வழங்குவதாகத் தேர்தலிலே அறிவித்து, நம்முடைய முதலமைச்சர் இதுவரைக்கும், இந்த இரண்டாண்டு காலத்தில் 1,51,267 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு 1,78,711 ஏக்கர் தரிசு நிலங்களை வழங்கியது மட்டுமல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலங்களைச் சீர்திருத்தம் செய்து, தண்ணீர் வசதி செய்து, மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து, அதிலே தோட்டக்கலைப் பயிர் செய்யலாமா அல்லது வேறு பயிர் செய்யலாமா, மண்ணிற்கு ஏற்றவகையில் என்ன பயிர் செய்யலாமோ, அதைச் செய்து கொடுத்து, அதை உரியவர்களிடத்திலே ஒப்படைத்து, இன்றைக்கு அந்த நிலம் பெற்றவர்களெல்லாம் மகிழ்ச்சியிலே இருக்கின்றார்கள்.

தி.மு.க. ஆட்சியிலே, 10% சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்பிற்கு ரூ.1,000 என்றும், மேலும், சர்க்கரைக் கட்டுமானம், 0.1% சர்க்கரைக் கட்டுமானத்திற்கு ரூ.9 வீதம் சேர்த்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல; விவசாயிகள் நிலத்தில் வெட்டப்படும் கரும்பை, ஆலைக்கு எடுத்துச் செல்லுகின்ற வண்டி வாடகை முழுவதையும் ஆலைகளே ஏற்கவேண்டுமென்று அறிவித்ததும் தி.மு.க. ஆட்சியில்தானே தவிர, அ.தி.மு.க. ஆட்சியிலே அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆட்சியில், 2001 முதல் 2005 ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டு காலத்தில் மாநில அரசு பரிந்துரைகள் எதையும் அறிவிக்கவில்லை. 2006 ஆம் ஆண்டு இறுதியில், 9% சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்பிற்கு ரூ.1,014 என அறிவித்து, கடந்த அரசு அதனைச் செயல்படுத்தவில்லை.

பிற்பகல் 1-00

2006 ஆம் ஆண்டில் மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்த பின்னர்தான் மாநில அரசின் பரிந்துரைகளையும் சேர்த்து இப்போது கரும்பு விவசாயிகளுக்குப் பணம் தரப்பட்டு வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2006 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலின்போது தலைவர் கலைஞர் அவர்கள், தமிழக மக்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் நாங்கள் என்னென்ன திட்டங்களைச் செய்வோம் என்று தேர்தல் அறிக்கை வெளியிட்டார்கள். அந்தத் தேர்தல் அறிக்கை மக்கள் மத்தியில் 'தேர்தல் கதாநாயகனாகக்' கருதப்பட்டது. அந்தத் தேர்தல் அறிக்கையை நிறைவேற்ற முடியாது; வாக்குகளைப் பெறுவதற்காக அறிவிக்கிறார்கள்; செயல்படுத்த முடியாது என்று இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் பேசியதை இந்த நாடு அறியும். முன்பு ஆட்சியிலே இருந்து, இப்போது எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் அப்படிச் சொல்லியிருந்தாலுங்கூட, ஆட்சிக்கு வந்ததும் தலைவர் கலைஞர் அவர்கள் பதவிப் பிரமாணம் ஏற்ற அதே மேடையில் மூன்று கோப்புகளைக் கொண்டு வரச் செய்தார்.

கூட்டுறவுச் சங்கங்களிலே விவசாயிகள் பெற்றிருக்கின்ற கடன் எவ்வளவு? சத்துணவில் வாரத்தில் ஒரு முட்டை போடப்படுகிறது. இரண்டு முட்டைகள் போட வேண்டும். அந்தக் கோப்பைக் கொண்டு வாருங்கள். ஏழையெளியவர்கள் உணவு விலையேற்றத்தாலே பாதிக்கப்படக்கூடாது; குறைந்த விலையில் அரிசி வழங்கப்பட வேண்டுமென்று அறிவித்ததற்கேற்ப, அரிசி வழங்கப்படுவதற்கான அந்தக் கோப்பைக் கொண்டு வாருங்கள் என்று சொல்லி, ஆளுநர் பதவிப் பிரமாணம் முதலமைச்சருக்கு செய்து வைத்து, மற்ற அமைச்சர்களுக்கெல்லாம் செய்து வைத்துவிட்டு, அவரை வழியனுப்பிவிட்டு, அதே மேடையிலே உட்கார்ந்து, விவசாயிகள் வாங்கியிருந்த ரூ. 7,000 கோடி கடனை இரத்துச் செய்தவர் நம்முடைய முதலமைச்சர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)



அதைப்போல, வாரத்திலே இரண்டு முட்டைகள் போடவும் என்று அதே மேடையிலே உத்தரவிட்டு, அதுவும் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை மாதம் 15 ஆம் தேதி முதல் வழங்கவேண்டும், அந்த நாளை, காமராஜர் பிறந்த நாளை, 'கல்வி வளர்ச்சி நாளாகக்' கொண்டாட வேண்டுமென்று அறிவித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்றும் அதே மேடையில் அறிவித்து இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது. சொன்னதைச் செய்யக்கூடிய தலைவர் எங்கள் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களை ஏமாற்ற வேண்டிய அவசியம் இல்லை. ஆட்சிக்காக ஒரு கட்சி என்றால், ஏதாவது ஒன்று சொல்லி ஏமாற்றலாம். ஆனால், இந்த இயக்கம், எங்கள் தலைவர் ஆட்சிக்காக அல்ல; இந்த மக்களுக்காக, தந்தை பெரியார் வழியில் நின்று பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்த கொள்கையை ஏற்று, இன்றைக்கு அந்தக் கொள்கையை நம்முடைய தமிழர்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை உருவானால் தமிழன் சுயமரியாதைக்காரனாக இருப்பான் என்பதற்காக உழைப்பதற்காக இருக்கின்ற இயக்கம் இந்த இயக்கம். ஆகவேதான், சொன்னதைச் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தலைவர் அவர்கள் இன்றைக்கு ஆட்சி நடத்துகின்றார்.

கூட்டுறவுச் சங்கங்களிலே வட்டி 9 சதவிகிதமாக இருந்ததை அனைவரும் அறிவோம். மத்திய நிதி அமைச்சர் சேலத்திற்கு வருகை தந்தபோது என்னிடத்திலே சொன்னார்கள். இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடியவர் நம்முடைய முதலமைச்சர். இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கக்கூடிய கடன்களுக்கு, பயிர்க் கடன்களுக்கு 9 சதவிகிதமாக வட்டி இருக்கிறது. அதை 7 சதவிகிதமாகக் குறைத்தால், மற்ற மாநிலங்கள் பின்பற்ற நாம் வலியுறுத்த இயலும், முதலமைச்சரிடத்திலே சொல்லுங்கள் என்று நம்முடைய மத்திய நிதி அமைச்சர் என்னிடத்திலே சொன்னார். இங்கு நான் சென்னைக்கு வந்த நேரத்திலே அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. முதலமைச்சரிடத்திலே நான் இதை எடுத்துச் சொன்னேன். கொஞ்சங்கூட கிஞ்சித்தும் யோசிக்காமல்,—9 சதவிகிதத்திற்குப் பதிலாக 7 சதவிகித வட்டிதான் இனி வசூலிக்கப்படவேண்டுமென்று முடிவு செய்தார். குறிப்பிட்ட காலத்திலே கடனைத் திருப்பிச் செலுத்தினால் 5 சதவிகித வட்டி என்றும் அறிவித்து, இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பிற்பகல் 1-05

இந்த நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் வாங்கக்கூடிய கடனுக்கு 4 சதவீதம் வட்டி. இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லை. ஆனால் தமிழ்நாட்டிலேதான் இந்த 4 சதவீத வட்டியை விவசாயிகளுக்கு வழங்கி, விவசாயத் தொழிலில் ஈடுபடக்கூடிய வேளாண் பெருமக்கள் மகிழ்ச்சியடையக்கூடிய காரியத்தைச் செய்திருக்கின்ற நம்முடைய முதலமைச்சர்தான் விவசாயிகளுடைய பாதுகாவலர் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படித் தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, மழைக் காலங்களில் பெருவெள்ளத்தால், பெரும் சூறாவளிக் காற்றால் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் அடைந்தால், நஷ்ட ஈடும், வறட்சிக் காலங்களிலே விவசாயிக்குப் பாதிப்பு ஏற்பட்டால், பயிருக்குப் பாதிப்பு ஏற்பட்டால், கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனுக்கு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி, குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக, மத்திய காலக் கடனை நீண்ட காலக் கடனாக மாற்றி, உடனுக்குடன் விவசாயிகள் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

உதாரணமாக, 2002 முதல் 2005 ஆம் ஆண்டு காலங்களில், ஆந்திர மாநிலத்தில் விவசாயிகள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் அந்த மாநிலங்களிலே தற்கொலை செய்துகொண்ட பட்டியலை நாம் பத்திரிகைகளில் எல்லாம் பார்த்திருக்கின்றோம். 2002 முதல் 2005 ஆம் ஆண்டு வரை ஆந்திராவில் 1,297 விவசாயிகளும், கர்நாடகாவில் 1,131 விவசாயிகளும், மகாராஷ்டிராவில் 3,715 விவசாயிகளும், கேரளாவில் 378 விவசாயிகளும் தற்கொலை செய்து கொண்டார்கள். தொடர் கதையாக அந்த மாநிலங்களிலே இருக்கிறது. இந்த நிலை தமிழகத்திலே இல்லாதிருப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர்தான் காரணம் என்று நான் நெஞ்சை நிமிர்த்திச் சொல்ல முடியும். இங்கும் ஒரு 19 பேர் இறந்தார்கள். 2002, 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளில் 19 பேர் வறட்சிக் கொடுமை, விவசாய பாதிப்பினால், தற்கொலை செய்து கொண்டார்கள், எலிக் கறி தின்றார்கள் என்றெல்லாம் நாம் பார்த்தோம். அப்பொழுது (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். நாம் பார்த்தோம். அப்படி செத்துப் போன 19 விவசாயிகளுக்கும் ஒரு உதவித் தொகைகூட வழங்கவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மற்ற மாநிலங்களையெல்லாம் இங்கே உதாரணம் காட்டி, விவசாயிகள் வறுமையின் காரணமாக வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் தற்கொலை செய்துகொண்டார்கள் என்ற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பட்டியலிட்டார்கள். ஆனால், தமிழகத்தில் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் எந்தச் சாவும், விவசாயிகள் வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் தற்கொலை என்ற நிலையில் இல்லை என்பதை நான் அவருக்குத் தெளிவாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சிவபுண்ணியம்! சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவர்களது ஆட்சிக் காலத்திலே கடன் சுமையால் தற்கொலை இல்லை என்று சொன்னார்கள். அது முற்றிலும் தவறானது. எனக்குக் கடிதம் எழுதி, முதலமைச்சருக்குக் கடிதம் எழுதி, என்னுடைய தொகுதியில் பானையக்கோட்டை சண்முகம் என்பவர் தற்கொலை செய்துகொண்டார் என்பது உறுதி செய்யப்பட்ட அந்தக் கடிதம் இந்த அவையிலேயே மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையிலேயே, உங்களுடைய முன்னாள் முதலமைச்சர் கையிலேயே ஒப்படைக்கப்பட்டது. இந்த அவையிலேயே விவாதிக்கப்பட்ட ஒன்று. அதை இல்லையென்று மறுப்பது எந்தவகையிலும் நியாயமல்ல; சென்ற முறை அந்தத் தற்கொலைகள் அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றது உண்மை.

பிற்பகல் 1-10

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் அதை மறுத்து, அந்தச் சாவு, வறுமையால் விவசாயிகள் வாங்கிய கடனைக் கட்டமுடியாமல் நிகழவில்லை; அவர் இயற்கையாக மரணமடைந்துள்ளார் என்று அன்றைக்கு மறுத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. கடன் கொடுமையின் காரணத்தினால்தான் நான் தற்கொலை செய்துகொள்கிறேன்; என்னுடைய குடும்பத்தை, என்னுடைய மனைவியை, என்னுடைய மகளைப் பாதுகாக்க வேண்டுமென்று, உங்கள் முதலமைச்சரிடத்திலே அந்தக் கடிதத்தைக் கொடுத்தார். திரும்ப வேண்டுமானால் இந்தச் சபையிலேயே அந்தக் கடிதத்தின் நகலை நான் ஒப்படைக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இறந்த அந்த 19 விவசாயிகளுக்கும் இப்பொழுது ஆட்சிக்கு வந்த பிறகு, 2006-லே தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகுதான், ஒரு குடும்பத்திற்குத் தலா ரூ.50,000 வீதம் ரூ.9 இலட்சத்து 50 ஆயிரம் (மேசையைத் தட்டும் ஒலி)—2006 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர்தான், அப்படி இறந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தமிழகத்தில் பெய்த பெருமழையால் பாதிப்பிற்குள்ளான நிலங்கள் ஒரு இலட்சத்து 58 ஆயிரத்து 24 எக்டேர் ஆகும். இதில், நெல், தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்பட்டுப் பாதிக்கப்பட்டது 3 இலட்சத்து 60 ஆயிரத்து 394 விவசாயிகள். இதுவரை ரூ.56 கோடியே 50 இலட்சம்



வழங்கப்பட்டுள்ளது என்று நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. "பங்குனியில் மழை பெய்தால் பலனெல்லாம் சேதம்" என்பது நம்முடைய கிராமங்களிலே சொல்கின்ற பழமொழி. அந்தப் பழமொழிக்கேற்ப இப்பொழுது பங்குனி மாதத்தில், மார்ச் மாதத்தில் பெய்த பெருமழையால், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, இராமநாதபுரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் பெருமளவில் விவசாயப் பயிர்கள் சேதமடைந்து, பாதிக்கப்பட்ட நிலங்கள் 3 இலட்சத்து 48 ஆயிரத்து 165 எக்டேரில், 2 இலட்சத்து 51 ஆயிரத்து 819 எக்டேர் பயிர் வகைகளும், 48 ஆயிரத்து 802 எக்டேர் நெல் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களும் அடங்கும்.

நடுவண் அரசின் இயற்கை இடர்ப்பாடு நிவாரண நிதிக்கான வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, ஒரு எக்டேர் நெல் பயிருக்கு ரூ.4,000/- என்பதற்குப் பதிலாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், அதைப்போல நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும், நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் தென்மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்து, விவசாயிகளுடைய எண்ணங்களை இங்கு வந்து அவர்கள் எடுத்துச் சொன்னதற்கிணங்க, மத்திய வழிகாட்டுதலின்படி ஒரு எக்டேர் நெற்பயிருக்கு ரூ.4,000/- தான் வழங்கவேண்டும் என்பதற்குப் பதிலாக, ரூ.7,500/-ஐ அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு வழங்கியிருக்கிறது. இதற்காக 100 கோடி ரூபாயை மத்திய அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்காமல், உடனடி நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துவிட்டு மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கின்றார். அது வந்ததா, இல்லையா என்பது வேறு; வரும்; ஆனால், வருகின்ற வரை, பாதிப்பிற்காளானவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதற்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

வேளாண்மைக் கொள்கையில் உற்பத்தியாகும் வேளாண் விளை பொருளில் 30 சதவிகிதம் வீணாவதைத் தடுக்க உணவு பதப்படுத்துதலை ஒரு சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக மதிப்புக் கூட்டவும், 7 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாக உயர்த்திட உலக வணிகத்தில் வேளாண் பொருட்கள் மற்றும் வேளாண்மைப் பங்குகளைத் தொழில் ரீதியாக அதிக அளவில் உயர்த்தவும், உற்பத்தி

செய்யப்படும் பொருட்களைப் பதப்படுத்தவும், இந்த அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அதைப்போல, வேளாண் தொடர்புடைய தொழிற்சாலைத் தொகுப்புகளை ஒருங்கிணைப்பதால்; விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு இதனால் விலை உத்தரவாதம் கிடைப்பதுடன், தொழில் முனைவோர்களுக்கு உரிய இலாபம் கிடைக்கும் என்பதால் வேளாண் தொழில் கொள்கை வகுக்கப்பட்டது. வேளாண் தொழில்கள் தொடங்க முன்வந்தால், தொழிற்சாலைகள் அமைக்கப்படும்போது எப்படி மின்சாரக் கட்டணத்திலே சலுகை; நிலம் கொடுப்பதிலே சலுகை; வருமான வரி—Income Tax, அதாவது Commercial Tax-லே சலுகை; எப்படி பல்வேறு சலுகைகளைக் கொடுத்து ஊக்குவிக்கிறோமோ, அந்தத் தொழில்களுக்கு எப்படியெல்லாம் சலுகைகள் வழங்கப்படுகின்றனவோ, அதேபோல விவசாயத்தைச் சார்ந்த தொழில் தொடங்கினால், இந்தச் சலுகையெல்லாம் வழங்கப்படும் என்று இந்தக் கொள்கையிலே இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-15*

மறுசீரமைப்புபற்றி இங்கேச் சொன்னார்கள், என்னவோ அவசரத்திலே நாங்கள் செய்துவிட்டதைப்போல அவசரத்திலே அல்ல; வேளாண்மைத் துறையில், அவ்வப்போது கண்டறியப்படும் வேளாண் தொழில்நுட்பங்கள் விரைவில் விவசாயிகளைச் சென்றடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு, நடைமுறையில் இருந்த மூன்றடுக்கு நிருவாக அமைப்பை இரண்டடுக்கு நிருவாக அமைப்பாக மாற்றி, மறுசீரமைப்பு செய்யப்பட்டது. இதன்படி, வேளாண்மை மற்றும் அதன் சகோதரத் துறைகளான, தோட்டக்கலை, விதைச் சான்றளிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் தொழில்நுட்பங்கள் அனைத்தும் ஒன்றிய அளவில் ஒரே இடத்தில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் அரசு ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படாமலும், நியமனத்திற்குத் தடைச் சட்டம் கொண்டு வந்தும், தேவையான பணியாளர்களை நியமிக்காமலும், ஓய்வுபெற்றதால் ஏற்படும் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமலும் நிருவாகம் செயலிழந்திருந்த நிலையில், 2006 ஆம் ஆண்டு கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில் வேளாண்மைத் துறையில் மட்டும் விதைச் சான்றுத் துறை இயக்குநர் பதவி ஒன்றும், வேளாண்மை மற்றும்





தோட்டக்கலை துறைகளில் 72 இணை இயக்குநர்களுக்கும், 183 துணை இயக்குநர்களுக்கும், 834 உதவி இயக்குநர்களுக்கும், 8 துணை இயக்குநர்களுக்கும், 39 ஆட்சி அலுவலர்களுக்கும், 9 விற்பனைக் குழுச் செயலாளர்களுக்கும், 512 துணை வேளாண்மை அலுவலர்களுக்கும் 512 உதவி விதை அலுவலர்களுக்கும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், பல ஆண்டுகளாகப் பதவி உயர்வு அளிக்கப்படாத 148 ஆய்வக உதவியாளர்களுக்கு உதவி வேளாண்மை அலுவலர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. வேளாண்மைப் பொறியியல் துறையில் 3 தலைமைப் பொறியாளர்களும், 14 கண்காணிப்புப் பொறியாளர்களும், 34 செயற்பொறியாளர்களும், 73 உதவி செயற்பொறியாளர்களும், 54 உதவிப் பொறியாளர்களும், 399 இளநிலைப் பொறியாளர்களும் பதவி உயர்வில் நியமனம் செய்யப்பட்டனர். இந்தக் கழக ஆட்சியில் வேளாண்மைத் துறையில் மொத்தம் 2,877 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு இந்த இரண்டாண்டு காலத்தில் எடுத்த நடவடிக்கைகளின் காரணத்தினால் பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்றடுக்கு முறை இரண்டடுக்கு முறையாக மறுசீரமைக்கப்பட்டபோது, வட்ட அளவில் இருந்த வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் வட்டார அளவில் கொண்டு வரப்பட்டதால், 378 பணியிடங்களாக இருந்த வேளாண்மை உதவி இயக்குநர், தோட்டக்கலை உதவி இயக்குநர் பணியிடங்கள் 887 பணியிடங்களாக உயர்த்தப்பட்டபோது, 509 வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி தோட்டக்கலை அலுவலர் பணியிடங்கள், இயக்குநர்களாக நிலை உயர்த்தப்பட்டன. மேலும் 512 வேளாண்மை அலுவலர் பணியிடங்கள், உதவி விதை அலுவலர்களாகவும், 512 விதை அலுவலர் பணியிடங்கள், துணை வேளாண்மை அலுவலர் பணியிடங்களாகவும் தரம் உயர்த்தப்பட்டன. இவ்வாறு பதவித் தரம் உயர்த்தப்பட்டாலும், துறைக்கென்று நிர்ணயிக்கப்பட்ட மொத்தப் பணியிடமான 8,691-க்குள்ளேயே, இவ்வளவு பேருக்கும், 2,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு பதவி உயர்வு வழங்கி, இந்தச் சீரமைப்பு செய்யப்பட்டிருக்கின்றது.

கடந்த ஆட்சி 2001-ல் பொறுப்பேற்றதிலிருந்து நேரடி நியமனம் தடை செய்யப்பட்டதால், பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. 520 வேளாண்மை அலுவலர் பணியிடங்களையும், 47 தோட்டக்கலை

அலுவலர் பணியிடங்களையும் நிரப்ப தமிழ்நாடு தேர்வாணைக் கழகத்திற்கு இந்த அரசு எழுதியிருக்கிறது. அதுமட்டுமல்ல; உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் பட்டியலைப் பெற்று 1,707 பேர்களை நிரப்புவதற்கு அரசு இப்பொழுது உத்தரவிட்டிருக்கின்றது.

பிற்பகல் 1-20

செம்மை நெல் சாகுபடி முறை. இந்தச் செம்மை நெல் சாகுபடி முறைக்கான இந்தப் பெயரையே சூட்டியவர் நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இது திருந்திய நெல் சாகுபடி முறை (S.R.I) என்று வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைத் துறையின்மூலமாக கடந்த ஓராண்டு காலமாக, கடந்த 2007-2008-லிருந்து இதற்கு அறிவிக்கப்பட்டு, இந்த ஒரு பயிர் எடுத்து நடவுகின்ற முறை, அதன்மூலம் நிறைய தூர்கள் வந்து, கூடுதல் விளைச்சலைத் தரக்கூடியது என்ற அந்த முறையிலே இந்தத் திட்டத்தை, 56,600 விவசாயிகளுக்குப் பயிற்சி தந்து, ஏறத்தாழ 10,00,000 ஏக்கரில் அது பயிர் செய்யப்பட்டது. இது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை வருகிறபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அது என்ன திருந்திய நெல் சாகுபடி முறை, அப்படியென்றால் இதுவரைக்கும் அந்த நெல் திருந்தாமல் இருந்து, இப்போது நீங்கள் அந்த நெல்லை திருத்துகிறீர்களா என்று சொல்லி, அப்படி அதைச் சொல்லக்கூடாது. செம்மை நெல் சாகுபடி முறை என்று சொல்வது அழகாக இருக்கும் என்று இந்தத் தமிழ்ப் பெயரைச் சூட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் கண்டறியப்பட்ட புதிய தொழில்நுட்பமான இந்தச் செம்மை நெல் சாகுபடி முறையைப் பயன்படுத்தி, 2007-2008 ஆம் ஆண்டில் 11,300 எக்டேர், அதாவது 28,300 ஏக்கர் பரப்பளவில், எக்டேர் ஒன்றிற்கு ரூ.2,000 மதிப்புள்ள இடுபொருட்கள் மானியமாக வழங்கப்பட்டதுடன், 56,600 விவசாயிகளுக்குச் செம்மை நெல் சாகுபடிக்கான பயிற்சியும் வழங்கப்பட்டது. இந்தத் தொழில்நுட்பத்தின்மூலம் ஒரு எக்டேருக்கு 10 மெட்ரிக் டன் முதல் 13 மெட்ரிக் டன் வரை நெல் உற்பத்தியாகின்றது. விவசாயிகளாக இருப்பவர்களுக்கு எல்லாம் தெரியும். ஒன்றரை டன் ஒரு ஏக்கரிலே கிடைப்பதே கஷ்டம். ஆனால், இந்தச் செம்மை நெல் சாகுபடித் திட்டத்தின்மூலம் எக்டேர் ஒன்றிற்கு 10 மெட்ரிக் டன் முதல் குறைந்தபட்சம் 13 மெட்ரிக் டன்



வரை உற்பத்தி கிடைக்கின்றது. இதனால் 2007-2008 ஆம் ஆண்டில், 10 இலட்சம் ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருப்பதைப்போல 2008-2009 ஆம் ஆண்டு 18,75,000 ஏக்கரில் செம்மை நெல் சாகுபடி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்கான மார்க்கர் மற்றும் கோனோ, களை எடுக்கும் கருவி போன்ற செம்மை நெல் சாகுபடிக்கான வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கவும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

உணவு உற்பத்தி. உதாரணத்திற்காக, 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும், ஆற்றுப் பாசன வசதி இல்லாத கிராமங்களில், கிணறுகளில் இருக்கும் நீரைக்கொண்டு நெல் சாகுபடி செய்ய தீவிர நெல் சாகுபடித் திட்டம் என்று அறிவித்து, உயர் விளைச்சல் சாகுபடித் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தி, உணவு உற்பத்தி பெருக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பின்னால், தலைவர் கலைஞர் அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின், 1972-1973-ல் 73 இலட்சத்து 36 ஆயிரம் மெட்ரிக் டன்னாக மொத்த உணவு உற்பத்தி உயர்ந்தது. கடந்த நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருப்பதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்தில், 2005-2006 ஆம் ஆண்டு 61,17,000 மெட்ரிக் டன்னாகவும், அரிசி உற்பத்தி 52,10,000 மெட்ரிக் டன்னாகவும் இருந்தது. ஆனால், ஒரு எக்டேருக்கு உற்பத்தித் திறனில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில் பஞ்சாபிற்கு அடுத்தபடி தமிழகம் இருந்தது. ஆனால், 1998-வது ஆண்டு மற்றும் 1999-வது ஆண்டிலே, அப்போது எடுத்த நடவடிக்கையின் காரணமாக, பஞ்சாபையும் முந்துகின்ற அளவுக்கு நம்முடைய உணவு உற்பத்தித் திறன் இருந்தது. ஆனால், அந்த உணவு உற்பத்தித் திறன் கடந்த காலத்திலே படிப்படியாகக் குறைந்து, கடந்த ஆட்சியிலே 2,838 கிலோவாகத்தான் இருந்தது.

பிற்பகல் 1-25

கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 2006-2007 ஆம் ஆண்டில் மொத்த உணவு உற்பத்தி 82 இலட்சத்து 63 ஆயிரம் மெட்ரிக் டன் ஆகும். அதேபோல, உற்பத்தித் திறன் 3,424 கிலோவாக உயர்ந்தது. 2007-2008 ஆம் ஆண்டில் மொத்த உணவு உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஆனால், உணவு உற்பத்தி--இதுதான் நாம் கவனிக்க வேண்டியது, சரியான நேரத்திலே நல்ல விதைகள், தேவையான இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கினால் உற்பத்தித் திறன் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. உரிய காலத்திலே இடுபொருட்கள் சரியாக அல்லது விதைகள் சரியாகக் கொடுக்காவிட்டால் உற்பத்தித் திறன் குறைந்துவிடும். அந்த அடிப்படையில், தி.மு.க. ஆட்சி வருகிறபோதெல்லாம் உற்பத்தித் திறன் அதிகரித்து இருக்கிறது என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டம்--நிதி ஒதுக்கப்பட்டதைப்பற்றி இங்கு சொன்னீர்கள். கூட்டுறவுச் சங்கங்களில் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வாங்குகிறபோது விவசாயிகள் பயிர் Insurance-க்காக பிரிமியத் தொகையை அவர்கள் பிடித்து Insurance Company-க்குக் கொடுத்துவிடுகிறார்கள்; ஆனால், கடன் வாங்காத விவசாயிக்கு பயிர் செய்து, நட்டம் ஏற்பட்டால், அவருக்கு உதவித் தொகை கிடைப்பது இல்லை. ஆகவேதான், விவசாயி Insurance பிரிமியத்தைக் கட்டுவதற்கு சிரமப்படுகிறார் என்பதற்காகத்தான் அரசாங்கம், அதிலே 50 சதவிகிதத்தைக் கட்டுவது என்று முடிவு செய்து 2 ஆண்டு காலமாகக் கொடுத்து வந்ததைப்போல, இந்த ஆண்டு 2008-2009 ஆம் ஆண்டுக்கு 25 இலட்சம் விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாயை Insurance Premium-ஆக வழங்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

விதை கிராமத் திட்டம். 100 சதவிகிதம் விதைத் தேவையைப் பூர்த்தி செய்ய, விஞ்ஞான முறையில் விதை உற்பத்தி மேற்கொண்டு, விவசாயிகள், அவர்கள் உற்பத்தி செய்யும் விதைகளின் தரத்தை உயர்த்த பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், 2006-2007 ஆம் ஆண்டில் நெற் பயிருக்கு 5,000 கிராமங்களிலும், பயறு வகைப் பயிர்களுக்கு 500 கிராமங்களிலும், எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு 500 கிராமங்களிலும், விதைப் பண்ணைகளில் தரமான விதை உற்பத்தி செய்ய 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டம் 2 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தமிழகத்தின் சராசரி மழையளவு 9,39.7 மில்லி மீட்டர். கிடைக்கும் மழை நீரினை ஏரிகள், குளங்கள் மற்றும் ஊரணிகள்மூலம் சேமித்து வைப்பதுடன், வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் தடுப்பணைகள், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்து, நிலத்தடி நீர்



மட்டம் உயரவும், பாசனத்திற்குப் பயன்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், வேளாண்மைக்குத் தேவையான இடுபொருட்களை வழங்குவதுடன், தொழில்நுட்பப் பயிற்சியும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

வேளாண்மைத் துறைமூலம் இயற்கை வேளாண்மைக்கான செயல் விளக்கம் அமைத்தல், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள், ஜிப்சம், நீலப் பச்சைப் பாசி போன்ற முக்கிய இடுபொருட்களின் விநியோகம், கைத் தெளிப்பான், விசைத் தெளிப்பான், விதையிடும் கருவி, தழை மிதி கருவி போன்ற பண்ணை இயந்திரங்கள் வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்கு வேளாண் தகவல் கல்வி மற்றும் சுற்றுலா போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேபோல, வேளாண்மைப் பொறியியல் துறையினால் கட்டப்படும் தடுப்பணைகள், கசிவு நீர்க் குட்டைகள்மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர இத்திட்டத்தின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தோட்டக்கலைப் பயிர் சாகுபடி பரப்பினை அதிகரிக்க, நடவுச் செடிகள், இடுபொருட்கள், தொழில்நுட்ப ஆலோசனைகள் இத்திட்டத்தின்மூலம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் விவசாயிகளுக்கும், அலுவலர்களுக்கும் நவீன தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைமூலம் வேளாண் வணிகத்தை மேம்படுத்த விவசாயிகளுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படுகின்றன.

2007-2008 மற்றும் 2008-2009 ஆம் ஆண்டுகளில் 9 உபவடிப் பகுதிகள், 25 உபவடிப் பகுதிகளாக ரூ.79.85 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், வேளாண் மற்றும் சகோதரத் துறைக்கு ரூ.153.65 கோடியும், பொதுப்

பணித் துறைக்கு ரூ.12.08 கோடியும், பால் வளத்திற்கு ரூ.7.97 கோடியும், கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.1.57 கோடியும், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு ரூ.21 இலட்சமும், மீன்வளத்திற்கு ரூ.7.04 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண் பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், வேளாண்மையில் ஒட்டுமொத்த மேம்பாட்டை அடையவும் சம்பந்தப்பட்ட துறைகள் திட்டங்களைச் செயல்படுத்தும்.

வேளாண்மைத் துறை மற்றும் வேளாண் சார்புத் துறைகளுக்காக 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.185.31 கோடி நிதி நடுவண் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறைமூலம் ரூ.63.68 கோடி செலவில் துல்லிய பண்ணைத் திட்டம் 50 சதவிகித மானியத்தில் செயல்படுத்தப்படும்.

வேளாண்மைத் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி அளிப்பதுடன், 129 வட்டாரங்களில் மண் புழு உரம் மற்றும் நகர்ப்புறக் கழிவுகளிலிருந்து compost உரம் தயாரிக்கும் மையங்கள் அமைக்க ரூ.8.71 கோடி மானியம் அளிக்கப்படும்.

வேளாண்மை இயந்திரங்கள், வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் மானிய விலையில் வேளாண் இயந்திரங்களும், கருவிகளும் ரூ.7.73 கோடி செலவில் வழங்கப்படும். வேளாண்மைத் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் மானாவாரி நிலங்களை மேம்படுத்தவும், புதிய கருவிகள் வாங்கவும், பயிற்சியளிக்கவும் ரூ.9.96 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைத் துறைமூலம் விரிவாக்கப் பணியினை கணினிமூலம் தமிழகத்திலுள்ள 385 வட்டாரங்களிலும் அமைத்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலகங்களுடன், video conferencing மூலம் தொடர்புகொண்டு தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ள ரூ.6.31 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மண் பரிசோதனைக் கூடங்கள் மற்றும் வேளாண் ஆலோசனை மையங்கள் அனைத்து விவசாயிகளும் பயன்பெறும்வகையில் தமிழகத்தில் 224 வட்டாரங்களில் வேலையில்லாப் பட்டதாரிகளைக்கொண்டு அமைக்க 50 சதவிகித மானியத்தில்



அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் வரை மானியம் வழங்கிட ரூ.7.16 கோடி நிதியுதவி அளிக்கப்படும்.

இயற்கை இடர்ப்பாடுகளான மழை, வெள்ளம், வறட்சி போன்றவற்றிலிருந்து வேளாண் உற்பத்தியினைப் பாதுகாக்க, பருவ நிலையுடன் தட்பவெப்ப நிலையை அறிந்து, சாகுபடி மேற்கொள்ள 224 வட்டாரங்களில் தானியங்கி வானிலை மையங்கள் ரூ.16.90 கோடி செலவில் நிறுவப்படும். நில ஆதாரத் தகவல்களையும், புவியியல் ஆதார தகவல்களையும் கிராம அளவில் பெற்று பண்ணை பணியைத் திட்டமிட்டு, விவசாயிகளுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைய 10 மாவட்டங்களில் ரூ.3.60 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

பிற்பகல் 1-35

கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, கடலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சி, திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம், நீலகிரி, பெரம்பலூர், வேலூர், புதுக்கோட்டை, விழுப்புரம், கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய 20 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்மூலம், மா, நெல்லி, வாழை, முந்திரி, கோகோ, மிளகாய், மஞ்சள், நறுமணமூட்டும் பயிர்கள் மற்றும் மலர்கள் போன்ற தோட்டக்கலைப் பயிர்கள் தொகுப்பு முறையில் சாகுபடி செய்யப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டு ரூபாய் 75.76 கோடி செலவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டில் ரூபாய் 120 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் 3 கிராமங்களில் இயற்கை பண்ணையக் கிராமங்களாக உருவாக்க எக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 10,000 மானியம் வீதம், 150 எக்டேர் பரப்பில், ரூபாய் 15 இலட்சம் செலவில் தேசிய தோட்டக்கலை இயக்கம்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

அதைப்போல, 2008-2009 ஆம் ஆண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்மூலம், கிருஷ்ணகிரி, நீலகிரி, திண்டுக்கல், கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூபாய் 13 கோடி செலவில் 4 இலட்சம் சதுர மீட்டரில் கொய் மலர்கள் உற்பத்தி செய்ய பசுமைக் குடில் அமைக்க உதவிட இருக்கின்றோம்.

தமிழ்நாட்டில் சர்க்கரை ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், 3 பொதுத் துறை ஆலைகளும் உள்ளன. இதில், மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மதுரா சர்க்கரை ஆலை கடந்த ஆட்சியிலே மூடப்பட்டது. தற்பொழுது கூட்டுறவு, பொதுத் துறையில் 17 ஆலைகள் இயங்குகின்றன. 21 தனியார் சர்க்கரை ஆலைகள் உள்ளன. தனியார் சர்க்கரை ஆலையான அருணாச்சலா சர்க்கரை ஆலை கடந்த ஆட்சிக் காலத்திலே மூடப்பட்டது.

2006-2007 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் உச்சகட்டமாக 274.49 இலட்சம் மெட்ரிக் டன் அரைவை செய்யப்பட்டு, 25.39 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. இது, இதுவரை தமிழ்நாட்டில் கண்டிராத அளவு உற்பத்திச் சாதனை. இந்த அரைவைப் பருவத்தில் பதிவு செய்யப்படாத 8 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு, விவசாயிகளின் நலனைக் கருத்திலே கொண்டு, சர்க்கரை ஆலைகளின் அரைவைக் காலத்தை நீட்டித்து அரைவை செய்யப்பட்டதாகும்.

2007-2008 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் 37 ஆலைகளின்மூலம் 255.08 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரைவை செய்யவும், 24.25 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கரும்பு உற்பத்தித் திறனுக்கு அரசு எடுத்த முயற்சிகள் மட்டுமல்லாது, இந்த அரசு கரும்புக்கு அளிக்கும் மாநில அரசின் பரிந்துரை விலையும், ஒட்டுமொத்த வாகன வாடகையையும் ஆலைகளே ஏற்பதாலும் விவசாயிகள் உற்சாகமாக இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பு அரைவைப் பருவத்திற்கு நடுவண் அரசு, 9 சத சர்க்கரை கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்பிற்கு, ரூபாய் 811.80 என அறிவித்தாலும், அவ்விலை நம் மாநில விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாது என்பதைக் கருத்திலேகொண்டு, மாநில அரசின் பரிந்துரையாக ரூபாய் 222.20-ஐக் கூட்டி 9 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்பிற்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூபாய் 1,034 எனவும், ஒவ்வொரு சதவீத கூடுதலுக்கும் ரூபாய் 9 எனச் சேர்த்து வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.



தமிழகத்திலே 17 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இந்த ஆலைகளெல்லாம் நட்டத்திலே நடைபெறாமல், இலாபத்திலே நடைபெற்று, உரிய நேரத்திலே விவசாயிகளுக்குப் பணம் கொடுக்க வேண்டுமானால், co-generation போடவேண்டும் என்ற முடிவைத் தவிர, வேறு வழியில்லை. எத்தனால் உற்பத்தி செய்யவேண்டும் என்பதைத் தவிர வேறு வழியில்லை. அதற்காகத் தமிழகத்தில் உள்ள 17 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ரூபாய் 865 கோடி முதலீட்டில் மின்சார வாரியத்தின்மூலமாக இணை மின் உற்பத்தி செய்ய இவ்வரசு இந்த ஆண்டு முடிவு செய்திருக்கின்றது. இதன்மூலம் சுமார் 885 மெகாவாட் மின் உற்பத்தி பெறும். இதிலே நாம் முழுமையடைந்துவிட்டால், விவசாயிகள் ஆர்வத்தோடு கரும்பு உற்பத்தி செய்து ஆலைக்குத் தரவும், உரிய நேரத்திலே பணம் கிடைக்கவும், ஆலைகள் நஷ்டம் இல்லாமல் செயல்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-40

இது மட்டுமல்லாமல், எத்தனால் உற்பத்தி செய்வதற்கும் நாம் நடவடிக்கை எடுக்கிறோம். Co-generation—இணை மின் உற்பத்தி போடுகிறபோது, கரும்புச் சர்க்கரை அரைவையான பிறகு அந்த (குறுக்கீடு) மொலாசஸ் இல்லை. (குறுக்கீடு) சக்கை, ஆமாம், அதுதான். கரும்புச் சக்கைதான். அந்தச் சக்கையிலிருந்துதான் மின் உற்பத்தி செய்கிறோம். ஒருவேளை அந்தச் சக்கை இல்லாவிட்டால், co-generation function செய்ய முடியாது. அதற்காக அது இல்லாத நேரத்திலே நிலக்கரியைக்கொண்டு தொடர்ந்து மின் உற்பத்தி செய்யலாம் என்ற அளவுக்கு இந்தத் திட்டத்திலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருவதால், வேளாண்மையை இயந்திரமயமாக்குவது அவசியமாகிறது.

புல்டோசர், டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரங்களை வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் வழங்கிட, தற்போது 91 புல்டோசர்கள், 121 டிராக்டர்கள் மற்றும் 4 நெல் அறுவடை இயந்திரங்கள் உள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31-1-2008 ஆம் ஆண்டு வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் 2007-2008-வது நிதியாண்டில் 5 கோடியே 91 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, 50 டிராக்டர்களும், 25 அறுவடை இயந்திரங்களும் வாங்கி, இப்போது விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள குறைந்த வாடகையில் அளித்து வருகிறோம்.

வாழை சிப்பம் கட்டும் நிலையம். தேனி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் வாழையைப் பழுக்க வைக்கப் பெங்களூருக்குக் கொண்டு செல்வதால் உற்பத்திச் செலவு கூடுதலாகிறது என அம்மாவட்ட வாழை விவசாயிகள் வைத்த கோரிக்கையை ஏற்று, தேனி மாவட்டம், சின்னமனூரில் ஒருங்கிணைக்கப்பட்ட சிப்பம் கட்டும் நிலையத்தினை, சின்னமனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் வாழைச் சாகுபடியாளர்கள் சங்கம், டான்காஃப் உடன் இணைந்து 6 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்து, சின்னமனூர் ஒருங்கிணைக்கப்பட்ட சிப்பம் கட்டும் நிலைய அடிக்கல் நாட்டு விழா 24-2-2008-லே நடைபெற்றது. நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் கொள்ளளவுகொண்ட குளிர்பதன சேமிப்பு அறை மற்றும் நாளொன்றுக்கு 60 மெட்ரிக் டன் அளவு வாழை சிப்பம் கட்டும் வசதியும், 30 மெட்ரிக் டன் அளவு வாழைப் பழங்கள் கனிய வைக்கப்படும் வசதியும் செய்யப்பட உள்ளன. இப்படிப் பல்வேறு வசதிகளை நம்முடைய அரசு செய்துகொண்டிருக்கிறது, இந்தத் துறையிலே.

சில அறிவிப்புகளை மட்டும் நான் இங்கு தெரிவித்து முடித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழக அரசு தொழில் தொடங்குபவர்களுக்குப் பல சலுகைகளை வழங்கி, தமிழகத்தில் அதிக அளவில் முதலீடு செய்யும் நிறுவனங்களை ஊக்கப்படுத்தி வருவதால், பல தொழிற்சாலைகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்திலே தொடங்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு தொழிற்சாலைகள் தொடங்குபவர்களுக்கு வழங்கும் சலுகைகளைப்போல வேளாண்மைத் தொழில் தொடங்குபவர்களுக்கும் சலுகை வழங்கக் கொள்கையை வகுத்துள்ளது. இதனால் வேளாண்மை இயந்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள், வேளாண்மைத் தொழில்கள் தொடங்க, தொழில் முனைவோரை ஊக்கப்படுத்த தமிழக அரசு வேளாண்மைத் தொழில் கொள்கையை



அறிவித்து, தொழில் கொள்கைக்குத் தரக்கூடிய அனைத்துச் சலுகைகளும் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கோடு, பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்த விவசாயிகளுக்குத் தேவையான அளவிற்கு, இனத் தூய்மை மற்றும் புறத் தூய்மை கொண்ட தரமான விதைகள் அதிக அளவிற்கு உற்பத்தி செய்யவும், மாநில அரசு விதைப் பண்ணைகளின் செயல்பாடுகளை மேம்படுத்தவும், தரமான விதை உற்பத்தி செய்ய விவசாயிகளை ஊக்குவிக்கவும், தனியார் விதை உற்பத்தியாளர்கள்மூலம் தரமான விதைத் தேவையைப் பூர்த்தி செய்யவும், 2008-2009 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு மாநில விதை உற்பத்தி முகமை உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-45

பயறு வகை விதைகள், ரைசோபியம், உயிர் உரம், நுண்ணூட்ட உரம் மற்றும் 2 சதம் டி.ஏ.பி. கரைசல் தெளிக்கும் முறை போன்ற அனைத்து உயரிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கி, பயறு வகை உற்பத்தியைத் தீவிரப்படுத்த இவ்வரசு திட்டமிட்டுள்ளது.

பயறு வகை உற்பத்தியைப் பெருக்க 2 சதம் டி.ஏ.பி. கரைசலைத் தெளிக்க, இந்த நிதி ஆண்டில் 1,00,000 எக்டேரில் பயறு வகை பயிர் செய்திடும் விவசாயிகளுக்கு, ஒரு எக்டேருக்கு ரூ.200 வீதம் ரூ.2 கோடி வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

**இயற்கைப் பண்ணையம்**

சிறு மற்றும் குறு விவசாயிகள் இயற்கைப் பண்ணையம் செய்ய ஊக்குவிக்கும்விதமாக, 2008-2009 ஆம் நிதியாண்டு முதல், தற்போதுள்ள அரசுக் கட்டணத்தைக் குறைத்து, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.500 எனவும், இதர விவசாயிகளுக்கு ரூ.1,000 எனவும், நிறுவனங்களுக்கு ரூ.5,000 எனவும் அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகின்றேன்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (DPAP), ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் (IWDP), தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் தற்போது செயல்படுத்தி வரும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளை

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2008 ஏப்ரல் 4

ஒருங்கிணைத்து, ஒரே முகமையின்கீழ் 2008-2009 ஆம் நிதி ஆண்டு முதல் செயல்படுத்தப்பட முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம் அமைப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. 2008-2009 ஆம் நிதியாண்டில் தோட்டக்கலை மற்றும் தோட்டக்கலை அல்லாத பயிர்களில் சுமார் 50,000 எக்டேர்களில் 50 சத மானியத்தில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல் கிணறு சந்திப்புப் பகுதியில் ஒரு மலர் ஏல மையம் தொடங்கப்பட வேண்டுமென ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு மு. அப்பாவு அவர்கள் கோரிக்கையை ஏற்று ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வள்ளியூர், ராதாபுரம், பணகுடி ஆகிய பகுதிவாழ் விவசாயிகள் உற்பத்தி செய்யும் மலர்களை இடைத்தரகர்கள் இன்றி விற்பனை செய்ய வேளாண்மை விற்பனைத் துறைமூலம் 2008-2009 ஆம் நிதியாண்டில் "மலர் ஏல மையம்" ஒன்று காவல் கிணறு சந்திப்பில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் உள்ள சிறந்த சுற்றுலா மையங்களிலே ஏற்காடும் ஒன்றாகும். ஏற்காடு பகுதி ஒரு மலைப் பகுதியாக இருப்பதால், இங்கு நிலவும் இதமான தட்ப வெப்ப சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, இப்பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆண்டுக்காண்டு அதிகரித்துக்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 15-9-2007 அன்று, ஏற்காடு வருகை தந்தபோது, சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று, உதகையில் உள்ள அரசுத் தாவரவியல் பூங்காவைப்போல் ஓர் அழகிய பூங்கா ஏற்காட்டில் ஏற்படுத்தப்படும் என்று சொன்னார். அதற்கேற்ப இந்தப் பூங்கா தொடங்கப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனைக் கருத்திலேகொண்டு, ஏற்காட்டில் தோட்டக்கலைமூலம் 40 ஏக்கர் பரப்பளவில் இந்தப் பூங்கா 10 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படவிருக்கிறது.



2008 ஏப்ரல் 4] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

**குறைந்த வாடகையில் நவீன வேளாண் இயந்திரங்கள்**

நவீன வேளாண் இயந்திரங்களை சிறு மற்றும் குறு விவசாயிகள் வாங்கிப் பயன்படுத்த வசதி இல்லாததால், அவற்றை வேளாண் பொறியியல் துறையின்மூலம் வாங்கி, வேளாண் பணிக்குக் குறைந்த வாடகையில் விட 60 நெல் நாற்று நடும் இயந்திரங்கள், 40 நெல் அறுவடை இயந்திரங்கள், 10 தானியங்கி மக்காச் சோள அறுவடை இயந்திரங்கள், நவீன உபகரணங்களுடன்கூடிய 90 டிராக்டர்கள் மற்றும் 300 விசை களை எடுக்கும் கருவி ஆகிய இயந்திரங்களை ரூபாய் 25 கோடி செலவில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

கரும்பு அறுவடைக் காலங்களில், கரும்பை வெட்டக் கூலி ஆட்கள் கிடைக்காததால், வெட்டுக் கூலி டன் ஒன்றுக்கு ரூ.400-க்குமேல் கேட்கப்படுவதால், செலவிடப்பட வேண்டியுள்ளதைத் தவிர்க்கவும், தற்போது இயங்கி வரும் 17 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில், ஆலை ஒன்றுக்கு முதற்கட்டமாக 2 கரும்பு அறுவடை இயந்திரங்கள் வீதம் ரூ.11 கோடியே 90 இலட்சத்திலே 34 கரும்பு அறுவடை இயந்திரங்கள் வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள கல்லூரிகள், வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண்மை அறிவியல் மையங்கள், பயிர்ப் பாதுகாப்பு மையங்கள் ஆகியவற்றில் பணி புரிய 1,359 பதவிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில், தற்போது 338 பணியிடங்கள் காலியாக உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தற்போது காலியாக உள்ள 338 உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்கள் 2008-2009 ஆம் நிதியாண்டில் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பண்ணைத் தொழிலாளர்களாக 20 ஆண்டுகளுக்கு மேலாக தினக் கூலி அடிப்படையில் பணிபுரியும் 1,072 பணியாளர்களை ரூ.1,300-20-1,500-25-2,000 என்ற ஊதிய விகிதத்தில் இந்த ஆண்டு 1-4-2008 முதல் பணி நிரந்தரம் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மண் வளப் பாதுகாப்புத் திட்டம், 1949 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சமவெளிப் பகுதிகளுக்கு 25 சதவிகித மானியமும், மலைப் பகுதிகளுக்கு 40 சதவிகித மானியமும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, பணி முடிந்த 2 ஆண்டுகள் கழித்து, 10 தவணைகளாகப் பயனாளிகளிடமிருந்து வசூலிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பருவ மழை பொய்த்ததாலும், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றத்தால் இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குச் செலவிடப்பட்ட தொகையை அவர்களால் திருப்பிச் செலுத்த முடியவில்லை. 1-4-1980 முதல் விவசாயிகளிடம் வசூலிக்கப்பட வேண்டிய கடன் தொகை ரூ.192.08 கோடி. இதில் ரூ.5.02 கோடி மட்டுமே வசூல் செய்யப்பட்டது. விவசாயிகளிடம் வசூலிக்கப்பட வேண்டிய மீதித் தொகை ரூபாய் 187 கோடியே 6 இலட்சம் கடந்த 28 ஆண்டுகளாக வசூலிக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு, 1-4-1980 முதல் விவசாயிகளிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டிய மண் வளப் பாதுகாப்புக் கடன் உள்ளடக்கிய தக்காவிக் கடன் ரூ.187 கோடியே 6 இலட்சம் தள்ளுபடி செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 24 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் உள்ள விவசாயிகளுக்குத் தரமான விதையை உற்பத்தி செய்து, விநியோகம் செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தரமான விதையை உற்பத்தி செய்யத் தேவையான அடிப்படை வசதிகளை மாநில விதைப் பண்ணைகளிலும், விதை சுத்திகரிப்பு நிலையங்களிலும் ஏற்படுத்தவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வல்லுநர் விதை உற்பத்தி செய்ய ஆராய்ச்சி நிலையங்களுக்கு வசதி செய்து கொடுக்கவும், விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், சுய உதவிக் குழுக்கள், பண்ணைத் திட்ட மகளிர் மற்றும் வேளாண் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், விதை உற்பத்தியாளர்களுக்கும், விநியோகிப்பாளர்களுக்கும் மானியம் வழங்கவும், விவசாயிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், பண்ணைத் திட்ட மகளிர் போன்றவர்கள் விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க மானியம் வழங்குவதற்காக ரூ.22.25 கோடி செலவில் தமிழகத்தில் இந்த நடப்பாண்டிலிருந்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தின் அருமை கருதி (குறுக்கீடு) எனக்கு நேரம் கொடுத்தது குறைவுதானே, நீங்கள் நிறைய பேர், 9 பேர் பேசியிருக்கிறீர்களே, அதனால் இன்னும் பல்வேறு விவரங்கள் இருந்தாலும், இந்த அரசு பொறுப்பேற்ற காலத்தில், கரும்பு விவசாயிகளாக இருக்கட்டும், நெல் விவசாயிகளாக இருக்கட்டும், தோட்டக்கலைப் பயிர் செய்யக்கூடியவர்களாக இருக்கட்டும், புஞ்சைத் தானியங்கள் பயிர் செய்யக்கூடியவர்களாக இருக்கட்டும், அவர்களுக்கு உற்ற தோழனாக இருந்து ஆட்சியை நடத்தக்கூடியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுடைய பாதுகாவலன் என்பது மட்டுமல்ல, பாரி வள்ளலாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-55

அதியமானுக்கு அரிய ஒரு நெல்லிக் கனி கிடைத்தது. அந்த நெல்லிக் கனியைச் சாப்பிட்டால் நீண்ட காலம் உயிர் வாழலாம் என்ற நிலை. ஆனால், அந்த நெல்லிக் கனியைத் தான் சாப்பிடாமல் அவ்வைப் பிராட்டிக்குக் கொடுத்து, அவர் நீண்ட காலம் வாழ்ந்தால் தமிழ் வாழும் என்ற நோக்கத்தோடு, நீண்ட காலம் வாழலாம் என்றிருந்த அந்த நெல்லிக் கனியை அவ்வைப் பிராட்டிக்குக் கொடுத்தார் அதியமான் என்ற வரலாறு உண்டு. அதைப்போலத்தான் நம்முடைய முதலமைச்சர், 'வீழ்வது நாமாக இருந்தாலும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஒரு பாரி வள்ளலாக இருக்கின்றார்கள். தமிழனுக்கு, தமிழுக்கு எதிரான எந்தச் சக்தியையும் கண்டு அவர் அஞ்சக்கூடியவர் அல்ல. எங்களுடைய சேலத்தில் இருக்கின்ற வல்வில் ஓரியைப்போல, வில்லிலே அம்பு எய்வதிலே சிறந்த வீரனாக விளங்கிய வல்வில் ஓரியைப்போல, அந்த எதிர்ப்புகளையெல்லாம் தூள் தூளாக்கிவிட்டு, தமிழன் சுய மரியாதையோடு இருக்க வேண்டும், தமிழ்நாடு வளம் பெற வேண்டும் என்ற அந்த இலட்சியத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு இருக்கக்கூடிய ஒப்பற்றத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வல்வில் ஓரியாக விளங்குகிறார் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை கொடுத்திருக்கின்றார்கள். அந்த வெட்டுத்

தீர்மானங்களையெல்லாம் நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன். வாங்கிவிடுவீர்கள் இல்லையா? (குறுக்கீடுகள்) ரைட், ரொம்ப சந்தோஷம். அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இங்கே இந்தத் துறைக்காகக் கோரப்பட்டிருக்கின்ற அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த மன்றத்தை நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே ...

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் குவின்டால் ஒன்றுக்கு மத்திய, மாநில அரசுகள் 825 ரூபாய் தருகின்ற நிலையில், அந்த விலை போதாது என்று தமிழக விவசாயிகள் இன்றைக்கு மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள், நெல்லுக்கு குவின்டால் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் அறிவிக்கப்படும் என்று. அது இன்றைக்கு விவசாயிகள் மத்தியில் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அதைப்போல, கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கு எக்டேர் ஒன்றுக்கு 10,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் எல்லாம் குரல் கொடுத்தன. அரசு எக்டேருக்கு 7,500 ரூபாய் என்று அறிவித்தது. அதைப்போல, மற்ற, மற்ற பயிர்களுக்கெல்லாம் மத்திய அரசினுடைய வழிகாட்டுதலோடு இருக்கின்ற நிவாரணத்தைக் காட்டிலும் கூடுதலாக அறிவித்தது. அதைப்போல, கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தில் 1,58,163 எக்டேர் நிலங்கள் பாதிப்படைந்திருக்கின்றன. அதற்கெல்லாம் ரூ.4,000- எக்டேருக்கு ரூ.4,000 தான் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கும் சென்ற மாதம் வெள்ளச் சேதம் ஏற்பட்டு அரசு அறிவித்த நிவாரணங்களை வழங்க



வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல் முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டபோது விவசாயக் கூட்டுறவுப் பொறியியல் சங்கங்களைத் தோற்றுவித்துப் பல்வேறு பணிகளை மேற்கொண்டார்கள். தற்போது அதனுடைய Apex Body கலைக்கப்பட்டாலும்கூட, கீழ் அளவிலே பணியாற்றுகின்ற அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்து போயிருக்கின்றன. அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீண்டும் செயலூக்கம் தந்து அதைச் செயல்படுத்துவதற்காகவும், அதில் கடந்த 7, 8 ஆண்டுகளாக எவ்வித ஊதியமும் இல்லாமல் இருக்கின்ற அந்த ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காகவும் அரசு என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், நெல்லுக்கு விலை போதுமானது அல்ல; எல்லாம் ஆயிரம் ரூபாய் கேட்டுக்கொண்டிருக்கிறோம்; அது இல்லாததனால் பெரும் ஏமாற்றம் என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கம்தான், அது நெல்லுக்காக இருந்தாலும் சரி, சிறு தானியங்களுக்கானாலும் விலையை நிர்ணயிப்பது அவர்கள். ஏற்கெனவே அவர்கள் நிர்ணயித்த விலை போதாது என்று நாம் எல்லாம் கேட்ட காரணத்தினால், 100 ரூபாய் சேர்த்துக் கொடுத்தார்கள். அதுவும் போதாது என்று சொல்லி, நம்முடைய முதலமைச்சர் ஊக்கத் தொகையாக, மாநில அரசாங்கம் ஒரு குவின்டாலுக்கு 50 ரூபாய் சேர்த்துக் கொடுத்து, ஒரு குவின்டாலுக்கு 825 ரூபாய் தந்ததோடு, நிதிநிலை அறிக்கையிலேயே நம்முடைய நிதி அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த 825 ரூபாய் மாநில அரசாங்கம் கொடுப்பதாக இருந்தாலும்கூட, இது குறைவு, ஒரு குவின்டாலுக்கு ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம் என்று நிதிநிலை

அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, உங்களைப்போல நாங்களும் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றோம்.

நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், அக்ரிகல்சுரல் சொசைட்டி பற்றிச் சொன்னார்கள். வேளாண்மைத் தொழில் கூட்டுறவு சொசைட்டி. அது தமிழகத்திலே தொடங்கப்பட்டது. பிறகு அந்த சொசைட்டிகள் எல்லாம் சரியாகச் செயல்படாமல் பெரும் நட்டத்திலிருந்தன; அப்புறம், ஒவ்வொரு சொசைட்டியாக liquidate செய்து மூடிவிட்டார்கள். இப்போது மூடியவர்களுக்கு மீண்டும் அரசாங்கத்தில், அதிலே பணியாற்றிய செயலாளர்களாக இருப்பவர்களுக்கு நாம் வேலை கொடுக்க முடியாது. ஆனால், ஒரு கோரிக்கையை பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் வைத்தார்கள். அவர்கள் P.F. எல்லாம் கட்டியிருக்கின்றார்கள்; அவர்களுக்குச் சம்பளம் பாக்கி இருக்கின்றது; அந்தத் தொகையைக் கொடுக்க வேண்டும் என்று என்னிடத்திலேகூட ஒரு கோரிக்கையைக் கொடுத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று துறையிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த விளக்கம் கிடைத்தவுடன், உங்களையே அழைத்துப் பேசி, எந்த அளவிற்கு அவர்களுக்கு உதவிச் செய்ய முடியுமோ, அதைச் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மணி 2-02 ஆகின்றது. (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 75 ஆயிரம் ஏக்கர் முந்திரி விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பதாக நம்முடைய அரசு அதிகாரிகள் அரசுக்குத் தகவல் தெரிவிக்கிறார்கள். ஆனால், அதில் மத்திய அரசினுடைய வழிகாட்டுதல் நெறிமுறைகளோடு, 50 சதவிகிதத்திற்குமேல் பாதிப்பு இருந்தால்தான் தரமுடியும் என்று இருக்கிறார்கள். மத்திய அரசினுடைய வழிகாட்டுதல் நெறிமுறையில், ஏக்கருக்கு ரூபாய் 4 ஆயிரம் தரலாம் என்று இருந்ததை மாற்றி, எக்டேருக்கு 7,500 ரூபாய் தரவிருந்த நம்முடைய அரசாங்கம் மற்ற விவசாயிகளுக்கெல்லாம் தந்துவிட்டு, முந்திரி விவசாயிகளுக்கு மட்டும் பாராமுகம் காட்டுவது ஏன் என்று தெரியவில்லை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், ஆண்டுக்கொரு முறை விவசாயம் செய்கின்ற அந்த முந்திரி விவசாயிகளின் வாழ்வு கருகாமல் இருப்பதற்கு, வாழ்விற்கு வழிகாட்டுவதற்கு கலைஞர் அவர்களோடு



பேசி, எக்டேருக்கு 10,000 ரூபாய் வழங்குவதற்கு முன்வருவீர்களா என்று பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் மத்திய அரசாங்கத்தினுடைய வழிகாட்டுதல்படி 50 சதவிகிதத்திற்கு மேலே பாதிப்பு இருந்தால்தான் உதவி செய்ய முடியும் என்று இருக்கிறது. அதனாலே, இப்போது உடனடியாகக் கொடுக்க முடியவில்லை. அவர் இங்கு சொல்வது, நெல் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு 7,500 ரூபாய் என்று நீங்கள் ரூ.4,000-த்திற்குப் பதிலாகக் கூட்டிக் கொடுத்தீர்களே, இதையும் கருணை அடிப்படையில் நீங்கள் கவனிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அதை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி காயத்ரி தேவி. *(குறுக்கீடுகள்)*

**திரு. டி. ஜெயக்குமார்:** Speaker Sir . . .

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படாளம் சர்க்கரை ஆலையைப்பற்றி--கடந்த இரண்டு ஆண்டுகளில் நான் ஏழாவது முறையாக இப்போது இந்த மன்றத்தில் பேசுகிறேன்--இந்தப் படாளம் சர்க்கரை ஆலையைத் திறப்பதற்கு அரசு எடுக்கின்ற முயற்சிகளைப் பாராட்டுகின்ற அதே வேளையில், இந்த ஆலையைத் தனியாரிடம் ஒப்படைப்பதில் விவசாயிகளுக்கு உடன்பாடு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இப்போது அமைச்சர் சொன்னதுபோல், bagasse-ஐ வைத்து, co-generation implement செய்தாலும் சரி அல்லது Molasses-ஐ வைத்து எத்தனால் production செய்தாலும் சரி, எப்படியாவது இந்த ஆலையைக் கூட்டுறவுத் துறையிலே திறப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய தற்போதைய கொள்கை முடிவு,

கூட்டுறவுத் துறையில் ஆரம்பிப்பதுபோல் இல்லை. ஆனால், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய கரும்பு விவசாயிகள் பயன்பட வேண்டும் என்பதற்காக, அது எப்படியாவது இயக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் அதை lease-க்கு விடலாம் என்று அமைச்சரவைக் கூட்டத்திலே தீர்மானம் செய்து, இப்பொழுது அதற்கான விளம்பரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே தகுதியானவர்கள் வந்தால், தேர்ந்தெடுத்து, அவர்கள்மூலம் அந்த ஆலை இயக்கப்படும். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 2-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார். (குறுக்கீடு)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார் கேட்கிறார், இருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** கடவுள் என்னும் முதலாளி, கண்டெடுத்த தொழிலாளி விவசாயி ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார், நீங்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் ஒன்றாக இருந்து இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தீர்கள். அவரிடமே இந்த வார்த்தையைச் சொல்லிக் கேட்கச் சொல்லியிருக்கலாமே!

**திரு. டி. ஜெயக்குமார்:** இப்போது இங்கே வந்தவுடனேதான் ஞாபகம் வந்தது எனக்கு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிவாரணம் 56.5 கோடி ரூபாய் வழங்கப்பட்டதாக நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், தமிழிலே ஏக்கராகவும், ஆங்கிலத்திலே எக்டேராகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய கேள்வி, ஒரு ஏக்கருக்கு தமிழிலே கணக்கு எடுத்தால் 3,500 ரூபாய், எக்டேரில் கணக்கு எடுத்தால் 1,500 ரூபாய்; இதிலே எது உண்மை? ஏன் இந்த முரண்பாடு? இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் அச்சடிக்கிறபொழுது எக்டேர் என்பதை ஏக்கர் என்று தவறாக அச்சடித்து இருக்கிறார்கள். அந்த விவரத்தை அந்தத் துறை எனக்கு அப்பொழுதே தெரிவித்தது. நான் விடை சொல்லுகிறபோது அதைச் சொல்லுகிற வாய்ப்பு இல்லை. தமிழில் ஏற்பட்ட எழுத்துப் பிழை. இனி பிழை வராமல் இருக்க, கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் நான் பேசிய நேரத்திலும், இப்பொழுது தன்னுடைய பதிலுரையிலும் மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அண்ணன் வீரபாண்டியார் அவர்கள் வேளாண் துறைக்குத் தொழில் துறை அந்தஸ்து கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லி இருப்பது, இத்தொழில் கொள்கையின்கீழ் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளும் வேளாண் தொழிற்சாலைகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் நுண்பாசனக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படித் தொழிற்சாலைகளுக்குத்தானே தவிர, வேளாண்மைக்கு இல்லை எனத் தெரிகிறது. அப்படி வேளாண்மைக்கு என்று சொன்னால், வேளாண் பெருமக்கள்--உழவர் பெருமக்கள் தங்களுடைய விவசாய பம்ப்செட்டுகளுக்கு வேண்டி விண்ணப்பித்த அனைவருக்கும் உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும். தொழில் துறை அந்தஸ்து என்று சொன்னால், மின் இணைப்பு வேண்டியவர்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும். அந்த அடிப்படையில் மின் இணைப்பு உடனடியாக வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் சார்ந்த தொழில், அதாவது பழ வகைகள் பதப்படுத்துகின்ற தொழில், export செய்வது அல்லது வேளாண்மைத் தொழிலுக்கான கருவிகள் உற்பத்தி செய்வது, இப்படிப் பல்வேறு தொழில்கள் அவர்கள் தொடங்க முன்வருவார்களேயானால், அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்படும்.

சலுகையும் வழங்கப்படும். (குறுக்கீடுகள்) ஆனால், விவசாயிகள் எல்லோருக்கும் அப்படிக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஏனென்றால், வருடம் 40,000 பம்ப்செட்களுக்குத்தான் நாங்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது தரிசு நிலங்களுக்கு நாங்கள் கொடுக்கிறோம். தரிசு நிலம் கொடுத்து, அதைச் சமப்படுத்தி, அதற்கு ஆழ்துளைக் கிணறு போட்டு, அதற்கு மின் இணைப்பு உடனடியாகக் கொடுத்து விடுகிறோம். ஆனால், எல்லா விவசாயிகளும்-- கேட்பவர்களுக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்றால், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் எங்கேயாவது போய்க் கையேந்தவேண்டியதுதான், வேறு வழியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளம் பாதித்து இருக்கிற பகுதிகளுக்கு விரைந்து நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு இருக்கிற நமது தமிழக முதல்வர் அவர்கள், இந்தப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நில வரி வசூல் என்பது தீவிரம் அடைந்து இருக்கிறது; எனவே, அதைத் தடுப்பதற்கு ஆணையிடுவார்களா என்பதைத் தெரிந்துகொள்வதோடு, நெல் சாகுபடி உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும் பக்கத்திலே இருக்கிற கேரள மாநிலத்தில் நெல் சாகுபடிக்கு வட்டி இல்லாத கடன் வழங்கப்படுகிறது. எனவே, அந்த முறை தமிழகத்திலும் அமல் செய்யப்படுமா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். நான் இறுதியாக என்னுடைய உரையை நிறைவு செய்கிறபொழுது, வேளாண்மைத் துறையில் பணியாற்றுகின்ற உயர் தர அதிகாரிகள், அலுவலர்களுக்கு நன்றி சொல்வது என்னுடைய கடமை. இந்த இரண்டு ஆண்டு காலமாக இந்த அரசு எடுக்கின்ற முடிவுகளை உடனுக்குடன் நிறைவேற்றுகின்றார்கள். அந்த அடிப்படையிலே வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் அவர்களுக்கும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தருக்கும், அரசு கூடுதல் செயலாளர், வேளாண்மைத் துறை அவர்களுக்கும், ஆணையாளர், வேளாண்மைத் துறை அவர்களுக்கும், சர்க்கரைத் துறை ஆணையர் அவர்களுக்கும், தோட்டக்கலைத் துறை இயக்குநருக்கும், வேளாண்மை



விற்பனைத் துறை இயக்குநருக்கும், தலைமைப் பொறியாளர் அவர்களுக்கும், விதைச் சான்றுத் துறை இயக்குநர் அவர்களுக்கும், மற்ற அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி எல்லோரும் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,357,07,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.121,32,27,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 8-4-2008, செவ்வாய்க்கிழமை அன்று காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*34. 2006-2007* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [*1995* ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *4/1996 89 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*24.* மானியக் கோரிக்கை எண் *5*-வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2008-2009.* (தமிழ், ஆங்கிலம்)

*25.* வேளாண்மைத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், *2008-2009.* (தமிழ், ஆங்கிலம்)

*26.* வேளாண்மைத் துறை பற்றிய மக்கள் சாசனம், *2008.* (தமிழ், ஆங்கிலம்)

---



### இணைப்பு

*(322 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### மானியக் கோரிக்கை எண் 5—வேளாண்மை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### அத்தியாயம் 1

### முன்னுரை

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" - அய்யன் திருவள்ளுவர்.

உழுவதைக் காட்டிலும் உரமிடுதல் நல்லது. களை
எடுப்பதும் நீர் பாய்ச்சுவதும் மிகவும் நல்லது.
அதைவிட நல்லது அந்தப் பயிரைப் பாதுகாப்பது.

- திருக்குறள் கலைஞர் உரை

தமிழகத்தில் 56 சதவீதம் மக்கள் வேளாண்மையையும், அதனைச் சார்ந்த தொழில்களையும், வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளார்கள். கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வது வேளாண்மை வளர்ச்சியைச் சார்ந்தே உள்ளது. தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய தொழில் வளர்ச்சியினால் தொழிற்சாலை பணிகளில் ஈடுபடும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வரும் நிலையில் அதற்கு இணையாக வேளாண்மைப் பணிகளைச் சார்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டியது அவசியமாகின்றது. தற்போதுள்ள சாகுபடி முறையிலிருந்து மாறுபட்டு, வேளாண்மையை வணிக ரீதியாக, சாகுபடிச் செய்து, உற்பத்தித் திறனை பல மடங்கு உயர்த்தக் கூடிய புதிய தொழில்நுட்ப முறைகளை விவசாயிகள் முழுமையாகக் கடைப்பிடித்தல், மதிப்புக் கூட்டுதல், பதப்படுத்துதல், விற்பனை வாய்ப்புகளை பயன்படுத்துதல் ஆகியவற்றைக்கொண்டு நிரந்தர வேளாண் மேம்பாட்டினை அடைய இவ்வரசு முயற்சிகள் எடுத்து வருகிறது.

[2008 ஏப்ரல் 4

குறைந்து வரும் சாகுபடிப் பரப்பு மற்றும் நீர் ஆதாரம், மண் வளப் பாதிப்பு, விவசாயத் தொழிலாளர்களின் பற்றாக்குறை ஆகிய இடர்பாடுகள் விரைவான வேளாண் வளர்ச்சிக்கு தடையாக உள்ளன. இத்தகைய இடர்பாடுகளையும் கடந்து, வேளாண்மையில், சிறப்பான வளர்ச்சியை அடையும் வகையில் பல்வேறு திட்டங்களை, அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேசிய அளவில் நதிகளை இணைத்து, வீணாகக் கடலில் கலக்கும் உபரி நீரைக் கொண்டு மானாவாரி நிலப் பகுதிகளை பெருமளவில் சாகுபடிக்குக் கொண்டு வந்து அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்த நடுவண் அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இதில் காலதாமதம் ஏற்படுமாயின் முதல்கட்டமாக தென்னக நதிகளை இணைக்க வேண்டியது மிகவும் அவசியமெனவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

விவசாயிகள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைச் சமாளிக்க பல்வேறு உதவிகளையும் நிவாரணங்களையும் இவ்வரசு வழங்கி வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கிய ரூ. 7000 கோடி அளவில் பயிர்க் கடன் தள்ளுபடி செய்தும், கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கிய பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதத்தை 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக குறைத்தும் முறையாக கடனைத் திருப்பிச் செலுத்துவோருக்கு வட்டி விகிதத்தை 5 சதவீதமாகவும் குறைத்து வழங்கப்படுகிறது. வேளாண் மின் மோட்டார்களுக்கு தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்குவதை நீட்டித்தும், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குச் சீரமைக்கப்பட்ட தரிசு நிலம் இலவசமாக வழங்கியும், கல்வி, திருமணம், மகப்பேறு, ஓய்வூதியம் மற்றும் இறுதிச் சடங்கிற்கான செலவிற்கு தமிழ்நாடு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின்மூலம் உதவித் தொகை வழங்கியும், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் கடன் பெறும் விவசாயிகள் மட்டுமின்றி கடன் பெறாத விவசாயிகளுக்கும் காப்பீட்டுத் திட்டத்தில் பயன்பெற வேண்டி கட்டணத் தொகையில் 50 சதவீதம் நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றன. நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யும் சன்ன ரக நெல்லுக்கு நடுவண் அரசு விலையான ரூ. 775/- உடன் மாநில அரசு ஊக்கத் தொகையாகக் குவிண்டாலுக்கு ரூ. 50/- சேர்த்து ரூ. 825/-ம்,



2008 ஏப்ரல் 4]

சாதாரண ரக நெல்லுக்கு நடுவண் அரசு விலையான ரூ. 745/- உடன் மாநில அரசு ஊக்கத் தொகையாகக் குவிண்டாலுக்கு ரூ. 50/- சேர்த்து ரூ. 795/-ம் வழங்கப்படுவதுடன், பல்வேறு உதவிகள் வழங்கியும் விவசாயிகளை இவ்வரசு பாதுகாத்து வருகிறது.

பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்த முக்கிய இடுபொருளான தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைப்பது விதைச் சான்றளிப்பு மூலம் உறுதி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேற்கொண்ட பல்வேறு ஆராய்ச்சிகள்மூலம் புதிய ரகங்கள், வேளாண் கருவிகள், நவீன தொழில்நுட்ப முறைகள் கண்டறியப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

வேளாண்மையில் உற்பத்தித் திறனைப் பெருமளவிற்கு உயர்த்தக் கூடிய செம்மை நெல் சாகுபடி, பருத்தி, கரும்பு, தென்னை, மக்காச்சோளம், காய்கறிகள், மலர்ப் பயிர்கள், பழ வகைகள் ஆகிய பயிர்களுக்கு ஏற்ற துல்லிய பண்ணைய தொழில் நுட்பங்களை விவசாயிகள் பெருமளவில் கடைப்பிடிக்கச் செய்ய இவ்வரசு தீவிர முயற்சிகள் எடுத்து வருகிறது.

மொத்த நீர்த் தேவையில் 70 முதல் 80 சதவீதம் வரை பாசனத்திற்குத் தேவைப்படுவதால் நீர்வள ஆதாரங்களை திறம்பட உபயோகிக்கும் வகையில் நிலத்தடி நீர்மட்டம் பாதுகாக்க நீர் சேமிப்பு முறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. மழை நீர் சேகரிப்பு வழிகளான பண்ணைக் குட்டைகள் மற்றும் தடுப்பணைகள் அமைத்தல், வீணாகும் மழை நீரை பொய்த்துப்போன கிணறுகளில்விட்டு அதன்மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை பாதுகாக்க உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்த மண்ணின் வளத்தை மேம்படுத்தி பாதுகாப்பது முக்கியமானதாகும். மண்ணின் தன்மைக்கு ஏற்ப சாகுபடி செய்யும் பயிரைத் தேர்வு செய்தல், மண் ஆய்வின் அடிப்படையில் உரமிடுதல், நிலச்சரிவுக்கேற்ப மண்வளப் பாதுகாப்பிற்கு குறுக்கு வரப்பு அமைத்தல், தரிசு நிலத்தை மேம்படுத்தி, சாகுபடிக்கேற்ற நிலங்களாக மாற்றுதல், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல், மானாவாரி நீர்ப்பிடிப்பு நிலங்களை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்கள் சிறப்புக் கவனத்துடன் மேற்கொள்ளப்படுகிறது.

பெருகி வரும் தொழிற்சாலைகளினாலும், நகர்ப்புற வளர்ச்சியினாலும் ஏற்படும் வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு, வேளாண் பணிகளை உரிய காலத்தில் விரைவாக தொழில்நுட்ப அடிப்படையில் மேற்கொள்ள வேளாண்மையை இயந்திரமயமாக்கல் அவசியமாகிறது. குறிப்பாக, நெல் நடவு மற்றும் அறுவடை இயந்திரம், கரும்பு அறுவடை இயந்திரம், பயறு மற்றும் சிறுதானியங்களுக்கான விதைப்பு கருவிகள், களை எடுக்கும் இயந்திரம், பருத்தி விதைக்கும் கருவி, பஞ்சு எடுக்கும் கருவி, பருத்தி செடியை பிடுங்கும் இயந்திரம்போன்ற அனைத்து வகை இயந்திரங்களையும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாங்கி விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் வழங்கி விவசாயிகளிடையே பிரபலப்படுத்தவும், பயன்படுத்தவும் அரசு விரைவான நடவடிக்கை எடுத்து வருகிறது.

வேளாண்மை விரிவாக்கத்தைத் திறம்பட மேற்கொள்ளும் வகையில் வேளாண்மை மற்றும் சகோதரத் துறைகளில் நடைமுறையில் இருந்த மூன்றடுக்கு நிர்வாக முறையை ஈரடுக்கு நிர்வாக முறையாக மாற்றி துறைகள் மறு சீரமைக்கப்பட்டுள்ளது. வட்டார அளவில் அனைத்துத் துறை அலுவலர்களும், பணியமர்த்தப்பட்டதன்மூலம் விவசாயிகள் அனைத்து தொழில்நுட்ப சேவைகளையும், திட்ட உதவிகளையும் ஒரே இடத்தில் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வட்டார மற்றும் மாவட்ட அளவிலான அலுவலகங்கள், மாநில வேளாண்மை மற்றும் சகோதரத் துறைகள் தலைமை அலுவலகங்களுடனும் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடனும் வலைதளம்மூலம் இணைத்து விவசாயிகளுக்கு உடனுக்குடன் தொழில்நுட்ப சேவை கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வேளாண்மை விரிவாக்கத்தில் தனியார் பங்கேற்பை ஊக்குவித்து தொழில்நுட்பம் மற்றும் இடுபொருள் சேவைகளை விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கத்தோடு வேளாண்மை ஆலோசனை மையங்கள் (Agri clinic) அதிக அளவில் அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டின் தட்பவெப்ப நிலை மற்றும் மண் வளம், தோட்டக்கலைப் பயிர்ச் சாகுபடிக்கு மிகவும் ஏற்றதாக உள்ளதாலும், இப்பயிர்கள் சாகுபடி மூலம் விவசாயிகள் கூடுதல் வருவாய் பெற வாய்ப்புள்ளதாலும், காய்கறி மற்றும் பழங்கள், மூலிகைப் பயிர்கள் ஆகியவற்றால் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு கிடைக்கும் என்பதாலும், தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியைத் தேசிய தோட்டக்கலை



இயக்கம் மூலம் பெருமளவில் ஊக்குவித்து மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வேளாண் விளைபொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திட, உழவர் சந்தை வசதி, அறுவடைக்குப்பின் நேர்த்தி, அழுகும் பொருட்களை குளிர்பதன கிடங்குகளில் பாதுகாத்தல், உணவு பதப்படுத்துதல், ஏற்றுமதி மண்டலங்கள் அமைத்தல், விற்பனை முனையங்கள் அமைத்தல் ஆகியவற்றின்மூலம் நல்ல விலை கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், உணவுப் பொருட்கள் 30 சதவீதம் வீணாவதைத் தடுத்து, மொத்த உற்பத்தியில் உணவு பதப்படுத்துதலை ஒரு சதத்திலிருந்து பத்து சதமாக அதிகரிக்கவும், மதிப்புக் கூட்டுதலை ஏழு சதத்திலிருந்து 30 சதமாக உயர்த்துவதன்மூலமும், விவசாயிகளுக்கு உற்பத்திக்கேற்ற உரிய விலை கிடைக்கவும், உணவு பதப்படுத்துதல் தொழிலை ஊக்கப்படுத்தி ஏற்றுமதி செய்வதால் அன்னியச் செலாவணியை ஈட்டவும் வேளாண் தொழிற் கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற் கொள்கையின்கீழ் தொழிற் சாலைகளுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் வேளாண் தொழிற்சாலைகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் நுண்பாசன கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கும் வழங்கப்படும்.

[2008 ஏப்ரல் 4

## அத்தியாயம் 2

## வேளாண்மை

### 1. முன்னுரை

தமிழகத்தின் 56 சதவீத மக்கள் வாழ்வாதாரத்திற்கு முதன்மைத் தொழிலான வேளாண்மையைச் சார்ந்துள்ளனர். மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 13 சதவீதம் வேளாண்மைமூலம் கிடைக்கிறது. 11-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வேளாண்மையில் வளர்ச்சி இலக்கான 4 சதவீதத்தினை எட்டுவதற்கு இவ்வரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. வேளாண்மைக்கு அடிப்படையான செழிப்பான நிலம், தரமான நீர் மற்றும் அதிக சூரிய வெளிச்சம் ஆகியவை தமிழகத்தில் இருந்தபோதிலும், அதற்கேற்ப முழு அளவிற்கு உற்பத்தி திறன் உயரவில்லை.

நெற்பயிரில் செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்ப முறைகளை முறையாக கடைப்பிடிப்பதன்மூலம் நெல் உற்பத்தித் திறன் ஒரு எக்டேருக்கு 10 டன்களுக்கு மேல் பெற முடியுமென நிரூபிக்கப் பட்டுள்ளது. இத்தொழில்நுட்பத்தை கடைப்பிடித்ததால் ஒரு எக்டேருக்கு உற்பத்தித்திறன் அதிகபட்சமாக 13 டன்கள் வரை பெறப்பட்டுள்ளது. எனவே மாநிலத்தில் நெற் பயிரின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக செம்மை நெல் சாகுபடி முறையினை அதிகப் பரப்பில் மேற்கொள்ள அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கும்.

கரும்பு, பருத்தி, வாழை, காய்கறிகள் மற்றும் மலர் வகைகள் போன்ற வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் சொட்டுநீர் வழி உரமிடல் முறையுடன் அனைத்து தொழில்நுட்பங்களையும் ஒருங்கிணைத்து துல்லிய பண்ணைய முறையினைக் கடைப்பிடித்து சாகுபடி மேற்கொள்வதன்மூலம் மிக அதிக அளவிற்கு உற்பத்தித் திறனை உயர்த்த முடியும். துல்லிய பண்ணைய முறையினால் தற்போதைய உற்பத்தி திறனைவிட இரண்டிலிருந்து மூன்று மடங்குவரை உற்பத்தி திறனை உயர்த்த முடியும் என்பதோடு விளை பொருட்களின் தரமும் உயரும். அரசு இத்தொழில்நுட்பத்தை தொகுப்பு அடிப்படையில் அதிக பரப்பளவில் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மண் வளத்தினை மேம்படுத்த இயற்கை உரம் அதிக அளவில் இட வேண்டியது அவசியமாகும். எனவே, பண்ணையில் கிடைக்கும்



2008 ஏப்ரல் 4]

பயிர்க் கழிவுகளைக்கொண்டு இயற்கை உரம் தயாரிக்கவும், நகராட்சி கழிவுகளை மக்கச் செய்து உரமாக்கும் திட்டத்திற்கும் அரசு முக்கியத்துவம் வழங்கும். மண் ஆய்வின் அடிப்படையில் பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட சத்துக்களை இடுவதன்மூலம் பயிர் உற்பத்தித் திறனை உயர்த்த முடியும் என்பதால் அனைத்து மாவட்டங்களிலும் நவீன ஆய்வு உபகரணங்களுடன் கூடிய மண் ஆய்வுக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. சிறு மண் பரிசோதனை நிலையங்களுடன் கூடிய வேளாண் ஆலோசனை மையங்களை பொது மற்றும் தனியார் பங்கேற்புடன் வட்டார அளவில் உருவாக்கி, விரிவாக்கப் பணி, இடுபொருட்கள் விநியோகம் மற்றும் மண் ஆய்வுப் பணிகளை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நெல் நடவு இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள், கரும்பு அறுவடை இயந்திரங்கள் போன்ற பண்ணை இயந்திரங்களை பிரபலப்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

வேளாண் தொழில்நுட்பங்களை கிராம அளவில் திறம்பட கொண்டுசெல்வதற்காக போதுமான தொழில்நுட்ப அலுவலர்களை வட்டார மற்றும் கிராம அளவில் பணி அமர்த்தும் வகையில், வேளாண் மற்றும் சகோதரத் துறைகளில் மூன்றடுக்கு நிர்வாக அமைப்பை ஈரடுக்கு நிர்வாக அமைப்பாக மாற்றி துறை மறுசீரமைக்கப்பட்டுள்ளது. விரிவாக்கப் பணிகளை விரைவாக மேற்கொள்வதற்காக, பெரும் எண்ணிக்கையில் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 2. பருவ நிலை

2007-08 ஆம் ஆண்டில் இயல்பான மழை பெறப்பட்டுள்ளது. எனினும் செப்டம்பர் 2007-ல் பெறவேண்டிய இயல்பான மழை அளவான 112.5 மி.மீட்டருக்கு பதிலாக 31 சதவீதம் குறைவாக 77.3 மி.மீட்டர் மழை பெறப்பட்டது. இதனால் மானாவாரிப் பயிர்களான மக்காச்சோளம் மற்றும் நிலக்கடலைப் பயிர்கள் பாதிக்கப்பட்டன. டிசம்பர் 2007ஆம் மாதம் பெய்த பெருமழையின் காரணமாக, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், திருவண்ணாமலை, தருமபுரி, கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், திருச்சி, பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இருபது மாவட்டங்கள் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாயின.

## 2.1 வெள்ள பாதிப்பு

[2008 ஏப்ரல் 4

டிசம்பர் 2007 ஆம் மாதம் பெறப்பட்ட வடகிழக்குப் பருவ பெருமழையின் காரணமாக தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் பயிர்கள் பாதிப்புக்குள்ளாயின. மாநிலத்தில் ஏற்பட்ட பயிர் பாதிப்பு விவரம் வருமாறு:

| வ.எண் | பயிர் | பாதிப்புக்குள்ளான பரப்பு (எக்டேரில்) | | | |
|---|---|---|---|---|---|
| | | மானாவாரி பயிர்கள் (50 %க்கு மேல் பாதிப்பு) | இறவை பயிர்கள் (50%க்கு மேல் பாதிப்பு) | நீண்ட கால பயிர்கள் | மொத்தம் |
| 1 | நெல் | 381.00 | 119118.12 | -- | 119499.12 |
| 2 | சிறு தானியங்கள் | 1998.00 | 25.30 | -- | 2023.30 |
| 3 | பயறு வகைகள் | 12840.00 | 275.00 | -- | 13115.00 |
| 4 | எண்ணெய் வித்துக்கள் | 2308.00 | 21136.00 | -- | 23444.00 |
| 5 | பருத்தி | 19.00 | 19.00 | -- | 38.00 |
| 6 | கரும்பு | -- | 20.27 | -- | 20.27 |
| 7 | புகையிலை | -- | 24.00 | -- | 24.00 |
| 8 | தென்னை | -- | -- | 0.28 | 0.28 |
| | **மொத்தம்** | **17546.00** | **140617.69** | **0.28** | **158163.97** |

நடுவண் அரசின் விதிமுறைகளின்படி பாதிக்கப்பட்ட மானாவாரி பயிர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக எக்டேருக்கு ரூ. 2,000/-ம், இறவைப் பயிர்களுக்கு ரூ. 4,000/-ம், நீண்ட காலப் பயிர்களுக்கு ரூ. 6,000/-மும் வழங்கப்படுகிறது. இந்த வெள்ள நிவாரண நிதி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள்மூலமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

பாதிப்புக்குள்ளான 1,58,163.97 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடு செய்யும்வகையில், ரூ. 59.76 கோடி நிவாரணத் தொகை கணக்கிடப்பட்டு, ரூ. 57.106 கோடி விடுவிக்கப்பட்டு, ரூ. 56.5 கோடி, 3,60,954 விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. நிவாரணம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.



2008 ஏப்ரல் 4]

போதிய நீர் இருப்பு இல்லாத காரணத்தால் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணை இயல்பாக திறந்து விடும் நாளான ஜ௺ன் 12-க்குப் பதிலாக ஜ௺லை 18 ஆம் நாள் அன்று திறந்து விடப்பட்டது. மேட்டூர் அணையின் நீர் அளவு நடப்பு ஆண்டில் அதன் முழு கொள்ளளவை எட்டு முறை எட்டியது. இதனால் சம்பா சாகுபடியில் நல்ல விளைச்சல் பெற உதவியாக இருந்தது. டிசம்பர் 2007 ஆம் மாதம் பெறப்பட்ட கூடுதல் மழையினால் மாநிலத்தின் பெருவாரியான அணைகளிலும் ஏரிகளிலும் நீர்மட்டம் போதிய அளவிற்கு உயர்ந்ததோடு, நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்துள்ளது. பொதுவாக மாநிலத்தின் சில பகுதிகளில் வறட்சியும் வெள்ள பாதிப்பும் ஏற்பட்ட போதிலும் இவ்வாண்டு இலக்கினைவிட கூடுதலாக உணவு தானிய உற்பத்தி அடையப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில் பருவ வாரியாக பெறப்பட்ட மழை விவரம் வருமாறு:

அளவு: மி.மீ.

| பருவம் | இயல்பான மழை அளவு | பெறப்பட்ட மழையளவு | | இயல்பு மழையிலிருந்து வேறுபாடு (விழுக்காட்டில்) | |
|---|---|---|---|---|---|
| | | 2006 | 2007 | 2006 | 2007 |
| **2007** | | | | | |
| குளிர் காலம் (ஜனவரி–பிப்ரவரி) | 36.8 | 15.6 | 11.4 | (-) 57.6 | (-) 69.0 |
| கோடை காலம் (மார்ச் – மே) | 129.7 | 150.4 | 100.9 | (+) 16.0 | (-) 22.2 |
| தென் மேற்கு பருவம் (ஜ௺ன் – செப்டம்பர்) | 332.8 | 264.6 | 341.6 | (-) 20.5 | (+) 2.6 |
| வடகிழக்குப் பருவம் (அக்டோபர் – டிசம்பர்) | 431.4 | 496.3 | 515.4 | (+) 15.0 | (+) 19.5 |
| மொத்தம் | 930.7 | 926.9 | 969.3 | (-) 0.4 | (+) 4.2 |
| **2008** | | | | | |
| | | 2007 | 2008 | 2007 | 2008 |
| குளிர் காலம் (ஜனவரி–பிப்ரவரி) | 36.8 | 11.4 | 46.2 | ( - ) 69.0 | ( + ) 25.5 |

[2008 ஏப்ரல் 4

## 2.2 பயிர் சாகுபடி மற்றும் உற்பத்தி 2007-08

2007-2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிர் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி விவரம் வருமாறு:

| பயிர் | பரப்பு (இலட்சம் எக்டேரில்) | | உற்பத்தி (இல.மெ.டன்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | எதிர்நோக்கும் சாதனை | இலக்கு | எதிர்நோக்கும் சாதனை |
| நெல் | 21.50 | 21.00 | 78.00 | 75.60 |
| சிறு தானியங்கள் | 12.00 | 12.00 | 13.80 | 19.80 |
| பயறு வகைகள் | 8.50 | 9.00 | 3.70 | 4.95 |
| **மொத்த உணவு தானியங்கள்** | **42.00** | **42.00** | **95.50** | **100.35** |
| எண்ணெய் வித்துக்கள் | 10.00 | 9.00 | 17.00 | 15.30 |
| பருத்தி (இல.பொதிகள்) | 1.50 | 1.30 | 3.50 | 3.10 |
| கரும்பு (வெல்லமாக) | 3.50 | 3.80 | 41.00 | 46.36 |
| **மொத்தம்** | **57.00** | **56.10** | | |

## 2.3 பயிர் சாகுபடி மற்றும் உற்பத்தி இலக்கு 2008-2009

2008-2009 ஆம் ஆண்டு பயிர் சாகுபடி மற்றும் உற்பத்திக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு வருமாறு:

| பயிர் | சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டேரில்) | உற்பத்தி (இல. மெ. டன்) |
|---|---|---|
| நெல் | 21.50 | 80.00 |
| சிறு தானியங்கள் | 12.00 | 21.00 |
| பயறு வகைகள் | 12.00 | 7.00 |
| **மொத்த உணவு தானியங்கள்** | **45.50** | **108.00** |
| எண்ணெய் வித்துக்கள் | 10.00 | 17.50 |
| பருத்தி (இல.பொதிகள்) | 1.50 | 4.00 |
| கரும்பு (வெல்லமாக) | 3.50 | 47.25 |
| **மொத்தம்** | **60.50** | |



2008 ஏப்ரல் 4]

## 3. செம்மை நெல் சாகுபடி

2007-08 ஆம் ஆண்டில் செம்மை நெல் சாகுபடி (எஸ்.ஆர்.ஐ.) தொழில்நுட்பத்தை பின்பற்றி தானிய மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 11,320 எக்டேர் பரப்பில் செயல் விளக்கம் செய்யப்பட்டு, எக்டேர் ஒன்றுக்கு ரூ.2,000/- மானியமாக வழங்கப்பட்டதுடன், 56,600 விவசாயிகளுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது. இந்த தொழில் நுட்பத்தின்மூலம் எக்டேருக்கு 10,000 கிலோ வரை உற்பத்தித் திறன் அடையப்பட்டுள்ளது. இதன்மூலம் 2007-08 ஆம் ஆண்டில் செம்மை நெல் சாகுபடி பரப்பு 4.20 இலட்சம் எக்டேராக உயர்ந்தது. செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பத்தின்மூலம் அடையப் பெறும் உற்பத்தித் திறனை கருத்தில் கொண்டு 2008-09 ஆம் நிதி ஆண்டில் செம்மை நெல் சாகுபடி பரப்பு 7.5 இலட்சம் எக்டேராக உயர்த்தப்படும்.

### 3.1 உற்பத்தி இலக்கினை 2008-09 ஆம் ஆண்டில் அடைவதற்கான முக்கிய செயல்பாடுகள்

- மண் வளத்தை பாதுகாக்க, மண் ஆய்வு பரிந்துரைப்படி பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட சத்து உரங்கள், இயற்கை உரம், தழை உரம், உயிர் உரம் ஆகியவற்றினை இடுதல்.
- பயறு வகைகள், மக்காச்சோளம் மற்றும் மணிலா ஆகிய பயிர்களை மாற்றுப் பயிராக, இருக்கும் நீரைக் கொண்டு அதிகபட்ச பரப்பில் சாகுபடி செய்தல்.
- தரமான விதைகள் விநியோகம் மற்றும் விதை கிராம திட்டத்தின்மூலம் பண்ணை அளவில் தரமான விதைகளை உற்பத்தி செய்தல்.
- துல்லிய பண்ணையம் மூலமாக சொட்டு நீர் வழி உரமிடல் மற்றும் அனைத்து தொழில் நுட்பங்களையும் கடைப்பிடித்து விஞ்ஞான முறையில் சாகுபடி செய்தல்.
- அரிசி உற்பத்தியினை உயர்த்த செம்மை நெல் சாகுபடி முறையினை ஊக்குவித்தல்.
- நுண்ணீர்ப் பாசனத்துடன் கூடிய பி.டி. பருத்தி இரகங்கள் சாகுபடியினை ஊக்குவித்தல்.
- விதை நேர்த்தி முறையினை பிரபலப்படுத்துதல்.

[2008 ஏப்ரல் 4

- மானாவாரி நில மேம்பாடு மற்றும் சிறுதானிய சாகுபடியை ஊக்குவித்தல்.
- இயற்கை உர உற்பத்தி மற்றும் இயற்கை பண்ணையத்தினை ஊக்குவித்தல்.
- மானாவாரி பகுதிகளில் தொகுப்பு முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் / மரப் பயிர்களை வளர்த்தல்.
- நெல் நடவு செய்யும் இயந்திரங்கள், நெல் அறுவடை இயந்திரங்கள், கரும்பு அறுவடை இயந்திரங்கள் போன்ற பண்ணை இயந்திரங்கள் உபயோகப்படுத்துவதை ஊக்குவித்தல்.
- கிராம / வட்டார அளவில் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களின் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து சாகுபடி செய்ய ஒருங்கிணைந்த ஆலோசனை வழங்குதல்.
- விரிவாக்கப் பணியினை கிராம அளவில் தீவிரப்படுத்தி விவசாயிகளுக்கு உரிய பயிற்சி வழங்குதல்.
- தனியார் விரிவாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் சிறிய மண் பரிசோதனை நிலையங்களுடன் கூடிய வேளாண் ஆலோசனை மையங்கள் (அக்ரி கிளினிக்) அமைத்தல்.
- வேளாண் வளர்ச்சிக்கு பண்ணை மகளிர் குழுக்களையும் விவசாய ஆர்வலர் குழுக்களையும் ஈடுபடுத்துதல்.

**4. மாநிலத் திட்டங்கள்:**

**4.1 தரமான விதை விநியோகம்**

மரபணு கலப்பில்லாத புறத்தூய்மை கொண்ட தரமான விதைகள் உற்பத்தித் திறனை உயர்த்த பெருமளவிற்கு உதவும். தனியார் மற்றும் பொது விற்பனை மையங்கள்மூலமாக நல்ல தரமான, தேவையான இரக விதைகள் உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதில் அரசு கவனத்துடன் செயல்படுகிறது.

நடுவண் அரசின் பரிந்துரைப்படி, தேவைப்படும் விதைமாற்று விகிதம் தன் மகரந்த சேர்க்கைப் பயிர்களுக்கு 25 சதமும், அயல் மகரந்த சேர்க்கைப் பயிர்களுக்கு 35 சதமும், வீரிய ஒட்டு இரகப் பயிர்களுக்கு 100 சதமும் ஆகும். 2007-08 ஆம் ஆண்டில்



2008 ஏப்ரல் 4]

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தரமான விதை மற்றும் அடையப் பெற்ற விதை மாற்று சதவீதம் வருமாறு:

(மெ.டன்னில்)

| வ எ ண் | பயிர் | வகை | 100 சத விதை தேவை | 2007–08ஆம் ஆண்டு விதை விநியோகம் | | | பெறப் பட்ட விதை மாற்று சதவீதம் | பரிந்துரைக் கப்பட்ட விதை மாற்று விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பொது | தனி யார் | மொத் தம் | | |
| 1 | நெல் | தன் மகரந்த சேர்க்கை | 107500 | 17828 | 47169 | 64997 | 62 % | 25% |
| 2 | சிறு தானியங் கள் | அயல் மகரந்த சேர்க்கை (கேழ்வரகு தவிர) | 11310 | 400 | 5862 | 6262 | 55 % | 35 % |
| 3 | பயறு வகைகள் | தன் மகரந்த சேர்க்கை | 24000 | 1800 | 3019 | 4819 | 20% | 25 % |
| 4 | எண் ணெய் வித்துக் கள் | தன் மகரந்த சேர்க்கை (சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு தவிர) | 162375 | 4500 | 20815 | 25315 | 16% | 25 % |
| 5 | பருத்தி | அயல் மகரந்த சேர்க்கை | 1000 | 156 | 798 | 954 | 95% | 35% |

மக்காச்சோளம், சூரியகாந்தி மற்றும் பருத்தி வீரிய ஒட்டு இரகங்கள் 100 சதவீதம் விதை மாற்று விகிதத்தில் வழங்கப்படுகிறது.

எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைகளைப் பொறுத்தவரை பொது மற்றும் தனியார் துறைகளின் பங்கேற்போடு விதை மாற்று சதவீதத்தினை 25 சதவிதம் என்ற அளவிற்கு உயர்த்தத் தேவையான சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்படும் கரு விதைகளைக்கொண்டு வேளாண்மைத் துறை விதை உற்பத்தியினை நேரடியாக மேற்கொண்டு வருகிறது. 43 அரசு விதைப் பண்ணைகளில் ஆதார விதைகள் உற்பத்தியும், விவசாயிகளின் நிலங்களில் சான்று விதைகள் உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகின்றன. தனியார் விதை

உற்பத்தியாளர்களும் விவசாயிகளின் நிலங்களில் விதைப் பண்ணை [2008 ஏப்ரல் 4
அமைத்து விதை உற்பத்தி செய்கின்றனர். துறை மற்றும் தனியார்
விதை உற்பத்தியாளர்கள்மூலம் அமைக்கப்படும் விதைப் பண்ணைகள்
விதைச் சான்று துறையில் பதிவு செய்யப்பட்டு தரமான விதை
உற்பத்தி உறுதி செய்யப்படுகிறது. இவ்வாறு துறைமூலம் உற்பத்தி
செய்யப்படும் சான்று விதைகள் துறையின்கீழ் இயங்கி வரும்
379 பிரதான வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் 501 துணை
மையங்கள் மூலமாகவும், தனியார் உற்பத்தி செய்யும் விதைகள்
5,313 தனியார் விதை விற்பனை மையங்கள் மூலமாகவும்
விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

பல்வேறு பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்த தரமான
விதைகள் மற்றும் நடவுப் பொருட்களை விவசாயிகளுக்கு வழங்கவும்,
வீரிய ஒட்டு இரக விதைகளை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு
வழங்குவதற்கு அரசு முனைப்பான முயற்சிகளை மேற்கொள்கிறது.
இதன் அடிப்படையில் விதை சம்பந்தப்பட்ட அனைத்துப்
பணிகளையும் வலுப்படுத்தும் வகையில் தமிழ்நாடு மாநில விதை
உற்பத்தி முகமையைத் தனியாக ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து
வருகிறது.

மேலும் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:-

- விதை கிராமத் திட்டத்தின்கீழ் நெல், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள் ஆகிய பயிர்களில் 50 சதம் மானிய விலையில் முறையே 1,930 மெட்ன் நெல் விதை, 220 மெட்ன் எண்ணெய் வித்துக்கள் விதை மற்றும் 40 மெட்ன் பயறு வகைகள் விதை ஆகியவை விநியோகம் செய்யவும், 15,000 விவசாயிகளுக்கு விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி வழங்கவும், ரூ.2 கோடி செலவில் . திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மேலும் தீவிரப்படுத்த நடுவண் அரசிடமிருந்து கூடுதலாக ரூ.2 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.
- 2007-08 ஆம் ஆண்டு சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கவும், தற்போதுள்ள பழுதடைந்த விதை சுத்திகரிப்பு நிலையங்களைப் பழுது நீக்கம் செய்யவும், 50 எண்கள் விதைக் கோணிகள் தைக்கும் கருவிகள் வாங்கவும் ரூ.28.00 இலட்சம் நிதி பகுதி 2 திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டது.



2008 ஏப்ரல் 4]

- பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களில் விதை மாற்று சதவீதம் 25 சதவீதத்திற்குக் குறைவாகவே உள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் சிறப்புக் கவனத்துடன் செயல்படுத்தும் 9 மாவட்டங்களான கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் மகளிர் குழுக்கள் மற்றும் விவசாய ஆர்வலர் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கி, விதை உற்பத்தி மேற்கொள்வதன்மூலம் விதை மாற்று விகிதத்தினை பரிந்துரைக்கப்படும் அளவிற்கு உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.2 மண் வள மேம்பாடு மற்றும் மேலாண்மை

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான மண் வகைகளிலும் அங்ககப்
பொருட்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் அளவும் பரவலாக
குறைந்து காணப்படுகிறது. எனவே, மண் ஆய்வுக்கேற்ப பேரூட்ட
மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை இடும் முறையை மேற்கொள்ளும்
வகையில் அனைத்துப் பண்ணைக் குடும்பங்களுக்கும் மண்வள
அட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக
2007-08 ஆம் ஆண்டில் திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை,
நாமக்கல், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம்,
திருவாரூர், விருதுநகர் மற்றும் அரியலூர் ஆகிய 11 மாவட்டங்களில்
புதிய மண் ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மண்வள
அட்டை வழங்கும் திட்டத்தினை விரைவாக செயல்படுத்த
அனைத்து மாவட்டங்களிலும் மண் ஆய்வகங்கள்
அமைக்கப்பட்டுள்ளன. நுண்ணூட்டச் சத்துக்களை ஆய்வு செய்ய -
"அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர்" என்ற
அதி நவீன கருவியும் அனைத்து ஆய்வுக் கூடங்களுக்கும்
வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் எளிதில் அணுகி, மண் ஆய்வு
செய்துகொள்ள உதவிடும் வகையில், வட்டார அளவில் சிறிய மண்
ஆய்வு வசதியுடன்கூடிய 224 வேளாண் ஆலோசனை மையங்கள்
(அக்ரி கிளினிக்) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்
அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2007-08 ஆம் ஆண்டு மண் வளத்தினை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் பின்வரும் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது:-

**4.2.1.** பசுந்தாள் உர விதை உற்பத்தி மற்றும் விநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணில் உள்ள இயற்கை அங்ககச் சத்துகளின் அளவினை அதிகரிக்க பயிர் சுழற்சியில் பசுந்தாள் உர பயிர்களை சாகுபடி செய்யும் முறையினை மீண்டும் மேற்கொள்ளும் வகையில் 250 மெட்ரிக் டன் பசுந்தாள் உர விதைகள் உற்பத்தி செய்து, 25 சதவீதம் மானிய விலையில் ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டது. 2008-09 ஆம் ஆண்டு 250 மெட்ரிக் டன் பசுந்தாள் உர விதை உற்பத்தி செய்து மானிய விலையில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

**4.2.2.** புளூரோட்டஸ்மூலம் பண்ணைக் கழிவினை கம்போஸ்ட் உரமாக்கும் திட்டத்தில் ஒரு கிலோ புளூரோட்டஸ், 5 கிலோ யூரியா மற்றும் தொழில்நுட்ப விவரங்கள் கொண்ட பிரசுரம் அடங்கிய ரூ.120 மதிப்புடைய 5,000 சிறுதளைப் பைகள் ரூ.6 இலட்சம் செலவில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 2008-09 ஆம் ஆண்டில் 5,000 சிறுதளைப் பைகள் ரூ.6 இலட்சம் ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

**4.2.3.** மண்புழு உரம் உற்பத்தியை ஊக்குவிக்க 122 செயல் விளக்கங்கள் அமைத்து, 6,100 விவசாயிகளுக்கு ரூ.4.71 இலட்சம் செலவில் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் 150 செயல் விளக்கங்கள் அமைக்கவும், 15,000 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், ரூ.11.55 இலட்சம் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

**4.2.4.** ஒருங்கிணைந்த உர மேலாண்மை செயல்பாடுகளின்கீழ் உயிர் உரங்களான ரைசோபியம், அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியம் போன்றவற்றின் உபயோகம் உயர்த்தப்படுகிறது. கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, சாக்கோட்டை மற்றும் திருச்சி ஆகிய 6 உயிர் உர உற்பத்தி மையங்கள்மூலம் நுண்ணுயிர் பொட்டலங்கள் உற்பத்திச் செய்யப்பட்டு, வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் 80 இலட்சம் நுண்ணுயிர் பொட்டலங்கள் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 79.25 இலட்சம் நுண்ணுயிர் பொட்டலங்கள் உற்பத்தி





செய்யப்பட்டு, பிப்ரவரி 2008 முடிய 74 இலட்சம் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 2008-09 ஆம் ஆண்டு, 80 இலட்சம் நுண்ணுயிர் பொட்டலங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படும்.

**4.2.5.** 2007-08 ஆம் ஆண்டில் 525 மெட்ரிக் டன்கள் நீலப்பச்சைப் பாசியும், 500 மெட்ரிக் டன்கள் அசோலாவும் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகிக்கப்பட்டுள்ளன. 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**4.2.6.** பெரும்பாலான பகுதிகளில் மண்ணில் நுண்ணூட்டச் சத்துப் பற்றாக்குறை உள்ளது. எனவே, விவசாயிகள் மண் ஆய்வின் அடிப்படையிலும், நுண்ணூட்டச் சத்துக் குறைவுள்ள பகுதிக்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையின் அடிப்படையிலும் நுண்ணூட்ட உரமிட பரிந்துரைக்கப்படுகின்றனர். குடுமியான்மலையில் உள்ள நுண்ணூட்ட உர உற்பத்தி மையம்மூலம் ஆண்டுக்கு 1,400 மெ.டன்கள் பல்வேறு பயிர்களுக்கான 14 வகையான நுண்ணூட்ட உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் படுகின்றன. 2008-09 ஆம் ஆண்டு 1,400 மெட்ரிக் டன் நுண்ணூட்ட உரங்கள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படும்.

**4.2.7.** தமிழகத்தில் உள்ள 80 இலட்சம் பண்ணைக் குடும்பங்களுக்கும் படிப்படியாக மண்வள அட்டையினை விநியோகிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. குறுகிய காலத்திற்குள்ளாக மண்வள அட்டைகளை முழுமையாக வழங்குவதற்காக, 2007-08 ஆம் ஆண்டில் ரூ.0.77 கோடி செலவில் 11 புதிய மண் ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிறிய மண் ஆய்வகங்கள் கூடிய 224 வேளாண்மை ஆலோசனை மையங்கள் (அக்ரி கிளினிக்) ரூ.7.16 கோடியில் அமைக்கவும், ரூ.3.40 கோடி செலவில் 13 நடமாடும் மண் ஆய்வகங்களுக்குப் புதிய வாகனங்கள் வாங்கவும், மண் ஆய்வுக் கூடங்களை வலுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2006-07 ஆம் ஆண்டில் 4.12 இலட்சம் மண்வள அட்டைகளும், 2007-08 ஆம் ஆண்டில் பிப்ரவரி முடிய 5.06 இலட்சம் மண்வள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. 2008-09 ஆம் ஆண்டு 10 இலட்சம் மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2008 ஏப்ரல் 4

**4.2.8.** நாகப்பட்டினம், திருவாரூர், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஆண்டுதோறும் மாவட்டத்திற்கு 500 ஏக்கர் வீதம் 4,000 ஏக்கர் களர் / உவர் நிலங்கள் சீர்திருத்தம் செய்யப்படுகின்றன. இதற்காக ஜிப்சம் மற்றும் துத்தநாக சல்பேட் 50 சதவீத மானிய விலையிலும், வடிகால் வசதி ஏற்படுத்த உதவித் தொகையாக ஏக்கருக்கு ரூ.1,000/- வீதம் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

### 4.3 உர விநியோகம்

அதிகபட்ச உற்பத்தித் திறனை பெற தேவைக்கேற்ப உரமிடுவது அவசியமாகும். தேவைக்கு அதிகமாக அல்லது குறைவாக உரமிடுவதால் உற்பத்தித்திறனில் குறைவு ஏற்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டில் நிலவும் சாதகமான பருவ நிலையால் கூடுதல் பரப்பில் சாகுபடி மேற்கொள்வதைக் கருத்தில்கொண்டு, தேவையான அளவு உரங்களை உரிய நேரத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. உரக் கட்டுபாடு சட்டம், 1985-ன்படி, யூரியா, டி.ஏ.பி., மற்றும் மூரியேட் ஆப் பொட்டாஷ் போன்ற உரங்களின் இருப்பு வேளாண் துறைமூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. 2007-08 ஆம் ஆண்டில் இரசாயன உர விநியோகம் மற்றும் 2008-09 ஆம் ஆண்டின் திட்டம் வருமாறு:

| ( அலகு. இலட்சம் மெ.டன்) | | | |
|---|---|---|---|
| சத்துக்கள் | 2007–08 | | 2008–09 ஆம் ஆண்டிற்கான திட்டம் |
| | இலக்கு | பிப்ரவரி 2008 முடிய சாதனை | |
| தழை | 5.55 | 4.70 | 5.55 |
| மணி | 2.38 | 2.08 | 2.38 |
| சாம்பல் | 2.32 | 2.48 | 2.50 |
| மொத்தம் | **10.25** | **9.26** | **10.43** |



2008 ஏப்ரல் 4]

நடப்பாண்டில் உர இருப்பு மற்றும் விநியோகம் நடுவண் அரசின் "உரக் கண்காணிப்பு அமைப்பின்" மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்த விவரங்களை www.urvarak.co.in என்ற வலைதளத்தை அணுகி எளிதில் அறிந்து கொள்ளலாம். 2007-08 ஆம் ஆண்டில் யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்களின் விநியோகம் திருப்திகரமாக இருந்தது என்பதால் விவசாயிகளின் உரத் தேவைகள் ஈடுசெய்யப்பட்டன. ஆனால், டி.ஏ.பி. உரத்தை பொறுத்தவரை பாஸ்பாரிக் அமிலம் போன்ற மூலப் பொருட்களின் விலை உயர்வால் சில நிறுவனங்கள் உற்பத்தியை நிறுத்தின. மேலும், டி.ஏ.பி. இறக்குமதியும் குறைந்ததனால், பல்வேறு மாநிலங்களில் டி.ஏ.பி. உரத் தட்டுப்பாடு ஏற்பட்டது. தமிழக விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப விநியோகம் செய்வதற்கு மாநில அரசு, நடுவண் அரசை அணுகி தேவையான டி.ஏ.பி. உர ஒதுக்கீட்டினை விரைந்து பெற நடவடிக்கை எடுத்தது. இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நடுவண் அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இத்தகைய முயற்சிகளினால் நடுவண் அரசு, இறக்குமதியாளர்களிடமிருந்து டி.ஏ.பி. உரத்தினை வாங்க மாநில அளவில் முகமை ஒன்றினை அமைக்க பரிந்துரைத்தது. இதன்படி டி.ஏ.பி. உரம் டான்பெட் நிறுவனம்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள்மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. இந்தியன் பொட்டாஷ் நிறுவனம் மற்றும் ராஷ்டிரிய உர நிறுவனம் போன்ற இறக்குமதியாளர்களுக்கு முன்பணம் வழங்கும் பொருட்டு டான்பெட் நிறுவனத்திற்கு மாநில அரசு ரூ.30.00 கோடி நிதி அளித்தது. டான்பெட் நிறுவனம் 75,266 மெட்ரிக் டன் டி.ஏ.பி. மற்றும் மோனோ அம்மோனியம் பாஸ்பேட் உரத்தினை வாங்கி, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள்மூலம் 66,000 மெட்ரிக் டன் விநியோகம் செய்துள்ளது. மாநில அரசு டான்பெட் நிறுவனத்திற்கு வழங்கியுள்ள இந்த நிதியுதவியினால் உரிய காலத்தில் விவசாயிகளின் தேவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டது.

துல்லியப் பண்ணையத்தில் உற்பத்தித் திறனைப் பெருக்க சொட்டு நீர் வழி உரமிடல் முறை பெருமளவில் பரிந்துரைக்கப்படுகிறது. நீரில் கரையும் உரங்களின் விலை அதிகமாக இருப்பதால், மற்ற இரசாயன உரங்களைப்போல இவ்வுரங்களுக்கும் மானியம் அளிக்க நடுவண் அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### 4.3.1 உரங்களில் தரக் கட்டுப்பாடு

மாநிலத்தில் உரக் கட்டுப்பாடு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, ஆண்டுக்கு 17,500 உர மாதிரிகளை ஆய்வு செய்யும் திறனுள்ள 14 உர தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2008 முடிய 16,654 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. தற்போது ஆய்வகங்கள் இல்லாத மாவட்டங்களில் 16 புதிய உரக் கட்டுபாட்டு ஆய்வகங்களை தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதி உதவியுடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2008-09 ஆம் ஆண்டு 17,500 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்படும்.

### 4.4 பயிர் பாதுகாப்பு

அதிக உற்பத்தியினை அடைய பயிர்களை பூச்சி மற்றும் நோய்களிலிருந்து பாதுகாப்பது முக்கியமானதாகும். பூச்சி, நோய் பாதிப்பை தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன்மூலம் பூச்சி மருந்துகளின் உபயோகம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது. உழவர் வயல்வெளிப் பள்ளிகள்மூலம் பருவம் முழுவதற்குமான ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றி பயிற்சிகள் அளிக்கப்பட்டு, இத்தொழில்நுட்பத்தை அறிந்து கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பூச்சி நோய் மேலாண்மையில் பின்வரும் முக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கரும்பு பயிரில் இடைக்கணுப்புழு, தென்னையில் கருந்தலைப்புழு மற்றும் காண்டாமிருக வண்டு, மணிலாவில் சிவப்பு கம்பளிப்புழு மற்றும் புரோடீனியா ஆகியவற்றை கட்டுப்படுத்த உரிய உயிரியல் காரணிகளை இம்மாநிலத்தில் இயங்கும் 10 உயிரியல் காரணிகள் கட்டுபாட்டு மையங்கள், 2 ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையங்கள் மற்றும் 59 ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள்மூலம் உற்பத்தி செய்து, சுமார் ஒரு இலட்சம் எக்டர் பரப்பில் கட்டுபாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- நெற்பயிரில் 590 உழவர் வயல்வெளிப் பள்ளிகள், எண்ணெய் வித்துக்களில் 100 ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கங்கள், பயறு வகைகளில் 200 செயல் விளக்கங்கள், மக்காச்சோளப் பயிரில் 34 செயல் விளக்கங்கள் மற்றும்



பருத்திப் பயிரில் 700 உழவர் வயல்வெளிப் பள்ளிகள் நடத்தப்பட்டு 48,720 விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.

- 94.892 இலட்சம் தென்னை மரங்களில் செம்பான் சிலந்தியினைக் கட்டுப்படுத்த ரூ.2277.40 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- பருத்தி காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்த விவசாயிகளால் பெருமளவில் வரவேற்கப்பட்ட எதிர்ப்புச் சக்தியுள்ள பி.டி. பருத்தி இரகங்கள் பரவலாகப் பயிர் செய்வது ஊக்கு விக்கப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டு பி.டி. பருத்தி 45 சதவிகித பருத்தி சாகுபடி பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது. மாநில மற்றும் மாவட்ட அளவில் பி.டி. பருத்தி கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு, பி.டி. பருத்தியின் தன்மைகள் கணக்கிடப்படுகிறது. தேசிய அளவில் பி.டி. பருத்தி வெளியிடப்படுவதற்கு முன்னரும், இரகம் வெளியிடப்பட்ட பின்னரும் அதன் தன்மையைக் கண்காணிக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண் துறை வல்லுநர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டு வயல் சோதனைத் திடல்கள் ்ண்காணிக் கப்படுகின்றன.

### 4.4.1 பூச்சி மருந்து ஆய்வகங்கள்

விவசாயிகளுக்கு தரமான பூச்சி மருந்துகள் வழங்குவதை உறுதி செய்ய தமிழகத்தில் காஞ்சிபுரம், கடலூர், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாவட்டங்களில் ஆண்டுக்கு 14,700 பூச்சி மருந்து மாதிரிகளை ஆய்வு செய்யும் திறன்கொண்ட ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் வேலூர், தருமபுரி, நாகப்பட்டினம், தேனி, சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 மாவட்டங்களில் ரூ.300 இலட்சம் செலவில் புதிய ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2008-09 ஆம் ஆண்டில் 21,800 பூச்சி மருந்து மாதிரிகள் ஆய்வு செய்யப்படும்.

### 4.5 விரிவாக்கம்

#### 4.5.1 துறை மறுசீரமைப்பு

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சட்டசபையில் அறிவித்தபடி, வேளாண்மை, தோட்டக்கலை மற்றும்

மலைப் பயிர்கள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று ஆகிய துறைகளின் விரிவாக்கப் பணிகள் மற்றும் இடுபொருட்கள் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தொழில்நுட்பமும், திட்ட மானியங்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில், வேளாண் துறையில் ஈரடுக்கு நிர்வாக முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் ஒரு தோட்டக்கலை உதவி இயக்குநர் வட்டார அளவில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். வேளாண்மை மற்றும் தோட்டக்கலை மேம்பாட்டிற்காக நவீன தொழில்நுட்ப அடிப்படையிலான சாகுபடி மேற்கொள்ள முன்னுரிமை வழங்கும் வகையில் பெரும் மாறுதல் வேளாண்மைத் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இடுபொருட்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் பசுமைப் புரட்சி முறை மாற்றப்பட்டு, துல்லிய பண்ணைய முறை, செம்மை நெல் சாகுபடி முறை, தரமான விதை மற்றும் கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம், திசு வளர்ப்பு, மண்வள பாதுகாப்பு, கரும்பில் குழி நடவு முறை, நுண்ணீர் பாசனத்துடன் கூடிய பி.டி. பருத்தி சாகுபடி போன்ற தொழில்நுட்ப முறையிலான சாகுபடி முறைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. உற்பத்தித்திறனை உயர்த்தும் வகையில், அதிக தொழில்நுட்ப அலுவலர்களை வட்டார மற்றும் கிராம அளவில் பணியமர்த்தி விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்து, ஆலோசனை வழங்கி, நவீன தொழில்நுட்ப முறைப்படி சாகுபடி மேற்கொள்ள துறை சீரமைப்பு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

துறை சீரமைப்பின்மூலம் 509 வேளாண்மை மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள், வேளாண் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர்களாகவும், 512 உதவி விதை அலுவலர்கள் துணை வேளாண்மை அலுவலர்களாகவும், 512 உதவி வேளாண்மை அலுவலர்கள் உதவி விதை அலுவலர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். இது தவிர, 520 வேளாண்மை அலுவலர்கள், 47 தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் 1,707 உதவி வேளாண்மை அலுவலர்கள் பணியிடங்களையும் புதிதாக நியமனம்மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள், வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தையும் இணையதளத்தின்மூலம்





இணைத்து, வட்டார அளவில் கணினிப் பொறிகள் வழங்கி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேளாண்மை விரிவாக்கச் செயல்பாடுகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. விரிவாக்கம், இடுபொருட்கள் மற்றும் திட்டச் செயல்பாடுகளை விரைவுபடுத்த தகவல் தொழில்நுட்ப வசதிகளை உருவாக்குவதில் தமிழ்நாடு தேசிய அளவில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. ரூ.8.31 கோடி மதிப்பீட்டில் அக்ரிஸ்நெட் திட்டத்தின்கீழ் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கும் இரு புதிய கணினி, பிரிண்டர், இணையதள கேமரா மற்றும் உபகரணங்களும், மாவட்ட மற்றும் மாநில தலைமை அலுவலகங்களுக்கு தலா 5 கணினிகளும், உபகரணங்களும் வழங்கப்படும். இந்தக் கணினிகளை எல்காட் நிறுவனம் வழங்குவதோடு, வட்டார அளவிலான விவரங்களை வலைதளத்தில் டி.என்.ஸ்வான் வசதிமூலம் நேரடியாகப் பெற வழிவகை செய்யப்படும். மேலும், தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கணினி வலைதள வசதி ஏற்படுத்த ரூ.6.31 கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

துறை சீரமைப்பின் தொடர்ச்சியாக பின்வரும் பகுதி 2 திட்டங்கள் 2008-09 ஆம் ஆண்டில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- வட்டார அளவிலான வேளாண் விரிவாக்க மையத்தில் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறை அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். மொத்தமுள்ள 379 வேளாண்மை விரிவாக்க மையங்களில், 77 வேளாண்மை விரிவாக்க மையங்கள் பழுது பார்க்கவும், 220 வேளாண் விரிவாக்க மையங்களுக்கு கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தவும் ரூ.291.50 இலட்சம் ஒதுக்கீட்டில் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

  வேளாண்மை விரிவாக்க மையங்களில் பணியமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கு தேவையான மேசை, நாற்காலிகள் ரூ.74.46 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

  தொலைபேசி இணைப்பில்லாத 265 வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு ரூ.68.90 இலட்சம் செலவில் புதிய தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படும்.

### 4.6 உழவர் பயிற்சி நிலையம்

காஞ்சிபுரம், திண்டிவனம், வேலூர், சேலம், தருமபுரி, ஈரோடு, லால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, பாளையங்கோட்டை, நாகர்கோவில், திருவண்ணாமலை, நாமக்கல், கரூர், பெரம்பலூர், திண்டுக்கல், தேனி, சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 22 இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த உழவர் பயிற்சி நிலையங்களில் கிராம அளவிலான பயிற்சி, புத்தூட்டப் பயிற்சி ஆகியவற்றுடன் உழவர் விவாதக் குழுக்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**2007–08 ஆம் ஆண்டில் பயிற்சி விவரம் வருமாறு:–**

| வ. எண் | இனம் | 2007–08 | | | |
|---|---|---|---|---|---|
| | | பொருள் (எண்கள்) | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1. | கிராம அடிப்படையிலான பயிற்சி | 484 | 448 | 10.36 | 8.763 |
| 2 | ஒருங்கிணைப்பாளர் பயிற்சி | 220 | 202 | | |
| 3 | செயல்விளக்க முறை | 968 | 892 | | |
| 4. | புத்தூட்டப் பயிற்சி | 2420 | 2310 | | |
| | மொத்தம் | | | 10.36 | 8.763 |

**2008–09 ஆம் ஆண்டுக்கான பயிற்சி திட்டம் வருமாறு:–**

| வ. எண் | இனம் | அலகு | 2008–09 | |
|---|---|---|---|---|
| | | | பொருள் (எண்கள்) | நிதி (ரூ. இலட்சத்தில்) |
| 1. | கிராம அடிப்படையிலான பயிற்சி | எண்கள் | 484 | 10.36 |
| 2 | ஒருங்கிணைப்பாளர் பயிற்சி | எண்கள் | 220 | |
| 3. | செயல்விளக்க முறை | எண்கள் | 968 | |
| 4. | புத்தூட்டப் பயிற்சி | எண்கள் | 2420 | |
| | மொத்தம் | | | 10.36 |



### 4.7 மாநில வேளாண் மேலாண்மை நிலையம் (ஸ்டாமின்)

தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு புத்தூட்டப் பயிற்சி வழங்குதல் மற்றும் நிர்வாகத் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி வழங்கும் நோக்கத்துடன், வேளாண்மை மற்றும் சார்புத் துறைகளிலுள்ள பணியாளர்களுக்கும், மாணவர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களைச் சார்ந்தோருக்கும் குடுமியான்மலையில் இயங்கி வரும் மாநில வேளாண் மேலாண்மை நிலையத்தின்மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில், நிர்வாகம், மேலாண்மை, கணினி சம்பந்தப்பட்ட பயிற்சிகள் 430 அலுவலர்களுக்கு ரூ.2.884 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டது.

### 4.8 தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்கு 50 சதவீத பிரிமியத் தொகை வழங்கல்)

2006-07 ஆம் ஆண்டு கடன் பெறாத மற்றும் குத்தகைதாரர்களுக்கு பிரிமியத் தொகையில் 50 சதவீத மானியம் வழங்க ரூ.8.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.1.16 கோடி மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பயிர் இழப்பிற்கான மொத்தத்தில் ரூ.8.241 கோடி விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டது. இதில் சிவகங்கை மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு மட்டும் பயிர் இழப்பிற்கு ரூ.4.86 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டது.

2007-08 ஆம் ஆண்டு கடன் பெறாத விவசாயிகளுக்கு ரூ.10.00 கோடியும், கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.5.00 கோடியும் மொத்தத்தில் ரூ.15.00 கோடியைப் பிரிமியத்தில் 50 சதவீத மானியம் வழங்குவதற்காக அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் பயன்களை முழுமையாக உணர்ந்த விவசாயிகள் குறிப்பாக அதிக பயிர் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ள மானாவாரி பயிர்கள் அதிகம் பயிரிடப்படும் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்ட விவசாயிகள் தங்களை இத்திட்டத்தில் தாமாகவே முன்வந்து பதிவு செய்துள்ளனர். இதுவரை இத்திட்டத்தின்கீழ் கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்கு 50 சதவீத பிரிமியம் மானியமாக பிப்ரவரி 2008 வரை ரூ.8.97 கோடி வழங்கப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2008-09 ஆம் ஆண்டு 2.5 இலட்சம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டம் ரூ.40 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

[2008 ஏப்ரல் 4

### 4.9 பயிர் விளைச்சல் போட்டி

நெல், மணிலா, சோளம், கம்பு, பச்சைப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் நவீன வேளாண் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து, உற்பத்தித் திறனை உயர்த்துவதில், விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

உற்பத்தித் திறனில் அதிக அளவில் சாதனை புரிந்த விவசாயிகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை விவரம் பின்வருமாறு:

| | | | | (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
| | முதல் இடம் | இரண்டாம் இடம் | முதல் இடம் | இரண்டாம் இடம் |
| நெல் மற்றும் மணிலா | 25000 | 15000 | 15000 | 10000 |
| பிற பயிர்கள் | 15000 | 10000 | 10000 | 5000 |

நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு, மாநில அளவிலான போட்டிக்கான நுழைவுக் கட்டணம் ரூ.100/- ஆகவும், பிற பயிர்களுக்கு ரூ.50/- ஆகவும், நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு, மாவட்ட அளவிலான போட்டி நுழைவுக் கட்டணம் ரூ.50/-ஆகவும், பிற பயிர்களுக்கு ரூ. 25/-ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2007-08 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.14.05 இலட்சம் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5. நடுவண் சார்புத் திட்டங்கள்

### 5.1 தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்

11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2007-2012) உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்து உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் தேசிய வளர்ச்சி குழுவில் முடிவெடுத்ததன் அடிப்படையில், அரிசி, கோதுமை மற்றும் பயறு பயிர்களுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் 2007-08 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் அரிசி மற்றும் பயறு வகைப்



2008 ஏப்ரல் 4]

பயிர்களுக்கான திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அரிசி மற்றும் பயறு வகைப் பயிர்களில் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்தி அதிக உற்பத்தியை அடையும் குறிக்கோளுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அரிசிக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

பயறு வகை பயிர்களுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, நாகப்பட்டினம், நாமக்கல், திருவாரூர், திருவள்ளூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 12 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2008-09 ஆம் நிதியாண்டில் உற்பத்தி செய்யப்படும் பயறு வகைகளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டி தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியவைமூலம் நடுவண் அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையின் அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும்.

நடுவண் அரசின் வழிகாட்டுதலின்படி, மாநில உணவு பாதுகாப்புத் திட்ட செயற்குழு தலைமைச் செயலர் அவர்கள் தலைமையிலும், மாவட்ட உணவு பாதுகாப்புத் திட்ட செயற்குழு மாவட்ட ஆட்சியர் தலைமையிலும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான கருத்துரு தயாரிக்கவும், திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மாநில அளவிலான திட்ட மேலாண்மைக் குழு வேளாண்மை ஆணையர் அவர்கள் தலைமையிலும் மாவட்ட அளவிலான திட்ட மேலாண்மைக் குழு வேளாண் இணை இயக்குநர்கள் தலைமையிலும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்த மாநில அளவில் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையும், மாவட்ட அளவில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையும் (ஆத்மா) செயல்பாட்டு முகமைகளாக நியமிக்கப்பட்டுள்ளன.

அரிசிக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப செயல் விளக்கங்கள், செம்மை நெல் சாகுபடி மற்றும் வீரிய ஓட்டுநெல் சாகுபடி செயல் விளக்கங்களுடன், உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் வீரிய ஓட்டுநெல் இரகங்களின் விதைகள் மானிய விலையில் விநியோகம், நுண்ணூரம், கோனோ களையெடுக்கும் கருவி மற்றும் இதர

[2008 ஏப்ரல் 4

உபகரணங்கள் மானிய விலையில் விநியோகம், உழவர் வயல்வெளிப் பள்ளிகள் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி, விளம்பரம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்திற்காக நடுவண் அரசிடமிருந்து ரூ.7.095 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, இத்திட்டம் டிசம்பர் 2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பயறு வகைகளுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், ஜிப்சம், நுண்ணூட்ட உரம், தெளிப்புநீர் பாசனக் கருவிகள் ஆகியவற்றிற்கு மானியம் வழங்கப்படுவதுடன், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கங்கள் மற்றும் விவசாயிகள் பயிற்சியும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக நடுவண் அரசிடமிருந்து ரூ.1.66 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்திற்கான விளம்பர துணைக் குழு அமைக்கப்பட்டு, வானொலி, தொலைகாட்சி, துண்டு பிரசுரங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள்மூலமாக இத்திட்ட விவரங்கள் விளம்பரப்படுத்தப்படுகிறது. இதற்காக நடுவண் அரசு ரூ.25.00 இலட்சம் நிதி வழங்கியுள்ளது.

இத்திட்டம் நடுவண் அரசின் கூடுதல் ஒதுக்கீடு பெற்று 2008-09ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5.2 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் - ராஷ்டிரிய கிரிஷி விகாஸ் யோஜனா**

தேசிய வளர்ச்சிக் குழு முடிவெடுத்ததன் அடிப்படையில், 11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேளாண்மையில் 4 சதவீதம் வளர்ச்சி அடையும் நோக்கத்துடன் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் கூடுதல் நடுவண் நிதியுதவி திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது.

மாநிலம் மற்றும் மாவட்டங்களுக்கு தேவையான முன்னுரிமை திட்டங்களை தயாரித்து செயல்படுத்த மாநிலங்களுக்கு முழு சுய அதிகாரம் இத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. வேளாண்மைக்கு பொது துறைகள்மூலம் கூடுதல் ஒதுக்கீடு வழங்குதல், முக்கிய பயிர்களின் உற்பத்தித் திறனில் உள்ள இடைவெளியைக் குறைக்க தேவையானத் திட்டங்களை மேற்கொள்ளுதல், விவசாயிகளின் வருமானத்தை பெருமளவிற்கு உயர்த்தி வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை



2008 ஏப்ரல் 4]

குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கான 100 சதவீத நிதியுதவியினை நடுவண் அரசு வழங்குகிறது. மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டிற்கு அதிகபட்சமாக ரூ.185.31 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், வேளாண்மை, கால்நடை, பால்வளம், மீன்வளம் மற்றும் சிறு பாசனம் தொடர்பான பணிகள் மேற்கொள்வதற்கு முக்கியவத்துவம் வழங்கப்படுகிறது.

2007-08 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய 9 மாவட்டங்கள் சிறப்பு கவனத்துடன் செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளன. வேளாண்மை மேம்பாட்டிற்காக துல்லிய பண்ணையத் திட்டம், சிறிய மண் ஆய்வுக் கூடங்களுடன் கூடிய 224 வேளாண் ஆலோசனை மையங்கள் அமைத்தல், இயந்திரங்கள் விநியோகம், 224 வட்டாரங்களில் தானியங்கி வானிலை ஆய்வு மையம் அமைத்தல், 10 மாவட்டங்களில் உள்ள 10 வட்டாரங்களில் பண்ணை அளவில் திட்டமிட புவியியல் தகவல் புள்ளி விவரங்கள் மற்றும் நிலவள விவரம் தயாரித்தல், 40 வட்டாரங்களில் மானாவாரி நில மேம்பாடு மற்றும் சிறு தானியங்களை பிரபலப்படுத்துதல், இயற்கை உர உற்பத்தி மற்றும் இயற்கை பண்ணையத்தினை ஊக்குவித்தல் மற்றும் நகராட்சி கழிவுகளை இயற்கை உரமாக்குதல் மற்றும் உயிரியல் இடுபொருள் உற்பத்தி மையங்கள் அமைத்தல், தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தினை வலுப்படுத்துதல், மானாவாரி நிலங்களில் தோட்டக்கலை பயிர்கள் மற்றும் மர வகை பயிர்களை 50 ஏக்கர் தொகுப்பாக உருவாக்கி மேம்படுத்துதல் ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இத்திட்டங்கள் மாநில அளவிலான ஒப்புகை குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டு மாவட்ட திட்டக் குழுமூலம் திட்டம் தயாரிக்கப்பட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

**5.3 பேரியல் மேலாண்மைத் திட்டம்**

நடுவண், மாநில அரசுகள் இத்திட்ட செலவினை 90:10 என்ற விகிதத்தில் மேற்கொள்ளும் வகையில் பேரியல் மேலாண்மைத் திட்டம் 2000ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் வருமாறு:

[2008 ஏப்ரல் 4

### 5.3.1. தானிய அபிவிருத்தித் திட்டம்

நெற் பயிரின் உற்பத்தித்திறனை உயர்த்தும் நோக்குடன், தரமான விதை விநியோகம், தொகுப்பு முறையிலான செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கங்கள் மற்றும் விவசாயிகள் பயிற்சி, உழவர் வயல் வெளிப் பள்ளிகள் மூலம் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மற்றும் விளம்பரம் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன. 2007-08ஆம் ஆண்டு இனவாரியான திட்ட விவரம் வருமாறு:

| வ.எண் | இனம் | சாதனை விவரம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி (ரூ. இலட்சத்தில்) | | பொருள் | | |
| | | இலக்கு | சாதனை | அலகு | இலக்கு | சாதனை |
| 1. | மானிய விலையில் சான்று விதை விநியோகம் கிலோவிற்கு ரூ.2/– வீதம் | 300.00 | 240.00 | மெ. டன் | 15,000 | 12,000 |
| 2. | நெற் பயிருக்கான உழவர் வயல் வெளிப் பள்ளி ஒரு செயல் விளக்கத்திற்கு ரூ.17,000/– | 100.30 | 99.28 | எண்கள் | 590 | 584 |
| 3. | இதர செலவினங்கள் ஒரு மாவட்டத்திற்கு ரூ.30,000 வீதம் | 9.00 | 6.00 | | | |
| 4. | தொகுப்பு அணுகுமுறை மூலம் செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை பிரபலப்படுத்துதல் ( 10 எக்டேர் தொகுப்பு) | 283.00 | 283.00 | தொகுப்புகள் | 1132 | 1132 |
| | மொத்தம் | 692.30 | 628.28 | | | |

இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு திட்டம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | அலகு | பொருள் | நிதி (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | மானிய விலையில் சான்று விதை விநியோகம் கிலோவிற்கு ரூ.5/– வீதம் | மெ. டன் | 12,000 | 600.00 |
| 2. | நெற் பயிருக்கான உழவர் வயல் வெளிப் பள்ளி ஒரு செயல் விளக்கத்திற்கு ரூ.17,000/– | எண்கள் | 966 | 164.22 |
| 3. | தொகுப்பு அணுகுமுறை மூலம் செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை பிரபலப் படுத்துதல் (10 எக்டேர் தொகுப்பு) / பயிற்சி | தொகுப்பு | 3,220 | 805.00 |
| 4. | முன்பருவ முகாம் / விளம்பரம் | -- | -- | 146.90 |
| | மொத்தம் | -- | -- | 1716.12 |



2008 ஏப்ரல் 4]

### 5.3.2. சமச்சீர் மற்றும் ஒருங்கிணைந்த உரப் பயன்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தில் புதிய மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி ஆய்வகங்களுக்கு உபகரணங்கள் வாங்குதல், நுண்ணூட்டச் சத்தினை ஆய்வு செய்ய அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் கருவிகள் வாங்குதல் மற்றும் மண்வள அட்டை விநியோகித்தல் ஆகிய இனங்கள் செயல்படுத்தப்படுகின்றன. 2007-08 ஆம் ஆண்டுக்கான திட்ட விவரம் பின்வருமாறு:-

| வ.எண் | இனம் | சாதனை விவரம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி (ரூ. இலட்சத்தில்) | | பொருள் | | |
| | | இலக்கு | சாதனை | அலகு | இலக்கு | சாதனை |
| அ. | 6 மாவட்டங்களில் புதிய பூச்சி மருந்து ஆய்வகங்கள் அமைக்க தேவையான உபகரணங்கள் வாங்குதல் ஒரு ஆய்வகத்திற்கு ரூ.50.00 இலட்சம் | 300.00 | 300.00 | மையங்கள் | 6 | 6 |
| ஆ. | 11 மாவட்டங்களில் புதிய மண் ஆய்வுக் கூடங்கள் அமைக்க தேவையான உபகரணங்கள் வாங்குதல் ஒரு ஆய்வகத்திற்கு ரூ.7.00 இலட்சம் | 77.00 | 77.00 | மையங்கள் | 11 | 11 |
| இ. | அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோபோட்டோ மீட்டர் கருவிகளை நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களுக்கு வாங்கி வலுப்படுத்துதல் ஒரு ஆய்வகத்திற்கு ரூ.10.00 இலட்சம் | 80.00 | 80.00 | எண்கள் | 8 | 8 |
| ஈ. | மண்வள அட்டை அச்சிடுதல் | 10.00 | 10.00 | இல. எண்கள் | 10 | 10 |
| | மொத்தம் | 467.00 | 467.00 | | | |

2008-09ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.3.3. விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள்

வேளாண்மையில் அதிநவீன தொழில்நுட்பங்களை விரைந்து செயல்படுத்திட குழு சார்ந்த அணுகுமுறை முக்கியப் பங்கு

[2008 ஏப்ரல் 4

வகிக்கிறது. மேலும் இத்திட்டத்தின் மூலம் திட்டமிடுதல் மற்றும் மேம்பாடு திட்ட செயல்பாடுகள் ஆகியவை கிராம அளவில் உருவாக்கி செயல்படுத்த வழிவகை செய்யப்படுகிறது. இதுவரை 2,400 விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் மானாவாரி பயிர்கள் உட்பட பல்வேறு பயிர்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் பங்கேற்பு முறையில், கிராம அளவில் தேவைப்படும் புதிய தொழில்நுட்பங்கள், இடுபொருட்கள் மற்றும் விற்பனை விவரங்கள் பற்றி அறிந்துகொள்ள இத்திட்டம் உதவுகிறது. 2007-08 ஆம் ஆண்டில் 1,200 புதிய விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் அமைக்கப்படுவதுடன், ஏற்கெனவே உருவாக்கப்பட்ட குழுக்களுக்கு அடையாள அட்டையும், தேவையான பயிற்சியும் வழங்கி மாநில மாவட்ட அளவிலான கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. அதன் விவரம் வருமாறு:

| வ.எண் | இனம் | சாதனை விவரம் (பிப்ரவரி 2008 வரை) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி (ரூ. இலட்சத்தில்) | | பொருள் | | |
| | | இலக்கு | சாதனை | அலகு | இலக்கு | சாதனை |
| அ | நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி மற்றும் எண்ணெய்வித்து பயிர்களில் புதிய விவசாய ஆர்வலர் குழுக்களை அமைத்தல் (அலுவலகம், நூலகம் அமைத்திட ஒரு குழுவிற்கு ரூ.5000 வீதம்) | 60.000 | 50.700 | குழு | 1200 | 1154 |
| ஆ | விவசாயிகளுக்கான பயிற்சி (ஒரு குழுவிற்கு ரூ.4000 வீதம்) | 48.000 | 40.000 | குழு | 1200 | 1000 |
| இ | அடையாள அட்டை வழங்குதல் (ஒரு குழுவிற்கு ரூ.400 வீதம் ) | 4.800 | 4.300 | குழு | 1200 | 1075 |
| ஈ | மாவட்ட அளவிலான கூட்டம் (ஒரு கூட்டத்திற்கு ரூ.20,000 வீதம் – 60 நபர்கள் ஒரு கூட்டம்) | 14.800 | 10.000 | எண்கள் | 74 | 50 |
| உ | மாநில அளவிலான கூட்டம் (ஒரு கூட்டத்திற்கு ரூ.50,000 வீதம் ) | 2.000 | 0.500 | எண்கள் | 4 | 1 |
| ஊ | இதர செலவினம் ஒரு குழுவிற்கு ரூ.1500 வீதம் | 18.000 | 10.000 | குழு | 1200 | 667 |
| | மொத்தம் | 147.600 | 115.500 | | | |



2008 ஏப்ரல் 4]

2008-09 ஆம் ஆண்டில் 1000 குழுக்கள் உருவாக்கிட ரூ.176.80 இலட்சம் ஒதுக்கீட்டில் திட்டம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**5.3.4. தமிழ்நாடு பண்ணை மகளிர் வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்கத் திட்டம் (டான்வாபே)**

பண்ணை மற்றும் பண்ணைசாரா பணிகளில் பண்ணை மகளிர் குழுக்களுக்கு பயிற்சி அளித்து, அக்குழுக்களை சமுதாய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் வலுப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2006-07 ஆம் ஆண்டில் 7,366 குழுக்களுக்கு சிறுதொழில் தொடர்பான பயிற்சி வழங்கி குழுவிற்கு ரூ.3,500/- வீதம் நிதியுதவி வழங்கப்பட்டது. 2007-08 ஆம் ஆண்டில் 724 குழுக்களுக்கு நிதியுதவி ஒரு குழுவிற்கு ரூ.10,000/- என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டது. இதுவரை, 620 குழுக்களுக்கு ரூ.62.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் 4000 குழுக்களுக்கு ரூ.10,000 வீதம் தொழில் துவங்க உதவித் தொகை மற்றும் பயிற்சி வழங்க ரூ.482.80 இலட்சம், 379 குழுக்களுக்கு வேளாண் இயந்திரங்கள் 25 சதம் மானியத்தில் வழங்க ரூ.113.70 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**5.3.5 விரிவாக்க அலுவலர்களுக்குப் பயிற்சி**

புதிய தொழில்நுட்ப உக்திகள் குறித்து பயிற்சி பெற்று அவற்றை பிற அலுவலர்களுக்கும், விவசாயிகளுக்கும் எடுத்துரைக்க வேளாண் துறையில் உள்ள அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பது அவசியமாகிறது. 150 அலுவலர்களுக்கு பயிற்சியாளர் பயிற்சியும், 1,000 வேளாண் அலுவலர்களுக்கும், 2,500 உதவி வேளாண்மை அலுவலர்களுக்கும் ரூ.50.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**5.4 பருத்தி தொழில்நுட்ப குழுமத் திட்டத்தின்கீழ் தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்**

பருத்தி தேவையைக் கணக்கிடும் போது அதன் உற்பத்தி மிகக் குறைவாகவே உள்ளது. எனவே, புதிய இரகங்கள், வீரிய ஒட்டு இரகங்கள், பயிற்சி மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு

[2008 ஏப்ரல் 4

தொழில்நுட்பங்கள் ஆகியவற்றின்மூலம் பருத்தி சாகுபடி பரப்பினை உயர்த்துவது அத்தியாவசியமாகிறது. இத்திட்டம் நடுவண், மாநில அரசுகளின் பங்கேற்புடன் (75 : 25) மேற்கண்ட நோக்கத்துடன் 2007-08 ஆம் ஆண்டில் ரூ.525.03 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

தரமான விதை விநியோகம், விதை நேர்த்தி மருந்துகள், இன ஈர்ப்பு பொறிகள், உயிரியல் காரணிகள், தாவர பூச்சிக் கொல்லிகள், பயிர் பாதுகாப்பு கருவிகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள், சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் மற்றும் உழவர் வயல்வெளிப் பள்ளிகள்மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும் பருத்தி பயிரில் பயறு வகைகள் ஊடுபயிர் சாகுபடி ஆகிய செயல்பாடுகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

2008-09ஆம் ஆண்டில் ரூ.537.18 இலட்சம் ஒதுக்கீட்டில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

**5.5 ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து, பயறு, எண்ணெய்ப் பனை மற்றும் மக்காச்சோளத்திற்கான திட்டம் (ஐசோபாம்)**

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம், தேசிய பயறு வகைகள் அபிவிருத்தித் திட்டம், எண்ணெய்ப் பனை அபிவிருத்தித் திட்டம் மற்றும் மக்காச் சோள அபிவிருத்திக்கான விரைவுத் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து 2004-05 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து, பயறு, எண்ணெய்ப் பனை மற்றும் மக்காச் சோளத்திற்கான திட்டமாக மாநிலத்தின் தேவைக்கேற்ற அணுகு முறையுடன் மேற்கொள்ளும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான செலவினை நடுவண், மாநில அரசுகள் முறையே 75 : 25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

இத்திட்டத்தின்கீழ் எண்ணெய் வித்துப் பயிர்கள், பயறு வகைகள், எண்ணெய்ப் பனை மற்றும் மக்காச் சோளப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்த முக்கிய இடுபொருட்களான - விதைகள், உயிர் உரங்கள், ஜிப்சம், உயிரியல் பூச்சிக் கொல்லிகள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் ஆகியவை மானிய விலையில் வழங்கப்பட்டு, நவீன விவசாய முறைகளைக் கடைப்பிடிக்க விவசாயிகள் ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.



2008 ஏப்ரல் 4]

பிப்ரவரி 2008 வரை இத்திட்டத்தின் செலவின விவரம் வருமாறு:-

| | | | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| பயிர் | 2007-08 | | |
| | நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை | நடுவண் அரசு நிதி விடுவித்து ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை | சாதனை (பிப்ரவரி 2008 முடிய) |
| எண்ணெய் வித்துக்கள் | 1190.696 | 724.711 | 701.148 |
| பயறு வகைகள் | 681.688 | 360.379 | 358.394 |
| எண்ணெய்ப் பனை | 773.742 | 423.852 | 251.940 |
| மக்காச் சோளம் | 97.541 | 89.176 | 89.030 |
| **மொத்தம்** | **2743.667** | **1598.118** | **1400.512** |

2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டம் அனைத்து தொழில்நுட்பங்களையும் உள்ளடக்கி, தொகுப்பு முறையில் மேற்கொண்டு உற்பத்தியை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**5.5.1 எண்ணெய்ப் பனை**

எண்ணெய்ப் பனையை சாகுபடி செய்து, எண்ணெய் உற்பத்தியை உயர்த்த, விழுப்புரம், திருநெல்வேலி, தேனி, தூத்துக்குடி மற்றும் வேலூர் மாவட்டங்களில் எண்ணெய் பிழியும் ஆலைகளை அமைக்க 5 நிறுவனங்கள் அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளன. 2007-08 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2008 வரை 1300 எக்டரில் எண்ணெய்ப் பனை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 2008-09 ஆம் ஆண்டில் 5000 எக்டரில் சாகுபடி செய்யப்படும்.

**5.6 தென்னை வளர்ச்சி வாரியத் திட்டங்கள்**

தமிழகத்தில் தென்னை சாகுபடிப் பரப்பினை உயர்த்தி, தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன்மூலம் தென்னை உற்பத்தித் திறனை உயர்த்தவும் தென்னை சார்ந்த தொழில்களை மேம்படுத்தும் நோக்குடனும், தென்னை வளர்ச்சி வாரியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தனியார் தென்னை நாற்றுப் பண்ணை அமைத்தல், நோய் தாக்கப்பட்ட தென்னை மரங்களை அகற்றுதல், செயல் விளக்கத்தளை அமைத்தல் மற்றும் இயற்கை உரக் குழிகள்

[2008 ஏப்ரல் 4

மூலம் மண் வளத்தினை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு மானியங்கள் வழங்கப்படுகிறது.

2007-08 ஆம் ஆண்டு இத்திட்ட முன்னேற்றம் வருமாறு:

| வ. எண். | இனம் | பொருள் | | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை (பிப்ரவரி 08 முடிய) | இலக்கு | சாதனை (பிப்ரவரி 08 முடிய) |
| 1. | தென்னை உற்பத்தி பெருக்க ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் | | | | |
| (அ) | நோயுற்ற மரங்களை அகற்றுதல் | 25766 எண்கள் | 23674 | 64.42 | 59.185 |
| (ஆ) | செயல் விளக்கப் பண்ணைகள் அமைத்தல் | 980 எண்கள் | 850 | 171.50 | 148.75 |
| (இ) | இயற்கை உரக்குழிகள் அமைத்தல் | 25 எண்கள் | 25 | 5.00 | 5.00 |
| 2. | நவ்லாக்கில் நெட்டை X குட்டை கலப்பின இரக தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம் | 0.75 இலட்சம் | 0.44 | 18.75 | 16.78 |
| 3. | பரப்பு விரிவாக்கம் | 950 எக்டர் | 364.05 எக்டர் | தென்னை வளர்ச்சி வாரியம் மூலம் நேரடியாக செயல்படுத்தப் படுகிறது. | |
| 4. | மண்டல தென்னை நாற்றுப் பண்ணைகள் அமைத்தல் மற்றும் தென்னங்கன்றுகள் விநியோகம் | 2.00 இலட்சம் கன்றுகள் | 1.50 இலட்சம் நெற்றுகள் | 80.74 | 62.00 |

மேலும், கீழ்க்காணும் புதிய திட்டங்களை செயல்படுத்த தென்னை வளர்ச்சி வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. விரைந்து இத்திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2008 ஏப்ரல் 4]

| ( அலகு. ரூபாய் இலட்சத்தில் ) | | |
|---|---|---|
| வ.எண். | திட்டம் | மொத்தத் தொகை |
| 1. | உழவர் பயிற்சி மையத்தை வலுப்படுத்துதல் மற்றும் பல்வகை தென்னைப் பொருட்கள் தயாரிக்க பயிற்சி | 41.350 |
| 2. | தென்னை சிகப்பு கூன் வண்டு தாக்குதல் கட்டுப்படுத்துதல் | 5.000 |
| 3. | 10 மாவட்டங்களில் வேர்வாடல் நோய் தாக்குதல் குறித்த மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளுதல் | 8.000 |
| 4. | கருந்தலைப்புழு கட்டுப்படுத்துதல் | 11.695 |
| 5. | செம்பான் சிலந்தியினை கட்டுப்படுத்துதல் | 2277.400 |

2008-09ஆம் ஆண்டு இத்திட்டம் கீழ்க்கண்டவாறு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண். | இனம் | பொருள் | நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நோயுற்ற மரங்களை அகற்றுதல் (எண்கள்) | 50,000 | 125.00 |
| 2. | செயல்விளக்கங்கள் (எண்கள்) | 1,000 | 175.00 |
| 3. | உரக்குழிகள் அமைத்தல் (எண்கள்) | 25 | 5.00 |
| 4. | நவ்லாக் பண்ணை – நெட்டை X குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம் (எண்கள்) | 75,000 | 20.00 |
| 5. | மண்டல நாற்றுப்பண்ணைகளில் தென்னங்கன்றுகள் விநியோகம் (இலட்சம் எண்கள்) | 2.00 | 80.00 |

### 5.7 ஆத்மாமூலம் திருந்திய விரிவாக்கப் பணிகளுக்கான மாநில விரிவாக்க உதவித் திட்டம்

தொழில்நுட்ப பரிமாற்றத்தை சிறந்த முறையில் செயல்படுத்த திட்டமிடல் மற்றும் திட்ட செயலாக்கத்தில் விவசாயக் குழுக்களை பங்கு பெறச் செய்து, அக்குழுக்களை வலுப்படுத்துவதற்காக தமிழகத்தில் 9 மாவட்டங்களில் 133 வட்டாரங்களில் திருந்திய விரிவாக்கப் பணிகளுக்கான மாநில விரிவாக்க உதவித் திட்டம்

(ஆத்மா) முன்னோடித் திட்டமாக நடுவண், மாநில அரசுகளின் 90 : 10 நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது. நடுவண் அரசு இத்திட்டத்தினை நீலகிரி மற்றும் சென்னை நீங்கலாக மீதமுள்ள 19 மாவட்டங்களில் உள்ள 248 வட்டாரங்களில் செயல்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை 28 மாவட்டங்களிலும் இத்திட்டத்தினை செயல்படுத்த மாநில முகமையாக நியமிக்கப்பட்டு உள்ளது. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், மாநில வேளாண் மேலாண்மை விரிவாக்கப் பயிற்சி மையமாக (சமிதி) நியமிக்கப்பட்டுள்ளது.

அனைத்துத் துறைகளின் அலுவலர்கள், விவசாய பிரதிநிகள், மகளிர் மற்றும் அரசுசாரா நிறுவனப் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஆத்மா திட்டம் 9 மாவட்டங்களில் வட்டார அளவில் போதிய நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, முன்னோடித் திட்டமாக செப்டம்பர் 2006 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வேளாண்மையைச் சார்ந்த விவசாய பிரதிநிதிகள் மற்றும் 9 சகோதரத் துறைகளின் அலுவலர்களை உள்ளடக்கிய விவசாய ஆலோசனைக் குழு அப்பகுதிக்கேற்ற தேவையான திட்டங்களை தயாரித்து இத்திட்டத்தின் செயல்பாட்டினைக் கண்காணிக்கிறது.

பயிற்சி, செயல்விளக்கங்கள், விவசாய ஆர்வலர் குழுக்களை அமைத்தல், திறன் மேம்பாடு, சுழல் நிதி, பிற மாநில மற்றும் மாவட்டத்தில் கல்வி சுற்றுலா போன்ற தேவைகள் இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் சிறப்பாக செயல்படும் ஆத்மா குழுக்களை ஊக்கப்படுத்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

இதுவரை கிராம மற்றும் மாவட்ட அளவில் 1,575 பயிற்சிகளும், 4,877 செயல்விளக்கங்களும், 45 வெளி மாநில கல்வி சுற்றுலாவும், 77 வெளி மாவட்ட கல்வி சுற்றுலாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 351 விவசாய ஆர்வலர் குழுக்கள் அமைக்கப்பட்டு, இதுவரை 327 குழுக்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி அளிக்கப்பட்டு, மூலதன நிதி



மற்றும் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 28,200 விவசாயிகள் நேரடியாகவும், 55,000 விவசாயிகள் பல்வேறு வகைகளிலும் பயன் பெற்றுள்ளனர். 2005-07 ஆம் ஆண்டுகளில் நடுவண் அரசால் ரூ.391.00 இலட்சம் நிதி வழங்கப்பட்டு இதுவரை ரூ.322.419 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக ஆத்மா செயல்படுத்தப்பட்ட 9 மாவட்டங்களுக்கு ரூ.399.14 இலட்சமும், இதர 19 மாவட்டங்களுக்கு ரூ.280.00 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

2008-09ஆம் ஆண்டு 28 மாவட்டங்களில் ரூ.2019.30 இலட்சம் ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 5.8 விதை கிராம திட்டம்

பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் விதை முக்கிய இடுபொருளாக உள்ளது. தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்க பெரும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அரசு மற்றும் தனியார் விதை நிறுவனங்கள் தரமான விதைகளை விநியோகம் செய்வதில் பெரும் பங்காற்றி வருகிறார்கள். இருப்பினும், குறிப்பாக பயறு மற்றும் எண்ணெய்வித்து பயிர்களில் விதை விநியோகம் போதுமானதாக இல்லை.

எனவே, விவசாயிகளின் விதைத் தேவையை 100 சதவீதம் பூர்த்தி செய்ய, விஞ்ஞான முறையில் விதை உற்பத்தி மேற்கொண்டு அவர்கள் உற்பத்தி செய்யும் விதைகளின் தரத்தை உயர்த்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. விவசாயிகள் பாதுகாத்து வைக்கும் விதைகளின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் நடுவண் அரசு விதை கிராமத் திட்டத்தினை 2006-07ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

இத்திட்டத்தின்கீழ் நெல், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைப் பயிர்களுக்கான ஆதார மற்றும் சான்று விதைகள் 50 சத மானியத்தில் வழங்கப்படுவதோடு, பயிற்சியும் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 4

இத்திட்ட சாதனை விவரம் வருமாறு.

| வ. எண் | இனம் | 2007–2008 ( பிப்ரவரி 2008 முடிய) | | | |
|---|---|---|---|---|---|
| | | பொருள் | | நிதி ( ரூபாய் இலட்சத்தில்) | |
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1 | **50 சத மானியத்தில் விதை விநியோகம் (மெ.டன்னில்)** | | | | |
| | அ. நெல் விதை | 1500 | 1920 | 105 | 105 |
| | ஆ. பயறு வகைகள் | 50 | 40 | 10 | 10 |
| | இ. எண்ணெய் வித்துக்கள் | 400 | 220 | 40 | 40 |
| | **மொத்தம்** | **1950** | **2180** | **155** | **155** |
| 2 | **பயிற்சி ( எண்கள் )** | | | | |
| | நெல் / பயறு வகைகள் / எண்ணெய் வித்துக்கள் | 300 | 300 | 45 | 45 |
| | **கூடுதல் மொத்தம்** | -- | -- | 200 | 200 |

அரசு மேற்கொண்ட முயற்சியினால் நடுவண் அரசு கூடுதலாக ரூ.2 கோடி வழங்கியுள்ளது. இதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

### 5.9 தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம் (ஐயம்வார்ம்)

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், கால்நடை வளர்ப்பு, மீன்வளம் மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் ஆகிய துறைகளுடன் நீர் ஆதார அமைப்புகள்மூலம் உலக வங்கி நிதியுதவியுடன் தமிழகத்தில் நீர்வள, நிலவள திட்டம் 6 ஆண்டுகள் செயல்படுத்தும் வகையில் (2007-08 முதல் 2012-13 வரை) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீரினை சேமிக்கும் நவீன பாசனத் தொழில்நுட்பங்களான நுண்ணீர் பாசனம் மற்றும் வேளாண்மை செயல்முறைகளை உள்ளடக்கிய பாசன விநியோக சேவையை மேம்படுத்துதல், வேளாண்மையைத் தீவிரமாக்குதல் மற்றும் மாற்றுப் பயிர் சாகுபடியை பரவலாக்குதல், வேளாண் விற்பனை உத்திகள் மற்றும் வேளாண் தொழில்



2008 ஏப்ரல் 4]

வாய்ப்புகளை அதிகப்படுத்துதல், நீர்வள ஆதார மேலாண்மையை நிர்வகிக்கும் நிறுவனங்கள் மற்றும் அதன் முறைகளை பலப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் இத்திட்டம் 63 ஆற்றுப் படுகைகளில் செயல்படுத்தப்படுகிறது.

வேளாண்மைத் துறை இத்திட்டத்தின்கீழ் 63 ஆற்றுப் படுகைகளில் சுமார் ரூ. 98.00 கோடி நிதியுதவியுடன் நீர் மற்றும் நிலவளத்தை திறம்பட பயன்படுத்தி வேளாண் உற்பத்தித் திறனை உயர்த்தும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்ட காலத்தில் 6.17 இலட்சம் எக்டர் பரப்பில் இத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2007-08 ஆம் நிதியாண்டில் ஒன்பது ஆற்றுப் படுகைகள் - வராக நதி (விழுப்புரம் / திருவண்ணாமலை), மேல்வெள்ளார் (சேலம்), பாலாறு (கோயம்புத்தூர் / ஈரோடு), ஆழியாறு (கோயம்புத்தூர்), தென்வெள்ளார் (புதுக்கோட்டை / திருச்சி ) பாம்பாறு (புதுக்கோட்டை/ சிவகங்கை), கோட்டக்கரையாறு (சிவகங்கை / இராமநாதபுரம்), மணிமுத்தாறு (சிவகங்கை / இராமநாதபுரம் / மதுரை) மற்றும் அர்ஜூனா நதி (விருதுநகர்), தேர்ந்தெடுக்கப்பட்டு, இத்திட்டம் ரூ.4.52 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட நடவடிக்கைகள் விவரம் வருமாறு.

1. பல்வேறு பயிர்கள் மற்றும் இயற்கை வேளாண்மைக்கான செயல் விளக்கங்கள் அமைத்தல்.
2. உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள், ஜிப்சம், நீலப்பச்சைப் பாசி போன்ற முக்கிய இடுபொருட்கள் விநியோகம்.
3. கைத் தெளிப்பான்கள், விசைத் தெளிப்பான்கள், விதையிடும் கருவி மற்றும் தழை மிதி கருவி போன்ற பண்ணை இயந்திரங்கள் வழங்குதல்.
4. தகவல் / கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளான விளம்பரம் மற்றும் பயிற்சி மூலம் திறன் மேம்பாடு, விவசாயிகளுக்கான கல்விச் சுற்றுலா போன்றவற்றை செயல்படுத்துதல்

[2008 ஏப்ரல் 4

*பிப்ரவரி 2008 வரை திட்ட முன்னேற்ற விவரம் வருமாறு.*

| வ. எண். | இனங்கள் | பொருள் | | நிதி (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1. அ | பயிர் சாகுபடி செயல்விளக்கங்கள் (எக்டர்) | 13808 | 12835 | 202.178 | 175.951 |
| 1. ஆ | இதர செயல்விளக்கங்கள் (எண்கள்) | 1192 | 960 | 118.583 | 93.802 |
| | செயல்விளக்கங்கள் மொத்தம் | **15000** | **13795** | **320.761** | **269.753** |
| 2 | இடுபொருட்கள் விநியோகம் (எக்டர்) | 49068 | 44009 | 69.796 | 45.971 |
| 3 | வேளாண் கருவிகள் (எண்கள்) | 3461 | 2075 | 32.645 | 15.010 |
| 4 | தகவல் / கல்வி மற்றும் தகவல் தொடர்பு | -- | -- | 23.000 | 15.519 |
| 5 | நீர்வள நிலவள தனிப் பிரிவு | -- | -- | 6.000 | 1.877 |
| | **கூடுதல் மொத்தம்** | | | **452.205** | **348.130** |

2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டம் பொய்னி (வேலூர்) கவுண்டன்யா நதி (வேலூர்), பொன்னையாறு கிருஷ்ணகிரி வரை (கிருஷ்ணகிரி), ஸ்வேதாநதி (சேலம், நாமக்கல் மற்றும் பெரம்பலூர்), அணைவாரி ஓடை (பெரம்பலூர்), சின்னாறு (பெரம்பலூர்), அக்னியாறு (தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை), அம்புலியாறு (தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை), மேல் வைகை (தேனி), வரட்டாறு-நாகலாறு (தேனி), நிசாபாநதி (திருநெல்வேலி), கலிங்கலாறு (திருநெல்வேலி), சின்டப்பள்ளி-உப்போடை (விருதுநகர்), சின்கோட்டையாறு (விருதுநகர்), மேல் குண்டாறு (மதுரை) மற்றும் தெற்காறு (மதுரை) ஆகிய 16 துணை ஆற்றுப் படுகைகளில் செயல்படுத்தப்படும்.

உலக வங்கி அனுமதி பெற்று 25 துணை ஆற்றுப் படுகைகளில் ரூ.3.85 கோடி செலவில் 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல் விளக்கம், தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம் போன்ற பல்வேறு செயல்பாடுகளுடன் மேற்கொள்ளப்படும். நீர் உபயோகிப்பாளர்கள் சங்கம்மூலமாக சம்மந்தப்பட்ட துணை ஆற்றுப் படுகைகளில் உள்ள விவசாயிகள் இத்திட்டத்தின்மூலம் பயன் பெறுவார்கள்.



2008 ஏப்ரல் 4]

## சர்க்கரைத் துறை

### 1. கரும்பு

நமது உணவில், சர்க்கரை ஓர் இன்றியமையாத பொருள். தமிழக விவசாயிகளிடம் கரும்பு சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்பட்டு தற்போது சுமார் 2.75 இலட்சம் முதல் 3 இலட்சம் எக்டர் வரை பயிரிடப்பட்டு வருகிறது. இது தமிழகத்தின் மொத்த சாகுபடி பரப்பில் 2 சதமாகும். தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 320 இலட்சம் மெ. டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. கரும்பு உற்பத்தித் திறன் எக்டருக்கு 95 மெ. டன் முதல் 105 மெ. டன் ஆகவுள்ளது. கரும்பு உற்பத்தித்திறனில் பல வருடங்களாக தமிழகம் முதலிடம் வகித்து வருகிறது.

2006-2007 ஆம் அரவைப் பருவத்திற்கு தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு, பொது மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகளால் 3.03 இலட்சம் எக்டர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்டு 274.49 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரவை செய்யப்பட்டது. நடப்பு 2007-2008 அரவைப் பருவத்திற்கு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளும் 2.89 இலட்சம் எக்டர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்டு 255.08 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் கடந்த 5 வருடங்களில் கரும்பு பதிவு செய்யப்பட்ட பரப்பு, கரும்பு அரவை, சர்க்கரை உற்பத்தி மற்றும் கட்டுமானம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வருடம் | பதிவு செய்யப்பட்ட பரப்பு (லட்சம் எக்டேர்) | அரவை செய்யப்பட்ட கரும்பின் அளவு (லட்சம் மெ.டன்) | உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை அளவு (லட்சம் மெ.டன்) | சராசரி கட்டு மானம் (%) |
|---|---|---|---|---|
| 2003-04 | 1.40 | 92.80 | 9.20 | 9.92 |
| 2004-05 | 2.56 | 114.92 | 11.09 | 9.65 |
| 2005-06 | 2.97 | 231.46 | 21.38 | 9.24 |
| 2006-07 | 3.03 | 274.49 | 25.39 | 9.25 |
| 2007-08 (எதிர்பார்ப்பு) | 2.89 | 255.08 | 24.25 | 9.50 |

கரும்புப் பயிர் சாகுபடிக்கு அதிக நீர் தேவைப்படுவதால், உணவு உற்பத்தி பரப்பளவு குறையாமல் கரும்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித்

[2008 ஏப்ரல் 4

திறனை சீராக உயர்த்த தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் குழி நடவு மற்றும் வரிசை நடவு முறை, சொட்டு நீர்ப்பாசனம், சொட்டு நீர் வழி உரமிடல் முறைகளைக் கடைப்பிடித்து உற்பத்தித் திறனை எக்டேருக்கு 140 மெ. டன் என்ற அளவிற்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இது தற்போதைய உற்பத்தி திறனைவிட 30 முதல் 40 விழுக்காடு அதிகமாகும். எனவே, கரும்பு உற்பத்தியை மேலும் உயர்த்த மேற்கண்ட தொழில்நுட்பங்களை தொகுப்பு அணுகுமுறையில் பிரபலப்படுத்துவதற்கு அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

**2. தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளின் செயல்பாடு**

தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் 16 சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறையில் 3 சர்க்கரை ஆலைகளும், தனியார் துறையில் 21 சர்க்கரை ஆலைகளும் ஆக மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. தற்போது 37 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. 3 சர்க்கரை ஆலைகள் அதாவது மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மதுரா சர்க்கரை ஆலை மற்றும் அருணாச்சலா சர்க்கரை ஆலைகள் இயங்கவில்லை. 2006-07ஆம் அரைவைப் பருவத்தில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் (1-10-2006 முதல் 30-9-2007 வரை) 274.49 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரைவை செய்யப்பட்டு சராசரி 9.25 சதவிகித சர்க்கரை கட்டுமானத்துடன் 25.39 இலட்சம் மெட்ரிக் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு 2007-08ஆம் அரைவைப் பருவத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளிலும், தனியார் சர்க்கரை ஆலைகள் உட்பட மொத்தம் 255.08 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரைவை செய்து 9.50 சதவிகித சர்க்கரை கட்டுமானத்துடன் 24.25 இலட்சம் மெட்ரிக் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2007-08 அரைவைப் பருவத்தில் 29.2.2008 வரை தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகளால் 90.17 இலட்சம் மெ.டன் கரும்பு அரைவை செய்யப்பட்டு சராசரியாக 9.33 சதவிகித சர்க்கரை கட்டுமானத்தில் 6.53 இலட்சம் மெட்ரிக் டன்கள் வெள்ளை சர்க்கரையும், 1.88 இலட்சம் மெட்ரிக் டன்கள் கச்சா சர்க்கரையும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 4]

**3. கரும்பு விலை நிர்ணயித்தல் மற்றும் கரும்பு போக்குவரத்து கட்டணம்**

மத்திய அரசு 2007-08 ஆம் அரைவைப் பருவத்திற்கு 9 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு சட்டபூர்வ குறைந்தபட்ச விலை ரூ. 811.80 எனவும், ஒவ்வொரு 0.1 சதவிகித கூடுதல் கட்டுமானத்திற்கு டன்னிற்கு ரூ. 9/- ஊக்கத் தொகை எனவும் அறிவித்துள்ளது. 2007-08 ஆம் அரைவைப் பருவத்திற்கு 9 சதவிகித சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்பிற்கு மாநில அரசு பரிந்துரை விலையாக கூடுதலாக ரூ.222.20 கூட்டி டன் ஒன்றுக்கு விலை ரூ. 1034/- எனவும், ஒவ்வொரு 0.1 சதவிகித கூடுதல் சர்க்கரை கட்டுமானத்திற்கும் டன் ஒன்றிற்கு ரூ. 9/- ஊக்கத் தொகை எனவும் அறிவித்துள்ளது. இது தவிர, கரும்பு போக்குவரத்துக்கான முழு வாகன வாடகையை 2006-07 அரவைப் பருவத்திலிருந்து சர்க்கரை ஆலைகளே ஏற்று வருகின்றன.

**4. 50 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசனம் மற்றும் சொட்டு நீர் வழி உரமிடுதல்**

கரும்பு சாகுபடியில் குழிமுறை நடவிலும், இரட்டை வரிசை நடவிலும் நுண்ணீர் பாசனம் மற்றும் சொட்டு நீர் வழி உரமிடுதலும் அமைக்கப்பட்டு வருகிறது. சொட்டு நீர் பாசனம் அமைப்பதின் மூலம் 40 சதவிகிதம் நீர் தேவையை குறைக்கலாம். இதன் மூலம் எக்டேருக்கு 35 முதல் 40 டன்கள் உற்பத்தி அதிகரிக்கின்றது. எனவே, கரும்பில் சொட்டுநீர் பாசன முறையை அதிக அளவில் நிறுவி பயன்படுத்த விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கும் வகையிலும் 2007-08 அரவை பருவத்தில் 20,000 எக்டர் பரப்பில் ரூ. 42 கோடி செலவில் சொட்டுநீர் வழி உரமிடும் பாசன முறை கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எக்டர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 28,800/-க்கு மிகாமல் 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். இதில் நடுவண் அரசு மற்றும் மாநில அரசின் பங்கு 80:20 சதவிகிதமாகும். இத்திட்டத்தின்மூலம் சுமார் 12,000 கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள்.

**5. தமிழகத்தில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க வழிகாட்டு நெறிமுறைகள்**

தமிழக கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ஓரிரு ஆலைகள் தவிர இதர ஆலைகளில் சர்க்கரை உற்பத்தி மட்டுமே

செய்து வருவதால், சர்க்கரை விலை வீழ்ச்சியின் போது கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கடன் சுமை அதிகரிக்கிறது. இதனால் ஆலையை விரிவுபடுத்தவோ, மின் உற்பத்தி செய்யவோ, எரிசாராயம் மற்றும் எத்தனால் உற்பத்தி தொடங்க இயலாத நிலை உள்ளது. இலாபம் ஈட்ட இயலாத நிலையில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு நிதி ஆதாரம் வழங்க வங்கிகளும், நிதி நிறுவனங்களும் முன் வருவதில்லை. விவசாயிகள் நலன் கருதி செயல்பட்டு வரும் தமிழக கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகள் மேம்பட விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கரும்புக்கான தொகை கிடைக்க இந்த சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கம் செய்யப்பட வேண்டியது, இணை மின் உற்பத்தி அமைப்பது, நவீனமயமாக்குவது, வடிப்பகம் மற்றும் எத்தனால் ஆலையை அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

எனவே, புதியதாக அமைக்கப்படும் சர்க்கரை ஆலை வளாகத்தில் சர்க்கரை உற்பத்தி செய்வதுடன், இணை மின் உற்பத்தி செய்தல், வடிப்பாலைகள், எத்தனால் தயாரித்தல், உயிர் மக்கு உரம் தயாரிக்கும் வசதிகளும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும் என இவ்வரசு கொள்கை முடிவெடுத்து அதன் அடிப்படையில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க வழிகாட்டு நெறிமுறைகளை அரசாணை மூலம் வெளியிட்டுள்ளது.

மேலும் இணை மின் உற்பத்தி செய்ய விரும்பும் ஆலைகள் எரிசக்தித் துறையிடமும், எத்தனால் உற்பத்தி செய்ய விரும்பும் ஆலைகள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வுத் துறையிடமும் விண்ணப்பம் செய்து உரிய உரிமம் பெற வேண்டும்.

கரும்பு (கட்டுப்பாடு) ஆணை 1966-ன் படி நடுவண் அரசால் அறிவிக்கப்படும் சட்டபூர்வ குறைந்தபட்ச கரும்பு விலையினை, கரும்பினை ஆலைக்கு வழங்கிய 14 நாட்களுக்குள்ளும், மாநில அரசு பரிந்துரை செய்யும் விலையை 3 மாதங்களுக்குள் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும்.

கரும்பில் உற்பத்தித் திறனை அதிகரிக்க புதிய சர்க்கரை ஆலைகள் திசு வளர்ப்புமூலம் விதைக் கரும்பு பெருக்கம் செய்திட உயிரியல் பரிசோதனை நிலையம் அமைத்தல் வேண்டும். மேலும், ஆலைகள் உயிர்பூச்சி கொல்லிகள் மற்றும் உயிர் உரங்கள் உற்பத்தி செய்தல் வேண்டும். புதிய சர்க்கரை ஆலைகள் மறு சுழற்சியின்மூலம் கரும்பு ஆலைக் கழிவினை மதிப்பு கூட்டிய உரங்களாக செரியூட்டப்பட்ட கரும்பு ஆலைக்கழிவு மற்றும் உயிர் மக்குரங்கள் ஆகியவற்றை





செய்திடல் வேண்டும். மேலும், புதிய சர்க்கரை ஆலைகள் சுத்தமான கரும்பு நாற்றங்கால் திட்டத்தின்மூலம் பூச்சி, நோய்களற்ற விதைக்கரணைகளை வழங்கிடல் வேண்டும். ஆலைகளில் மண் பரிசோதனை நிலையங்களை அமைத்து, மண் வள அட்டைகளை விவசாயிகளுக்கு வழங்கிடல் வேண்டும். மேலும், இந்த ஆலைகள் நீர் வழி உரமிடும் அமைப்புடன் கூடிய நுண்ணிய பாசன வசதியினை ஆலைப் பகுதிகளில் ஐந்து வருடங்களில் படிப்படியாக அமைத்து சம்பந்தப்பட்ட ஆலைகளின் 100 சதவிகித கரும்பு தேவையைப் பூர்த்தி செய்வதுடன், அனைத்து கரும்பு சாகுபடி முறைகளை விரிவாக்கம் செய்திடவும், சிறந்த பூச்சி நோய் கண்காணிக்கும் பணி முறையினை அமைத்திடல் வேண்டும். புதிய சர்க்கரை ஆலைகளின் கரும்பு விரிவாக்கப்பிரிவினர் மாதிரி வயல்கள் அமைத்தல், கிராமக் கூட்டங்கள் நடத்துதல், பயிர் கருத்தரங்கங்கள் நடத்துதல்மூலம் கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்கள் சென்றடையச் செய்திடல் வேண்டும். கரும்பு வயலிலிருந்து ஆலைக்கு கொண்டு செல்லும் போக்குவரத்து செலவினையும் ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

### 6. இணை மின் உற்பத்தி

சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. தமிழகத்திலுள்ள 21 தனியார் சர்க்கரை ஆலைகளில் 18 சர்க்கரை ஆலைகளில் ஏற்கெனவே இணை மின் உற்பத்தியை நிறுவியுள்ளன. இதன் மொத்தத் திறன் 366.60 மெகாவாட் ஆகும். கூட்டுறவுத் துறைகளில் தற்பொழுது செய்யாறு, எம்.ஆர்.கே. (சேத்தியாதோப்பு), சுப்ரமணியசிவா (அரூர்) ஆகிய 3 சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மொத்த மின் திறன் 20 மெகா வாட் ஆகும். சக்தி சர்க்கரை ஆலை, சிவகங்கை (29.60 மெகாவாட்) மற்றும் ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலை, பேட்டவாய்த்தலை (20.00 மெகா வாட்) ஆகிய ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. 2008-09ல் தமிழகத்திலுள்ள 17 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 925 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலமாக இணை மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. இதன்மூலம் கூடுதலாக சுமார் 185 மெகாவாட் மின் திறன் பெறப்படும். சர்க்கரைத் தொழிலின் நிதி ஸ்திரத் தன்மைக்காக, தமிழக அரசு படிப்படியாக சர்க்கரை

[2008 ஏப்ரல் 4

உற்பத்தி, இணை மின் உற்பத்தி மற்றும் வடிப்பகங்களுடன் கூடிய ஒருங்கிணைந்த தொழிற்கூடங்களை அமைக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

### 7. எத்தனால்

கரும்பு சாற்றிலிருந்து நேரடியாக எத்தனால் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஒவ்வொன்றிலும் அவ்வாலைகளின் சொந்த நிதியில் இருந்து நாளொன்றுக்கு 30 கிலோ லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட எத்தனால் தயாரிக்கும் ஆலைப் பிரிவு ரூ.350 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் செய்யார் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் நாளொன்றுக்கு 45 கிலோ லிட்டர் உற்பத்தி திறனில் ஒவ்வொரு ஆலையிலும் ரூ.36 கோடி செலவில் என்.சி.டி.சி. நிதி மற்றும் சர்க்கரை மேம்பாட்டு நிதி உதவியுடனும், விவசாயிகளின் பங்கேற்புடனும் வடிப்பகத்துடன் கூடிய எத்தனால் தயாரிக்கும் ஆலைப்பிரிவு நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2008 ஏப்ரல் 4]

## அத்தியாயம் 3

### தோட்டக்கலைத் துறை

வேளாண் பெருங்குடி மக்களின் வருவாயை பெருக்கி பொருளாதாரத்தில் தனக்கென முக்கிய இடத்தை தக்க வைத்துக்கொள்ள தோட்டக்கலைப் பயிர்கள் பெரிதும் உதவுகின்றன. இப்பயிர் சாகுபடியானது பெருமளவில் விவசாய தொழிலாளர்களை ஈடுபடுத்தி செய்யப்படுவதால் ஊரக மக்களுக்கு அதிக வேலைவாய்ப்பை அளிக்கிறது. முக்கிய ஊட்டச்சத்துக்களான தாது உப்புகள், புரதம் ஆகியவற்றை பழங்கள் மற்றும் காய்கறிகள் அதிகஅளவில் கொண்டுள்ளன. காய்கறி மற்றும் பழங்கள் ஊட்டச்சத்து பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதால் இவற்றை வருமுன் பாதுகாக்கும் உணவுப் பொருட்கள் எனலாம். தோட்டக்கலைப் பயிர்கள் நாட்டின் வளத்தை பெருக்குவதுடன் மக்களின் உடல்நலத்தை பாதுகாப்பதில் இன்றியமையாத அங்கமாகும்.

தோட்டக்கலைப் பயிரின் முக்கியத்துவம், ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் நீடித்த நிலையான வருவாய் பெருவதை முன்னிருத்தியே உள்ளது. குறைவான நீர் தேவையைக்கொண்டு அதிக வருவாயை வழங்கவல்ல தோட்டக்கலைப் பயிர்களை நோக்கியே நமது கவனம் திரும்பியுள்ளது. தமிழகத்தின் 7 வேளாண் சீதோஷ்ண மண்டலங்களான வடகிழக்கு மண்டலம் (காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர்), வடமேற்கு மண்டலம் (தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் மற்றும் பெரம்பலூர்), மேற்கு மண்டலம் (ஈரோடு, கோவை, கரூர் மற்றும் திண்டுக்கல்) காவேரி டெல்டா மண்டலம் (திருச்சி, தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம்), தெற்கு மண்டலம் (தேனி, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி) மழை மண்டலம் (கன்னியாகுமரி) மலை மண்டலம் (நீலகிரி, மேற்கு தொடர்ச்சி மலை) ஆகிய மண்டலங்களின் மண் மற்றும் தட்பவெப்ப நிலைகள் எல்லாவகையான தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்கேற்ற நிலையினை கொண்டுள்ளது. மாநிலத்தின் வேளாண் விளைபொருட்களில் தோட்டக்கலைப் பயிர்களான

பழங்கள், காய்கறிகள், வேர் மற்றும் கிழங்கு வகை பயிர்கள், மலர்கள், அலங்கார செடிகள், மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள், சுவைதானிய பயிர்கள், மலைப் பயிர்கள் மற்றும் காளான் ஆகியன முக்கியப் பங்கு வகிக்கின்றன.

2006-07 ஆம் ஆண்டில் தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் 9.27 இலட்சம் எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 160.49 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது. 2007-08 ஆம் ஆண்டில் 10.05 இலட்சம் எக்டேரில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு 174.14 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. 2008-09 ஆம் ஆண்டில் 10.95 இலட்சம் எக்டேரில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 190 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியினை அடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தோட்டக்கலையில் வணிக ரீதியான முயற்சிகளுக்கு தமிழ்நாடு பெரும்வாய்ப்புகளை பெற்று விளங்குகிறது. முந்திரி மற்றும் வெப்பமண்டல கொய் மலர்கள் போன்ற தோட்டக்கலைப் பயிர்கள் வளர்வதற்கேற்றவாறு தமிழ்நாடு நீளமான கடற்கரையைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் தென்பகுதியில் சிறப்பு பருவங்களிலும், மா மற்றும் திராட்சை விளைச்சல் தரும் வாய்ப்புகளை பெற்றுள்ளது.

தமிழ்நாடு வாழை மற்றும் மலர்கள் சாகுபடி பரப்பில் இந்தியாவில் முதலிடத்தை வகிக்கிறது. மலர்கள் மற்றும் மரவள்ளி ஆகிய பயிர்களின் உற்பத்தியில் இந்தியாவில் முதலிடத்தையும், மரவள்ளி மற்றும் முட்டைகோசு உற்பத்தி திறனில் இந்தியாவில் முதலிடத்தையும் வகிக்கிறது.

**தோட்டக்கலைத் துறையில் மறுசீரமைப்பு**

விவசாயிகளின் தேவைகளைச் செவ்வனே நிறைவேற்ற தோட்டக்கலைத் துறை போதுமான பணியாளர்களைக் கொண்டு பலப்படுத்தப்பட்டுள்ளது. தோட்டக்கலை துணை இயக்குநர் மாவட்ட தலைமை அலுவலர் ஆவார். அவரது கட்டுப்பாட்டில் மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும் தோட்டக்கலை உதவி இயக்குநர்கள்



தலைமையில் தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் தோட்டக்கலை உதவி அலுவலர்கள் பொறுப்பில் இயங்கி வருகிறது. தொழில்நுட்ப பணியாளர்கள் எண்ணிக்கை 1191-ல் இருந்து 2599 ஆகவும் அமைச்சுப் பணியாளர்கள் எண்ணிக்கை 752-ல் இருந்து 1158 ஆகவும் மறு சீரமைப்பில் உயர்த்தப்பட்டுள்ளது. மறு சீரமைப்பின்மூலம் பணியாளர்களுக்கு வளமான வாய்ப்பும் மற்றும் குறிப்பிடத்தக்க அளவில் பதவி உயர்வும் இந்த ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. இம்முயற்சியானது ஒப்பிட இயலாத பெரியதொரு செயலாகும்.

**2. மாநிலத் திட்டங்கள்**

**2.1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

இத்திட்டம் தமிழ்நாட்டில் சென்னையைத் தவிர இதர 29 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தரமான நடவுச் செடிகள், வீரிய ஒட்டுக் காய்கறி விதைகள் 50 சத மானிய விலையில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. 2007-08 ஆம் நிதியாண்டில் ரூ.266.610 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2008-09 ஆம் நிதியாண்டில் ரூ.385 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**2.2. தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள்**

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை, திருவள்ளூர் மாவட்டம் மாதவரம், கிருஷ்ணகிரி மாவட்டம் தளி மற்றும் நீலகிரி மாவட்டம் விவசாயிகள் பயிற்சி மையம் உதகை ஆகிய தோட்டக்கலை பயிற்சி மையங்களில் விவசாயிகளுக்குப் பயிற்சியளிப்பதுடன், களப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2007-08 ஆம் நிதி ஆண்டில் 2600 விவசாயிகள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ரூ.6.920 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பயிற்சி அளிக்கப்பட்டது. 2008-09 ஆம் நிதி ஆண்டில் 3000 விவசாயிகள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பயிற்சியளிக்கப்பட உள்ளது.

[2008 ஏப்ரல் 4

தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் விவரம்

| பயிர்வகை | 2000-01 | | | 2006-07 | | | 2007-08 (தற்காலிகம்) | | | 2008-09 (மதிப்பிடப்பட்டது) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் |
| 1 பழங்கள் | 2.23 | 40.06 | 17.96 | 2.69 | 69.4 | 25.79 | 2.92 | 75.30 | 25.80 | 3.18 | 82.08 | 25.81 |
| 2 காய் கறிகள் | 2.20 | 59.39 | 26.99 | 2.41 | 73.06 | 30.32 | 2.61 | 79.27 | 30.37 | 2.84 | 86.4 | 30.42 |
| 3 மலைத் தோட்டப் பயிர்கள் | 2.20 | 7.73 | 3.51 | 2.33 | 7.92 | 3.4 | 2.53 | 8.6 | 3.41 | 2.76 | 9.37 | 3.43 |
| 4 நறுமண சுவை தானிய பயிர்கள் | 1.68 | 6.62 | 3.94 | 1.55 | 8,02 | 5.17 | 1.68 | 8.7 | 5.18 | 1.83 | 9.48 | 5.19 |
| 5 மூலிகை பயிர் | 0.01 | 0.02 | 0.02 | 0.05 | 0.08 | 1.6 | 0.05 | 0.09 | 1.8 | 0.06 | 0.11 | 1.83 |
| 6 மலர்கள் | 0.19 | 1.45 | 7.75 | 0.24 | 2.01 | 8.37 | 0.26 | 2.18 | 8.38 | 0.28 | 2.38 | 8.5 |
| மொத்தம் | 8.51 | 115.27 | 13.55 | 9.27 | 160.49 | 17.31 | 10.05 | 174.14 | 17.33 | 10.95 | 190.0 | 17.35 |

(பரப்பு : இலட்சம் – எக்டேரில், உற்பத்தி : இலட்சம் மெட்ரிக் டன்னில், உற்பத்தித் திறன் : மெட்ரிக் டன் / எக்டேர்.)

## 2.3. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், திருச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள பழங்குடி விவசாயிகளுக்கு காய்கறி விதைகள் 90 சதவீத மானியத்திலும், தரமான பழச் செடிகள், பண்ணைக் கருவிகள் 75 சதவீத மானியத்திலும் விநியோகிக்கப்படுகிறது. உயர் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகள் குறித்து விவசாயிகள் அறிந்து வர வெளி மாவட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். 2007-08 ஆம் நிதியாண்டில் ரூ.40.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 2008-09 ஆம் நிதியாண்டில் ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 903 எக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட உள்ளது.



2008 ஏப்ரல் 4]

## 2.4. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு 25 சதவீத மானியத்தில் தரமான நடவுச் செடிகளான மா, வாழை, நெல்லி, சப்போட்டா மற்றும் இதர தோட்டக்கலை இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. 2007-08 ஆம் நிதியாண்டில் ரூ.58.38 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 2008-09 ஆம் நிதியாண்டில் ரூ.63 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

## 2.5. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் தரமான பழச் செடிகள், உயர் விளைச்சல் காய்கறி விதைகள், நறுமணப் பயிர்களின் நடவுச் செடிகள், பண்ணைக் கருவிகளான தெளிப்பான் மற்றும் ஆயில் இன்ஜின் ஆகியன 25 சத மானியத்தில் தோட்டக்கலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2007-08 ஆம் நிதியாண்டில் ரூ.221.66 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 2008-09 ஆம் நிதியாண்டில் ரூ.250 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

## 2.6. நகர காய்கறி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் சென்னை நகர் வாழ் மக்களுக்கு அலங்கார செடிகள், பழ செடிகள், உரம், வீரிய விதைகள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகிக்கப்படுகிறது. அத்துடன் தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. 2007-08 ஆம் நிதியாண்டில் ரூ.3.50 இலட்சம் நிதியில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 2008-09ஆம் நிதி ஆண்டில் ரூ.4.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

## 2.7. பகுதி - 2 திட்டங்கள்

2007-08 ஆம் நிதி ஆண்டில், தோட்டக்கலை ஆணையரகத்தில் பணி அமைவிடம் ஏற்படுத்தி உட்கட்டமைப்பு வசதிகளை பெருக்க ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது.

## 3. இலக்கு மற்றும் சாதனை

மாநில அரசுத் திட்டங்கள் 2007-08 ஆம் நிதிஆண்டில் நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் 2008-09 ஆம் நிதிஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

நிதி அலகு: ரூபாய் இலட்சங்களில்

| வ. எண் | திட்டங்களின் பெயர் | அலகு | 2007-08 பொருள் இலக்கு | 2007-08 பொருள் சாதனை 29.2.08 வரை | 2007-08 நிதி இலக்கு | 2007-08 நிதி சாதனை 29.2.08 வரை | 2008-09 பொருள் இலக்கு | 2008-09 நிதி இலக்கு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் | எக். | 16777 | 15207 | 266.610 | 192.050 | 25000 | 385.00 |
| 2 | தோட்டக்கலை பயிற்சி மையம் | எண் கள் | 2600 | 2600 | 7.610 | 6.920 | 3000 | 10.00 |
| 3 | ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம் | எக். | 903 | 0 | 40.000 | 0.000 | 903 | 40.00 |
| 4 | மேற்குத் தொடர்ச்சிமலை வளர்ச்சித் திட்டம் | எக். | 25 | 17.23 | 58.380 | 27.550 | 30 | 63.00 |
| 5 | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | எக். | 2067 | 1713 | 221.660 | 139.840 | 2100 | 250.00 |
| 6 | நகர காய்கறி அபிவிருத்தித் திட்டம் | எக். | 100 | 100 | 3.500 | 3.500 | 100 | 4.00 |
| 7 | பகுதி-2 திட்டங்கள் | - | 1 | 0 | 15.000 | 12.500 | - | - |
| | மொத்தம் | | - | - | 612.760 | 382.360 | - | 752.00 |



## 4. 2008-09 ஆம் நிதி ஆண்டிற்கான திட்டத்தின் முக்கிய கோட்பாடுகள்

i. நுண்ணீர்ப் பாசனம் மற்றும் நீர்வழி உரமிடுதல் உள்ளிட்ட உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை முறைகள் மேம்படுத்தப்படும்.

ii. உயர் தொழில்நுட்பம் / திசுவளர்ப்பு மேம்படுத்தப்படும்.

iii. நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்படும்.

iv. ஏற்றுமதிக் கண்ணோட்டத்துடன் இயற்கை பண்ணையம் மேம்படுத்தப்படும்.

[2008 ஏப்ரல் 4

## அத்தியாயம் 4

## தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (TANHODA)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு சட்டம் 1975-ன்கீழ் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை ஒரு சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தலைவர், மேலாண்மை இயக்குநர் மற்றும் ஆறு உறுப்பினர்கள் ஆளுகைக் குழுவில் உள்ளனர்.

தேசிய தோட்டக்கலை இயக்கம், நுண்ணீர்ப் பாசனம் மற்றும் தேசிய மூங்கில் இயக்கம் போன்ற திட்டங்களை செயல்படுத்தும் "சிறப்பு நோக்க ஊர்தியாக" தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை செயல்படுகிறது. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை கீழ்க்கண்டுள்ள திட்டங்களை செயல்படுத்துகிறது:-

(1) தேசிய தோட்டக்கலை இயக்கம்

(2) நுண்ணீர்ப் பாசனம்

(3) தேசிய மூங்கில் இயக்கம்

(4) தமிழ்நாடு நீர்வள - நிலவளத் திட்டம்

(5) அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

### துறைகளின் மறுசீரமைப்பு மற்றும் தோட்டக்கலை வளர்ச்சி முகமையைப் பலப்படுத்துதல்

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையினைப் பலப்படுத்த துறை மறு சீரமைப்பில் இவ்வரசு தேசிய தோட்டக்கலை இயக்கத்திற்காக ஒரு கூடுதல் இயக்குநரும், நீர்வள - நில வளத் திட்டம், நுண்ணீர்ப் பாசனம் மற்றும் மூங்கில் இயக்கம் மற்றும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் ஆகியவற்றின் பணிகளுக்காக மூன்று இணை இயக்குநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அதைப்போலவே அமைச்சுப் பணியாளர்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்.

### அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

தோட்டக்கலைப் பண்ணைகளில் உள்ள பணியாளர்களின் ஊதியத்தினை அரசே ஏற்கும். அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் செடிகள் மற்றும் இதர விளைபொருட்கள் விற்பனைமூலம் கிடைக்கும் வரவினம் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை கணக்கில்



2008 ஏப்ரல் 4]

செலுத்தப்படும். ஆண்டு செயல் திட்டங்கள், வரவு-செலவுத் திட்டங்கள் தயாரித்தல், பராமரிப்பு, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், இடுபொருட்கள், கூலி, மின்கட்டணம் போன்ற தினசரி செலவினங்கள் மற்றும் இதர வகை செலவினத்திற்கு தேவையான நிதி தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமைமூலம் வழங்கப்படும். இதற்கு தேவையான நிதி சுழல் நிதியாக ஒரே முறை ஒதுக்கீடாக தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமைக்கு வழங்கப்படும்.

### நடுவண் அரசு சார்புத் திட்டம்

### 1. தேசிய தோட்டக்கலை இயக்கம் (85:15)

இத்திட்டம் கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, கடலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சி, திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம் நீலகிரி, பெரம்பலூர், வேலூர், புதுக்கோட்டை, விழுப்புரம், கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய 20 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது இத்திட்டத்தின் மூலம் மா, நெல்லி, வாழை, முந்திரி, கோகோ, மிளகாய், மஞ்சள், நறுமணமூட்டும் பயிர்கள் மற்றும் மலர்கள் போன்ற தோட்டக்கலைப் பயிர்கள் தொகுப்பு முறையில் சாகுபடி செய்யப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டு ரூ.7576 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் ரூ.12,000 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் மாவட்ட இயக்க குழுமூலம் செயல்படுத்தப்படுகிறது. தோட்டக்கலை துணை இயக்குநர் இக்குழுவின் உறுப்பினர்-செயலர் ஆவார்.

### 2. நுண்ணீர்ப் பாசனம்

தண்ணீர்த் தேவைப்பாடு அதிகரித்து வரும் நிலையில் நீர் ஆதாரம் குறைந்து கொண்டு வருகிறது. நீரின் பயன்பாடு வேளாண்மைத் துறையில் அதிகம் உள்ளது. நீர்ப்பாசன திட்டங்கள் (பெரிய மற்றும் நடுத்தர) நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் நிலையில் பாரம்பரிய நீர்ப்பாசன முறைகள் திறனற்ற முறையிலும் மற்றும் நீர் வீணாகவும் வழிசெய்கிறது. நவீன பாசன முறைகளான சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் முறைகள்மூலம் நீர் ஆதாரத்தையும் சிறந்த முறையில் பயன்படுத்த வகை செய்கிறது.

இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள் தங்கள் நிலங்களில் அமைக்கப்படும் சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன அமைப்புக்கு 50 சதம் மானியம் வழங்கப்படுகிறது. தென்னை மற்றும் தனியார் ஆலை கரும்பு பயிர்களுக்கு வேளாண்மைத் துறை முகமை நிறுவனமாக விளங்குகிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கரும்புப் பயிர்களுக்கு சர்க்கரைத் துறை முகமை நிறுவனமாக விளங்குகிறது. மரவகை பழப் பயிர்களுக்கு வேளாண் பொறியியல் துறையும், காய்கறி, மலர்கள், நறுமணப் பயிர்கள், மருத்துவ பயிர்கள் மற்றும் வாழைக்குத் தோட்டக்கலைத் துறையும் பொறுப்பேற்கின்றன.

2007-08 ஆம் ஆண்டில் சொட்டு நீர்ப் பாசன நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டன. துறைகளில் மறு சீரமைப்புமூலம் போதுமான பணியாளர்கள் வழங்கப்பட்டுள்ளதால் இத்திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்படும். 2007-08 ஆம் ஆண்டில் இத்திட்டம் 12,621 எக்டர் பரப்பில் ரூ.6811 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் தோட்டக்கலை மற்றும் தோட்டக்கலை அல்லாத பயிர்களில் ரூ.9000 இலட்சம் செலவில் 38,000 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்படும்.

**நடுவண் அரசின் முழு நிதி உதவிமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**3. தமிழ்நாட்டில் மூங்கில் இயக்கம்**

மூங்கில் பயிர் வேகமாக வளரக்கூடிய பயிராகும். மூங்கில், பலதரப்பட்ட பயன்பாட்டிற்கு ஏற்றதாலும், விலை குறைவாக இருப்பதாலும் மரக்கூழ் தயாரிக்கும் தொழில், வீடு கட்டுதல், கலை, கைவினைப் பொருட்கள் செய்தல் போன்றவற்றிற்குப் பயன்படுகிறது. ஏறத்தாழ, 1,500 வகை பயன்பாடுகளுக்கு மூங்கில் உதவும் என அறியப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2007-08 ஆம் ஆண்டிற்கு ரூ.258.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தோட்டக்கலை, வேளாண்மை மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இவ்வியக்கத்திற்கு தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, முகமை நிறுவனமாக செயல்படுகிறது. தமிழ்நாட்டில் வனம் அல்லாத பகுதியிலும் 1000 எக்டர் பரப்பில் மூங்கில் பயிர் செய்யப்படுகிறது.





2007-08 ஆம் ஆண்டில் 50 சத மானிய அடிப்படையில் 200 எக்டர் பரப்பில் மூங்கில் சாகுபடி மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் 750 எக்டர் பரப்பில் சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 2007-08 ஆம் ஆண்டில் 200 விவசாயிகளுக்கு மேட்டுப்பாளையம் வன ஆராய்ச்சிக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டது. 2008-09 ஆம் ஆண்டில் 2300 விவசாயிகளுக்கு மூங்கில் சாகுபடியில் உயர் தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

**அயல் நிதி உதவி பெறும் திட்டம்**

**4. நீர்வள-நிலவளத் திட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள 63 உப நீர்வடிப் பகுதி நிலங்களில் அதிக வருமானம் அளிக்கக்கூடிய தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் வகையில் அதிகப் பரப்பினைக் கொண்டு வருதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2007-08 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 9 உப நீர்வடிப் பகுதிகளான வராகநதி, மேல்வெள்ளார், தெற்கு வெள்ளார், பாம்பார், மணிமுத்தாறு, கோட்டக்கரையாறு, அர்ஜூனா நதி, பாலாறு மற்றும் ஆழியாறு ஆகியவற்றில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2007-08 பரப்பு குறியீடான 6,139 எக்டேர் பரப்பில் 4,310 எக்டேர் சாதனை அடையப்பட்டுள்ளது. நிதிக் குறியீடான ரூ.858.120 இலட்சங்களில் இதுவரை ரூ.320 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் மேலும் 16 உப நீர்வடிபகுதிகளான பெண்ணையாறு (கிருஷ்ணகிரி வரையில்) ஸ்வேதாநதி, ஆனைவாரிஓடை, சின்னார், அக்னியாறு, அம்புலியார், மேல்வைகை, வரட்டாறு-நாகலார், மேல்குண்டார், தெற்கார், செங்கோட்டையார், சின்டப்பள்ளி உப்போடை, நிஷபநதி, கலிங்கலார், பொய்னி மற்றும் கௌடின்யாநதி ஆகிய பகுதிகளில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

விவசாயிகளுக்கு நடவுச் செடிகள், இடுபொருட்கள் வழங்குவது தவிர உயர் தொழில்நுட்பங்கள், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் அமைத்தல் மற்றும் விற்பனை வசதிகள் இதர தொடர்புள்ள துறைகளுடன் சேர்ந்து வழங்கப்படும்.

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமைமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம்:

| | | பொருள் : எக்டேரில்; நிதி : ரூபாய் இலட்சத்தில் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2007–08 | | | | 2008–09 | |
| வ. எண் | திட்டங்களின் பெயர் | பொருள் | | நிதி | | பொருள் | நிதி |
| | | இலக்கு | சாதனை 29-02-08 வரை | இலக்கு | சாதனை 29-02-08 வரை | இலக்கு | இலக்கு |
| 1 | நுண்ணீர் பாசனம் | 34382 | 13597 | 6811.00 | 1463 | 38000 | 9000 |
| 2 | தேசிய தோட்டக்கலை இயக்கம் | 30920 | 35514 | 9800.00 | 4843 | 40000 | 12000 |
| 3 | நீர்வள – நிலவளத் திட்டம் | 6139 | 4310 | 858.12 | 315 | 6375 | 886 |

**5 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்**

உதகை, தாவரவியல் பூங்கா உட்பட இத்துறையின்கீழ் 51 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் 4 பூங்காக்கள் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின்கீழ் இயங்கிவருகின்றன. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 10 வருடங்களுக்கு மேல் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த 1,083 பணியாளர்கள் 29-11-2007 முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்டதுடன் காலமுறை ஏற்ற ஊதியம் அளிக்கப்பட்டது. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தரமான நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு திட்டங்களின்கீழ் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்பண்ணைகள் அப்பகுதி விவசாயிகளுக்கு மாதிரி செயல் விளக்கப் பண்ணைகளாகவும் விளங்குகின்றன. தாவரவியல் பூங்கா மற்றும் இதர பூங்காக்கள் மாணவர்களின் கல்விக்கு பயனுள்ளதாகவும், பொதுமக்களுக்கு சுற்றுலாத் தலமாகவும் உள்ளன.

2007-08 ஆம் ஆண்டில் 29-02-2008-ன்படி 75 இலட்சம் நடவுச் செடிகள் தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 2008-09 ஆம் ஆண்டில் பல்வகையான நடவுச் செடிகள் 115 இலட்சம் எண்கள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் விவரங்கள் அட்டவணை 8-ல் கொடுக்கப்பட்டுள்ளது.



## அத்தியாயம் 5

## தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் வரையறுக்கப்பட்டது (TANHOPE)

தமிழ்நாட்டில் காய்கறி உற்பத்தி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் இதன் தனி அலுவலராகவும், தோட்டக்கலை இணை இயக்குநர் இதன் மேலாண்மை இயக்குநராகவும் உள்ளார்கள்.

**இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்கள்**

- தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியை ஊக்குவிப்பது.
- பழங்கள், காய்கறிகளை நவீன முறையில் விநியோகம் செய்ய வழிவகை செய்யும் வகையில் தரம் பிரித்தல் மற்றும் ஏற்றுமதிக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
- கூட்டுறவு முறையில் சில்லரை விற்பனை கடைகள்மூலம் விற்பனை மேற்கொள்ளுதல் மற்றும் பதனிடப்பட்டும், பதனிடப்படாமலும் உள்ள பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்தல்.

இதுவரையில் 3,904 தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் ரூ.100 சந்தா செலுத்தி இச்சங்கத்தின் உறுப்பினராக இணைந்துள்ளனர்.

**செயல்பாடுகள்**

**1. தேனியில் ஒருங்கிணைக்கப்பட்ட வாழை சிப்பம் கட்டும் நிலையம் அமைத்தல்**

தேனி மாவட்டத்தில் வாழை ஏற்றுமதிக்கு ஒருங்கிணைக்கப்பட்ட சிப்பம் கட்டும் நிலையம் 3 ஏக்கர் பரப்பில் தேனி மாவட்டத்தில், தேனி உள்ள சின்னமனூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில், வாழை சாகுபடியாளர் சங்கம் டான்ஹோப்புடன் இணைந்து ரூ.676.79 இலட்சம் செலவில் அமைக்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 4

தேனி வாழை சிப்பம் கட்டும் நிலையத்தில் 300 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன சேமிப்பு அறை அமைக்கப்பட உள்ளது. ஏற்றுமதிக்கென நாள் ஒன்றுக்கு 60 மெட்ரிக் டன் அளவு வாழை சிப்பம் கட்டும் வசதியும் ஏற்படுத்தப்படவுள்ளது. நாளொன்றுக்கு 30 மெட்ரிக் டன் அளவு வாழைப்பழங்கள் கனிய வைக்கப்படும் வசதியும் செய்யப்பட உள்ளது.

இத்திட்டத்தின்மூலம் அறுவடை செய்யப்படும் வாழை தார்கள் வயலிலிருந்து சிப்பம் கட்டும் நிலையத்திற்கு கொண்டு வரும் வரையிலும், பின்னர் சிப்பம் கட்டும் நிலையத்திலிருந்து உள்ளூர் சந்தை மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வரை வாழையின் தரம் தொடர்ந்து பாதுகாக்கப்படும். தேனியில் வாழை சிப்பம் கட்டும் நிலையம் அமைக்கப்படுவதால், தமிழகம் உலகத்தரம் வாய்ந்த வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்யவும், தமிழக விவசாயிகள் நல்ல விலை பெறவும் வாய்ப்புள்ளது.

**2. இடுபொருட்கள் வழங்குதல்**

தமிழ்நாட்டில் பல்வேறு தோட்டக்கலை வளர்ச்சி திட்டங்கள், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை செயல்படுத்துவதற்கு தேவைப்படும் இடுபொருட்களை கொள்முதல் செய்து தோட்டக்கலைத் துறை அலுவலர்கள்மூலம் விவசாயிகளுக்கு வழங்கும்.

மின்னணுவியல் உபகரணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் வாங்குவதற்கு எலகாட் நிறுவனத்தினை கொள்முதல் முகமையாக அரசுத் துறைகள் பயன்படுத்துவதைப்போல தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, டான்கோப் நிறுவனத்தின் கொள்முதல் முகமையாக செயல்படுகிறது.

காய்கறி விதைகள், பழச்செடிகள், கோக்கோ செடிகள், திசுவளர்ப்பு வாழைக்கன்றுகள், மல்லிகை செடிகள், உயிர் உரங்கள், உயிர் பூஞ்சாண கொல்லிகள், உயிர் பூச்சிக்கொல்லிகள், இயற்கை உரங்கள், மண்புழுஉரம், வேப்பம்புண்ணாக்கு, நுண்ணூட்டக்கலவை, இரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் போன்றவற்றை டான்கோப் நிறுவனம் கொள்முதல் செய்து தோட்டக்கலைத் துறைக்கு வழங்குகிறது.



2008 ஏப்ரல் 4]

**3. அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சி**

விவசாயிகளின் தோட்டக்கலை விளைபொருட்களை விற்பனை செய்யவும் மற்றும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவும் டான்கோப் நிறுவனம் தனியாருடன் இணைந்து செயல்படும். நல்ல தரமான தோட்டக்கலை விளைபொருட்களை விவசாயிகள் உற்பத்தி செய்ய டான்கோப் நிறுவனம் ஊக்குவிக்கிறது. இதற்காக தனியாருடன் இணைந்து ஒரு வர்த்தக நிறுவனம் துவங்கப்பட்டு 2008-09 ஆம் ஆண்டு செயல்பாட்டிற்கு வரும்.

[2008 ஏப்ரல் 4

## அத்தியாயம் 6

## வேளாண்மைப் பொறியியல்

### 1. முன்னுரை

வேளாண் உற்பத்தியைத் தொடர்ந்து அதிகரிப்பதற்கான பங்களிப்பில் தமிழ்நாட்டின் நிலம் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. நீர்வடிப் பகுதி மேம்பாடு, நீர்மேலாண்மை மற்றும் வேளாண்மை இயந்திரமயமாக்கல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து கீழ்க்காணும் நோக்கங்களை எய்திடும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

- ❖ மண் அரிமானத்தை தடுத்து மண் வளத்தைப் பாதுகாத்தல்
- ❖ ஒவ்வொரு மழைத்துளி நீரையும் சேமித்தல்.
- ❖ இருக்கும் நீரை திறம்பட பயன்படுத்துதல்.
- ❖ பண்ணை இயந்திரமயமாக்குவதை தீவிரப்படுத்துதல்.

### 2. நீர்வடிப் பகுதி மேலாண்மை

### 2.1. நதிப் பள்ளத்தாக்குத் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் (நடுவண் அரசு மற்றும் மாநில அரசுத் திட்டம் 90 : 10)

மாநிலங்களுக்கிடையேயுள்ள நதிப் பள்ளதாக்குத் திட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் அரிமானத்தை தடுத்தல் மற்றும் நீர்த் தேக்கங்களில் வண்டல் மண் படிவதைக் குறைத்தல், நீர்வடிப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் மூலம் நீர்வடிப் பகுதி நிலங்களின் தரம் குறையாமல் தடுத்தல், நீர்வடிப் பகுதிகளில் உள்ள நிலங்களின் தரம் மற்றும் ஈரப்பதத்தினை மேம்படுத்துதல், நீர்வடிப் பகுதிகளில் உள்ள நிலங்களின் தரத்திற்கேற்றவாறு நிலப்பயன்பாட்டினை மேற்கொள்ளுதல் ஆகிய நோக்கங்களுடன் நடுவண் அரசு மற்றும் மாநில அரசுகள் இணைந்து நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இந்திய மண் மற்றும் நிலப் பயன்பாட்டு அளவை நிறுவனம் கண்டறிந்து முன்னுரிமைப்படுத்தி, நடுவண் அரசு ஒப்புதல் அளித்துள்ள நீர்வடிப்



2008 ஏப்ரல் 4]

பகுதிகளில், மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2007-08 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நதிப்பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 10,144 எக்டர் பரப்பில் ரூ.1,250.00 இலட்சம் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2008 வரை, 8,867 எக்டர் பரப்பில் ரூ.1,091.94 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் 11,000 எக்டர் நிலப்பரப்பில் ரூ.1,500.00 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்தபடவுள்ளது.

### 2.2. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் (மாநில அரசுத் திட்டம்)

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழங்குடியினர் விவசாய நிலங்களை, தகுந்த மண்வளப் பாதுகாப்பு பணிகள் மூலம் மேம்படுத்துதல் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள ஜவ்வாது மலைப்பகுதி, சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள கல்ராயன் மலைப்பகுதி, சேலம் மாவட்டத்திலுள்ள சேர்வராயன் மலைப்பகுதி, தருமபுரி மாவட்டத்தில் உள்ள சித்தேரி மலைப்பகுதி, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லி மலைப்பகுதி, திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சை மலைப்பகுதி ஆகிய பகுதிகளில் அரசின் பல்வேறு துறைகள்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், பழங்குடியினர் விவசாய நிலங்களில் நிலச் சமன்பாடு, சம உயர கல் வரப்புகள், சம உயர கற்சுவர்கள் மற்றும் தடுப்பு அணைகள் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 100 விழுக்காடு அரசு மானியத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் பழங்குடியின விவசாயிகளின் நிலங்களில் 854 எக்டேர் பரப்பில் ரூ.138.00 இலட்சம் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2008 வரை 762 எக்டேர் பரப்பில் ரூ.110.96 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை பழங்குடியின

மக்கள் வாழும் பகுதிகளில் 720 எக்டேர் பரப்பில் ரூ.142.00 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.3. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் (மாநில அரசுத் திட்டம்)

நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலை பாதுகாத்து மேம்படுத்தும் முதன்மை நோக்கத்துடன் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்பு பணிகள் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டம் 75 நீர்வடிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நீர்வடிப் பகுதிகளில், முன்னுரிமை நீர்வடிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் நிலச்சரிவு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தனியார் நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான செலவில் பயனாளிகளின் பங்காக 10 விழுக்காடு பெறப்படுகிறது. சமுதாயப் பணிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகளின் பட்டா நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான செலவில் 5 விழுக்காடு பயனாளிகளின் பங்காகப் பெறப்படுகிறது. மீதச் செலவு அரசினால் ஏற்கப்படுகிறது. நிலச்சரிவு தடுப்புப் பணிகள் அரசின் 100 விழுக்காடு மானியத்தில் செயல்படுத்தப்படுகின்றன. 2007-08 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.373.00 இலட்சம் செலவில் 314 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளவும் 293 கட்டுமானங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2008 வரை ரூ.228.79 இலட்சம் செலவில் 240 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 259 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.400.00 இலட்சம் செலவில் 320 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளவும் 300 கட்டுமானங்கள் அமைத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.4. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் (மாநில அரசுத் திட்டம்)

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளின் சுற்றுப்புற சூழலை மறுசீரமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்திடும் பொருட்டு மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் பல்வேறு துறைகளின் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்பு பணிகள் நீர்வடிப்பகுதி அடிப்படையில் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன. தனியார் நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான செலவில் பயனாளிகளின் பங்காக 10 விழுக்காடு பெறப்படுகிறது. சமுதாயப் பணிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின உழவர்களின் பட்டா நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான செலவில் 5 விழுக்காடு பயனாளிகளின் பங்காகப் பெறப்படுகிறது. மீதச் செலவு அரசினால் ஏற்கப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.648.29 இலட்சம் செலவில் 1,410 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளவும் 1,634 கட்டுமானங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2008 வரை ரூ. 558.29 இலட்சம் செலவில் 1,359 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1,595 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2008-09ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.707.10 இலட்சம் செலவில் 1,500 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளவும் 1,720 கட்டுமானங்கள் அமைத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.5. மழை நீர் சேகரிப்பு மற்றும் மழை நீர் மேலாண்மைப் பணிகள் (மாநில அரசுத் திட்டம்)

நிலத்தடி நீர் மிக அதிகமாக பயன்படுத்தப்படுவதால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்துகொண்டே வருகிறது. நிலத்தடி நீர் செறிவூட்டும் பொருட்டு மழை நீர் சேகரிப்பு திட்டங்கள் மிகுந்த முக்கியத்துவத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நீர்வடிப் பகுதிகளில் மண்ணின் ஈரத்தன்மையை காத்து அதிக பரப்பில் விவசாயம் மேற்கொள்ளும் வகையில் மழை நீர் சேகரிப்பு மற்றும் மழை நீர் மேலாண்மை பணிகள் நவீன தொழில்நுட்ப முறைகளை கையாண்டு நீர்வடிப் பகுதி அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன. 2007-08ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 3,149 மழைநீர் சேகரிப்பு கட்டுமானப் பணிகள் ரூ.1,654.00 இலட்சம் செலவில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2008 வரை 2,532 மழை நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் ரூ.1,258.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.1,800.00 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 4

### 2.6. நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் மழை நீர் சேகரிப்பு பணிகள் (மாநில அரசுத் திட்டம்)

நபார்டு வங்கியின் நிதி உதவியுடன், நீர்வடிப் பகுதிகளில் மழை நீர் சேகரிப்பின்மூலம் மண்ணின் ஈரப்பதத்தை மேம்படுத்தும்பொருட்டு 19 மாவட்டங்களில் 249 நீர்வடிப் பகுதிகளில் நிலத்தடி நீர் செறிவூட்ட, ரூ.4,781.00 இலட்சம் செலவில் மழை நீர் சேகரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு அரசினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பண்ணைக்குட்டைகள் மற்றும் கிணறுகளை சீரமைத்தல் ஆகிய பணிகளுக்கான செலவில் 25 விழுக்காடு விவசாயிகளின் பங்காக பெறப்படுகிறது. சமுதாயப் பணிகளான கசிவு நீர்க்குட்டை மற்றும் தடுப்பணை போன்ற பணிகள் 100 விழுக்காடு அரசு மானியத்தில் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 2008 வரை 3,094 மழை நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் ரூ.1,566.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2008-09ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 3. நீர் மேலாண்மை

### 3.1. பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் (நடுவண் அரசு மற்றும் மாநில அரசுத் திட்டம் 50:50)

கால்வாய்மூலம் பாசனம் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் நீர் உபயோகிக்கும் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்சமயம், இத்திட்டம் நடுவண் அரசு மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன், காவிரிப் பாசனப் பகுதி, தாமிரபரணி நீர்தேக்கத் திட்டம், கடனா-ராமாநதி நீர்ப்பாசனத் திட்டம், நம்பியாறு ஆற்றுப்படுகைத் திட்டம், பச்சையாறு ஆற்றுப்படுகைத் திட்டம் மற்றும் மணிமுத்தாறு நீர்ப்பாசனத் திட்டம் ஆகிய பாசனப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றது. 2007-08 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்டுள்ள பாசனப் பகுதிகளில், 20,915 எக்டேர் பரப்பில் புல வாய்க்கால்கள் அமைத்தல், 44,300 எக்டேர் பரப்பில் புல வடிகால்கள் அமைத்தல், 38,917 எக்டேர் பரப்பில் சுழற்சிமுறைப் பாசனப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் விவசாய சங்கங்களுக்கு செயல்பாட்டு மானியம் வழங்குதல் போன்ற பண்ணை மேம்பாட்டுப் பணிகள் ரூ.5,131.32 இலட்சம் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு, பிப்ரவரி



2008 ஏப்ரல் 4]

2008 வரை ரூ.4,052.99 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. பாசன கால்வாய் உள்ளிட்ட பண்ணை மேம்பாட்டு பணிகளின் பராமரிப்பிற்காக எக்டர் ஒன்றுக்கு ரூ.600 (மாநில அரசின் பங்கு ரூ.270, நடுவண் அரசின் பங்கு ரூ.270 மற்றும் விவசாயிகளின் பங்கு ரூ.60) வீதம் பாசன சபைகளுக்கு செயல்பாட்டு மானியமாக வழங்கப்படுகிறது. கடனா-ராமாநதி நீர்ப்பாசனத் திட்டம், நம்பியாறு ஆற்றுப்படுகைத் திட்டம், பச்சையாறு ஆற்றுப்படுகைத் திட்டம், மணிமுத்தாறு நீர்ப்பாசனத் திட்டம், தாமிரபரணி நீர்தேக்கத் திட்டம் ஆகிய திட்டப் பகுதிகளில் இத்திட்டம் முடிவுறும் தருவாயில் உள்ளது. 2008-09 ஆம் ஆண்டில் பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் தற்போது செயல்பாட்டில் உள்ள காவிரிப் பாசன திட்டப் பகுதியுடன் கூடுதலாக வெலிங்டன் நீர்த்தேக்கத் திட்டம், திருக்கோயிலூர் அணைக்கட்டுத் திட்டம், கொடிவேரி அணைக்கட்டுத் திட்டம், வாணியார் நீர்த்தேக்கத் திட்டம், ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டம், குண்டார் சித்தார் கருப்பாநதி / கோமுகி நீர்தேக்கத் திட்டம் ஆகிய ஆறு புதிய பாசனப் பகுதிகளிலும் ரூ.4,734.00 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

### 3.2 சிறு பாசனம் (மாநில அரசுத் திட்டம்)

சிறுபாசனத் திட்டத்தின்கீழ் சுழல் விசைத்துளைக்கருவி, சிறு விசைத்துளைக் கருவி, பெர்குசன் விசைத்துளைக் கருவி, கைத்துளைக்கருவி, பாறை தகர்க்கும் கருவி மற்றும் நீள் துளைக்கருவி போன்ற சிறு பாசன இயந்திரங்கள்மூலம் பணிகள் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த வாடகையில மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், நில நீர்ஆய்வுக் கருவி மற்றும் மின்னியல் ஆய்வுக் கருவிகள்மூலம் விவசாயிகளுக்கு, நீர் ஊற்று இருக்குமிடம், கிணறு அமைக்கும் இடம் முதலியன கண்டறியப்படுகிறது. 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4. வேளாண்மையை இயந்திரமயமாக்குதல்

### 4.1. வேளாண் இயந்திரங்களை பிரபலப்படுத்தும் திட்டம் (நடுவண் அரசு மற்றும் மாநில அரசுத் திட்டம் 90:10)

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பண்ணை இயந்திரங்களை விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்தும்

நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், வேளாண்மையில் இயந்திரங்களைப் பிரபலப்படுத்துவதன் மூலம் பண்ணை சக்தியை கூடுதலாக வழங்கிடவும், வேளாண் பணியாளர்களின் வேலைப் பளுவைக் குறைத்திடவும், வேளாண் பணிகளை உரிய காலத்தில் முடித்திடவும், வேளாண் உற்பத்தியை பெருக்கிடவும் வேளாண் இயந்திரங்களை வாங்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நடுவண் அரசின் வழிமுறைகளின்படி, விவசாயிகளுக்கு பவர் டில்லர்கள், டிராக்டர்கள் போன்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் நாற்றுநடும் கருவி, கதிர் அறுப்பான் போன்ற பண்ணைக் கருவிகள் சொந்தமாக வாங்கிட இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் விலையில் 25 விழுக்காடு அல்லது நடுவண் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பு மானியம் இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 315 டிராக்டர்கள், 2,320 பவர் டில்லர்கள் மற்றும் 692 வேளாண் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.900.00 இலட்சம் மானியம் வழங்க திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2008 வரை 243 டிராக்டர்கள், 1,428 பவர் டில்லர்கள் மற்றும் 561 வேளாண் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.562.00 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 329 டிராக்டர்கள், 2,500 பவர் டில்லர்கள் மற்றும் 3,927 வேளாண் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.1,500.00 இலட்சம் மானியம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.2 விவசாயிகளுக்கு இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல் (மாநில அரசுத் திட்டம்)

புல்டோசர், டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரங்களை விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் வழங்கி நில மேம்பாட்டுப் பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும் தரிசு நிலங்களை விவசாயத்திற்கு பயன்படுத்தும் வகையில் பண்படுத்துவதற்கான பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறை மேற்கொண்டு வருகிறது. தற்போது 91 புல்டோசர்கள், 121 டிராக்டர்கள் மற்றும் 4 நெல் அறுவடை இயந்திரங்கள் உள்ளன.

புதியதாக, 2007-08 ஆம் ஆண்டில், 50 டிராக்டர்கள் மற்றும் டிராக்டருடன் பொருத்தப்படும் இழுவை, கொக்கிக்கலப்பை,





சட்டிக்கலப்பை, உருளைக்கலப்பை, சுழற்கலப்பை போன்ற கருவிகள், 25 அறுவடை இயந்திரங்கள் ரூ.590.75 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 31-01-2008 அன்று வேளாண் பணிகளுக்காக வழங்கப்பட்டது. விவசாயிகளுக்கு இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.3 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்விளக்கம் (நடுவண் அரசுத் திட்டம்)

நவீன வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்திடும் நோக்கத்துடன் விவசாயிகளின் நிலங்களில் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்விளக்கம் மேற்கொள்ளப்படுகின்றன. 2007-08 ஆம் ஆண்டில், செயல் விளக்கங்கள் மேற்கொள்ள வேண்டி பண்ணைக் கருவிகள் ரூ.19.51 இலட்சம் செலவில் வாங்கவும் மற்றும் 1,001 செயல் விளக்கங்கள் ரூ.24.56 இலட்சம் செலவில் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2008 வரை 242 செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. தொடர்ந்து செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.90.00 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.4. வேளாண்மை இயந்திரங்களை கையாளுவது மற்றும் பராமரித்தலில் விவசாயிகளுக்கு பயிற்சி (நடுவண் அரசுத் திட்டம்)

விவசாய உற்பத்தித் திறன், உற்பத்தி மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன், வேளாண்மையில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருக்கும் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மீதான புதிய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சித் திட்டத்தின்கீழ், 2007-08 ஆம் ஆண்டில் இத்துறையின்மூலம் விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரமயமாக்கல் பிரிவின்கீழ் 90 பயிற்சி வகுப்புகள் ரூ.22.50 இலட்சம் செலவில் நடத்திட திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2008 வரை 71 பயிற்சி வகுப்புகள் ரூ.17.03 இலட்சம் செலவில் நடைபெற்றுள்ளன. தொடர்ந்து பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. 2008-09 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு 180 பயிற்சி வகுப்புகள் ரூ.45.00 இலட்சம் செலவில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## 5. சிறப்புத் திட்டங்கள்

### 5.1. பழைய பம்புசெட்டுகளுக்கு பதிலாக புதிய பம்புசெட்டுகள் வழங்கும் திட்டம் (மாநில அரசுத் திட்டம்)

மின்சாரத்தை சேமிக்கும்பொருட்டு விவசாயிகளுக்கு பழைய, திறனற்ற பம்புசெட்டுகளுக்கு பதிலாக புதிய பம்புசெட்டுகள் வாங்கவும் மற்றும் பழுதடைந்த மின் சாதனங்களைப் புதுப்பித்துக் கொள்ளவும் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 5 குதிரைத் திறனுக்குகீழ் உள்ள பழைய பம்புசெட்டுகளுக்கு பதிலாக புதிய பம்புசெட்டுகள் வாங்குவதற்கு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு ரூ3,500/- அல்லது அதன் விலையில் 50 விழுக்காடு இதில் எது குறைவோ அது மானியமாகவும், இதர விவசாயிகளுக்கு ரூ.2,500 அல்லது அதன் விலையில் 25 விழுக்காடு இதில் எது குறைவோ அது மானியமாகவும் வழங்கப்படுகிறது. 5 மற்றும் 5-க்கு மேற்பட்ட குதிரைத்திறன் உள்ள பழைய பம்பு செட்டுகளுக்கு பதிலாக புதிய பம்புசெட்டுகள் வாங்குவதற்கு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு ரூ.6,000/- அல்லது அதன் விலையில் 50 விழுக்காடு இதில் எது குறைவோ அது மானியமாகவும், இதர விவசாயிகளுக்கு ரூ.5,000/- அல்லது அதன் விலையில் 25 விழுக்காடு இதில் எது குறைவோ அது மானியமாகவும் வழங்கப்படுகிறது. மேலும் மின்சார பாகங்கள், வால்வுகள் முதலியன புதுப்பிக்க அனைத்து விவசாயிகளுக்கும் ரூ.1,500/- அல்லது அவற்றின் விலையில் 50 விழுக்காடு, இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 16,615 பழைய பம்புசெட்டுகளுக்கு பதிலாக புதிய பம்புசெட்டுகள் வாங்கிட விவசாயிகளுக்கு ரூ.1,000.00 இலட்சம் மானியம் வழங்க திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2008 வரை 15,616 பழைய பம்பு செட்டுகளுக்குப் பதிலாக புதிய பம்புசெட்டுகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.892.20 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. 2008-09 ஆம் ஆண்டில் ரூ.1,000.00 இலட்சம் மானியத்தில் 16,350 விவசாயிகள் பயனடையும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.2. உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (ஐயம்வாம்)

தமிழ்நாட்டில் பாசன வேளாண்மையினை நவீனமயமாக்கவும், நீர்நிலைகளைச் சீரமைத்து மேம்படுத்திடவும் உலக வங்கி



கடனுதவியுடன் நீர்வள, நிலவளத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2007-08 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 2012-13 ஆம் ஆண்டு முடிக்கப்பட வேண்டும். இத்திட்டக் காலத்தில் 63 துணை ஆற்றுப் படுகைகளில் பணிகள் மேற்கொள்ள வேளாண்மைப் பொறியியல் துறைக்கு 75.40 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.360கோடி) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2007-08 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் 9 துணை ஆற்றுப் படுகைகளில் ரூ.2,244.98 இலட்சம் செலவில் நுண்ணிய நீர்ப்பாசனம், பண்ணைக் குட்டைகள், நீர் சேகரிப்பு கட்டுமானங்கள், வேளாண்மை இயந்திரமயமாக்கல், பாசனப் பகுதிகளில் நிலத்தடியில் 'பிவிசி' குழாய் பதித்து பாசனம் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுடன் திட்டங்களை விளம்பரப்படுத்துதல், தகவல் பரிமாற்றம் மற்றும் பயிற்சி போன்ற பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2008-09ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை 25 துணை ஆற்றுப் படுகைகளில் ரூ.4,669.35 இலட்சம் செலவில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.3. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேளாண்மையில் ஆண்டுக்கு 4 விழுக்காடு வளர்ச்சி அடையும் நோக்குடன், நடுவண் அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் வேளாண்மை இயந்திரமயமாக்கல், புன்செய் நிலங்களை மேம்படுத்துதல் மற்றும் பயிர் விளைச்சலுக்கு உகந்த கிராமங்களின் வரைபடங்களை கணினிமயமாக்கல் போன்ற திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்திட வேண்டி, 2007-08 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ரூ.1422.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2008 ஏப்ரல் 4

## அத்தியாயம் 7

## தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை

### நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு அரசு தரிசு நிலங்களை இலவசமாக வழங்கும் திட்டம்

இத்திட்டம் 2006-2007 ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிலங்கள் மூன்று இனங்களாக வகை செய்யப்பட்டுள்ளது.

இனம் I: எந்தவித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசு தரிசு நிலங்கள்

இனம் II: சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு தரிசு நிலங்கள்

இனம் III: சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலங்கள்

**திட்டத்தின் நோக்கங்கள்**

I. தரிசு நிலங்களைக் கண்டறிந்து, மேம்பாடு தேவைப்படும் நிலங்களைத் தக்க முறையில் செம்மைப்படுத்தி நிரந்தர வருவாய் மற்றும் இலாபகரமான சாகுபடிக்கு உகந்த நிலங்களாக மாற்றி நிலமற்ற ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்குப் பட்டா வழங்குதல்.

II. இனம் I மற்றும் II-ன்கீழ் 10 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்டு ஒரே தொகுப்பாக உள்ள நிலங்களில் நீர் ஆதாரம் இருப்பின், நில மேம்பாடு செய்து, ஆழ்குழாய்க் கிணறு அமைத்து இலவச மின்சாரத்துடன், சொட்டு நீர்ப்பாசன வசதி செய்து, தரம் வாய்ந்த பழமரக் கன்றுகள் நடவு செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

III. சிறு மற்றும் குறு விவசாயிகளின் தரிசு/புஞ்சை பட்டா நிலங்கள் சேர்ந்து 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்டு ஒரே தொகுப்பாக உள்ள நிலங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகள் தாமே முன் வந்தால் அந்நிலங்களில் நீர் ஆதாரம் இருப்பின், நில மேம்பாடு செய்து, ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, இலவச மின்சாரத்துடன் சொட்டு நீர்ப்பாசன வசதி செய்து, தரம்



2008 ஏப்ரல் 4]

வாய்ந்த பழமரக் கன்றுகள் நடவு செய்து நிரந்தர விளைநிலமாக ஆக்கப்படுகிறது.

IV. 10 மற்றும் 50 ஏக்கர் தொகுப்பு நிலங்களில் அமைக்கப்படும் ஆழ்குழாய்க் கிணற்றுடன் கூடிய சொட்டு நீர்ப்பாசன அமைப்பினை பராமரிக்க, அத்தொகுப்பில் பயனாளிகள் சங்கம் அமைத்து, அந்த பாசன அமைப்பு அச்சங்கத்திடம் ஒப்படைக்கப்படும். நீர்வளம் இல்லையெனில் விவசாயிகள் விருப்பத்திற்கு ஏற்ப உயிர் எரிசக்தி மரக்கன்றுகள் மற்றும் தீவனப் பயிர்கள் நடவு செய்து தரப்படுகிறது.

**சாதனை**

**அ. நில மேம்பாடு**

வருவாய்த் துறை மூலம் தேர்வு செய்யப்படும் நிலங்களில் நில மேம்பாடு தேவைப்படும் பரப்புகள் வேளாண் பொறியியல் துறை மூலம் மேம்படுத்தப்படுகிறது. நிலம் மேம்படுத்தப்பட வேண்டிய 41,506 ஏக்கரில் இதுவரை 39,673 ஏக்கர் மேம்படுத்தப்பட்டுள்ளது. நிலத்தடி நீரைப் பெருக்கிடவும், பாசனத்திற்காகவும் 15 x 3 x 1.5 கன மீட்டர் அல்லது 15 x 6 x 1.5 கன மீட்டர் அளவுள்ள பண்ணைக் குட்டைகளுக்கு முறையே ரூ.2,750/- மற்றும் ரூ.4,650/- மானியத்தில் அமைத்துத் தரப்படுகிறது. பிற துறைகளை ஒருங்கிணைத்து இத்திட்டத்தின்கீழ் 10,470 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

| செயல் சாதனை (பரப்பு ஏக்கரில்) | | | | |
|---|---|---|---|---|
| திட்ட செயல்பாடு | இதுவரை அளிக்கப்பட்ட பரப்பு | பயனாளிகள் எண்ணிக்கை | மேம்படுத்தப்பட வேண்டிய பரப்பு | மேம்படுத்தப்பட்ட பரப்பு |
| முதற் கட்டம் (17.9.06) | 25,282.11 | 24,358 | 11,122.00 | 11,122.00 |
| இரண்டாம் கட்டம் (17.12.06) | 25,805.53 | 26,749 | 8,078.00 | 8,078.00 |
| மூன்றாம் கட்டம் (17.3.07) | 26,029.61 | 20,648 | 5,490.00 | 5,490.00 |
| நான்காம் கட்டம் (17.6.07) | 24,506.00 | 19,821 | 6,596.00 | 5,892.00 |

| திட்ட செயல்பாடு | இதுவரை அளிக்கப்பட்ட பரப்பு | பயனாளிகள் எண்ணிக்கை | மேம்படுத்தப்பட வேண்டிய பரப்பு | மேம்படுத்தப்பட்ட பரப்பு |
|---|---|---|---|---|
| ஐந்தாம் கட்டம் (17.9.2007) | 32,065.61 | 24,932 | 4,364.00 | 3,397.00 |
| ஆறாம் கட்டம் (29.12.2007) | 26,982.62 | 21,487 | 2,396.00 | 2,234.00 |
| ஒருங்கிணைப்பு | -- | -- | 3,460.00 | 3,460.00 |
| ஏழாம் கட்டம் (17.03.2008) | 18,040.14 | 13,270 | மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன | |
| மொத்தம் | 1,78,711.62 | 1,51,265 | 41,506.00 | 39,673.00 |

**ஆ. 10 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட தொகுப்பு நில மேம்பாடு**

இத்திட்டத்தில் இதுவரை இனம் I மற்றும் இனம் II-ல் உள்ள 165 தொகுப்பு நிலங்களில் உள்ள 2,945.72 ஏக்கரில், 54 தொகுப்பு நிலங்களில் 1,212.40 ஏக்கர் மேம்படுத்தப்பட்டு பழ மரக்கன்றுகள் நடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. ஏனைய III தொகுப்பு நிலங்களில் உள்ள 1,733.32 ஏக்கர் நிலங்களில் மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தொகுப்பு நிலங்களில் உள்ள 1,517 விவசாயிகளுக்கு உர நிர்வாகம், சொட்டு நீர்ப் பாசனம், நடவு பற்றிய தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொகுப்பு நில மேம்பாட்டில் உள்ள பொது கட்டமைப்புகள் பராமரித்தல் பற்றியும் விளக்கப்படுகிறது.

**இ. 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் தொகுப்பாக உள்ள தனியார் பட்டா தரிசு/புஞ்சை நில மேம்பாடு**

இத்திட்டத்தின்கீழ் 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேலாக தொகுப்பாக உள்ள 1,589.96 ஏக்கர் பரப்பு ரூ.370.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படவுள்ளது.

**செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:**

சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக 29 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.



**நிதி சாதனை:**

இத்திட்டத்தில் ரூ.1,242.16 இலட்சம் செலவில் இதுவரை 39,673 ஏக்கர் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

| நிதி சாதனை (ரூ.இலட்சத்தில்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நில மேம்பாடு | | தொகுப்பு நில மேம்பாடு | | மொத்த செலவினம் | | | | |
| ஒருங்கிணைப்பின் பங்கு | முகமையின் பங்கு | ஒருங்கிணைப்பின் பங்கு | முகமையின் பங்கு | ஒருங்கிணைப்பின் பங்கு | முகமையின் பங்கு | பயிற்சி | பண்ணைக் குட்டை | மொத்தம் |
| 155.91 | 545.07 | 141.64 | 269.46 | 297.55 | 814.53 | 1.82 | 128.26 | 1,242.16 |

2008-2009 ஆம் ஆண்டில் இப்பணி தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

**2. திருத்தியமைக்கப்பட்ட தேசிய மானவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நவப்ரா)**

திருத்தியமைக்கப்பட்ட தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் பதினோராவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் (2007-2012) 22 மாவட்டங்களில் 500 நீர்வடிப்பகுதிகளில் ஐந்தாண்டுக் காலத்திற்கு நீர்ப்பாசன வசதி 30% குறைவாகவும், நிலச்சரிவு 8% குறைவாகவும் உள்ள நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டச் செலவினத்தை நடுவண் மற்றும் மாநில அரசுகள் முறையே 90% மற்றும் 10% என்ற அளவில் பகிர்ந்து கொள்கின்றன. ஒரு நீர்வடிப்பகுதி என்பது குறைந்தபட்சம் 500 எக்டேர் பரப்பளவு கொண்டதாகும்.

**குறிக்கோள்:**

- ❖ இயற்கை வளங்களை பேணிப் பாதுகாத்து, பெருக்கி திறம்பட பயன்படுத்துதல்.
- ❖ வேளாண்மை உற்பத்தியை நீடித்து பெருக்குதல்.
- ❖ பசுமை தரும் மரங்கள், தாவரங்களை வளர்த்து நலிவடைந்துள்ள இயற்கைச் சூழலை மேம்படுத்துதல்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 228404 சென்னை-600 008 நூலகம்

[2008 ஏப்ரல் 4

- ❖ மானாவாரி மற்றும் பாசன நிலங்களுக்கிடையே உள்ள மகசூல் வேறுபாட்டினைக் களைதல்.
- ❖ கிராமப்புற வேலைவாய்ப்பைப் பெருக்குதல்.

**திட்டச் செயலாக்கப் பகுதிகள்**

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இத்திட்டம் தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் உள்ள 155 வட்டாரங்களில் 755 நீர்வடிப்பகுதிகளில் சமுதாய அணுகுமுறையுடன் செயல்படுத்தப்பட்டது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இத்திட்டம் 22 மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. கோவை மாவட்டத்தில் உள்ள நீர்வடிப்பகுதிகள் பல்வேறு துறை திட்டங்களின்மூலம் பண்படுத்தப்பட்டுவிட்டதாலும், புதிய நீர்வடிப்பகுதிகள் இல்லாததாலும் திட்டத்திலிருந்து இம்மாவட்டம் நீக்கப்பட்டது.

இத்திட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை வழியாக கிராம அளவில், நீர்வடிப்பகுதி சங்கங்கள் / குழுக்கள்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

**திட்டத்தின் முன்னேற்றம்**

இத்திட்டத்தின்கீழ் 2,68,116 எக்டேர் பரப்பளவு ரூ.131.413 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டது.

இந்த திட்டத்தில் இதுவரை அடைந்த நிதி / பொருள் சாதனை விவரம் கீழ்வருமாறு:

| வ. எண். | ஆண்டு | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | | | பொருள் (எக்டேரில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | ஒதுக்கீடு | செலவினம் | இலக்கு | சாதனை |
| 1 | 2002-03 | 1,407.067 | 1,407.067 | 1,407.067 | 31,268 | 31,268 |
| 2 | 2003-04 | 1,525.000 | 1,525.000 | 1,525.000 | 33,888 | 33,888 |
| 3 | 2004-05 | 2,089.063 | 2,089.063 | 2,089.063 | 46,424 | 46,424 |
| 4 | 2005-06 | 1,990.160 | 1,990.160 | 1,990.160 | 44,227 | 44,227 |
| 5 | 2006-07 | 3,738.700 | 3,738.700 | 3,738.700 | 83,082 | 83,082 |
| 6 | 2007-08 | 2,391.300** | 2,391.300 | 2,391.300 | 29,227 | 29,227 |
| | மொத்தம் | 1,31,41.290 | 1,31,41.290 | 1,31,41.290 | 2,68,116 | 2,68,116 |

11-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் முதலாண்டிற்கென (2007-2008) ரூ.10.76 கோடி திட்ட ஆரம்ப கட்டப் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டது.



2008 ஏப்ரல் 4]

**பதினோராவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் திட்டச் செயலாக்கம்**

| ஆண்டு | 500 புதிய நீர்வடிப்பகுதிகளில் பண்படுத்தப்படும் பரப்பு (எக்டேர்) | நிதித் தேவை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 2007-08 | 25,000 | 15.00 |
| 2008-09 | 50,000 | 30.00 |
| 2009-10 | 50,000 | 30.00 |
| 2010-11 | 50,000 | 30.00 |
| 2011-12 | 75,000 | 45.00 |
| **மொத்தம்** | **2,50,000** | **150.00** |

இத்திட்டத்தின்கீழ், 19% தாழ்த்தப்பட்டோருக்கும், 1% பழங்குடியின மக்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**2008-2009 ஆண்டுத் திட்டம்**

பதினோராவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், 2008-2009ஆம் ஆண்டில் 50,000 எக்டேர் நிலப்பரப்பு, ரூ.30.00 கோடி செலவில் இத்திட்டத்தின்கீழ் பண்படுத்தப்படவுள்ளது. விவரம் பின்வருமாறு:

| இனம் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|
| **I மேலாண்மைப் பிரிவு** | |
| 1. நிர்வாகச் செலவினம் 10% | 3.00 |
| 2. சமுதாய அமைப்புகள் 17.5% | 5.25 |
| 3. பயிற்சி 5% | 1.50 |
| **II வளர்ச்சிப் பணிகள்** | |
| 1. இயற்கை வள மேம்பாட்டுப் பணிகள் 50% | 15.00 |
| 2. பண்ணை உற்பத்தி முறை (நில உரிமையாளருக்கு) 15% | 4.50 |
| 3. நிலமற்ற குடும்பங்களுக்கான வாழ்க்கைத் தொழில் உதவி 2.5% | 0.75 |
| **மொத்தம்** | **30.00** |

**3. நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதி (நபார்டு)**

நபார்டு வங்கி உதவியுடன் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதி திட்டம், 6 ஆண்டு திட்ட காலத்தில் 2004-2005 ஆம் ஆண்டு முதல் ரூ.60 கோடி மதிப்பீட்டில் 100 நீர்வடிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 4

**குறிக்கோள்**

1. நீர்வடிப் பகுதி பங்கேற்பு தொடர்பான செய்திகளைப் பரப்புதல்
2. அரசு, அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களை இத்திட்டத்தில் பங்கேற்கச் செய்தல்
3. இத்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளின் தேவைக்கேற்ப நீர்வடிப் பகுதிகளை மேம்படுத்த நீர்வடிப் பகுதி சங்கங்கள் மற்றும் நீர்வடிப் பகுதி குழுக்களை உருவாக்குதல்

**திட்ட காலம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | கொள் திறன் வளர்ப்பு நிலை (50 முதல் 100 எக்டேர்) | - | 18 மாதங்கள் |
| 2. | சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க | - | 6 மாதங்கள் |
| 3. | முழு செயலாக்கம் | - | 4 வருடங்கள் |
| | மொத்த காலம் | - | 6 வருடங்கள் |

**நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதியின் இனங்கள்**

21-11-2007 முதல் புதிய திட்ட வழிமுறையின்படி செயல்படுத்தப் படுகிறது.

1. நீர்வடி மேம்பாட்டு நிதியின் திறன் மேம்பாட்டுப் பயிற்சி 100 சதவிகிதம் நபார்டு வழங்கும் மானியமாகும்.

2. நீர்வடி மேம்பாட்டு நிதியின் முழு செயலாக்க நிலை 50 சதவிகிதம் மாநில அரசுக்கு நபார்டு வழங்கும் கடன் மற்றும் 50 சதவிகிதம் நபார்டு வழங்கும் மானியமாகும்.

3. வட்டி விகிதம் - 4.5%

4. திருப்பிச் செலுத்தும் காலம் - ஒன்பது ஆண்டுகள் (3ஆம் ஆண்டு முதல் திருப்பி செலுத்த வேண்டும்)

**திட்டச் செயலாக்கப் பகுதி**

நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதித் திட்டம் கீழ்க்காணும் 20 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:



2008 ஏப்ரல் 4]

கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், விருதுநகர்.

மாநில வழிகாட்டுதல் குழுவால் தேர்வு செய்யப்படும் நீர்வடிப் பகுதிகளைத் தவிர்த்து, இராமநாதபுரம், திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 5 மாவட்டங்களிலும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டு முன்னோடித் திட்டத்தின்கீழ் நபார்டு வங்கி மூலம் முழு மானியத்தில் 5 நீர்வடிப் பகுதிகளில் பண்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**பல்வேறு இனங்களுக்கு நிலையான நிதி ஒதுக்கீடு**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஒரு எக்டேருக்கான செலவு | | - | ரூ. 6,000.00 |
| 2. | திட்டச் செயலாக்கம் | 70% | - | ரூ. 4,200.00 |
| 3. | நிர்வாகச் செலவு | 10% | - | ரூ. 600.00 |
| 4. | நிலமற்ற பெண்களுக்கு வாழ்க்கைத் தர மேம்பாடு | 7.5% | - | ரூ. 450.00 |
| 5. | சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பயிற்சித் திட்டம் | 12.5% | - | ரூ. 750.00 |

**திட்டச் செயலாக்கம்**

2004-2005 மற்றும் 2005-2006 ஆம் ஆண்டுகளில் 100 நீர்வடிப் பகுதித் திட்டங்கள் மாநில வழி காட்டுதல் குழுவால் தேர்வு செய்யப்பட்டன.

இத்திட்டத்தின் முதல் 18 மாதங்களில் கொள்திறன் வளர்ப்பு நிலை பணிகளும், பின்னர் 6 மாதங்களில் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணிகளும் முதல் இரண்டு ஆண்டுகளில் நபார்டு வங்கியின்மூலம் மேற்கொள்ளப்படும்.

மூன்றாம் ஆண்டு முதல் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைக்கு இத்திட்டங்கள் முழு செயலாக்கம் மேற்கொள்ள நபார்டு வங்கி மூலம் ஒப்படைக்கப்படும்.

எனவே, 2004-2005 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு கொள் திறன் வளர்ப்பு நிலை மற்றும் சாத்தியக் கூறு அறிக்கை நிலையினை

முடித்த 10 நீர்வடிப் பகுதிகள் 2005-2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைக்கு ஒப்படைக்கப்பட்டு ரூ.115.487 இலட்சம் செலவில் 1,925 எக்டேர் பரப்பளவு பண்படுத்தப்பட்டது. தொடர்ந்து 2006-2007ஆம் ஆண்டு ரூ.219.611 இலட்சம் செலவில் 3,660 எக்டேர் பரப்பளவு பண்படுத்தப்பட்டு 2007-2008-ல் நபார்டு வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது.

2006-2007 ஆம் ஆண்டு 15 நீர்வடிப் பகுதிகள் முழு செயலாக்கம் மேற்கொள்ள தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைக்கு ஒப்படைக்கப்பட்டு, 2007-2008ல் ரூ.179.26 இலட்சம் செலவில் 3,727 எக்டேர் பரப்பளவு பண்படுத்தப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் (2008-2009) ரூ.234.207 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 2,902 எக்டேர் பரப்பளவு பண்படுத்தப்படவுள்ளது. பணிகள் முடிவடைந்தவுடன் நபார்டு வங்கியிடம் ஒப்படைக்கப்படும்.

2007-2008 ஆம் ஆண்டு முழு செயலாக்கம் மேற்கொள்ள நபார்டு வங்கியின் எந்த திட்டமும், தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைக்கு ஒப்படைக்கப்படவில்லை.

### 4. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் - ராஷ்ட்டிரிய கிருஷி விகாஸ் யோஜனா

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டமானது, வருடத்திற்கு 4% வேளாண்மைத் தொகுப்பில் வளர்ச்சி அடைய செயலாக்கப்படுகிறது. வேளாண்மையில், விவசாயிகள் அதிக அளவு பங்கேற்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். விவசாயிக்கு முக்கியப் பயிரிலிருந்து கிடைக்கும் உற்பத்தியில் ஏற்படும் குறைபாடுகளைக் குறைத்திட முக்கியத் தொழில்நுட்பங்கள் வழங்குவதுடன் விவசாயிக்கு அதிக வருமானமும், விவசாயத்தில் மட்டுமல்லாது விவசாயத்தைச் சார்ந்த இதர உபதொழில்களிலும் அதிக உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் பெற்றிட வழிவகுக்கிறது. இத்திட்டம் மந்திய அரசின் 100% நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் வேளாண்மை, கால்நடை, பால் உற்பத்தி, மீன் வளம் மற்றும் பாசன மேம்பாடு ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2007-2008 ஆம் ஆண்டில் கோவை, தர்மபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய 9 மாவட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் துறைகளான





வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல், பொதுப் பணித் துறை, மீன்வளம், கால்நடை, பால் வளம், தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை ஒருங்கிணைப்பு முகமையாகத் திகழ்கிறது.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம், தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின்மூலம் கீழ்க்கண்ட திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன:

(I) பட்டாவுடன் கூடிய ஒட்டுமொத்த 50 ஏக்கரும் அதற்கு மேலும் உள்ள புஞ்சை மானாவாரி நிலங்கள் மேம்படுத்தும் திட்டம்:

ஒட்டுமொத்த 50 ஏக்கரும் அதற்கு மேலும் உள்ள புஞ்சை மானாவாரிப் பரப்பில் விவசாயிகளின் விருப்பத்திற்கு ஏற்றவாறு பாசன வசதி உள்ள நிலத்தில் தோட்டக்கலை பயிர்களும் இதர பரப்பில் ஏனைய மரக்கன்றுகளும் நடவு செய்து வழங்கப்படுகிறது. இத்திட்டம் 9 மாவட்டங்களில் ஒட்டுமொத்தமாக 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் பரப்பில் திட்ட வழிமுறைகளின்படி செயலாக்கப்படுகிறது. இத்திட்டம் ஒட்டுமொத்த பரப்பில் 35 தொகுப்பில் 9 மாவட்டங்களில் ரூ.470.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது.

### (II) மேலாண்மை தகவல் தொழில்நுட்ப முறை (Management Information System)

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேலாண்மை தகவல் தொழில்நுட்ப முறை, தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையால் மாநில மற்றும் மாவட்ட அளவில் ரூ.30.84 இலட்சம் செலவில் வலைதளம்மூலம் மதிப்பீடு செய்யும் பணி செயல்படுத்தப்பட உள்ளது.

### வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

1972-1973 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வந்த இத்திட்டம் தற்பொழுது கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 17 மாவட்டங்களில் 80 ஒன்றியங்கள் வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகள் என்று அறிவிக்கை

செய்யப்பட்டு அந்தப் பகுதிகளை வறட்சியால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு இத்திட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒரு நீர்வடிப் பகுதி 500 எக்டேர் கொண்டதாகும். ஒரு எக்டேர் மேம்பாட்டிற்குச் செலவினத் தொகையாக ரூ.6000/- அனுமதிக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கான செலவினத்தை நடுவண் மற்றும் மாநில அரசுகள் தற்சமயம் 75:25 என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் ஏற்கின்றன. இத்திட்டச் செயலாக்கக் காலம் ஐந்தாண்டுகள் ஆகும்.

பல்வேறு காலக் கட்டங்களில் இத்திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் திட்டச் செயலாக்க முறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. முதலில் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கும் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கும் இத்திட்டத்தின்கீழ் முன்னுரிமை அளிக்கப்பட்டது. அதில் படிப்படியாக மாற்றங்கள் செய்யப்பட்டு, தற்போது மழை நீரினைச் சேமித்து, நீர் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஒட்டு மொத்தப் பொருளாதார மேம்பாட்டினை நீர்வடிப் பகுதிகளில் உருவாக்குவதாகும். அதைப்போலவே திட்டச் செயலாக்க முறைகளில் மாற்றம் செய்யப்பட்டு அரசுத் துறைகளின்மூலம் செய்யப்பட்டு வந்த பணிகள் தற்போது பயனாளிக் குழுக்கள் மூலம் பணிகள் கண்டறியப்பட்டு, கிராம ஊராட்சி மன்றங்கள் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. வறட்சியின் பாதிப்பைத் தணிப்பதற்கு மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர்வடிப் பகுதி அணுகுமுறைக்கு இத்திட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கீழ்க்கண்ட சிறப்பு அம்சங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

**தாவரவள மேம்பாடு:** பழமரக் கன்றுகள் வளர்த்தல், தீவனப்பயிர் மேம்பாடு செய்தல், செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல், சமுதாய நாற்றாங்கால் அமைத்தல், வீட்டுத் தோட்டம் அமைத்தல், வேளாண் காடுகள் அமைத்தல் மற்றும் சமூகக் காடுகள் வளர்த்தல்.

**நிலவள மேம்பாடு:** நிலம் சமப்படுத்துதல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல், சமஉயர வரப்பு அமைத்தல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல், தொடர் குழி எடுத்தல் மற்றும் வண்டல் மண் அடித்தல்.



**நீர்வள மேம்பாடு:** வரத்துக் கால்வாய் அமைத்தல் மற்றும் சீரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், கால்நடைக் குட்டை அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், கசிவுநீர்க் குட்டை அமைத்தல், ஊரணி சீரமைத்தல், கண்மாய் தூர்வாருதல், மற்றும் குடிநீர் ஆதாரமேம்பாடு செய்தல்.

தற்போது நடுவண் அரசின் உத்திகளின்படி புதிய நீர்வடிப் பகுதி திட்டங்கள் தொகுதிகளாக ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை மொத்தம் 1622 நீர்வடிப் பகுதிகளுக்கு ரூ.41,650.25 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் 400 நீர்வடிப் பகுதிகளில் ரூ.7,801.83 இலட்சத்தில் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதனால் மொத்தம் பயனடைந்த நிலப்பரப்பின் அளவு 1,97,081 எக்டேர்கள் ஆகும். மீதமுள்ள 1222 நீர்வடிப் பகுதி திட்டங்கள் ரூ.33,670.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். இதில் நடுவண் அரசின் பங்கு ரூ.25,252.50 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ.8,417.50 இலட்சமும் ஆகும். இதன் மூலம் 6,14,142 எக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தப்படும். கடந்த 2008 பிப்ரவரி முடிய இத்திட்டத்திற்காக ரூ,20,490.67 இலட்சம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு 1222 நீர்வடிப் பகுதி திட்டங்களைச் செயல்படுத்த விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் நடுவண் அரசின் பங்கு ரூ.15,567.31 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ.4,923.36 இலட்சமும் ஆகும். இதில் இதுவரை ரூ.18,085.31 இலட்சம் (88%) இத்திட்டத்திற்காகச் செலவழிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 2008 ஆம் மாதம் முடிய மொத்தம் மேம்படுத்தப்பட்ட நிலப்பரப்பின் அளவு 3,28,175 எக்டேர்கள் ஆகும். மீதமுள்ள 2,85,967 எக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதன் விவரம் அட்டவணை 9ல் கொடுக்கப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டச் செயலாக்கத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் முடிய நடுவண் அரசு ரூ.3200 இலட்சங்களும், மாநில அரசு தன் பங்காக ரூ.940 இலட்சங்களும் விடுவித்துள்ளன. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் வனம் இல்லாத தரிசு நிலங்களை வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டம் செயல்படுத்தப்படாத ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மழைநீரைச் சேமித்து, அதன்

உதவியுடன் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதாகும். இத்திட்டம் தற்பொழுது கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 24 மாவட்டங்களில் 99 ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தமிழகத்தில் 1993-1994 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1995 ஏப்ரல் மாதம் முதல் பொது நெறிமுறைகளின்கீழ் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் போல் இத்திட்டமும் கொண்டு வரப்பட்டு தற்போது அரியாலி நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரியாலி நெறிமுறைகளின்படி பயனாளிக் குழுக்கள் மூலம் பணிகள் கண்டறியப்பட்டு கிராம ஊராட்சி மன்றங்களின் மூலம் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது இத்திட்டச் செயலாக்கத்திற்கான செலவினத்தை நடுவண் மற்றும் மாநில அரசுகள் 11:1 என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் பகிர்ந்து கொள்கின்றன. ஒரு எக்டேர் மேம்பாட்டிற்கு செலவினத் தொகையாக ரூ.60,00 அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கீழ்க்கண்ட சிறப்பு அம்சங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்:

**தாவரவள மேம்பாடு:** வேளாண் காடுகள் அமைத்தல், பழமரக் கன்றுகள் வளர்த்தல், தீவனப்பயிர் மேம்பாடு செய்தல், செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல், சமுதாய நாற்றாங்கால் அமைத்தல், சமூகக் காடுகள் வளர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல்.

**நிலவள மேம்பாடு:** நிலம் சமப்படுத்துதல், சமஉயர வரப்பு அமைத்தல், வண்டல் மண் அடித்தல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச் சுவர், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி எடுத்தல்.

**நீர்வள மேம்பாடு:** கால்நடைக் குட்டை அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், ஊரணி சீரமைத்தல், கண்மாய் தூர்வாருதல், வரத்துக் கால்வாய் அமைத்தல் மற்றும் சீரமைத்தல், தடுப்பணைகள்



கட்டுதல், கசிவுநீர்க் குட்டை அமைத்தல் மற்றும் குடிநீர் ஆதார மேம்பாடு செய்தல்.

தமிழகத்தில் இத்திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு 85 புதிய திட்டங்கள் 24 மாவட்டங்களில் மொத்தம் ரூ.27,364.21 இலட்சத்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் மேம்படுத்தப்படும் மொத்த நிலப்பரப்பின் அளவு 4,75,239 எக்டேர்கள் ஆகும். மொத்தம் ஒப்பளிப்பு செய்யப்பட்ட 85 திட்டங்களில், 5 திட்டங்கள் முடிவுற்றுள்ளன. அதனால் ரூ.1,086.39 இலட்சம் செலவில் பயனடைந்த நிலப்பரப்பு 18,151 எக்டேர்கள் ஆகும். மீதமுள்ள 80 திட்டங்கள் ரூ.26,220.31 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். இதில் நடுவண் அரசின் பங்கு ரூ.24,241.69 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ.1,978.62 இலட்சமும் ஆகும். இதன் மூலம் 4,57,596 எக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தப்படும். கடந்த 2008 பிப்ரவரி முடிய ரூ.16,165.77 இலட்சம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு இத்திட்டங்களைச் செயல்படுத்த விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் நடுவண் அரசின் பங்கு ரூ.15,015.91 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ.1,149.86 இலட்சமும் ஆகும். இதில் இதுவரை ரூ.14,446.24 இலட்சம் (89%) செலவழிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 2008 முடிய மேம்படுத்தப்பட்ட மொத்த நிலப்பரப்பு 2,31,227 எக்டேர்கள் ஆகும். மீதமுள்ள 2,26,369 எக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றிய விவரங்கள் அட்டவணை 10-ல் கொடுக்கப்பட்டு உள்ளன.

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் முடிய நடுவண் அரசு ரூ.2649 இலட்சங்களும் மாநில அரசு தன் பங்காக ரூ.248 இலட்சங்களும் விடுவித்துள்ளன. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

[2008 ஏப்ரல் 4

## அத்தியாயம் 8

## வேளாண் விரிவாக்கம், கல்வி மற்றும் ஆராய்ச்சி

### I. விரிவாக்கம்

வேளாண்மை விரிவாக்கம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பணிகளில் ஒரு முக்கிய அங்கமாகும். இப்பல்கலைக்கழகம் அல்லது வேறு எந்த ஓர் ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்பங்களின் பலன் இறுதிப் பயனாளிகளை, அதாவது, விவசாயிகளைச் சென்றடையும்போதுதான் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கப் பணிகள் முழுமை அடைகின்றன. எனவே, வேளாண் துறையின் பல்வேறு செயல்பாடுகளில் பல்கலைக்கழகம் இணைந்து செயல்படுவதன்மூலம் விரிவாக்கப் பணிகள் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன.

### வேளாண் வளர்ச்சித் திட்டம்

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், துல்லிய பண்ணைத் திட்டத்தைத் தமிழகத்தின் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்துதல், வேளாண் பயிர்க் காப்பகங்கள் மற்றும் சிறு மண் பரிசோதனை ஆய்வகங்கள் ஏற்படுத்துதல், வேளாண் இயந்திரமயமாக்கல், தானியங்கி வானிலை நிலையங்கள் ஏற்படுத்துதல், நிலவளக் கணிப்பு மற்றும் புவிசார் தகவல் அமைப்புடன் கூடிய புள்ளிவிவர அடிப்படையில் பண்ணை, கிராமம் மற்றும் வட்டார அளவிலான திட்டமிடல், மானாவாரிப் பகுதிகள் மேம்பாடு மற்றும் சிறு தானியவகைகளைப் பரவலாக்குதல், அங்கே தொழுஉரம் உற்பத்தி மற்றும் அங்கக வேளாண்மையை ஊக்குவித்தல், தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், “அக்ரிடெக்” எனப்படும் வேளாண் தொழில்நுட்ப முனையத்தின் மூலம் இணையவழி வேளாண்மை, வேளாண் அறிவியல் மையங்களைப் பலப்படுத்துதல், மற்றும் தரக்கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளில் முனைப்புடன் ஈடுபடவுள்ளது.

தமிழ்நாடு துல்லிய பண்ணையத் திட்டம் மாநில அரசின் நிதியுதவியுடன் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 400 எக்டேர் நிலப்பரப்பில், 720 இலட்ச ரூபாய் செல்வில் கடந்த மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது. அதிநவீன வேளாண் தொழில்நுட்பங்கள் வேளாண் விஞ்ஞானிகளிடமிருந்து விவசாயிக்கும்,



2008 ஏப்ரல் 4]

விவசாயியிடமிருந்து விவசாயிக்குமாக இரு வழிகளில் பரப்பப்படுகிறது.
இத்திட்டத்தின்கீழ் காய்கறிகள், மலர்கள், வாழை மற்றும் மஞ்சள்
ஆகிய பயிர்கள் அடங்கும். முக்கியத் தொழில்நுட்பங்களான சமுதாய
நாற்றங்கால், உயர் விளைச்சல் மற்றும் கலப்பின இரகங்கள்,
உளிக்கலப்பை உழவு, சொட்டு நீர் உரப் பாசனம் மற்றும் சந்தை
சார்ந்த உற்பத்தி ஆகிய தொழில்நுட்பங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன.
இதனால் விவசாயிகள் மட்டுமின்றி விவசாயக் குடும்பப் பெண்கள்
மற்றும் தொழிலாளர்களும் அதிநவீன வேளாண் தொழில்நுட்பங்களில்
பயிற்சி பெறுகின்றனர். சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கேற்ப
குறைந்தபட்சம் 1.50 இலட்ச ரூபாயிலிருந்து அதிகபட்சமாக
வாழை (ரூ.6,55,000/எக்டேர்), கத்தரி (ரூ.6,18,000/எக்டேர்), தக்காளி
(ரூ.3,50,000/எக்டேர்), மலர்ப் பயிர்களான ரோசா (ரூ.10,00,000/எக்டேர்),
கோல்டன் ராட் (ரூ.1,78,000/எக்டேர்), சாமந்தி (ரூ.2,92,000/எக்டேர்)
ஆகிய பயிர்களிலிருந்து 6 இலட்சம் ரூபாய் வரை நிகர வருவாய்
கிடைக்கிறது. குறிப்பாக சந்தையில் அதிக விலை கிடைக்கும் போது
அதிக நிகர வருமானம் கிடைக்கிறது.

பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.308 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 26 மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 எக்டேர் வீதம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினால் சிறிய அளவில் செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டுள்ளன. துல்லிய பண்ணைய திட்டத்தினை அதிக அளவில் விரிவுபடுத்துவதன் மூலம் வேளாண் பொருட்களின் உற்பத்தித் திறன், மதிப்பூட்டுதல் மற்றும் சந்தைத் திறனை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே, தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனையும், தரத்தினையும், சந்தைத் திறனையும் அதிகரிக்கும் வகையில் துல்லிய பண்ணையத் திட்டம் மற்றும் நுண் நீர்ப்பாசனத் திட்டம் ஆகியன 12,800 எக்டேர் பரப்பளவில் 64 கோடி ரூபாய் மதிப்பில் 2008-2009 ஆம் ஆண்டில் விரிவாக்கப்படவுள்ளது.

வேளாண் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை,
வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, வேளாண்
விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறைகளில் உள்ள
பணியாளர்களுக்குத் தொழில்நுட்பத் திறனை வளர்ப்பதற்கான
பயிற்சிக்குத் தமிழக அரசின் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ்
ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி வேளாண் விரிவாக்கக்
கல்வி இயக்குநரகத்தினால் செயல்படுத்தப்படுகிறது. தற்போது,
செயலாக்கப்பட்டு வரும் இத்திட்டம் 122.50 இலட்ச ரூபாய்

செலவுடன் 2008-2009 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தமிழக அரசு வேளாண் துறை மற்றும் அதைச் சார்ந்த பிற துறைகளில் உள்ள ஏறத்தாழ 4,000 விரிவாக்கப் பணியாளர்களுக்கு, வேளாண் உற்பத்தி மற்றும் விளைபொருள் பதனிடுதலில் முன்னணித் தொழில்நுட்பங்கள், சந்தை அடிப்படையிலான வேளாண்மையை ஊக்குவித்தல், குழு அடிப்படையிலான வேளாண்மை, நவீன தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேளாண்மை ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும், புதிய தலைப்புகளான உலக வர்த்தகம், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை அமைப்பு (ஆத்மா), அரசு - தனியார் கூட்டமைப்பு, தொகுப்பு அணுகுமுறை, ஒருங்கிணைந்த உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் பயிர் நோய் மேலாண்மை, மண்வளம், நுண்நீர் பாசனம் மற்றும் உரநீர்ப் பாசனம் பற்றியும் பயிற்றுவிக்கப்படும்.

தமிழகத்தில் காட்டாமணக்குப் பயிரினை 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் எக்டேர் என்ற அளவில் சாகுபடி செய்வதற்காகக் கன்றுகளை உற்பத்தி செய்யவும், சொட்டு நீர்ப் பாசனத்திற்கு 50 சதவீதம் மானியமும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, 2007-2008 ஆம் ஆண்டில் காட்டாமணக்கு கன்றுகளை உற்பத்தி செய்வதற்காக ரூ.4.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதில் ரூ.2.50 கோடி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது.

ரூ.45.30 இலட்சம் செலவில் 41.64 இலட்சம் காட்டாமணக்கு நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. (தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 6 இலட்சமும், மாநில விதைப் பண்ணைகள் 26.2 இலட்சமும், 11 உயிர் எரிபொருள் தனியார் நிறுவனங்கள் 9.44 இலட்சம்) இந்த கன்றுகள் இந்நிதி ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

மாநிலத்தின் விரிவாக்கச் சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக வேளாண் தொழில்நுட்ப மேலாண்மைத் திட்டத்திற்குத் தொழில்நுட்ப உதவி புரிவதற்கு தமிழக வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்குநரகம், மாநில வேளாண்மையில் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிறுவனமாக (SAMETI) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேனேஜ் எனும் வேளாண் மேலாண்மை நிறுவனத்தைப் போன்று இந்நிறுவனம் தமிழக அரசின் வேளாண்



விரிவாக்கச் சீரமைப்புக்கு உதவி புரிவதற்காக மாநில அளவிலான நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப விரிவாக்க நடவடிக்கைகளில் வேளாண் அறிவியல் நிலையங்கள் முக்கியக் காரணிகளாகச் செயல்படுகின்றன. பண்ணை அளவிலான பரிசோதனைகள், முன்னணி செயல்விளக்கங்கள் மற்றும் மாநில அரசின் வேளாண் துறையின் அனைத்து முக்கிய விரிவாக்கச் செயல்பாடுகளில் இணைந்து பங்காற்றுதல் ஆகிய நடவடிக்கைகளிலும் வேளாண் அறிவியல் நிலையங்கள் ஈடுபட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள 15 தனியார் / தொண்டு நிறுவனங்கள் / கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக அறிவியல் மையங்களையும் உள்ளடக்கிய 29 வேளாண் அறிவியல் மையங்களையும் கண்காணிக்கும் மையமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநரகம் செயல்படுகிறது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் 14 அறிவியல் மையங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கி வருகின்றன. அரியலூர் மற்றும் திருப்பூரில் புதிய வேளாண் அறிவியல் மையங்களை உருவாக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பத் தகவல்களைப் பரவச்செய்யவும், வேளாண் தொழில்நுட்பத் தகவல் மையத்தின் வெளியீடுகள் "இந்தியா மார்ட்"-ன் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. முதல் கட்டமாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 12 வேளாண் நுகர் பொருட்களின் விவரங்கள் "இந்தியா மார்ட்" இணையதளத்தில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இடுபொருட்கள், கண்டுபிடிப்புகள் உலகச் சந்தையில் விற்பனையாவதற்கு வழிவகுக்கும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் தொழில்நுட்பத்தளம் மூலமாக மாநில வேளாண் துறைக்கு நவீன தகவல் பரிமாற்ற வசதிகளை ஏற்படுத்த மாநில அரசு உதவி செய்து வருகிறது. இது விவசாயம் சம்பந்தப்பட்ட தகவல்களை விவசாயிகளுக்கும், விவசாய அளிப்புத் தொடரில் உள்ள பிற பங்காளர்களுக்கும் பரிமாறிக்கொள்வதற்கு உதவியாக இருக்கும். இந்தத் திட்டமானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 60 மையங்களைத் தமிழகத்தின் 30 மாவட்டங்கள் மற்றும் 385 வட்டாரங்களோடு இணையதளம்மூலமாக இணைக்கும்

[2008 ஏப்ரல் 4

நோக்கத்தோடு செயல்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் விவசாயிகளுக்குத் தேவையான தகவல்களை பல்வேறு தகவல் பரிமாற்ற வழிகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும்.

## II. கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பன்னிரண்டு இளநிலை பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இதில் அறிவியல் பட்டப்படிப்புகளான இளமறிவியல் (வேளாண்மை), இளமறிவியல் (தோட்டக்கலை), இளமறிவியல் (வனவியல்), இளமறிவியல் (மனையியல்) மற்றும் இளம் நுட்பவியல் (வேளாண்மைப் பொறியியல்) ஆகியவை பொதுப் பாடத்திட்டத்தின் கீழும் தொழில்நுட்பப் பட்டப்படிப்புகளான இளம் நுட்பவியல் (வேளாண்மை உயிர் நுட்பவியல்), இளம் நுட்பவியல் (உயிர் தகவலியல்), இளம் நுட்பவியல் (தோட்டக்கலை), இளம் நுட்பவியல் (உணவு பதன் பொறியியல்), இளம் நுட்பவியல் (ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்), இளம் நுட்பவியல் (வேளாண் தகவல் தொழில்நுட்பம்) மற்றும் இளம் அறிவியல் (வேளாண் தொழில் மேலாண்மை) ஆகியவை சுயசார்பு பாடத்திட்டத்தின் கீழும் வழங்கப்படுகின்றன.

நடப்புக் கல்வியாண்டில் (2007-2008) கீழ்வரும் முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன:—

- இளம்நுட்பவியல் (வேளாண் தகவல் தொழில் நுட்பம்) மற்றும் இளம் அறிவியல் (வேளாண் தொழில் மேலாண்மை) ஆகிய இரண்டு புதிய பட்டப்படிப்புகள் 2007-2008 கல்வியாண்டில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.
- அனைத்து இளநிலை பட்டப்படிப்புகளுக்கும் இணையவழிக்கல்வி செயல்படுத்தப்பட்டது. பாடத் திட்டம் மற்றும் பாடக் குறிப்புகள் ஆகியன இணையதளம் மூலம் வழங்கப்படுகின்றன.
- இளநிலை பாடப் பிரிவுகளுக்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், பாடக்குறிப்புகள் தயாரிக்கவும் இணையவழிக் கல்விக் கூடம் தொடங்கப் பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 4]

- மாணவர் விடுதிகளில் இணையதளத் தொடர்பு வசதி செய்யப்பட்டுள்ளது.
- தென் மாவட்டங்களில் இரண்டு புதிய பட்டயப் படிப்புகள் மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை மற்றும் நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

வரும் கல்வியாண்டில் (2008-2009) செய்யப்படவுள்ள பணிகள்:

- மறுசீராக்கப்பட்ட பாடத் திட்டத்திற்கு இணையவழிக் கல்விப் பாடங்களைத் தயாரித்தல்
- இளநிலைக் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு இணையவழி மூலம், வீடியோ மூலம் பாடம் நடத்தும் முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
- அகில இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் திட்டம் மூலம் இளநிலை வேளாண்மை பட்டப் படிப்பிற்கான பாடங்களுக்கு இணையதள பாடக்குறிப்புகள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படும்
- இணையதள வழி தேர்வுமுறை அடுத்த கல்வியாண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.
- தென் மாவட்டங்களில் மேலும் மூன்று புதிய பட்டயப்படிப்புகள் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம், கடல்சார் உவர்நீர் ஆராய்ச்சி மையம், இராமநாதபுரம் மற்றும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை ஆகிய இடங்களில் தொடங்கப்படவுள்ளது.

### அமெரிக்கப் பல்கலைக்கழகங்களோடு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடர்பு கொண்டு செயல்படுதல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நீண்டகாலமாக அமெரிக்காவிலுள்ள பல பல்கலைக்கழகங்களோடு உடன்பாடு கொண்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொழில்நுட்ப பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் தங்களின் ஆராய்ச்சிகளை ஆஸ்திரேலியா, இத்தாலி, மெக்சிகோ, ஜப்பான், கனடா, தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து போன்ற பிற நாடுகளைச் சார்ந்த பல பல்கலைக்கழகங்களிலும் மேற்கொண்டு வருகின்றனர்.

[2008 ஏப்ரல் 4

இரு சார்பு பட்ட மேற்படிப்பு பாடத்தினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவிலுள்ள கார்னல் பல்கலைக்கழகத்தோடு இணைந்து 2008-2009 கல்வி ஆண்டு முதல் எம்.டெக் உணவு பதப்படுத்துதல் மற்றும் வாணிகம் மற்றும் "எம்.பி.எஸ் உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்" என்ற முதுகலைப் பட்டப் படிப்புகள் தொடங்கப்படவுள்ளன.

**தொலைதூரக் கல்வித் திட்டம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்கத்தின் மூலம் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த உழவர்கள், தொழில் முனைவோர், சுய உதவிக் குழுக்கள் மற்றும் இதர கல்வி கற்போர் பயன்பெறும் வண்ணம் 16 சான்றிதழ் பாடங்கள், 3 முதுநிலை பட்டையம் மற்றும் 3 முதுநிலைப் பட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன (அட்டவணை 11). கிராமப் பகுதிகளில் வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கு ஏதுவாகவும், தொலைதூரக் கல்வியில் ஆர்வமுள்ளவர்களுக்கு பயனளிக்கும் வண்ணம் இப்பாடத்திட்டங்கள் நடத்தப்படுகின்றன. 2008-2009 ஆம் ஆண்டு முதல் மேலும் 5 சான்றிதழ் பாடங்களிலும், 5 முதுநிலைப் பட்டையப் படிப்புகளும், 2 பட்டப் படிப்பு பாடங்களும் நடத்தப்படஉள்ளது (அட்டவணை 12).

**III. ஆராய்ச்சி**

தமிழக வேளாண் துறை எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சனைகள் குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இந்த ஆராய்ச்சித் திட்டங்கள் நடுவண் அரசு, மாநில அரசு மற்றும் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுக் கொடை நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல் படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஏழு வளாகங்களில் உள்ள 10 வேளாண் கல்லூரிகள் (அட்டவணை 13), 34 ஆராய்ச்சி நிலையங்கள் (அட்டவணை 14), 14 வேளாண் அறிவியல் மையங்கள் மற்றும் 5 பயிர் மருத்துவ மையங்கள் (அட்டவணை 15) ஆகியவற்றில் வேளாண் விஞ்ஞானிகள் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். தேவையின் அடிப்படையிலான ஆராய்ச்சிகள் ஒவ்வோர் ஆண்டும் நடக்கும் அறிவியல் பணியாளர்கள் மாநாடு மற்றும் பயிர் விஞ்ஞானிகள் கருத்தரங்கம் போன்ற பல்வேறு கூட்டங்களின்



2008 ஏப்ரல் 4]

முடிவுகள் மற்றும் ஆலோசனைகளின் பேரில் மேற்கொள்ளப் படுகின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் ஆராய்ச்சிப் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

மரபணு மாற்றுப் பயிர்கள் மற்றும் அதிக விளைச்சல் தரவல்ல நெல், பருத்தி, சோளம், கம்பு, கேழ்வரகு, துவரை, உளுந்து மற்றும் நிலக்கடலை பயிர்களை உருவாக்குதல், அறுவடைக்குப் பிந்திய செய் நேர்த்திகளை உருவாக்குதல், நெல் மற்றும் பருத்தி பயிர்களில் இயந்திரங்களைப் பயன்படுத்துதல், மலைப் பயிர்களுக்கான கருவிகளை வடிவமைத்தல், மா மற்றும் வாழைப் பழங்களைப் பதப்படுத்துவதில் பாதுகாப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துதல், நீர்த்தேக்கமுள்ள ஆற்றுப்பாசனப் பகுதிகளில் வடிகால் வசதி அமைப்புகளை வடிவமைத்தல், வீரிய ஒட்டு காட்டாமணக்கு இரகங்களை உருவாக்க தீவிர முயற்சி எடுத்தல், பயோடீசல் மற்றும் காட்டாமணக்கு எண்ணெய் வகைகளின் தரத்தைக்கண்டறிய முயற்சி மேற்கொள்ளுதல் மற்றும் வேளாண்மைச் சார்ந்த தொழில் பிணைப்புகளை ஏற்படுத்துதல், காய்கறிக் கழிவுகள், நகர்ப்புற திட மற்றும் திரவக் கழிவுகள், வேளாண் சார்பு தொழிற்சாலைக் கழிவுகள் ஆகியவற்றிலிருந்து உயிர்ம வாயு தயாரித்தல், வேளாண்மையில் சூரிய சக்தி மற்றும் இயற்கை எரிவாயுவை திறம்பட பயன்படுத்துதல் குறித்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**தோவாளையில் மலரியல் ஆராய்ச்சி நிலையம்**

இந்தச் சிறப்பு உதவித் திட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் மலரியல் ஆராய்ச்சி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நடுவண் அரசின் ரூ.50 கோடி சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் மூலம் நேனோ (மிகநுண்) பற்றிய ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (நேனோ தொழில்நுட்பம் என்பது 1 - 100) நேனோ மீட்டர் அளவிலான பொருளின் இயல்புகளை அறிந்து அவற்றைக் கட்டுப்படுத்தி, அதன் தனிச் சிறப்பால் நிகழும் புது விளைவுகளின் அடிப்படையில் புது பயன்பாடுகளுக்கு வழி வகுப்பதாகும். ஒரு நேனோ மீட்டர் என்பது ஒரு மீட்டரின் ஒரு பில்லியனில் (1,000,000,000-ல்) ஒரு பங்கு ஆகும்.

- மிகநுண் (நேனோ) களைக் கொல்லிகள் மற்றும் மிகநுண் வேதி உரங்கள் தயாரிப்பின்மூலம் மானாவாரி சாகுபடியில் இக்களைக் கொல்லிகள் மற்றும் உரங்களைக் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் வெளிப்படச் செய்து அவற்றின் செயல்திறனை அதிகரிப்பதுடன் பல்லாண்டுக் களைகளைக் கட்டுப்படுத்தி உற்பத்தியை அதிகரித்தல்
- மிகநுண் (நேனோ) தொழில்நுட்பத்தின்மூலம் இறந்து போன விதைக் குவியலில் இருந்து உயிருள்ள விதைகளைப் பிரித்தெடுத்தல்
- சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்குள்ளான மண் மற்றும் நிலப் பகுதிகளை மிகநுண் துகள்கள்மூலம் சீர்படுத்துதல்
- மிகநுண் உறைகளைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களைச் சேமிப்பதன்மூலம் அவற்றின் பயன்பாட்டுக் காலத்தை நீட்டித்தல்



## அத்தியாயம் 9

## விதைச் சான்றளிப்புத் துறை

### 1. முன்னுரை

வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க விதை மிக முக்கிய இடுபொருளாகும். தரமான விதை கிடைக்கவும், விதையில் கலப்படத்தைத் தவிர்க்கவும், விதைகள் கட்டுப்பாட்டு ஆணை மிகவும் அவசியமானது. உணவு உற்பத்தித் திட்டம் சிறப்பாகச் செயல்பட எல்லா இடுபொருட்களையும் நன்கு நிருவகிக்க வேண்டும். வேளாண் உற்பத்தியில் முழுப்பயனைப் பெற்றுத் தருவதில் விதைதான் மிக முக்கியமானது. நல்ல தரமான விதைகளை உரிய காலத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய விதைச் சான்றளிப்புத் துறையானது விதைச் சான்றளிப்பு, விதை தரக்கட்டுபாடு, விதைப் பரிசோதனை மற்றும் பயிற்சி ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### 2. விதைச் சான்றளிப்பு

தரமான மற்றும் இனத்தூய்மை கொண்ட விதை உற்பத்தியைத் தேவையான அளவில் குறிப்பாக உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களில் மேற்கொள்ள ஊக்குவிப்பதே விதைச் சான்றளிப்பு திட்டத்தின் முக்கிய பணியாகும். இக்குறிக்கோளை அடைய விதைச் சான்றளிப்புத் துறை, விதைகள் சட்டம் 1966-ன் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட இரக விதைகளில் சான்றளிப்புப் பணிகளை விதை விதிகள் 1968-ன் அடிப்படையில் மேற்கொண்டு மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் சான்று விதைகளின் தரத்தை உறுதி செய்கிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் சான்று விதை உற்பத்தி இரு மடங்காக அதிகரித்துள்ள போதிலும், மொத்த விதைத் தேவையில் இருபது விழுக்காடு மட்டுமே சான்றளிக்கப்பட்ட விதைகள்மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. சுமார் பத்து விழுக்காடு பரப்புக்கு உண்மை நிலை விதைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, விதைத் தேவைக்கும் விதை உற்பத்திக்கும் இடையே அதிக இடைவெளி காணப்படுகிறது. தனியார் சான்று விதை உற்பத்தி அதிகரிப்புமூலம் மொத்த சான்று விதை உற்பத்தியை கணிசமாக அதிகரிக்க இயலும். எனவே, சான்று விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தை அதிகரிக்கச் செய்ய தனியார் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க கவனம் செலுத்தப்படும். மொத்த சான்று விதை உற்பத்தியில் 62.51 விழுக்காடு

தனியார்மூலமும் 34.32 விழுக்காடு அரசு மூலமும் 3.17 விழுக்காடு அரசு சார்பு நிறுவனங்கள் மூலமும் உற்பத்தி செய்யப்படுகிறது. 2007-2008-ல் பல்வேறு பயிர்களில் சான்று பெற்ற விதைகள் 60,500 மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பிப்ரவரி 2008 வரை 52,891 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2008-09-ல் பல்வேறு பயிர்களில் 62,500 மெட்ரிக் டன் விதைகளுக்கு சான்றளிக்கப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளது.

## 3. விதை தரக் கட்டுப்பாடு

விதைத் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் விதை வணிகத்தை கண்காணித்து தரத்தை உறுதி செய்ய வேண்டியது முக்கியமானதாகும். எனவே, விதை விற்பனை நிலையங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்து, விநியோகத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் விதைகளில் மாதிரிகள் எடுத்து விதை பரிசோதனை செய்து உழவர்களுக்கு வழங்கப்படும் விதைகளின் தரத்தை உறுதி செய்ய வேண்டியதும், விதை வணிகத்தை தொடர்ந்து கண்காணிப்பது இத்துறையின் முக்கியப் பணியாகும். விதை மாதிரிகள் எடுத்து அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. விதைப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தரக்குறைவான விதை விநியோகம் காணப்படும் நிகழ்வுகளில் கண்டறியப்பட்டு உரியவர்கள்மீது துறை மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. விதைகள் சட்டம் 1966, விதை விதிகள் 1968 மற்றும் விதை (கட்டுப்பாடு) ஆணை 1983 ஆகியவற்றின் அடிப்படையில் இத்துறை விதைத் தரக் கட்டுப்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் விதை (கட்டுப்பாடு) ஆணை 1983-ன்படி விதை விற்பனையாளர்களுக்கு விதை விற்பனை உரிமங்களும் வழங்கப்படுகின்றன.

வேளாண்மைத் துறையின்கீழ் உள்ள விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு உள்ளிட்ட சகோதரத் துறைகள் மறுசீரமைக்கப்பட்டபோது விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுப் பணி மிக முக்கியமானதாக கருதப்பட்டு 250 ஆக இருந்த பணியிடங்களின் எண்ணிக்கை 344 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சராசரியாக ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு விதை விற்பனை நிலையங்களும் இரண்டு முறை மட்டுமே ஆய்விடப்பட்டு வந்த நிலையிலிருந்து, தற்சமயம் ஆண்டொன்றுக்கு 5 முறை ஆய்வு செய்யப்படும். தற்சமயம் 6,623 விதை விற்பனை நிலையங்கள் நமது





மாநிலத்தில் உள்ளன. 2007-2008 ஆம் ஆண்டு 34,500 விற்பனை நிலையங்களின் ஆய்வுகளில் 24,000 விதை மாதிரிகள் எடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பிப்ரவரி 2008 வரை 34,138 விற்பனை நிலைய ஆய்வுகளும் 26,215 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் பிப்ரவரி 2008 முடிய 1,042 விதைக் குவியல்களைக் கொண்ட ரூ.231.954 இலட்சம் மதிப்புள்ள 1,195.317 மெட்ரிக் டன் தரக்குறைவான விதைகள் கண்டறியப்பட்டு விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில், 354 வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டு இதுவரை 218 வழக்குகளில் அரசுக்கு சாதகமாக தீர்ப்புப் பெறப்பட்டுள்ளது. விதை ஆய்வு பிரிவு தற்போது வலுப்படுத்தப் பட்டுள்ளதைத் தொடர்ந்து வரும் ஆண்டில் தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உழவர்களுக்கு தரமான விதைகள் கிடைக்கச் செய்வதை மேலும் உறுதிப்படுத்தப்படும். 2008-2009 ஆம் ஆண்டில் 40,000 விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொண்டு 28,500 விதை மாதிரிகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4. விதைப் பரிசோதனை

உலக விதைப் பரிசோதனை அமைப்பு உருவாக்கிய விதி முறைகளுக்கு உட்பட்டு விதைப் பரிசோதனைத் திட்டத்தில் விதைகளின் தரத்தை அறிய முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம், விதை நலம் மற்றும் பிற ரக கலவன்கள் ஆகியன கண்டறியப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. விதைப் பரிசோதனையானது அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் மேற்கொள்ளப்படுகிறது. விதைச் சான்றளிப்பு மற்றும் விதைத் தரக்கட்டுப்பாட்டு பணிகளை உரிய முறையில் செயல்படுத்த விதைப் பரிசோதனை முடிவுகள் அவசியமானது. தமிழகத்தில் தற்சமயம் பதினோறு அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

விதைப் பரிசோதனை நிலையங்களில் சான்று விதை மற்றும் ஆய்வு விதை மாதிரிகள் மட்டுமன்றி உழவர்களிடமிருந்தும், விற்பனையாளர்களிடமிருந்தும், விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. பணி விதை மாதிரிகளுக்கு ஒரு மாதிரிக்கு ஆய்வுக் கட்டணமாக ரூ.30.00 வசூலிக்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 51,445 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் 63,500 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

விதைப் பரிசோதனைத் திட்ட பயன்கள் எல்லா விவசாயிகளுக்கும் எளிதில் அடைய ஏதுவாக விதைப் பரிசோதனை நிலையங்கள் இல்லாத கடலூர், திண்டுக்கல், கரூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, திருவள்ளூர், தூத்துக்குடி, திருவாரூர், திருவண்ணாமலை, தேனி, வேலூர், விருதுநகர் ஆகிய 18 மாவட்டங்களில் புதிய விதைப் பரிசோதனை நிலையங்கள் 2008-2009-ல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

விதைகளின் இனத் தூய்மையை அறிய பயிர் வளர்ப்பு பரிசோதனையானது விதைச் சான்று இயக்ககத்திலுள்ள கண்ணாடி ஆய்வகத்திலும், கண்ணம்பாளையம் (கோயம்புத்தூர்) பண்ணையிலும் மேற்கொள்ளப்படுகிறது. விதைச் சான்றளிப்புத் திட்டத்தில் சான்றளிப்புக்குமுன் இனத் தூய்மை உறுதி செய்ய வேண்டிய பயிர் விதை மாதிரிகளும், விதை ஆய்வுப் பிரிவிலிருந்து பெறப்படும் விதை மாதிரிகளும் இனத் தூய்மைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

## 5. பயிற்சி

தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஊக்குவிக்க இத்துறையின் பயிற்சிப் பிரிவின்மூலமாக கீழ்க்குறிப்பிட்ட பயிற்சிகள் நடத்தப்படுகின்றன:

### 5.1 புத்தறிவுப் பயிற்சி

இத்துறையில் புதிதாக பணியேற்கும் அலுவலர்களுக்கு விதைச் சான்றளிப்பு நடைமுறை, வயல் ஆய்வுகள், பயிர் ரக குணாதிசயங்கள் கண்டறிதல், விதைச் சுத்திகரிப்பு, விதை மாதிரி எடுத்தல், சான்றளிப்பு, விதைப் பரிசோதனை மற்றும் விதைத் தரக்கட்டுப்பாடு குறித்து பயிற்சியளிக்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 37 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் 150 நபர்களுக்கு பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.2 புத்தாக்கப் பயிற்சி

இத்துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு புதிய விதை உற்பத்தித் தொழில்நுட்பங்கள் மற்றும் புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் கண்டறிதல் குறித்த



பயிற்சியளிக்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 213 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் 280 நபர்களுக்கு பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.3 விதை உற்பத்தியாளர் பயிற்சி

விதை உற்பத்தியாளர்களுக்கு விதை உற்பத்தி குறித்த தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்கள் எடுத்துரைக்கப் படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 22,848 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் 23,850 நபர்களுக்கு பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.4 விதை விற்பனையாளர்களுக்கு தரக்கட்டுபாடு பயிற்சி

விதை விற்பனையில் விதைத் தரம் பேணிக்காத்தல் தொடர்பாகவும், விதை இருப்பு வைப்பதிலும், விற்பனை செய்வதிலும் கையாள வேண்டிய நெறிமுறைகள் குறித்தும், விதை தொடர்பான சட்டங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 9,596 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் 9,720 நபர்களுக்கு பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பல்வேறு பயிற்சிகளின்கீழ் பயனடையும் நபர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 32,694 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2008-2009-ல் 34,000 நபர்களுக்கு பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 6. அங்கக வேளாண்மை

அங்கக விவசாயம் மற்றும் அதற்கான சான்றிதழ் பற்றிய விழிப்புணர்வு தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள், பதனிடுவோர், விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் பொது மக்களிடையே பெருகி வருகிறது. இரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்து உற்பத்திச் செய்த வேளாண் விளைபொருட்களை உட்கொள்வதால் ஏற்படும் உடல் நல குறைபாடுகளைச் சந்தித்ததனால் பல விவசாயிகள் இயற்கை உர வேளாண்மையிலே ஆர்வம் காட்டுகின்றனர்.

[2008 ஏப்ரல் 4

தற்போதைய நடைமுறை விவசாயமானது மண்ணில் உள்ள நுண்ணுயிர்களை அழிப்பதோடல்லாமல் மண்ணின் வளத்தை குறைத்து இடுபொருட்களுக்கு ஏற்ற விளைச்சலைத் தராததால் உற்பத்தி செலவைக் குறைக்கவும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நச்சுத் தன்மையிலிருந்து பாதுகாக்கவும் விவசாயிகள் தற்போது அங்கக முறை வேளாண்மைக்கு மாறி வருகின்றனர்.

**7. அங்ககச் சான்றளிப்பு**

மே 2007 முதல் தமிழக அரசு அங்ககச் சான்றளிப்பு பணிக்கென புதிய துறையை உருவாக்கி அங்கக உர உற்பத்தி சாகுபடி முறையினை ஆய்வுகள் செய்து சான்று பணி மேற்கொண்டு வருகிறது. தேசிய அங்கக உற்பத்தித் திட்டம் (National Programme for Organic Production) என்ற தரத்தின் அடிப்படையில் அங்ககச் சான்றளிப்பு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டம் நடுவண் அரசினால் 2000-ம் ஆண்டு துவக்கப்பட்டு அக்டோபர் 2001-ல் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் வளர்ச்சி (Foreign Trade and Development Act) சட்டத்தின்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறை விதைச்சான்று இயக்குநரின்கீழ் கோவையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இதில் இரசாயன உரம், பூச்சி கொல்லி மருந்துகள், பயிர் வளர்ச்சி ஊக்கிகள், தீவன சேர்ப்பான்கள் மற்றும் மரபணு மாற்று விதைகள் பயன்படுத்தாமல் மேற்கொள்ளப்படும் சாகுபடி முறைகள் மட்டுமே அங்ககச் சான்றளிப்பில் பதிவிற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

இதுவரை தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையில் 4,671 ஏக்கர் பரப்பளவில் 353 விவசாயிகள் அங்ககச் சான்றளிப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் 3180.38 ஏக்கர் பரப்பளவு கொண்ட 32 தனியார் நிறுவனங்கள், 490.62 ஏக்கர் பரப்பளவு கொண்ட 120 விவசாயிகள் குழுவாகவும், 1,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட 201 விவசாயிகள் பெருவணிக நிறுவனத்தின்கீழும் பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த நபர்கள் அனைவரும் தனியார் துறையைச் சார்ந்தவர்கள்.



2008 ஏப்ரல் 4]

அங்ககச் சான்றளிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக அங்ககச் சான்றளிப்புத் துறையில் சர்வதேச தர நிறுவனம் 65 (ISO 65)-க்கேற்ப தர நூல், நடைமுறை நூல் மற்றும் பொதுவான தரங்கள் குறித்த நூல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நடுவண் அரசின் வணிக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் புதுடெல்லியில் உள்ள அபீடா (Agriculture and Processed Food Products Export Development Authority) நிறுவனத்தின் அங்கீகாரம் (Accreditation) பெறவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துறையின்கீழ் அங்ககச் சான்றளிப்புக்கு பதிவு செய்த விவசாயிகளுக்கு அங்ககச் சான்றளிப்பு தரங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்த பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 4,671 ஏக்கர் பரப்பளவில் அங்ககச் சான்றுக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அங்ககச் சான்றளிப்புத் திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டில் 10,000 ஏக்கர் பரப்பளவு பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 4

## அத்தியாயம் 10

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை

### 1. முன்னுரை

உலகத்தரம் வாய்ந்த பொருட்களையே விரும்பும் நுகர்வோர் மத்தியில் தற்போதைய போட்டி நிறைந்த சூழ்நிலையில் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு இடைத்தரகர்கள் தலையீடு இல்லாமல் நுகர்வோருக்கு நியாயமான குறைந்த விலையில் வேளாண் விளைபொருட்கள் கிடைக்கச் செய்வதே வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் நோக்கமாகும். இதற்கென இயற்றப்பட்ட சட்டத்தை முறையாகச் செயல்படுத்தி புதிய தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் அறுவடைக்குப் பின் மற்றும் போக்குவரத்தில் ஏற்படும் சேதாரங்களைக் குறைப்பதுடன், சரியான வகையில் தரம்பிரித்தும், விளைபொருட்களின் மதிப்பினைக் கூட்டுவதன் மூலமும் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்யத் தக்க நடவடிக்கை மேற்கொள்வதுமாகும்.

பசுமைப் புரட்சிமூலம் பல முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் உணவு தானிய உற்பத்தியை அதிகரித்துத் தன்னிறைவு பெற முடிந்தது. அதே வேளையில், மாநிலத்தில் வேளாண் விற்பனையை மேம்படுத்தப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கிராமங்களின் வளர்ச்சியிலும், நாட்டின் கிராமப் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதிலும், வேளாண் அங்காடிகளின் உட்கட்டமைப்புகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. விவசாயத்தின் செயல்திறன் மேம்படுவதற்கு உற்பத்தி எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு விற்பனையும் முக்கியமான அம்சமாகும்.

வேளாண்மை வணிகம் என்பது ஒரு விளைபொருளை உற்பத்தி செய்திட முடிவெடுக்கும்போதே தொடங்குகிறது. மேலும், வேளாண் வணிகம் என்பது வேளாண் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க தரம் பிரித்தல், மதிப்புக் கூட்டுதல், சிப்பம் கட்டுதல், பதப்படுத்துதல், போக்குவரத்து ஆகிய அம்சங்களைக் கொண்டதாகும். இந்த நடவடிக்கைகள் வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்பினைக் கூட்டுவதுடன் விளைவிப்போருக்கு சிறந்த விலை கிடைக்க வழி வகுக்கின்றன.



2008 ஏப்ரல் 4]

வேளாண்மை விற்பனையை ஒழுங்குபடுத்தும் நோக்குடன், தமிழ் நாட்டில் வேளாண்மை விற்பனைத் துறை 1977 முதல் தனித் துறையாகச் செயல்பட்டு வருகின்றது. வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதோடு மட்டுமன்றி, உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பொருட்களின் ஏற்றுமதி ஆகிய பொறுப்புகள் கூடுதலாக வழங்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு முதல் "வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

### 2. வேளாண்மைத் துறை மறுசீரமைப்பு

வேளாண்மைத் துறை மறு சீரமைப்பினால் வேளாண் வணிகத்தை முறைப்படுத்தி வேளாண் சம்பந்தப்பட்ட தொழில் முனைவோரை ஊக்குவிக்க வேண்டி மாவட்டத்திற்கு ஒரு வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), இரண்டு வட்டாரத்திற்கு ஒரு வேளாண்மை அலுவலர், வட்டாரத்திற்கு ஒரு உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் 103 உழவர் சந்தைகளுக்கும் 51 வேளாண் அலுவலர்களும், 52 துணை வேளாண்மை அலுவலர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த மறு சீரமைப்பினால் 239 பணியிடங்களாக இருந்த வேளாண்மை விற்பனைத் துறை 906 பணியிடங்களாக உயர்ந்துள்ளது.

**வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் முக்கியச் செயல்பாடுகள்:**

1. விவசாயிகள் மற்றும் நுகர்வோர் நேரடியாக முழுமையான அளவில் பயன்பெறும் வகையில் உழவர் சந்தைகளை ஏற்படுத்தி செயல்படுத்துதல்.

2. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு காய்கறிகள், பழங்கள் மற்றும் வாசனை மலர்கள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன், சேமிப்பு மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளைப் பெருக்கிடும் வகையில் விற்பனைக் குழுக்களை ஏற்படுத்தி விற்பனை வசதிகளை மேம்படுத்துதல்.

3. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை நிறுவி வேளாண் விளைபொருள் விற்பது, வாங்குவது மற்றும் பதப்படுத்துவது போன்ற செயல்களை விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒழுங்குபடுத்துதல்.

4. ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்குக் கொண்டு வரப்படும் விளைபொருட்கள் மற்றும் பண்ணை அளவிலான விளைபொருட்களைத் தரம் பிரித்து, கூடுதல் இலாபம் பெற உதவுதல்.

5. விவசாயிகள் தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலமாக தரம் பிரிப்பது, விற்பனை செய்வது, மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்துவது ஆகியவற்றினால் அடையும் பயன்களைப்பற்றி ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்தல் மற்றும் விவசாயிகளுக்கு அதற்கான பயிற்சிகள் அளித்து அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

6. வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைப்பதன் மூலம் ஏற்றுமதி செய்யும் வேளாண் விளைபொருட்களின் உற்பத்தி பரப்பினை அதிகரித்தல், அறுவடைக்குப்பிந்தைய செய்நேர்த்தி குறித்த விவரங்களை அளித்தல், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் சர்வதேசச் சந்தை நிலவரம், ஏற்றுமதி வாய்ப்புகள் விவரத்தை அவ்வப்போது ஒருங்கிணைத்து கணினி மூலம் அளித்தல்.

7. வேளாண் பொருட்கள், கால்நடைகள் மூலம் கிடைக்கும் பொருட்கள் மற்றும் வனப்பொருட்கள் ஆகியவற்றிற்கு நுகர்வோர் பயன்பெறும் வகையில் ‘அக்மார்க்’ தர முத்திரை வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்துதல்.

8. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு ஏற்ற விலையினையும், நுகர்வோர் தங்களின் பணத்திற்குரிய சரியான மதிப்பிலான விளைபொருட்களைப் பெற ஏதுவாகவும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய குளிர்பதனக் கிட்டங்கிகளை அமைத்தல்.

9. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நிறுவி உணவுப் பொருள் இழப்பைக் குறைத்தும் வேலை வாய்ப்பைப் பெருக்கவும், அந்நியசெலாவணி ஈட்டித் தரவும் முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

## 3. விற்பனைக் குழுக்கள்

தமிழகத்தில் தற்போது 21 விற்பனைக் குழுக்கள் மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன.



### 3.1 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

தமிழகத்தில் உள்ள விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 277 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 15 சோதனைச் சாவடிகள், 108 ஊரகக் கிட்டங்கிகள், 108 தரம் பிரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் விவரங்கள் அட்டவணை 18-ல் கொடுக்கப்பட்டு உள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை ஒரு சேர விற்பனைக்கூட வளாகத்தில் கூட்டி விளைபொருட்கள் விற்பனையை முறைப்படுத்தி, மறைமுக ஏலமுறையில் விற்பனையில் போட்டியை ஏற்படுத்தி அதிக விலை பெற்றுத் தருவது, இலவசமாக விளைபொருளின் தரத்தினை உறுதி செய்து விவசாயிகள் உணர்ந்துகொண்டு தரத்திற்கேற்ற விலை கிடைப்பதை அவர்களுக்கு உறுதி செய்வது மேலும் நல்ல விலை கிடைக்காத நிலையில் பொருளீட்டுக் கடன் வழங்குதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களில், விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு கொண்டு சென்றுதான் விற்பனை செய்ய வேண்டும். இதற்காக ஒரு விழுக்காடு முதல் இரண்டு விழுக்காடு வரை வியாபாரிகளிடம் விற்பனைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

ஆனால், தமிழ் நாட்டில் விவசாயிகள் பயனடையும் வகையில் விற்பனைக் கட்டண முறை எளிமையாக்கப்பட்டு, ஒரு கொள்முதல் விற்பனைக் கட்டணம் மட்டுமே வியாபாரிகளிடமிருந்து விழுக்காடு விற்பனைக் கட்டணம் மட்டுமே வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

நீலகிரி விற்பனைக் குழு மற்றும் உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர், கூடலூர் ஆகிய நான்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் நடப்பு நிதியாண்டில் ரூ.3.25 கோடி செலவில் சொந்தக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான நிலம் மாவட்ட ஆட்சியர் மூலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விற்பனைக் குழுவாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விவரம் அட்டவணை 20-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 4

### 3.2. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வழங்கப்படும் சேவைகள்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மின்னணு எடை மேடை மற்றும் எடை தராசு கொண்டு சரியான எடையிடுதல் வசதி, கிட்டங்கி வசதி, ஏலம் முடிந்தவுடன் பணம் வழங்கல், அன்றாட அங்காடி விலை நிலவரம் அறிய வாய்ப்பு, விவசாயிகளுக்கு ஓய்வறை வசதி, குடிநீர் வசதி, வண்டி மாடுகள் நிறுத்துவதற்கு இட வசதி, இலவச மருத்துவ வசதி, இடுபொருள் மையம், தொலைபேசி மற்றும் நிகரி (FAX) வசதி போன்ற பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

நடுவண் அரசின் அக்மார்க் நெட் திட்டத்தின்கீழ் 93 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு தொலைபேசி இணையதள வசதியுடன்கூடிய கணினி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாய விளைப் பொருட்களுக்கு நிலவும் அன்றாட விலை விவரத்தை தேசிய தகவல் மையத்திற்கு அனுப்பப்படுவதன் மூலம் விவசாயிகள் விளைப்பொருட்களுக்கு பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நிலவும் விலை விவரத்தை அறிய வசதிகள் செய்யப்பட்டு விவசாயிகள் விளைபொருட்களை எந்தக் காலத்தில் விற்பனை செய்யலாம் என முடிவெடுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் ஒருங்கிணைந்த கணினி வலைதளம் மூலம் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2007-2008 ஆம் நிதியாண்டில் அக்மார்க் நெட் திட்டத்தின்கீழ் மேலும் 100 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு இவ்வசதி செய்து தரப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனைக் குழு வாரியான உட்கட்டமைப்பு வசதிகளின் விவரங்கள் அட்டவணை 19-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 3.3. விளைபொருட்கள் அறிவிக்கை செய்தல்

இதுவரை நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், பருத்தி, மஞ்சள் போன்ற 42 வேளாண் விளைபொருட்கள் விற்பனைக் குழு எல்லையை கருத்தில் கொண்டு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் மாநில முழுமைக்கும் விளைபொருட்களை ஓரே சீரான அறிவிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2008 ஏப்ரல் 4]

### 3.4. விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன்

அறுவடைக் காலங்களில் பெரும் அளவு உற்பத்தியினால், சிறு/குறு விவசாயிகள் குறைந்த விலையில் விளைபொருட்களை விற்பனை செய்வதைத் தவிர்க்க ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கிட்டங்கிகளில் 6 மாதம் வரை இருப்பு வைக்கலாம். விளைபொருளின் மொத்த மதிப்பில் 75 விழுக்காடு வரை பொருளீட்டுக் கடனாக, அதிகபட்சமாக ரூ.1,00,000 வரை ஒவ்வொரு விவசாயியும் பெறலாம். அதேபோன்று வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இதற்காக தற்சமயம் வியாபாரிகளிடமிருந்து 9 விழுக்காடு வட்டியும் வசூலிக்கப்படுகிறது. சென்ற நிதியாண்டில் அதிக அளவில் விவசாயிகள் பயன் பெற விவசாயிகளுக்கான வட்டித் தொகை 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

### 3.5. தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்

இத்திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு 1 மெட்ரிக் டன் அல்லது அதற்குமேல் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள், விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ/நிரந்தர ஊனமுற்றாலோ அல்லது விஷப்பாம்பு கடியின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ ரூ.1,00,000/- வரை உதவித் தொகை வழங்கப்படும். அதேபோன்று, விபத்தின் காரணமாக இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் அல்லது இரு கண்கள் இழக்க நேரிட்டால் ரூ.75,000/- உதவித் தொகையும் மற்றும் விபத்தின் காரணமாக ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் இழக்க நேரிட்டால் மற்றும் இடுப்பு ஊனமுற்றால் ரூ.50,000/- உதவி தொகையும், தகுதியுடைய விவசாயிகள்/குத்தகைதாரர்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற உறுப்பினர் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. வருடத்திற்கு உறுப்பினர் கட்டணமான ரூ.10.00 (ரூபாய் பத்து மட்டும்) சம்பந்தப்பட்ட விற்பனைக் குழுவும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமும் சம பங்காக ஏற்கின்றன.

### 4. அக்மார்க் தரம் பிரித்தல்

கலப்பட உணவு உண்பதால் ஏற்படும் தீமைகளிலிருந்து நுகர்வோர்களைப் பாதுகாக்கவும், தரமான உணவுப்பண்டங்கள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டும், இத்துறையால் அக்மார்க் தரம் பிரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துறையின் கீழ் செயல்படும் 30 அக்மார்க் ஆய்வகங்கள் மற்றும் ஒரு முதன்மை ஆய்வகம் மூலமாக அக்மார்க் தரம் பிரிப்புப் பணி மேற்கொள்ளப்படுகின்றது. இதன் விபரம் அட்டவணை 21-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வகங்கள் மூலமாக, உணவுப் பண்டங்களான தாவர எண்ணெய், நெய், வெண்ணெய், தேன், கோதுமை மாவு, கடலை மாவு, மசாலாப் பொடிகள், ஜவ்வரிசி, அரிசி, பருப்புவகைகள், கேழ்வரகு, வெல்லம், மஞ்சள், உருளைக்கிழங்கு போன்றவை அக்மார்க் முறையில் தரம் பிரிக்கப்படுகின்றன.

சென்ற நிதியாண்டில் அரசின் பகுதி II திட்டத்தின்கீழ் மாநில அக்மார்க் ஆய்வகங்கள் மற்றும் அக்மார்க் தரம் பிரிப்பு மையம் நுகர்வோர்கள் மற்றும் சிப்பம் கட்டுபவர்கள் பயன்பெறும் வகையில் நவீன உபகரணங்கள் ரூ.25.46 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

### 5. கிராமங்களில் உலர் களங்கள் அமைத்தல்

விளைபொருட்களின் மொத்த சேதாரமான 10 விழுக்காட்டில் அறுவடைக்குப் பின் 6 விழுக்காடு சேதமாகிறது. அறுவடைக்குப்பின் தானிய இழப்பினைக் குறைக்கும் வகையில் இத் துறையின் மூலமாகக் கிராமங்களில் 1997 ஆம் ஆண்டு முதல் உலர் களங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத் திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கும் திட்டமாகும். இதுவரை ரூ.23.20 கோடி செலவில் 1,228 உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2007-2008 ஆம் ஆண்டில் ரூ.2.50 கோடி செலவில் 100 உலர்களங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் 2008-2009-ல் இத்திட்டம் தொடரும்.

### 6. உழவர் சந்தைகள்

தமிழ்நாட்டில் நகராட்சிப் பகுதிகளிலும், பேரூராட்சிகளிலும், விவசாயிகள், காய்கறிகள் பழங்கள் ஆகிய தங்கள் விளை பொருட்களை இடைத்தரகர்கள் குறுக்கீடு ஏதுமின்றி நேரடியாக



நுகர்வோருக்கு விற்பனை செய்ய ஏதுவாக 103 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு தங்கள் பொருள்களுக் கேற்ற நியாயமான விலை மற்றும் நுகர்வோருக்கு வெளிச்சந்தையைக் காட்டிலும் குறைவான விலையில் காய்கறிகள், பழங்கள் கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

2007-2008 ஆம் ஆண்டு மேலும் புதியதாக 50 உழவர் சந்தைகள் ரூ. 11.25 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சேலம் மாவட்டம், அஸ்தம்பட்டியில் புதியதாக ஒரு உழவர் சந்தை 14-1-2008 அன்று துவங்கப்பட்டது. தற்சமயம் மொத்தம் 104 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. இதன் விபரங்கள் அட்டவணை 22-ல் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 49 உழவர் சந்தைகள் அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சிறப்பாகச் செயல்படும் 22 உழவர் சந்தைகளில் காய்கறிகள் மற்றும் பழங்கள் பாதுகாக்க குளிர்பதன வசதிகள் (2 மெட்ரிக்டன் கொள்ளளவு) ரூ.133.10 இலட்சத்தில் அமைக்கப்பட உள்ளது.

உழவர் சந்தைகளில் காய்கறி வரத்து மற்றும் விவசாயிகள் வருகையை அதிகரிக்கவும், உழவர் சந்தையினை மேம்படுத்தவும் இத்துறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது, சராசரியாக நாளொன்றிற்கு 1,053 மெட்ரிக் டன் காய்கறி மற்றும் பழங்கள் ரூ.108 இலட்சம் மதிப்பில் 7,800 விவசாயிகள் மூலம் கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகின்றன. இதன் மூலம் தினந்தோறும் சுமார் 1,97,000 நுகர்வோர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

### 6.1. உழவர் சந்தையை மேம்படுத்துதல்

உழவர் சந்தைகளில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மின்னணு எடை தராசு, பிளாஸ்டிக் கிரேட்டுக்கள், தள்ளு வண்டிகள், காய்கறி கழிவுகளைச் சேகரித்து அப்புறப்படுத்த வண்டிகள், பிளாஸ்டிக் கழிவுத் தொட்டி ஆகிய வசதிகள் செய்யப்பட உள்ளன. கணினி வசதி, புதிய ரக வீரிய காய்கறி விதைகள், கன்றுகள், இயற்கை வேளாண்மை முறைகள் அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி குறித்த விவசாயிகளுக்கான பயிற்சிகள், காய்கறி கழிவுகளைக்கொண்டு மண்புழு உரம் தயாரித்தல் செயல் விளக்கம் போன்ற வசதிகள் உழவர் சந்தைகளில் ஏற்படுத்தப்பட உள்ளன. 25 உழவர் சந்தைகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 7. வணிக வளாகம் அமைத்தல்

### 7.1. மாங்கனி மற்றும் வெங்காயம் விற்பனைக்கென வணிக வளாகம்

சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம் பொங்கலூரில் வெங்காயத்திற்கும் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கும் குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம் தலா ரூ.2 கோடி வீதம் மொத்தம் ரூ.4 கோடி செலவில் அமைக்க தொழில் முனைவோர்கள் தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு, தொழில் முனைவோரான திருவாளர்கள். பிரிமியம் பாம் பிரஷ் புராடியூஸ் லிட், புது டில்லி அவர்களிடமிருந்து பெறப்பட்ட திட்ட அறிக்கையும், ஆய்வுக் குழு அறிக்கையும் பரிசீலனை செய்யப்பட்டு, தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்துடன் சம பங்குதாரராக இணைந்து செயல்படும் செயற்குறிப்பு உள்ளது.

### 7.2. தேனி மாவட்டம், ஓடைப்பட்டியில் திராட்சைக்கென குளிர்பதனக் கிட்டங்கி ஏற்படுத்துதல்

திராட்சை உற்பத்தி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைக்கென தரம்பிரித்து, பக்குவப்படுத்தி அட்டைப் பெட்டிகளில் அடைத்து ஏற்றுமதி செய்யத்தக்க வகையில் குளிர்பதன கிட்டங்கி ரூ.3.75 கோடி செலவில் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு தொழில் முனைவோரான திருவாளர்கள். பெனின்சுலா அக்ரோடெக், தேனி அவர்களிடமிருந்து பெறப்பட்ட திட்ட அறிக்கையையும், ஆய்வுக் குழு அறிக்கையும் பரிசீலனை செய்யப்பட்டு, தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்துடன் சம பங்குதாரராக இணைந்து செயல்படுத்தப்பட செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

### 7.3. விற்பனை முனையங்கள் ஏற்படுத்துதல்

நடுவண் அரசின் நெறிமுறைப்படி அழுகும் பொருட்களான காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றை பதப்படுத்தி விற்பனை செய்திட அனைத்து வசதிகளுடன்கூடிய விற்பனை முனையங்கள் (Terminal Markets) சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மூன்று பெரு நகரங்களின் அருகில் உத்தேசமாக ரூ.200 கோடி செலவில் ஏற்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கலந்தறிதற்குரியர் (Consultant) தேர்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் பணிகள்



தொடங்கப்படும். திருவாளர்கள் தர்ஷா அண்டு கம்பெனி, மும்பை தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தால் RFQ, RFP மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்தம் 10-12-2007-ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலக அளவில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

## 8. வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையம்

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதில் சந்தையறிவுத் திறம் முக்கியப் பங்கினை வகிக்கின்றது. விவசாயிகள் பல்வேறு சந்தைகளில் வேளாண் விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரத்தினை அறிவதன் மூலம் அவர்களின் விளைபொருட்களுக்குக் கூடுதல் விலை பெற ஏதுவாகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, அனைத்து வசதிகளுடன் கூடிய வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையங்களை ரூ.45 இலட்சம் செலவில் திண்டுக்கல், ஆலங்குடி, மதுரை, திருமங்கலம், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், அருப்புக்கோட்டை, விருதுநகர், இராஜபாளையம், திருநெல்வேலி, தூத்துக்குடி, வடசேரி மற்றும் திங்கள் சந்தை ஆகிய 14 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையங்களில் இணையதளம் வசதியுடன் கூடிய கணினி மற்றும் மின்னணு தகவல் பலகை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்களில் கணினி மூலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வரப்பெற்ற விளைபொருட்களின் வரத்து மற்றும் அவற்றிற்கு நிலவும் விலை நிலவரம் மற்றும் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து மின்னணு தகவல் பலகையில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

## 9. வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் குறிப்பிட்ட வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏதுவாக கீழ்க்காணும் நான்கு இடங்களில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 9.1. கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களை உள்ளடக்கி ஒசூரில் கொய் மலர்களுக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம்

தமிழ் நாட்டில் கொய் மலருக்கென ஏற்றுமதி மண்டலம் அமைப்பது குறித்த நடுவண் அரசின் நிறுவனமான அபிடா (APEDA)-வுடன் செயலாக்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதற்கென ஓசூரில்

198.73 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 24.85 கோடி மதிப்பீட்டில் டிட்கோ நிறுவனமும், தனியார் நிறுவனமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள "டான்ஃப்ளோரா" என்ற கூட்டு நிறுவனம் தரம் பிரித்தல், சிப்பம் கட்டுதல் உள்ளடக்கிய மத்திய சிப்பம் கட்டும் கூடம் (Central Pack House), பதப்படுத்தும் நிலையம், குளிரூட்டும் நிலையம் (Cold Storage), விற்பனை வசதி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது.

இந்த ஏற்றுமதி மண்டலத்தில் இருந்து 2007-08 ஆம் நிதியாண்டில் ரூ. 12 கோடி மதிப்புள்ள 120 இலட்சம் கொய் மலர்கள் ஐரோப்பா, மத்திய மற்றும் தூரக் கிழக்கு நாடுகள், ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

**9.2. நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கென ஏற்றுமதி மண்டலம்**

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் மலர்களுக்கென ரூ. 15.89 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் தனியார் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இம்மண்டலம் அமைப்பது குறித்து மைய அரசின் நிறுவனமான அபிடா (APEDA)-வுடன் செயலாக்க ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இந்த ஏற்றுமதி மண்டலத்தில் ஏல மையம், தாய் கன்று நாற்றங்கால், முன்குளிர்விப்பான், குளிர் பதனக் கிட்டங்கிகள், குளிரூட்டி பொருத்தப்பட்ட ஊர்தி, நவீன மலர் சாகுபடி பயிற்சி மையம், விற்பனை வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்படவுள்ளன. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு நவீன மலர் சாகுபடிக்கான தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுவதுடன், சாகுபடிக்குத் தேவையான மலர் செடி கன்றுகள் 50 சத மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இதுதவிர, பசுமைக்குடில் மற்றும் நிழல் வலைகள் அமைத்திட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. மேலும், மலர்கள் சாகுபடிக்குத் தேவையான தொழில்நுட்ப விவரம் குறித்த விவரங்களை விவசாயிகள் அறிய ஏதுவாக தகவல் மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முதற்கட்ட மின்னணு மலர் ஏல மையம் (Electronic Flower Auction Centre) ரூ. 11 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, 06-2-2007 அன்று திறக்கப்பட்டது. தற்பொழுது விவசாயிகள் இம்மலர் ஏல மையத்தின் மூலம் மலர்களை விற்பனை செய்கிறார்கள்.



**9.3. தேனி மாவட்டத்தில் மாம்பழத்திற்கென ஏற்றுமதி மண்டலம்**

மாம்பழத்திற்கென தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி, வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூ.24.60 கோடி மதிப்பீட்டில் தனியார் துறை பங்கேற்புடன் அமைக்கப்பட்டுள்ளது. அபிடா நிறுவனமும், தமிழ்நாடு அரசும் இதற்கான செயலாக்க ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்த வேளாண் ஏற்றுமதி மண்டலத்தில் மாக்கிரிட்டா (M/s. Maagrita Export Limited) என்ற தனியார் நிறுவனத்தால் சிப்பம் கட்டும் கூடம், சேகரிப்பு மையங்கள், பதப்படுத்தும் நிலையங்கள், தரம் பிரிப்புக் கூடம், சுடுநீர் பதப்படுத்தும் இயந்திரம், கூழாக்கும் நிலையம், உலர்ப்பான், பழக்கூழ் பதப்படுத்தும் நிலையம் போன்ற வசதிகள் நிலக்கோட்டை உணவுப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளன.

**9.4. கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கென ஏற்றுமதி மண்டலம்**

முந்திரிக்கென கடலூர் மாவட்டத்தில் ரூ.17 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாகத் தனியார் துறை பங்கேற்புடன் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான செயலாக்க ஒப்பந்தம் அபிடா நிறுவனத்தாலும், தமிழ்நாடு அரசாலும் மேற்கொள்ளப்பட்டது.

இம்மண்டலத்தில் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட சத்துவா ஏற்றுமதி நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு, அந்நிறுவனத்தால் விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்கப்பட்டு டிட்கோ நிறுவனத்திடம் அளிக்கப்பட்டது. மாநில அரசின் முதற்கட்ட பங்குத் தொகையான ரூ.47.25 இலட்சம் டிட்கோ நிறுவனத்தால் சத்துவா ஏற்றுமதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி மண்டலம் ஏற்படுத்திட பணிகள் 2006-07 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேம்படுத்தப்பட்ட நாற்றங்கால் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிறுவனம் 120 விவசாயிகளிடம் ஒப்பந்தப்பண்ணையம் மூலம் முந்திரி கொள்முதல் செய்ய ஆய்வு நடத்தி உள்ளது.

**10. குளிர்பதனக் கிட்டங்கி அமைத்தல்**

தமிழ்நாட்டில் 100 இலட்சம் மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள், 75 இலட்சம் மெ.டன் தானிய வகைகள், 3 இலட்சம் மெ.டன் வாசனைப் பயிர்கள் மற்றும் 5 இலட்சம் மெ.டன் மலைப் பயிர்கள்

உற்பத்தி செய்யப்படுகின்றன. இனி வரும் ஐந்தாண்டுகளில் மேற்கண்ட பயிர்களின் விளைபொருள் உற்பத்தி மேம்படுத்தப்பட்ட நவீன சாகுபடி முறைகளால் 30 விழுக்காடு கூடுதலாக வாய்ப்புள்ளது. வேளாண் விளை பொருட்களில், குறிப்பாக போதிய சேமிப்பு வசதி மற்றும் குளிர்பதன வசதி இல்லாமையால் மொத்த உற்பத்தியில் 8 முதல் 10 விழுக்காடு தானிய வகைகள், 30 முதல் 35 விழுக்காடு காய்கறிகள் மற்றும் பழங்கள் கெட்டுவிடுகின்றன. இதனால் விவசாயிகள் தங்களது விளைபொருட்களுக்கு 15 முதல் 25 விழுக்காடு குறைவான விலை பெறக்கூடிய நிலை ஏற்படுகிறது.

காய்கறிகள் மற்றும் பழங்கள், தானிய வகைகள், வாசனைப் பயிர்கள் மற்றும் மலைப்பயிர்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்திடும் நோக்கில் இத்துறையின் மூலமாக 15 இடங்களில் தனியார் துறை மூலம் குளிர்பதனக் கிட்டங்கிகள் கிராமிய உட்கட்டமைப்பு நிதியுதவியினை நபார்டு வங்கி மூலம் பெற்றும், தேசிய தோட்டக்கலை வாரியத்தின் மானியம் பெற்றும் அமைத்திடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்குளிர்பதனக் கிட்டங்கிகள் காய்கறிகள் மற்றும் பழங்கள் அதிக அளவில் விளையக்கூடிய பகுதிகள், விற்பனைப் பகுதிகள் மற்றும் வேளாண் விரிவாக்க மையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் அமைக்கப்படும்.

**11. உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள்**

உணவு பதப்படுத்தும் தொழில் மூலம் பெருமளவில் உணவுப் பொருள் இழப்பு தவிர்க்கப்படுகிறது. விவசாயிகள் உணவு பதப்படுத்துதல் பற்றிய விவரம் அறிந்து, அதற்கேற்ப உணவு பதப்படுத்தத்தக்க விளைபொருட்களை விளைவிக்கும்போது கூடுதல் வருவாய் ஈட்ட வாய்ப்பு கிடைத்துள்ளது. உணவு பதப்படுத்தும் தொழில்கள் அதிகரிப்பதால் வேலைவாய்ப்பும் அதிகரிக்கின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் நிலக்கோட்டைத் தொழிற்பேட்டையில் ரூ.13 கோடி செலவில் உணவுப் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, நடுவண் அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்தின் மாநில முகமை நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலிருந்து மொத்தம் ரூ. 555.93 கோடி முதலீட்டுத் தொகையில் 441 உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள் மற்றும் உணவு பதப்படுத்துதலைச் சார்ந்த செயல்பாடுகளுக்காகவும் ரூ. 97.51 கோடி முதலீட்டு மானியத் தொகை பெற நடுவண் அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்திற்குப் பரிந்துரை





செய்யப்பட்டு, இதுவரை 197 திட்டங்களுக்கு ரூ. 42.95 கோடி மானியம் நடுவண் அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

**12. தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு**

தமிழகத்தில் சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்பூட்டுதல் முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்து அதன் மூலம் வேளாண் வணிகத்தில் அவர்களை ஈடுபடுத்த ஏதுவாக பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து "தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு" உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு அரசு, தனியார் துறை, விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சேவை நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்.

இத்திட்டத்தின்கீழ் ரூ. 4909.51 இலட்சம் முதலீட்டுத் தொகையில் 20 நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையாக ரூ. 563.77 இலட்சத்திற்கு சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**13. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் முக்கியப் பணிகள்:

**13.1. விளம்பரம் மற்றும் பிரச்சாரம்**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தனது கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள மையங்கள் மூலமாக வேளாண் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்பனை செய்வதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளைச் செய்து வருகிறது.

**13.2. பணியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்**

சேலத்தை மையமாகக் கொண்டு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் சுமார் 2.25 ஏக்கர் நிலப் பரப்பில் செயல்பட்டு வருகிறது. விற்பனைத் துறைப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் தேவைகளை நிறைவு செய்திடும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பயிற்சி மையத்தின் மூலம் தரம் பிரிப்பாளர் பயிற்சி, விற்பனைக் குழு பணியாளர்களுக்கான

புத்தூட்டப் பயிற்சி மற்றும் விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் என மூன்று வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இப்பயிற்சி மையத்திலிருந்து தரம் பிரிப்பாளர் பயிற்சி, ஆண்டு ஒன்றுக்கு 3 அணி வீதம் விற்பனைக் குழுவில் பணிபுரியும் பணியாளர் 60 நபர்களுக்கு 30 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதேபோன்று விற்பனைக் குழு பணியாளர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி ஆண்டு ஒன்றுக்கு 1 அணி வீதம் 20 நபர்களுக்கு 28 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், விவசாயிகளுக்கான நேரடித் தொடர்புத் திட்டம் குறித்த பயிற்சி ஆண்டு ஒன்றுக்கு 5 அணிகளாக 1 அணிக்கு 20 விவசாயிகள் வீதம் மொத்தம் 100 விவசாயிகளுக்கு 3 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இவ்வருடம் 10,010 விவசாயிகளுக்கு அறுவடை தொழில்நுட்பம், மதிப்புக் கூட்டுதல், உணவு பதனிடுதல் மற்றும் பல இனங்களில் ரூ. 52.50 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 3,220 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2008-09 ஆம் ஆண்டில் 10,000 விவசாயிகளுக்கு அறுவடை தொழில்நுட்பம், மதிப்புக் கூட்டுதல், உணவு பதனிடுதல் மற்றும் பல இனங்களில் ரூ. 52.50 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 13.3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விற்பனை அறக்கட்டளை அறிவுப்பீடம் அமைத்தல்

தமிழ்நாடு மாநில வேளண்மை விற்பனை வாரியம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக் கல்வி மையத்திற்கு ரூ. 50 இலட்சம் வைப்பு நிதியாக அளித்து ஓர் அறக்கட்டளை அறிவுப்பீடம் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியிலிருந்து பெறப்படும் வட்டியின் மூலம் 29 ஆராய்ச்சி பணிகள் மற்றும் 19 பயிற்சிகளும் இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

### 13.4. கட்டுமானப் பணிகள்

வாரியத்தின் பொறியியல் பிரிவு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், ஊரகக் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடுபொருள் கடைகள், பணம் வழங்கல் அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உட்புறச் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.



### 13.5. விற்பனை மேம்பாட்டு நிதி

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தமக்குத் தேவையான நிதியை விற்பனைக் குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. விற்பனைக் குழுக்கள் தங்களது மொத்த வருவாயில் 15 விழுக்காடு தொகையை வாரியத்திற்குப் பங்குத் தொகையாக அளிக்கின்றன. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில் 50 விழுக்காடு, சந்தை மேம்பாட்டு நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலிருந்து விற்பனை மேம்பாடுகளுக்கான விளம்பரம் மற்றும் பிரச்சாரம், பயிற்சி போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

### 13.6. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத்திறம் தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு ஏற்படுத்துதல்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் ரூ. 44 இலட்சத்தில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பங்களிப்புடன் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத்திறம், தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரிவு, சர்வதேசச் சந்தையில் முக்கிய விளைபொருட்களுக்கான முந்தைய, தற்போதைய விலை விவரங்களைச் சேகரித்து, அவற்றை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் எதிர்கால ஏற்றுமதிக்கான விலையை முன்னறிவிப்பு செய்தல், ஏற்றுமதிக்கு உகந்த நாடுகளைக் கண்டறிதல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது. சர்வதேச மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் விளைபொருட்களுக்கு எதிர் வரும் மாதங்களில் நிலவக் கூடிய விலை விவரங்களைக் கண்டறிந்து, அவ்விவரங்கள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்யப்படுகிறது. இது தவிர, அண்டை மாநிலங்களில் முக்கிய விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரங்களை அறிந்து விவசாயிகளுக்குத் தெரிவிப்பதன் மூலம், விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களுக்கு நல்ல விலை பெறவும், பருவத்திற்கேற்ற பயிர்களைத் தேர்வு செய்யவும்,

அவர்களுடைய விளைபொருட்களைக் குறித்த நேரத்தில் விற்பனை செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இப்பிரிவு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனை தகவல் மையங்களுடன் இணையதளம் வாயிலாக இணைக்கப்பட்டு, விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரங்கள் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் அறியும் வகையில் தெரிவிக்கப்படுகிறது.

**14. நீர் வள நில வள திட்டம் (IAMWARM)**

நீர்வள நிலவளத் திட்டம் (Irrigated Agriculture Modernisation and Water bodies Restoration Management) என்பது உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தும் திட்டமாகும். மேற்படி திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட 63 உபவடி நிலங்களில் ஆறு வருடங்களில் (2007-13) செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் முதற்கட்டமாக 9 உபவடி நிலங்களில் 2007-08 ஆம் ஆண்டில் ரூ. 8.83 கோடி செலவிலும், மொத்தம் 63 உபவடி நிலங்களில் ரூ. 24.84 கோடி செலவிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் உலர்களம், சேமிப்பு கிட்டங்கி, சேகரிப்பு மையம், சிப்பம் கட்டும் அறை, வேளாண் வணிக மையம், சரக்கு ஆட்டோ, மினி லாரி, கிரேட்ஸ், டன்னேஜ், தார்பாலின், எடையிடும் கருவி, ஈரமானி போன்றவை பாசன நீர் உபயோகிப்போர் விவசாயிகள் சங்கத்திற்குச் செய்து கொடுக்கப்படும்.

2008-09 ஆம் ஆண்டில் மேலும் 16 உபவடிநிலங்களில் மேற்கண்ட இனங்களில் ரூ. 209.5 இலட்சம் செலவிடப்படும்.

தமிழகத்தில் நீர்வள நிலவளத் திட்டத்தில் இதுவரை 250 வேளாண் விளைபொருள் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 210 குழுக்கள் வேளாண் விளைபொருட்களுக்கும், 40 குழுக்கள் தோட்டப் பயிர் விளைபொருட்களுக்கும் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 16 விவசாயிகள் கொள்முதலீட்டாளர்கள் கருத்தரங்கும், 15 வெளிமாநில விவசாயிகள் சுற்றுலாவும், 15 உள்மாநில விவசாயிகள் சுற்றுலாவும், 14 அறுவடை பின் செய் தொழில்நுட்பப் பயிற்சியும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கும், கொள்முதலீட்டாளர்களுக்கும் இடையே 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



## வேளாண்மைத் துறை

அட்டவணை 1

வேளாண்மை விரிவாக்க மையங்கள் பற்றிய விவரங்கள்

| மாவட்டங்கள் | முதன்மை வேளாண் விரிவாக்க மையங்கள் | துணை வேளாண் விரிவாக்க மையங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| திருவள்ளூர் | 14 | 21 | 35 |
| காஞ்சிபுரம் | 13 | 16 | 29 |
| வேலூர் | 20 | 24 | 44 |
| திருவண்ணாமலை | 17 | 24 | 41 |
| கடலூர் | 13 | 17 | 30 |
| விழுப்புரம் | 21 | 27 | 48 |
| திருச்சி | 14 | 11 | 25 |
| பெரம்பலூர் | 10 | 7 | 17 |
| கரூர் | 8 | 4 | 12 |
| புதுக்கோட்டை | 13 | 20 | 33 |
| தஞ்சாவூர் | 14 | 47 | 61 |
| திருவாரூர் | 10 | 32 | 42 |
| நாகப்பட்டினம் | 11 | 33 | 44 |
| இராமநாதபுரம் | 11 | 6 | 17 |
| மதுரை | 13 | 19 | 32 |
| தேனி | 8 | 12 | 20 |
| திண்டுக்கல் | 13 | 15 | 28 |
| சேலம் | 20 | 11 | 31 |
| நாமக்கல் | 15 | 17 | 32 |
| தர்மபுரி | 8 | 9 | 17 |
| கிருஷ்ணகிரி | 10 | 7 | 17 |
| ஈரோடு | 20 | 27 | 47 |
| கோயம்புத்தூர் | 20 | 22 | 42 |
| விருதுநகர் | 11 | 6 | 17 |
| சிவகங்கை | 12 | 9 | 21 |
| தூத்துக்குடி | 12 | 16 | 28 |
| திருநெல்வேலி | 19 | 31 | 50 |
| கன்னியாகுமரி | 9 | 11 | 20 |
| மொத்தம் | 379 | 501 | 880 |

அட்டவணை 2

| அரசு விதைப் பண்ணைகள் (36) | |
|---|---|
| இடம் | மாவட்டம் |
| காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| கொளந்தலூர் | திருவள்ளூர் |
| வானூர், இருவேல்பட்டு, காக்குப்பம் வடக்குனேந்தல் | விழுப்புரம் |
| மிராலூர், வண்டுராயன்பேட்டு | கடலூர் |
| அத்தியந்தல், வாழவச்சனூர் | திருவண்ணாமலை |
| மேட்டூர் அணை, டேனிஷ்பேட் | சேலம் |
| பாப்பாரப்பட்டி | தர்மபுரி |
| பொங்கலூர், பாப்பன்குளம் | கோயம்புத்தூர் |
| சத்தியமங்கலம், பவானி | ஈரோடு |
| இனுங்கூர் | கரூர் |
| நெய்க்குப்பைபூதூர், புதூர்பாளையம் | திருச்சிராப்பள்ளி |
| அண்ணாப்பண்ணை | புதுக்கோட்டை |
| சாக்கோட்டை | தஞ்சாவூர் |
| தீவாம்பாள்பட்டினம் , காஞ்சிக்குடிக்காடு கீராந்தி, நெடும்பலம், தியாகராஜபுரம் , சக்கரமங்கலம் , மூங்கில்குடி | திருவாரூர் |
| நாகமங்கலம் , திருக்கடையூர் | நாகப்பட்டினம் |
| விநாயகபுரம் | மதுரை |
| கீழகூடலூர் | தேனி |
| தேவதானம் | விருதுநகர் |
| கரையிருப்பு | திருநெல்வேலி |
| திருப்பதிசாரம் | கன்னியாகுமரி |



மாநில எண்ணெய் வித்துப் பண்ணை

| வ.எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | முசரவாக்கம் | காஞ்சிபுரம் |
| 2 | அகசிபள்ளி | கிருஷ்ணகிரி |
| 3 | வெள்ளாளவிடுதி | புதுக்கோட்டை |
| 4 | நவ்லாக் | வேலூர் |
| 5 | பவானிசாகர் | ஈரோடு |
| 6 | நெய்வேலி | கடலூர் |

பயறு பண்ணை

| வ.எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | வம்பன் | புதுக்கோட்டை |

அட்டவணை 3

விதை சுத்திகரிப்பு நிலையங்கள்

| வ. எண் | மாவட்டங்கள் | நிலையங்களின் எண்ணிக்கை | | | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | பெரியது | நடுத்தரம் | சிறியது | |
| 1 | காஞ்சிபுரம் | 1 | .. | 6 | 7 |
| 2 | திருவள்ளூர் | 1 | .. | 3 | 4 |
| 3 | கடலூர் | .. | .. | 2 | 2 |
| 4 | விழுப்புரம் | 2 | .. | 2 | 4 |
| 5 | வேலூர் | .. | .. | 3 | 3 |
| 6 | திருவண்ணாமலை | 2 | .. | 5 | 7 |
| 7 | சேலம் | 1 | .. | 1 | 2 |
| 8 | நாமக்கல் | .. | .. | 1 | 1 |
| 9 | தர்மபுரி | .. | .. | 2 | 2 |
| 10 | கிருஷ்ணகிரி | .. | 1 | 1 | 2 |
| 11 | கோயம்புத்தூர் | .. | .. | 3 | 3 |

| வ. எண் | மாவட்டங்கள் | நிலையங்களின் எண்ணிக்கை | | | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | பெரியது | நடுத்தரம் | சிறியது | |
| 12 | ஈரோடு | 1 | .. | 1 | 2 |
| 13 | திருச்சி | .. | .. | 2 | 2 |
| 14 | பெரம்பலூர் | .. | .. | 1 | 1 |
| 15 | கரூர் | 1 | .. | 1 | 2 |
| 16 | புதுக்கோட்டை | 1 | 1 | 2 | 4 |
| 17 | தஞ்சாவூர் | 2 | .. | 2 | 4 |
| 18 | நாகப்பட்டினம் | .. | .. | 4 | 4 |
| 19 | திருவாரூர் | 1 | .. | 3 | 4 |
| 20 | மதுரை | 1 | .. | 2 | 3 |
| 21 | தேனி | .. | .. | 1 | 1 |
| 22 | திண்டுக்கல் | 1 | .. | .. | 1 |
| 23 | இராமநாதபுரம் | .. | 1 | 1 | 2 |
| 24 | சிவகங்கை | .. | .. | 2 | 2 |
| 25 | விருதுநகர் | .. | .. | 3 | 3 |
| 26 | திருநெல்வேலி | .. | .. | 3 | 3 |
| 27 | தூத்துக்குடி | 1 | .. | 1 | 2 |
| 28 | கன்னியாகுமரி | .. | .. | 1 | 1 |
| | மொத்தம் | 16 | 3 | 59 | 78 |



**அட்டவணை 4**

| வ. எண் | மாவட்டம் | உரப் பரிசோதனை நிலையம் | | நடமாடும் மண் பரிசோதனை நிலையம் | | மண் பரிசோதனை நிலையம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 | காஞ்சிபுரம் |
| 1 | காஞ்சிபுரம் | 1 | காஞ்சிபுரம் | 1 | திருவள்ளூர் | | |
| 2 | திருவள்ளூர் | | | | | 2 | கடலூர் |
| 3 | க்டலூர் | | | 2 | விழுப்புரம் | | |
| 4 | விழுப்புரம் | 2 | விழுப்புரம் | | | 3 | மேலாலத்தூர் |
| 5 | வேலூர் | | | 3 | திருவண்ணாமலை | | |
| 6 | திருவண்ணா மலை | | | | | 4 | சேலம் |
| 7 | சேலம் | 3 | சேலம் | 4 | நாமக்கல் | | |
| 8 | நாமக்கல் | | | | | 5 | தர்மபுரி |
| 9 | தர்மபுரி | 4 | தர்மபுரி | 5 | கிருஷ்ணகிரி | | |
| 10 | கிருஷ்ணகிரி | | | 6 | கோயம்புத்தூர் | 6 | கோயம்புத்தூர் |
| 11 | கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் | 7 | ஈரோடு | 7 | ஈரோடு |
| 12 | ஈரோடு | | | | | 8 | திருச்சி |
| 13 | திருச்சி | 6 | திருச்சி | 8 | பெரம்பலூர் | | |
| 14 | பெரம்பலூர் | | | 9 | கரூர் | | |
| 15 | கரூர் | | | | | 9 | குடுமியான்மலை |
| 16 | புதுக்கோட்டை | | | | | 10 | ஆடுதுறை |
| 17 | தஞ்சாவூர் | 7 | கும்பகோணம் | 10 | நாகப்பட்டினம் | | |
| 18 | நாகப்பட்டினம் | | | 11 | திருவாரூர் | | |
| 19 | திருவாரூர் | 8 | திருவாரூர் | 12 | மதுரை | 11 | மதுரை |
| 20 | மதுரை | 9 | மதுரை | | | 12 | தேனி |
| 21 | தேனி | | | | | 13 | திண்டுக்கல் |
| 22 | திண்டுக்கல் | 10 | திண்டுக்கல் | 13 | பரமக்குடி | 14 | பரமக்குடி |
| 23 | இராமநாதபுரம் | 11 | பரமக்குடி | | | 15 | சிவகங்கை |
| 24 | சிவகங்கை | | | 14 | அருப்புக்கோட்டை | | |
| 25 | விருதுநகர் | | | | | 16 | திருநெல்வேலி |
| 26 | திருநெல்வேலி | | | 15 | கோவில்பட்டி | 17 | கோவில்பட்டி |
| 27 | தூத்துக்குடி | 12 | கோவில்பட்டி | 16 | நாகர்கோவில் | 18 | நாகர்கோவில் |
| 28 | கன்னியாகுமரி | 13 | நாகர்கோவில் | | | 19 | ஊட்டி |
| 29 | ஊட்டி | 14 | ஊட்டி | | | | |

மண் ஆய்வுக் கூடம்: 11 புதிய மண் ஆய்வுக் கூடங்கள் திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், விருதுநகர் மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

[2008 ஏப்ரல் 4

**அட்டவணை 5**

| வ. எண் | மாவட்டம் | பூச்சி மருந்து ஆய்வகம் | | உயிர் உர உற்பத்தி மையங்கள் | | உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் | | நுண்ணூட்டக் கலவை தயாரிப்பு நிலையம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | காஞ்சிபுரம் | | | 1 | பஞ்சுப்பேட்டை (ஐபிஎம் மையம்) | | |
| 2 | கடலூர் | 2 | கடலூர் | 1 | கடலூர் | | | | |
| 3 | விழுப்புரம் | | | | | 2 | விழுப்புரம் | | |
| 4 | சேலம் | 3 | சேலம் | 2 | சேலம் | 3 | சீலைநாயக்கம் பட்டி | | |
| 5 | நாமக்கல் | | | | | 4 | நாமக்கல் | | |
| 6 | தர்மபுரி | | | | | 5 | பாப்பாரப்பட்டி | | |
| 7 | கோயம்புத்தூர் | 4 | கோயம் புத்தூர் | | | 6 | கோயம்புத்தூர் | | |
| 8 | ஈரோடு | 5 | ஈரோடு | | | 7 | பவானி | | |
| 9 | திருச்சி | 6 | திருச்சி | 3 | திருச்சி | 8 | திருச்சி | | |
| 10 | புதுக்கோட்டை | | | 4 | குடுமியான் மலை | | | 1 | குடுமியான் மலை |
| 11 | தஞ்சாவூர் | 7 | ஆடுதுறை | 5 | சாக்கோட்டை | 9 | காட்டுத் தோட்டம் | | |
| 12 | மதுரை | 8 | மதுரை | | | 10<br>11 | மேலூர்<br>வினாயகபுரம் (ஐபிஎம் மையம்) | | |
| 13 | இராமநாதபுரம் | | | 6 | இராமநாதபுரம் | | | | |
| 14 | திருநெல்வேலி | | | | | 12 | பாளையங் கோட்டை | | |
| 15 | தூத்துக்குடி | 9 | கோவில்பட்டி | | | | | | |

பூச்சி மருந்து ஆய்வுக் கூடம்: 6 புதிய பூச்சி மருந்து ஆய்வுக் கூடங்கள் வேலூர், தருமபுரி, நாகப்பட்டினம், தேனி, சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.



2008 ஏப்ரல் 4]

**அட்டவணை 6**

| வ. எண் | மாவட்டம் | உழவர் பயிற்சி நிலையங்கள் | | தென்னை நாற்றுப் பண்ணைகள் | | பச்சை மஸ்கார்டைன் காளான் உற்பத்தி மையங்கள் | | என்பிவி நச்சுயிரி உற்பத்தி மையங்கள் – நிலக்கடலை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | காஞ்சிபுரம் | 1 | பிச்சிவாக்கம் | | | 1 | காஞ்சிபுரம் |
| 2 | திருவள்ளூர் | | | 2 | மாதவரம் | | | | |
| 3 | கடலூர் | | | 3 | கடலூர் | 1 | விருத்தா சலம் | | |
| 4 | விழுப்புரம் | 2 | திண்டிவனம் | | | | | | |
| 5 | வேலூர் | 3 | வேலூர் | 4 | நவ்லாக் | | | | |
| 6 | திருவண்ணா மலை | 4 | திருவண்ணா மலை | 5 | வாழவச்சனூர் | | | | |
| 7 | சேலம் | 5 | சேலம் | 6 | டேனிஷ் பேட்டை | | | | |
| 8 | நாமக்கல் | 6 | நாமக்கல் | | | | | | |
| 9 | தர்மபுரி | 7 | தர்மபுரி | | | | | | |
| 10 | கிருஷ்ணகிரி | 8 | கிருஷ்ணகிரி | 7 | பி.ஜி. புதூர் | | | | |
| 11 | கோயம் புத்தூர் | | | 8 | ஆழியார்நகர் | | | 2 | கோயம் புத்தூர் |
| 12 | ஈரோடு | 9 | ஈரோடு | 9 | பவானிசாகர் | | | | |
| 13 | திருச்சி | 10 | லால்குடி | 10 | திருவரங்கம் | | | 3 | திருச்சி |
| 14 | பெரம்பலூர் | 11 | பெரம்பலூர் | | | | | | |
| 15 | கரூர் | 12 | கரூர் | | | | | | |
| 16 | புதுக் – கோட்டை | 13 | குடுமியான் மலை | 11 | வெள்ளாள விடுதி | | | | |
| 17 | தஞ்சாவூர் | 14 | சாக்– கோட்டை | 12 | பட்டுக்– கோட்டை | | | | |
| 18 | நாகப்– பட்டினம் | | | 13 | மல்லியம் | | | | |
| 19 | திருவாரூர் | | | | | | | | |

[2008 ஏப்ரல் 4

| வ. எண் | மாவட்டம் | உழவர் பயிற்சி நிலையங்கள் | | தென்னை நாற்றுப் பண்ணைகள் | | பச்சை மஸ்கார்டைன் காளான் உற்பத்தி மையங்கள் | | என்பிவி நச்சுயிரி உற்பத்தி மையங்கள் – நிலக்கடலை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20 | மதுரை | | | | | | | 4 | மதுரை |
| 21 | தேனி | 15 | தேனி | 14 | வைகை அணை | | | | |
| 22 | திண்டுக்கல் | 16 | திண்டுக்கல் | | | | | | |
| 23 | இராமநாத புரம் | 17 | பரமக்குடி | 15<br>16 | உச்சிப்புளி<br>தேவிப்பட்டினம் | | | | |
| 24 | சிவகங்கை | 18 | சிவகங்கை | 17 | சதுர்வேத-மங்கலம் | | | | |
| 25 | விருதுநகர் | 19 | விருதுநகர் | 18 | தேவதானம் | | | | |
| 26 | திருநெல் வேலி | 20 | பாளையங் கோட்டை | 19<br>20 | செங்கோட்டை<br>வடகரை | | | | |
| 27 | தூத்துக்குடி | 21 | தூத்துக்குடி | 21 | கிள்ளிகுளம் | | | | |
| 28 | கன்னியா குமரி | 22 | நாகர் கோவில் | 22 | புத்தளம் | 2 | நாகர் கோவில் | | |
| 29 | ஊட்டி | 23 | ஊட்டி | | | | | | |

**அட்டவணை 7**

| வ. எண் | மாவட்டம் | கரும்பு ஒட்டுண்ணி | | தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | | பருத்தி வளர்ப்பு மையம் ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | மதுராந்தகம் | 1 | செங்கல்பட்டு | | |
| 2 | திருவள்ளூர் | | | 2 | புட்லூர் | | |
| 3 | கடலூர் | 2 | விருத்தாசலம் | 3 | கடலூர் | | |
| 4 | விழுப்புரம் | 3<br>4<br>5 | விழுப்புரம்<br>கள்ளக்குறிச்சி<br>திண்டிவனம் | | | 1 | விழுப்புரம் |
| 5 | வேலூர் | 6<br>7<br>8 | ஆம்பூர்<br>குடியாத்தம்<br>திருப்பத்தூர் | 4<br>5<br>6 | மேலாலத்தூர்<br>வாணியம்பாடி<br>நாட்ராம்பள்ளி (திருப்பத்தூர்) | | |



2008 ஏப்ரல் 4]

| வ. எண் | மாவட்டம் | கரும்பு ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | | தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | | பருத்தி ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | திருவண்ணா மலை | 9 | திருவண்ணா மலை | | | | |
| 7 | சேலம் | 10 | மோகனூர் | 7 | சுக்கம்பட்டி | | |
| 8 | நாமக்கல் | | | 8 | பரமத்திவேலூர் | | |
| 9 | தர்மபுரி | 11 | பாப்பாரப்பட்டி | 9 | தர்மபுரி | | |
| 10 | கிருஷ்ணகிரி | | | | | | |
| 11 | கோயம்புத்தூர் | 12 | உடுமலைப்பேட்டை | 10 | பொள்ளாச்சி | | |
| 12 | ஈரோடு | 13 | கோபி | 11 | கோபி | 2 | கோபி |
| 13 | திருச்சி | 14 | லால்குடி | 12 | திருச்சிராப்பள்ளி | | |
| 14 | பெரம்பலூர் | 15 | பெரம்பலூர் | | | | |
| 15 | கரூர் | 16<br>17 | கரூர்<br>குளித்தலை | | | | |
| 16 | புதுக்கோட்டை | | | | | | |
| 17 | தஞ்சாவூர் | 18 | தஞ்சாவூர் | 13 | தஞ்சாவூர் | | |
| 18 | நாகப்பட்டினம் | 19 | மயிலாடுதுறை | | | | |
| 19 | திருவாரூர் | | | | | | |
| 20 | மதுரை | 20 | மேலூர் | 14 | மதுரை (வ) | 3 | மேலூர் |
| 21 | தேனி | | | | | | |
| 22 | திண்டுக்கல் | 21 | நிலக்கோட்டை | | | | |
| 23 | இராமநாதபுரம் | | | 15 | உச்சிப்புளி | | |
| 24 | சிவகங்கை | | | 16 | சிங்கம்புணரி | | |
| 25 | விருதுநகர் | | | 17 | தேவதானம் | | |
| 26 | திருநெல்வேலி | | | 18 | செங்கோட்டை | | |
| 27 | தூத்துக்குடி | | | 19 | உடன்குடி | | |
| 28 | கன்னியாகுமரி | | | 20 | நாகர்கோவில் | | |

## தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை

### அட்டவணை 8

### அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் விவரம்

| வ. எண் | மாவட்டம் | இருப்பிடம் | பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 12.00 |
| 2 | கோயம்புத்தூர் | கல்லார் | 8.72 |
| 3 | கோயம்புத்தூர் | கண்ணம்பாளையம் | 27.66 |
| 4 | கடலூர் | நெய்வேலி | 40.48 |
| 5 | கடலூர் | விருத்தாச்சலம் | 10.53 |
| 6 | கிருஷ்ணகிரி | திம்மாபுரம் | 9.89 |
| 7 | தருமபுரி | ஜீனூர் | 122.38 |
| 8 | திண்டுக்கல் | கொடைக்கானல் | 5.16 |
| 9 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா, கொடைக்கானல் | 8.30 |
| 10 | திண்டுக்கல் | தாண்டிக்குடி | 5.45 |
| 11 | திண்டுக்கல் | ரெட்டியார்சத்திரம் | 5.33 |
| 12 | திண்டுக்கல் | சிறுமலை | 202.47 |
| 13 | காஞ்சிபுரம் | ஆத்தூர் | 12.24 |
| 14 | காஞ்சிபுரம் | விச்சந்தாங்கல் | 22.96 |
| 15 | காஞ்சிபுரம் | மேல்கதிர்பூர் | 42.12 |
| 16 | காஞ்சிபுரம் | மேலொட்டிவாக்கம் | 20.36 |
| 17 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 12.80 |
| 18 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை | 6.07 |
| 19 | நாமக்கல் | செம்மேடு | 11.62 |
| 20 | நாமக்கல் | படசோலை | 28.14 |
| 21 | புதுக்கோட்டை | குடுமியான்மலை | 118.68 |
| 22 | புதுக்கோட்டை | மாபெரும் பழப்பண்ணை, வல்லத்திராக்கோட்டை | 521.20 |
| 23 | புதுக்கோட்டை | நாட்டுமங்கலம் | 53.02 |
| 24 | சேலம் | ஏற்காடு | 10.12 |
| 25 | சேலம் | மாபெரும் பழப்பண்ணை, கருமந்துறை | 419.77 |
| 26 | சேலம் | மணியார்குண்டம் | 100.00 |
| 27 | சேலம் | காய்கறி விதை உற்பத்தி மையம், கருமந்துறை | 5.49 |
| 28 | சேலம் | கருமந்துறை | 39.35 |



| வ. எண் | மாவட்டம் | இருப்பிடம் | பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|
| 29 | சேலம் | முள்ளுவாடி | 48.20 |
| 30 | சேலம் | சிறுமலை (அறுநூத்துமலை) | 8.10 |
| 31 | சிவகங்கை | தேவகோட்டை | 81.20 |
| 32 | சிவகங்கை | நேமம் | 38.77 |
| 33 | தஞ்சாவூர் | ஆடுதுறை | 8.80 |
| 34 | தஞ்சாவூர் | மருங்குளம் | 10.58 |
| 35 | நீலகிரி | பர்லியார் | 6.25 |
| 36 | நீலகிரி | காட்டேரி | 18.96 |
| 37 | நீலகிரி | குன்னூர் | 4.05 |
| 38 | நீலகிரி | பழவியல் நிலையம், குன்னூர் | 6.52 |
| 39 | நீலகிரி | குன்னூர், சிம்ஸ் பூங்கா | 12.14 |
| 40 | நீலகிரி | தொட்டபெட்டா | 4.00 |
| 41 | நீலகிரி | தும்மனட்டி | 9.80 |
| 42 | நீலகிரி | விஜயநகரம் | 14.40 |
| 43 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா, உதகை | 22.00 |
| 44 | நீலகிரி | நஞ்சநாடு | 85.18 |
| 45 | நீலகிரி | தேவாலா | 80.00 |
| 46 | தேனி | பெரியகுளம் | 9.31 |
| 47 | திருவள்ளூர் | மாதவரம் | 5.76 |
| 48 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் | 40.43 |
| 49 | திருநெல்வேலி | குற்றாலம் | 14.89 |
| 50 | கரூர் | முதலைப்பட்டி | 23.96 |
| 51 | வேலூர் | தகரக்குப்பம் | 34.40 |
| 52 | வேலூர் | கூடப்பட்டு | 10.40 |
| 53 | வேலூர் | நவ்லாக் | 84.45 |
| 54 | விருதுநகர் | பூவானி | 9.57 |
| 55 | விருதுநகர் | மாபெரும் பழப்பண்ணை, ஸ்ரீவில்லிப்புத்தூர் | 46.27 |
| | | மொத்தம் | 2620.70 |

# வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

## அட்டவணை 9

| அணி மற்றும் திட்ட காலம் | நீர் வடிப் பகுதிகளின் எண்ணிக்கை | திட்டச்செயலாக்கப் பரப்பு (எக்டரில்) | மொத்த நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | | | நிதி வழங்கியது (ரூ.இலட்சத்தில்) (பிப்ரவரி 2008 முடிய) | | | செலவினம் (ரூ.இலட்சத்தில்) (பிப்ரவரி 2008 முடிய) | பயனடைந்த பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நடுவண் அரசு | மாநில அரசு | மொத்தம் | நடுவண் அரசு | மாநில அரசு | மொத்தம் | | |
| 5-ம் அணி (1999-2000 முதல் 2003-04 வரை)** | 299 | 150772 | 4485.00 | 1495.00 | 5980 | 4209.79 | 1402.93 | 5612.72 | 5605.67 (100%) | 140209 |
| 7-ம் அணி (2001-02 முதல் 2005-06 வரை) ** | 61 | 30500 | 1372.50 | 457.50 | 1830 | 1058.18 | 356.66 | 1410.84 | 1275.15 (90%) | 20937 |
| 8-ம் அணி (2002-03 முதல் 2006-07 வரை) | 144 | 73457 | 3240.00 | 1080.00 | 4320 | 2248.42 | 730.18 | 2978.60 | 2795.11 (94%) | 45381 |
| 9-ம் அணி (2003-04 முதல் 2007-08 வரை) | 160 | 80413 | 3600.00 | 1200.00 | 4800 | 2806.68 | 854.14 | 3660.82 | 3272.74 (89%) | 49281 |
| 10-ம் அணி (2004-05 முதல் 2008-09 வரை) | 160 | 80000 | 3600.00 | 1200.00 | 4800 | 2012.41 | 604.10 | 2616.50 | 2180.48 (83%) | 35399 |
| 11-ம் அணி (2005-06 முதல் 2009-10 வரை) | 190 | 95000 | 4275.00 | 1425.00 | 5700 | 1774.17 | 558.57 | 2332.74 | 1879.31 (81%) | 23935 |
| 12-ம் அணி (2006-07 முதல் 2010-11 வரை) | 208 | 104000 | 4680.00 | 1560.00 | 6240 | 1452.48 | 420.79 | 1878.45 | 1076.85 (57%) | 13033 |
| | **1222** | **614142** | **25262.50** | **8417.50** | **33670** | **15567.31** | **4923.36** | **20490.67** | **18085.31 (88%)** | **328175** |

குறிப்பு : ** செயலாக்கம் 31-3.-2007 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.



# ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

## அட்டவணை 10

| அணி மற்றும் திட்ட காலம் | நீர் வடிப் பகுதிகளின் எண்ணிக்கை | திட்டச்செயலாக்கப் பரப்பு (எக்டரில்) | மொத்த நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | | | நிதி வழங்கியது (ரூ.இலட்சத்தில்) (பிப்ரவரி 2008 முடிய) | | | செலவினம் (ரூ.இலட்சத்தில்) (பிப்ரவரி 2008 முடிய) | பயனடைந்த பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நடுவண் அரசு | மாநில அரசு | மொத்தம் | நடுவண் அரசு | மாநில அரசு | மொத்தம் | | |
| மாநில அரசின் பங்களிப்பு இன்றி | 120 | 61805 | 2472.90 | - | 2472.90 | 2425.58 | - | 2425.58 | 2401.16 [99%] | 60041 |
| மாநில அரசின் பங்களிப்புடன் | 208 | 104802 | 5764.38 | 523.67 | 6288.05 | 5065.22 | 461.04 | 5526.25 | 5389.01 [98%] | 84603 |
| அரியாலி (2003-04 முதல் 2007-08) | 110 | 55000 | 3025.00 | 275.00 | 3300.00 | 2294.74 | 210.35 | 2505.09 | 2192.88 [88%] | 31337 |
| அரியாலி (2004-05 முதல் 2008-09) | 101 | 51025 | 2806.38 | 255.13 | 3061.51 | 1580.13 | 144.68 | 1724.81 | 1557.54 [90%] | 20381 |
| அரியாலி (2005-06 முதல் 2009-10) | 269 | 134234 | 7382.88 | 671.17 | 8054.05 | 2978.72 | 272.59 | 3251.31 | 2484.34 [76%] | 31329 |
| அரியாலி (2006-07 முதல் 2010-11) | 102 | 50730 | 2790.15 | 253.65 | 3043.80 | 671.52 | 61.20 | 732.73 | 421.36 [58%] | 3536 |
| **மொத்தம்** | **910** | **457596** | **24241.69** | **1978.62** | **26220.31** | **15015.91** | **1149.86** | **16165.77** | **14446.24 [89%]** | **231227** |

[2008 ஏப்ரல் 4

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

### அட்டவணை 11

### சான்றிதழ் பாடங்கள்

1. பருத்தி மற்றும் மக்காச்சோளம் வீரிய ஒட்டு விதை உற்பத்தி
2. நவீன கரும்பு சாகுபடித் தொழில்நுட்பங்கள்
3. காய்கறி விதை உற்பத்தி
4. தோட்டக்கலைப் பயிர்களுக்கான நாற்றாங்கால் தொழில்நுட்பங்களும், பயிர்ப் பெருக்க முறைகளும்
5. காளான் வளர்ப்பு
6. பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதப்படுத்துதல்
7. தரிசு நில மேம்பாடு
8. பண்ணைக் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பழுது பார்த்தலும், பராமரித்தலும்
9. மண்புழு உரம் தயாரித்தல்
10. தேனீ வளர்ப்பு
11. பருத்தி சாகுபடித் தொழில்நுட்பங்கள்
12. தென்னை சாகுபடித் தொழில்நுட்பங்கள்
13. அலங்காரத் தோட்டம் அமைத்தல்
14. நவீன பாசன முறை மேலாண்மை
15. மூலிகைப் பயிர்கள்
16. ரொட்டி மற்றும் சாக்லட் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள்

**முதுநிலை பட்டயப் படிப்புகள்**

- மூலிகைப் பயிர் உற்பத்தி மற்றும் தரக்கட்டுப்பாடு
- உணவு உயிர் நுட்பவியல்
- உயிர்த் தகவல் இயல்

**முதுநிலை பட்டப் படிப்புகள்**

- முதுநிலை வணிக மேலாண்மை
- முதுநிலை சுற்றுச்சூழல் மேலாண்மை
- முதுநிலை கரும்பு உற்பத்திக்கான தொழில்நுட்பங்கள்



2008 ஏப்ரல் 4]

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

### அட்டவணை 12

**எதிர்காலத் திட்டங்கள்**

தொலைதூரக் கல்வித்திட்டம் தொடர்பாக கற்போரிடம் பெறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் 2008 – 2009 –ஆம் ஆண்டில் கீழ்வரும் புதிய பாடங்கள் துவக்கப்பட உள்ளன

**சான்றிதழ் பாடங்கள்**

- நவீன களை மேலாண்மை
- காட்டாமணக்கு சாகுபடி
- மலர்கள் சாகுபடி
- பட்டுப்புழு வளர்ப்பு
- நீர் வழி உர மேலாண்மை

**முதுநிலை பட்டயப் படிப்புகள்**

- உயிர் உரங்கள் / உயிரியல் பூச்சிக்கொல்லி உற்பத்தி நுட்பங்கள்
- பட்டுப்புழு வளர்ப்பு
- ஊடக மேலாண்மை தொழில்நுட்பங்கள்
- துல்லிய பண்ணை திட்டம்
- விதை சான்றளிப்பு

**முதுநிலை பட்டப் படிப்புகள்**

- முதுநிலை உணவியல் தொழில் நுட்பங்கள்
- முதுநிலை சிறு வர்த்தக மேலாண்மை

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகக் கல்லூரிகள்



### அட்டவணை 13

| வ. எண் | கல்லூரி | முகவரி |
|---|---|---|
| 1. | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் – 641 003 |
| 2. | தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் – 641 003 |
| 3. | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் – 641 003 |
| 4. | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மதுரை – 625 104 |
| 5. | மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மதுரை – 625 104 |
| 6. | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கிள்ளிகுளம், வல்லநாடு – 628 252 |
| 7. | அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | நாவலூர் குட்டப்பட்டு திருச்சி – 620 009 |
| 8. | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | குமுளூர், திருச்சி – 621 712 |
| 9. | வனஇயல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மேட்டுப்பாளையம் – 641 301 |
| 10. | தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | பெரியகுளம் – 625 604 |
| | அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகள் | |
| 11. | பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | காரைக்கால் – 609 603 |
| 12. | ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரி | கலவை, வேலூர் – 632 506 |



## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

### அட்டவணை 14: ஆராய்ச்சி நிலையங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர் – 628 501 | 18. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு – 636 602 |
| 2. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி – 627 701 | 19. | தோட்டக்கலை வணிக நிலையம், உதகமண்டலம் – 643 001 |
| 3. | பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிப்புத்தூர் – 626 125 | 20. | எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம் – 602 002 |
| 4. | மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர் – 635 112 | 21. | கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர் – 607 001 |
| 5. | மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை – 626 107 | 22. | கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி – 639 115 |
| 6. | தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார்நகர் – 642 101 | 23. | கரும்பு ஆராய்ச்சி நிலையம், மேலாலத்தூர் – 635 806 |
| 7. | நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம் – 627 401 | 24. | தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம் – 614 908 |
| 8. | வீரிய ஒட்டு நெல் ஆய்வு மையம் கூடலூர் – 643 212 | 25. | மண் மற்றும் நீர் நிர்வாக ஆராய்ச்சி நிலையம், தஞ்சாவூர் – 613 501 |
| 9. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல் – 624 103 | 26. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம் – 632 104 |
| 10. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வைகை அணை – 625 512 | 27. | நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர் – 602 025 |
| 11. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பரமக்குடி – 623 707 | 28. | மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம் – 606 001 |
| 12. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை – 629 181 | 29. | தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலையம், வம்பன் – 622 303 |
| 13. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரம் – 629 901 | 30. | காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர் – 607 113 |
| 14. | கடலோர உவர் ஆராய்ச்சி மையம், இராமநாதபுரம் – 623 501 | 31. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பட்டுக்கோட்டை – 614 602 |
| 15. | நகர்ப்புற தோட்டக்கலை வளர்ச்சி மையம், சென்னை – 600 040 | 32. | தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612 101 |
| 16. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை – 624 602 | 33. | மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர் 117 |
| 17. | மக்காச்சோள ஆராய்ச்சி நிலையம் வாகரை – 624 613 திண்டுக்கல் மாவட்டம். | 34. | பருத்தி ஆராய்ச்சி நிலையம், வேப்பன்தட்டை – 621 116 பெரம்பலூர் மாவட்டம். |

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

### அட்டவணை 15: வேளாண்மை அறிவியல் நிலையங்கள்

(1) வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்–641 003.

(2) வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை–625 104

(3) வேளாண்மை அறிவியல் நிலையம், மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்–606 001

(4) வேளாண்மை அறிவியல் நிலையம், கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி–639 115

(5) வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர்–636 203, சேலம் மாவட்டம்

(6) வேளாண்மை அறிவியல் நிலையம், எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம்–604 002

(7) வேளாண்மை அறிவியல் நிலையம், மண்டல ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவிலாங்குளம் அருப்புக்கோட்டை–626 107

(8) வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம்–632 104, வேலூர் மாவட்டம்

(9) வேளாண்மை அறிவியல் நிலையம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை–629 161, கன்னியாகுமரி மாவட்டம்

(10) வேளாண்மை அறிவியல் நிலையம், கடலோர உவர் ஆராய்ச்சி மையம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், இராமநாதபுரம்–623 503

(11) வேளாண்மை அறிவியல் நிலையம், தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலையம், வம்பன் காலனி – 622 303, புதுக்கோட்டை மாவட்டம்

(12) வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல்–611 108, நாகப்பட்டினம் மாவட்டம்

(13) வேளாண்மை அறிவியல் நிலையம், நீடாமங்கலம்–614 404, திருவாரூர்

(14) வேளாண்மை அறிவியல் நிலையம், நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர்–602 025 திருவள்ளூர் மாவட்டம்

(15) வேளாண்மை அறிவியல் மையம், மாநில விதைப் பண்ணை பாப்பாரப்பட்டி–636 809, தருமபுரி மாவட்டம்

### பயிர் மருத்துவ மையங்கள்

(1) வேளாண்மை ஆதரவு மையம், திருநெல்வேலி–627 002

(2) பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிப்புத்தூர்–626 125

(3) நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம்–627 401

(4) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பையூர்– 635 806

(5) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்–628 501



## விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறை

### அட்டவணை 16

**சான்று செய்த விதை அளவு மெ.டன்.**

| வ.எண். | பயிர் | 2007–08 | | 2008–09 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | 29.02.2008 முடிய சாதனை | இலக்கு |
| 1 | நெல் | 54500 | 48077 | 56300 |
| 2 | ரக சிறு தானியம் | 440 | 224 | 450 |
| 3 | வீரிய சிறு தானியம் | 10 | 8 | 20 |
| 4 | ரக பருத்தி | 900 | 516 | 900 |
| 5 | வீரிய பருத்தி | 10 | 6 | 10 |
| 6 | பயறு வகை | 1380 | 1402 | 1450 |
| 7 | எண்ணெய் வித்து | 3200 | 2599 | 3300 |
| 8 | காய்கறிகள் | 60 | 59 | 70 |
| | மொத்தம் | 60500 | 52891 | 62500 |

**விதை ஆய்வு**

| வ. எண் | விவரம் | 2007–08 | | 2008–09 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | 29.02.2008 முடிய சாதனை | இலக்கு |
| 1 | விற்பனை நிலைய ஆய்வுகள் | 34500 | 34138 | 40000 |
| 2 | விதை மாதிரிகள் எடுத்தது | 24000 | 26215 | 28500 |

**விதைப் பரிசோதனை**

| வ.எண். | விவரம் | 2007–08 | | 2008–09 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | 29.02.2008 முடிய சாதனை | இலக்கு |
| 1 | விதைப் பகுப்பாய்வு | | | |
| | பரிசோதனை செய்தது | 58500 | 51445 | 63500 |

**விதைச் சான்றுப் பயிற்சி**

| வ.எண். | விவரம் | 2007–08 | | 2008–09 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | 29.02.2008 முடிய சாதனை | இலக்கு |
| 1 | பயனாளிகள் | 30500 | 32694 | 34000 |

## அட்டவணை 17

### விதைச் சான்றளிப்புப் பகுதிகள்

| வ எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) | வ எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி | 15 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 2 | கடலூர் | கடலூர் | 16 | சேலம் | சேலம் |
| 3 | தருமபுரி | தருமபுரி | 17 | சிவகங்கை | சிவகங்கை |
| 4 | திண்டுக்கல் | திண்டுக்கல் | 18 | திருவள்ளூர் | திருவள்ளூர் மற்றும் சென்னை |
| 5 | ஈரோடு | ஈரோடு | 19 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 6 | கரூர் | கரூர் | 20 | திருவாரூர் | திருவாரூர் |
| 7 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 21 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 8 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 22 | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 9 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 23 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 10 | மதுரை | மதுரை | 24 | தேனி | தேனி |
| 11 | நாமக்கல் | நாமக்கல் | 25 | திருச்சி | திருச்சி |
| 12 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 26 | வேலூர் | வேலூர் |
| 13 | பெரம்பலூர் | பெரம்பலூர் | 27 | விழுப்புரம் | விழுப்புரம் |
| 14 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 28 | விருதுநகர் | விருதுநகர் |

### விதை ஆய்வுப் பகுதிகள்

| | | |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி |
| 2 | ஈரோடு | ஈரோடு |
| 3 | சேலம் | சேலம் மற்றும் நாமக்கல் |
| 4 | தருமபுரி | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி |
| 5 | கரூர் | கரூர் மற்றும் திண்டுக்கல் |
| 6 | மதுரை | மதுரை மற்றும் தேனி |
| 7 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை |
| 8 | திருச்சி | திருச்சி மற்றும் பெரம்பலூர் |
| 9 | சென்னை | சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் |
| 10 | திருநெல்வேலி | திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி |
| 11 | விருதுநகர் | விருதுநகர் மற்றும் தூத்துக்குடி |
| 12 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 13 | வேலூர் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 14 | விழுப்புரம் | விழுப்புரம் மற்றும் கடலூர் |
| 15 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |



### விதைப் பரிசோதனை நிலையங்கள்

| தொடர் எண். | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 2 | நீலகிரி | நீலகிரி |
| 3 | தருமபுரி | தருமபுரி மற்றும் நாமக்கல் |
| 4 | ஈரோடு | ஈரோடு |
| 5 | மதுரை | மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 6 | சேலம் | சேலம் |
| 7 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 8 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 9 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, சென்னை மற்றும் திருவள்ளூர் |
| 10 | விழுப்புரம் | விழுப்புரம் |
| 11 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர் மற்றும் கடலூர் |

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் [2008 ஏப்ரல் 4

## அட்டவணை 18

### மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், சோதனைச் சாவடிகள், ஊரகக் கிட்டங்கிகள், குறித்த விவரங்கள். (எண்களில்)

| தொ. எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் | சோதனை சாவடிகள் | ஊரகக் கிட்டங்கி |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 14 | 2 | 5 |
| 2 | வேலூர் | 12 | -- | 4 |
| 3 | திருவண்ணாமலை | 16 | -- | 7 |
| 4 | கடலூர் | 10 | -- | 3 |
| 5 | விழுப்புரம் | 18 | -- | 9 |
| 6 | சேலம் | 19 | -- | 2 |
| 7 | தருமபுரி | 16 | 2 | 4 |
| 8 | கோயம்புத்தூர் | 18 | -- | 11 |
| 9 | ஈரோடு | 25 | 1 | 9 |
| 10 | திருச்சிராப்பள்ளி | 19 | 4 | 10 |
| 11 | தஞ்சாவூர் | 13 | 2 | 4 |
| 12 | புதுக்கோட்டை | 10 | 1 | 2 |
| 13 | மதுரை | 6 | -- | 2 |
| 14 | இராமநாதபுரம் | 20 | 1 | 2 |
| 15 | திருநெல்வேலி | 20 | -- | 10 |
| 16 | கன்னியாகுமரி | 6 | 2 | 12 |
| 17 | தேனி | 7 | -- | 5 |
| 18 | திண்டுக்கல் | 8 | -- | 2 |
| 19 | நாகப்பட்டினம் | 8 | -- | 4 |
| 20 | திருவாரூர் | 8 | -- | 1 |
| 21 | நீலகிரி | 4 | -- | 2 |
| | மொத்தம் | 277 | 15 | -- 108 |



2008 ஏப்ரல் 4]

## அட்டவணை 19

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைந்துள்ள உட்கட்டமைப்பு வசதிகள் (எண்களில்)

| தொ. எண் | விற்பனைக் குழுக்கள் | சொந்த நிலம் | கிட்டங்கி | ஊரக கிட்டங்கி | பரிவர்த்தனைக் கூடம் | உலர் களம் | விவசாயிகள் ஓய்வறை | சுகாதார வசதி | குடிநீர் வசதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 7 | -- | 5 | 4 | 7 | 2 | 6 | 5 |
| 2 | வேலூர் | 9 | 6 | 4 | 6 | 4 | 2 | 7 | 7 |
| 3 | திருவண்ணாமலை | 13 | 5 | 7 | 14 | 11 | 6 | 10 | 9 |
| 4 | கடலூர் | 5 | 2 | 3 | 11 | 5 | 3 | 9 | 5 |
| 5 | விழுப்புரம் | 12 | 4 | 9 | 26 | 13 | 10 | 22 | 12 |
| 6 | சேலம் | 5 | 1 | 2 | 4 | 4 | -- | 4 | 3 |
| 7 | தருமபுரி | 9 | 1 | 4 | 7 | 7 | 3 | 11 | 7 |
| 8 | கோயம்புத்தூர் | 18 | 58 | 11 | 19 | 21 | 6 | 14 | 12 |
| 9 | ஈரோடு | 14 | 13 | 9 | 25 | 16 | 4 | 15 | 14 |
| 10 | திருச்சி | 12 | 13 | 10 | 24 | 13 | 3 | 19 | 11 |
| 11 | தஞ்சாவூர் | 10 | 11 | 4 | 17 | 7 | 6 | 9 | 9 |
| 12 | புதுக் கோட்டை | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 |
| 13 | மதுரை | 4 | -- | 2 | 1 | 3 | 3 | 2 | 3 |
| 14 | இராமநாதபுரம் | 14 | 8 | 10 | 12 | 10 | 2 | 12 | 13 |
| 15 | திருநெல் வேலி | 15 | 3 | 12 | 9 | 13 | 10 | 14 | 15 |
| 16 | கன்னியா குமரி | 6 | 2 | 5 | 6 | 7 | 5 | 5 | 5 |
| 17 | தேனி | 4 | -- | 2 | 3 | 6 | 1 | 3 | 4 |
| 18 | திண்டுக்கல் | 6 | 3 | 4 | 6 | 7 | -- | 5 | 5 |
| 19 | நாகப்பட்டினம் | 1 | 1 | 1 | 2 | 1 | -- | 1 | 1 |
| 20 | திருவாரூர் | 1 | -- | 2 | 1 | 1 | 2 | 1 | 1 |
| 21 | நீலகிரி | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| | மொத்தம் | 168 | 132 | 108 | 200 | 158 | 69 | 172 | 143 |

## அட்டவணை 20

### விற்பனைக் குழுவாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

| 1. காஞ்சிபுரம் | 2. வேலூர் | 3. திருவண்ணாமலை |
|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 1. வேலூர் | 1. திருவண்ணாமலை |
| 2. திருத்தணி | 2. திருப்பத்தூர் | 2. ஆரணி |
| 3. திருவள்ளூர் | 3. ஆற்காடு | 3. வந்தவாசி |
| 4. செங்குன்றம் | 4. அரக்கோணம் | 4. சேத்துப்பட்டு |
| 5. மதுராந்தகம் | 5. வாணியம்பாடி | 5. செய்யார் |
| 6. உத்திரமேரூர் | 6. காவேரிப்பாக்கம் | 6. போளூர் |
| 7. பொன்னேரி | 7. குடியாத்தம் | 7. செங்கம் |
| 8. திருக்கழுக்குன்றம் | 8. கலவை | 8. புதுப்பாளையம் |
| 9. சுங்குவார்சத்திரம் | 9. அம்மூர் | 9. வானாபுரம் |
| 10. பள்ளிப்பட்டு | 10. காட்பாடி | 10. வேட்டவலம் |
| 11. ஊத்துக்கோட்டை | 11. ஆம்பூர் | 11. தெள்ளார் |
| 12. அச்சிறுப்பாக்கம் | 12. திமிரி | 12. மங்கல மாமண்டூர் |
| 13. கும்மிடிப்பூண்டி | | 13. தேசூர் |
| 14. நசரத்பேட்டை | | 14. பெரணமல்லூர் |
| | | 15. தூசி |
| | | 16. கீழ்பென்னாத்தூர். |

| 4. கடலூர் | 5. விழுப்புரம் | |
|---|---|---|
| 1. விருத்தாசலம் | 1. திண்டிவனம் | 11. மணலூர்ப்பேட்டை |
| 2. கடலூர் | 2. திருக்கோவிலூர் | 12. அவலூர்ப்பேட்டை |
| 3. பண்ருட்டி | 3. உளுந்தூர்பேட்டை | 13. மரக்காணம் |
| 4. திட்டக்குடி | 4. விழுப்புரம் | 14. விக்கிரவாண்டி |
| 5. காட்டுமன்னார் கோவில் | 5. சின்னசேலம் | 15. அனந்தபுரம் |
| 6. சிதம்பரம் | 6. கள்ளக்குறிச்சி | 16. வளத்தி |
| 7. குறிஞ்சிப்பாடி | 7. செஞ்சி | 17. மூங்கில்துரைப்பட்டு |
| 8. சேத்தியாதோப்பு | 8. தியாகதுர்கம் | 18. கிளியனூர் |
| 9. ஸ்ரீமுஷ்ணம் | 9. சங்கராபுரம் | |
| 10. புவனகிரி | 10. திருவெண்ணெய் நல்லூர் | |



| 6. சேலம் | 7. தருமபுரி | 8. கோயம்புத்தூர் |
|---|---|---|
| 1. சேலம் | 1. தருமபுரி | 1. திருப்பூர் |
| 2. ஆத்தூர் | 2. கிருஷ்ணகிரி | 2. அவிநாசி |
| 3. நாமக்கல் | 3. ஒசூர் | 3. சேவூர் |
| 4. இராசிபுரம் | 4. கெலமங்கலம் | 4. அன்னூர் |
| 5. திருச்செங்கோடு | 5. பாலக்கோடு | 5. காரமடை |
| 6. சங்ககிரி | 6. பென்னாகரம் | 6. கோயம்புத்தூர் |
| 7. கொங்கனாபுரம் | 7. போச்சம்பள்ளி | 7. சூலூர் |
| 8. கொளத்தூர் | 8. காவேரிப்பட்டினம் | 8. பல்லடம் |
| 9. வேலூர் | 9. ஊத்தங்கரை | 9. உடுமலைப்பேட்டை |
| 10. மேச்சேரி | 10. அரூர் | 10. ஆனைமலை |
| 11. வாழப்பாடி | 11. பாப்பிரெட்டிப்பட்டி | 11. பொள்ளாச்சி |
| 12. தம்மம்பட்டி | 12. கொளத்தூர் | 12. மலையடிப்பாளையம் |
| 13. நாமகிரிப்பேட்டை | 13. பர்கூர் | 13. நெகமம் |
| 14. தலைவாசல் | 14. இராயக்கோட்டை | 14. கிணத்துக்கடவு |
| 15. ஓமலூர் | 15. தென்கனிக்கோட்டை | 15. தொண்டாமுத்தூர் |
| 16. காடையம்பட்டி | 16. பாப்பாரப்பட்டி | 16. மடத்துக்குளம் |
| 17. கெங்கவல்லி | | 17. பெதப்பம்பட்டி |
| 18. கருமந்துறை | | 18. பொங்கலூர் |
| 19. சோளக்காடு | | |

| 9. ஈரோடு | 10. திருச்சிராப்பள்ளி | 11. தஞ்சாவூர் |
|---|---|---|
| 1. ஈரோடு | 1. ஜெயங்கொண்டம் | 1. அதிராம்பட்டினம் |
| 2. அவல்பூந்துறை | 2. கரூர் | 2. அம்மாப்பேட்டை |
| 3. கொடுமுடி | 3. அரியலூர் | 3. பூதலூர் |
| 4. சிவகிரி | 4. மணப்பாறை | 4. கும்பகோணம் |
| 5. சித்தோடு | 5. ஆண்டிமடம் | 5. மதுக்கூர் |
| 6. பவானி | 6. துறையூர் | 6. ஒரத்தநாடு |
| 7. பூதப்பாடி | 7. பெரம்பலூர் | 7. பட்டுக்கோட்டை |
| 8. அந்தியூர் | 8. லால்குடி | 8. பாபநாசம் |
| 9. மயிலம்பாடி | 9. திருச்சிராப்பள்ளி | 9. பேராவூரணி |
| 10. கவுந்தம்பாடி | 10. தொட்டியம் | 10. தஞ்சாவூர் |
| 11. கோபி | 11. மண்ணச்சநல்லூர் | 11. வல்லம் |
| 12. நம்பியூர் | 12. குளித்தலை | 12. திருப்பனந்தாள் |
| 13. வெள்ளக்கோவில் | 13. துவரங்குறிச்சி | 13. பாப்பாநாடு |
| 14. சத்தியமங்கலம் | 14. இரும்பூதிப்பட்டி | |

[2008 ஏப்ரல் 4

| 9. ஈரோடு– தொடர்ச்சி | 10. திருச்சிராப்பள்ளி– தொடர்ச்சி | |
|---|---|---|
| 15. புஞ்சைபுளியம்பட்டி | 15. சின்னதாராபுரம் | |
| 16. தாளவாடி | 16. புள்ளம்பாடி | |
| 17. பெருந்துறை | 17. தாத்தையங்கார்பேட்டை | |
| 18. குன்னத்தூர் | 18. மேலணைக்குழி | |
| 19. காங்கேயம் | 19. அரும்பாவூர் | |
| 20. வெள்ளாங்கோவில் | | |
| 21. தாராபுரம் | | |
| 22. மூலனூர் | | |
| 23. அலங்கியம் | | |
| 24. முத்தூர் | | |
| 25. எழுமாத்தூர் | | |

| 12.புதுக்கோட்டை | 13.மதுரை | 14.இராமநாதபுரம் |
|---|---|---|
| 1. ஆலங்குடி | 1. திருமங்கலம் | 1. விருதுநகர் |
| 2. அறந்தாங்கி | 2. உசிலம்பட்டி | 2. இராஜபாளையம் |
| 3. புதுக்கோட்டை | 3. மேலூர் | 3. சாத்தூர் |
| 4. கந்தர்வக்கோட்டை | 4. மதுரை | 4. அருப்புக்கோட்டை |
| 5. ஆவுடையார்கோவில் | 5. டி.கல்லுப்பட்டி | 5. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 6. கீரனூர் | 6. வாடிப்பட்டி | 6. வத்திராயிருப்பு |
| 7. கீரமங்கலம் | | 7. வெம்பக்கோட்டை |
| 8. பொன்னமராவதி | | 8. சிவகங்கை |
| 9. இலுப்பூர் | | 9. திருபுவனம் |
| 10. கரம்பக்குடி | | 10. மானாமதுரை |
| | | 11. சிங்கம்புணரி |
| | | 12. காரைக்குடி |
| | | 13. இளையான்குடி |
| | | 14. தேவக்கோட்டை |
| | | 15. இராமநாதபுரம் |
| | | 16. பரமக்குடி |
| | | 17. கமுதி |
| | | 18. திருவாடானை |
| | | 19. இராசசிங்கமங்கலம் |
| | | 20. முதுகுளத்தூர் |



2008 ஏப்ரல் 4]

| 15. திருநெல்வேலி | 16.கன்னியாகுமரி | 18.திண்டுக்கல் |
|---|---|---|
| 1. கோவில்பட்டி | 1. ஈத்தாமொழி | 1. திண்டுக்கல் |
| 2. சங்கரன்கோவில் | 2. வடசேரி | 2. ஒட்டன்சத்திரம் |
| 3. தூத்துக்குடி | 3. களியக்காவிளை | 3. பழனி |
| 4. புதூர் | 4. திங்கள்சந்தை | 4. நத்தம் |
| 5. கடம்பூர் | 5. குலசேகரம் | 5. வத்தலகுண்டு |
| 6. கழுகுமலை | 6. தொடுவட்டி | 6. கோபால்பட்டி |
| 7. தென்காசி | | 7. வடமதுரை |
| 8. அம்பாசமுத்திரம் | 17.தேனி | 8. வேடசந்தூர் |
| 9. வள்ளியூர் | 1. தேனி | |
| 10. ஸ்ரீவைகுண்டம் | 2. கம்பம் | |
| 11. திருநெல்வேலி | 3. போடிநாயக்கனூர் | |
| 12. விளாத்திக்குளம் | 4. சின்னமனூர் | |
| 13. கடையநல்லூர் | 5. ஆண்டிப்பட்டி | |
| 14. திசையன்விளை | 6. உத்தமபாளையம் | |
| 15. பாவூர்சத்திரம் | 7. பெரியகுளம் | |
| 16. திருவேங்கடம் | | |
| 17. எட்டையபுரம் | | |
| 18. சிவகிரி | | |
| 19. ஆலங்குளம் | | |
| 20. சாத்தான்குளம் | | |

| 19.நாகப்பட்டினம் | 20.திருவாரூர் | 21. நீலகிரி |
|---|---|---|
| 1. கீவளூர் | 1. வலங்கைமான் | 1. உதகமண்டலம். |
| 2. குத்தாலம் | 2. கொரடாச்சேரி | 2. குன்னூர் |
| 3. மயிலாடுதுறை | 3. மன்னார்குடி | 3. கோத்தகிரி |
| 4. நாகப்பட்டினம் | 4. பூந்தோட்டம் | 4. கூடலூர். |
| 5. செம்பனார்கோவில் | 5. வடுவூர் | |
| 6. சீர்காழி | 6. குடவாசல் | |
| 7. வேதாரண்யம் | 7. திருவாரூர் | |
| 8. திருப்பூண்டி | 8. திருத்துறைப்பூண்டி | |

## அட்டவணை – 21

### தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம்

| தொ. எண் | மாவட்டத்தின் பெயர் | அக்மார்க் ஆய்வகங்கள் இருப்பிடம் |
|---|---|---|
| 1 | சென்னை | வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் அலுவலகத்தில் அமைந்துள்ள முதன்மை ஆய்வகம்.<br>சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு) |
| 2 | வேலூர் | வேலூர் |
| 3 | கடலூர் | கடலூர் |
| 4 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி–1, திருச்சிராப்பள்ளி–2 |
| 6 | கரூர் | கரூர் |
| 7 | மதுரை | மதுரை–1, மதுரை–2 |
| 8 | தேனி | தேனி |
| 9 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 10 | விருதுநகர் | விருதுநகர் |
| 11 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி |
| 12 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13 | கன்னியாகுமரி | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 14 | சேலம் | சேலம் |
| 15 | தருமபுரி | தருமபுரி |
| 16 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் |
| 17 | ஈரோடு | பெருந்துறை, ஈரோடு–1, ஈரோடு–2, காங்கேயம்–1 காங்கேயம்–2, வெள்ளக்கோவில், சித்தோடு |



## அட்டவணை – 22

### மாவட்ட வாரியாக உழவர் சந்தைகள் விவரம்

| 1. காஞ்சிபுரம் | 2. திருவள்ளூர் | 3. வேலூர் |
|---|---|---|
| 1. காஞ்சிபுரம்<br>2. பல்லாவரம்<br>3. செங்கல்பட்டு | 4. திருத்தணி<br>5. திருவள்ளூர்<br>6. அம்பத்தூர் | 7. வேலூர்<br>8. காட்பாடி<br>9. வாணியம்பாடி<br>10. குடியாத்தம்<br>11. காகிதப்பட்டறை<br>12. இராணிப்பேட்டை<br>13. ஆற்காடு |
| **4. திருவண்ணாமலை** | **5. கடலூர்** | **6. விழுப்புரம்** |
| 14. திருவண்ணாமலை<br>15. போளூர்<br>16. ஆரணி<br>17. செய்யாறு | 18. கடலூர்<br>19. சிதம்பரம்<br>20. விருத்தாச்சலம்<br>21. பண்ருட்டி | 22. விழுப்புரம்<br>23. திண்டிவனம்<br>24. கள்ளக்குறிச்சி |
| **7. சேலம்** | **8. நாமக்கல்** | **9. தருமபுரி** |
| 25. சூரமங்கலம்<br>26. அம்மாப்பேட்டை<br>27. ஆத்தூர்<br>28. தாதகாப்பட்டி<br>29. மேட்டூர்<br>30. ஆட்டையாம்பட்டி<br>31. அஸ்தம்பட்டி | 32. நாமக்கல்<br>33. திருச்செங்கோடு<br>34. இராசிபுரம்<br>35. குமாரபாளையம் | 36. தருமபுரி |
| **10. கிருஷ்ணகிரி** | **11. கோயம்புத்தூர்** | **12. நீலகிரி** |
| 37. ஒசூர்<br>38. கிருஷ்ணகிரி | 39. கோவை ஆர்.எஸ்.புரம்<br>40. சிங்காநல்லூார்<br>41. பொள்ளாச்சி<br>42. உடுமலைப்பேட்டை<br>43. திருப்பூர் (வடக்கு)<br>44. மேட்டுப்பாளையம்<br>45. திருப்பூர் (தெற்கு)<br>46. குறிச்சி | 47. உதகை<br>48. குன்னூர் |

| 13. ஈரோடு | 14. திருச்சி | 15. பெரம்பலூர் |
|---|---|---|
| 49. சம்பத் நகர்<br>50. கோபிசெட்டி பாளையம்<br>51. சத்தியமங்கலம்<br>52. தாராபுரம் | 53. அண்ணா நகர்<br>54. கே.கே.நகர்<br>55. துறையூர்<br>56. மணப்பாறை | 57. பெரம்பலூர்<br>58. அரியலூர் |
| **16. கரூர்** | **17. தஞ்சாவூர்** | **18. நாகப்பட்டினம்** |
| 59. கரூர்<br>60. குளித்தலை<br>61. வேலாயுதம் பாளையம் | 62. தஞ்சாவூர்<br>63. கும்பகோணம்<br>64. பட்டுக்கோட்டை | 65. மயிலாடுதுறை<br>66. நாகப்பட்டினம் |
| **19. திருவாரூர்** | **20. புதுக்கோட்டை** | **21. மதுரை** |
| 67. திருத்துறைப்பூண்டி<br>68. மன்னார்குடி<br>69. திருவாரூர் | 70. புதுக்கோட்டை<br>71. ஆலங்குடி<br>72. அறந்தாங்கி | 73. அண்ணாநகர்<br>74. சொக்கிக்குளம்<br>75. பழங்காநத்தம்<br>76. மேலூர்<br>77. திருமங்கலம்<br>78. உசிலம்பட்டி |
| **22. திண்டுக்கல்** | **23. தேனி** | **24. சிவகங்கை** |
| 79. திண்டுக்கல்<br>80. பழனி<br>81. சின்னாளப்பட்டி | 82. தேனி<br>83. கம்பம்<br>84. பெரியகுளம்<br>85. போடி | 86. சிவகங்கை<br>87. தேவகோட்டை<br>88. காரைக்குடி |
| **25. இராமநாதபுரம்** | **26. விருதுநகர்** | **27. திருநெல்வேலி** |
| 89. பரமக்குடி<br>90. இராமநாதபுரம் | 91. அருப்புக்கோட்டை<br>92. இராஜபாளையம்<br>93. ஸ்ரீவில்லிபுத்தூர்<br>94. விருதுநகர்<br>95. சிவகாசி<br>96. சாத்தூர் | 97. சங்கரன்கோவில்<br>98. பாளையங்கோட்டை<br>99. கண்டியப்பேரி<br>100. தென்காசி |
| **28. தூத்துக்குடி** | **29. கன்னியாகுமரி** | |
| 101. தூத்துக்குடி<br>102. கோவில்பட்டி | 103. வடசேரி<br>104. மைலாடி | |



## கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

## 2008–2009 செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2008–2009 வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 1,357,07,12 | 121,32,27 | -- | 1,478,39,39 |
| மொத்த தொகை –சாட்டியது | 3 | -- | -- | 3 |

நிகர செலவு (ரூபாய் ஆயிரத்தில்)

| | கணக்குத் தலைப்பு | 2006–07 கணக்குகள் | 2007–08 வரவு செலவு திட்ட மதிப்பீடு | 2007–08 திருத்த மதிப்பீடு | 2008–09 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 1,79,11 | 2,08,92 | 2,08,92 | 3,12,29 |
| 2202 | பொதுக் கல்வி | 30,08 | 30,00 | 30,00 | 30,00 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 605,65,11 | 744,42,75 | 702,96,88 | 971,15,64 |
| 2402 | மண்வள நீர் வளப் பாதுகாப்பு | 120,78,24 | 125,41,63 | 112,33,99 | 128,38,48 |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் | 90,40,78 | 110,64,95 | 115,37,93 | 141,42,80 |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 40,76,07 | 55,64,28 | 44,98,45 | 61,87,95 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 8,86,76 | 7,25,00 | 12,80,00 | 7,25,00 |
| 2551 | மலைப் பகுதிகள் | 4,10,28 | 4,26,48 | 4,46,06 | 4,25,73 |
| 2702 | சிறு பாசனம் | 6,47,25 | 9,39,22 | 6,63,33 | 8,16,81 |
| 2705 | பாசனப் பகுதி மேம்பாடு | 17,22,58 | 21,06,28 | 18,32,97 | 22,18,86 |
| 3451 | தலைமைச் செயலகம்–பொருளாதாரப் பணிகள் | 3,89,75 | 5,15,07 | 7,09,71 | 6,42,70 |
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 1,84,42 | 30,09 | 30,08 | 2,91,56 |
| 4402 | மண் வள, நீர் வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 30,38,45 | 40,07,81 | 55,11,06 | 81,49,98 |
| 4435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 4,42,88 | 7,42,20 | 2,38,00 | 7,28,00 |
| 4551 | மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 9,59,57 | 9,04,52 | 9,80,56 | 8,43,00 |
| 4705 | பாசனப் பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு | 35,29,62 | 24,44,32 | 29,95,43 | 21,19,73 |
| 6401 | பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | 4,19,24 | --- | 30,00,00 | -- |

## கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை

## 2008—2009 வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 05 01 | தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 15,67,70 | -- | -- | 15,67,70 |
| 05 02 | வேளாண்மை இயக்ககம் | அனுமதித்தது | 869,04,44 | 2,91,53 | -- | 871,95,97 |
| 05 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 39,65,31 | 7,28,00 | -- | 46,93,31 |
| 05 04 | விதைச் சான்று இயக்ககம் | சாட்டியது | 1 | -- | -- | 1 |
| | | அனுமதித்தது | 14,71,25 | -- | -- | 14,71,25 |
| 05 05 | தோட்டக்கலை, மலைத்தோட்டப் பயிர்கள் இயக்ககம் | சாட்டியது | 1 | -- | -- | 1 |
| | | அனுமதித்தது | 101,73,44 | 2 | -- | 101,73,46 |
| 05 06 | வேளாண்மைப் பொறியியல் துறை | சாட்டியது | 1 | -- | -- | 1 |
| | | அனுமதித்தது | 178,42,28 | 111,12,72 | -- | 289,55,00 |
| 05 07 | வேளாண்மைப் பொறியியல் பணிகள் | அனுமதித்தது | 20,56 | -- | -- | 20,56 |
| 05 08 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோயம்புத்தூர் | அனுமதித்தது | 137,28,41 | -- | -- | 137,28,41 |
| 05 09 | அங்கக சான்றளிப்பு இயக்ககம் | அனுமதித்தது | 33,73 | -- | -- | 33,73 |
| | மொத்தம் | சாட்டியது | 3 | -- | -- | 3 |
| | | அனுமதித்தது | 1,357,07,12 | 121,32,27 | -- | 1,478,39,39 |



## 2008—2009 ஆம் ஆண்டிற்கான பகுதி— 2 திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| | **தலைமைச் செயலகம்** | |
| 1 | வேளாண்மைத் துறையை நவீனமயமாக்குதலில் முழுவதுமாக கணினிமயமாக்க கணினியுடன் கூடிய தடுப்பறை அமைப்பது. | 30.00 |
| 2 | தலைமைச் செயலக வேளாண்மைத் துறைக்கு என ஒரு நிகரி மற்றும் ஒரு படிப் பெருக்கி (புதிய இரகத்தைச் சார்ந்தது) வாங்குவது. | 1.50 |
| 3 | வேளாண்மைத் துறைக்கு என மூன்று நகலெடுக்கும் இயந்திரங்கள் வாங்குவது. | 3.50 |
| | **மொத்தம்** | 35.00 |
| | **வேளாண்மைத் துறை** | |
| 4 | உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் – 77 வேளாண்மை விரிவாக்க மையங்களில் பழுதுநீக்கம் செய்தல் மற்றும் 220 வேளாண்மை விரிவாக்க மையங்களில் கழிப்பறை கட்டுதல் | 291.50 |
| 5 | வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு அறைகலன் வாங்குவது (219 வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள்) | 74.46 |
| 6 | 265 வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் தொலைபேசி இணைப்பு வசதி வழங்குதல் | 68.90 |
| | **மொத்தம்** | 434.86 |
| | **வேளாண்மைப் பொறியியல் துறை** | |
| 7 | வாகனத்துடன்கூடிய பழைய இரண்டு மின்னியல் ஆய்வுக் கருவிகளுக்கு பதிலாக 2 புதிய வாகனத்துடன்கூடிய மின்னியல் ஆய்வுக் கருவிகள் கடலூர் மற்றும் தஞ்சாவூருக்கு வாங்குதல் | 30.00 |
| | **பெரு மொத்தம்** | 499.86 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Principal Secretary to Government and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.